

ராக்கெட் செலுத்தும் கருவி ஒன்றை
நாங்கள் இங்கு தயாரித்தோம்.

- ஹரேஷ் பட், கோத்ரா சட்டமன்ற உறுப்பினர்

காவல் துறையினர் எங்களை வேடிக்கை
பார்த்தது தவிர வேறு எதையும் செய்யவில்லை.

- பிரகாஷ் ராஜு*, விஹெச்பி உறுப்பினர்

மோடி முதல்வராக இருந்திருக்காவிட்டால் அவர்
வெடிகுண்டையும் வீசியிருப்பார்.

- அரவிந்த் பாண்டியா, குஜராத் மாநில அரசு வழக்கறிஞர்

என்னை வெளியே கொண்டுவர நரேந்திர மோடி
மூன்று முறை நீதிபதிகளை மாற்றினார்.

- பாபு பஜ்ரங்கி, பஜ்ரங்தள் தலைவர்

2 பயங்கரங்களின் நிழலில்
**அ. முத்துக்கிருஷ்ணன்**

4 ரத்தக்கறையை மறைக்கும் வளர்ச்சி
**அ. முத்துக்கிருஷ்ணன்**

97 இரு உலகங்களின் ஊடான மிதவைப் பயணம்
**ஆஷிஷ் கேத்தன்**

101 அவமானங்கள் நிகழாதிருக்க...
**ஹரீந்தர் பவேஜா**

102 இங்கே எதுவும் பொருட்படுத்தப்படுகிறதா?
**தருண் ஜே. தேஜ்பால்**

7 ஒரு குளிர்ந்த கிரகணம்

24 கரியாய் போன நகரம்

29 தப்பி ஓட திசையில்லை

33 குண்டு தயாரிப்பாளர்கள்

38 காவல் துறையின் பங்களிப்பு

43 மோடியைப் பற்றி என்ன சொன்னார்கள்?

46 பலியானவர்களும் குருடாய் போன நீதியும்

53 தீமையின் தோழன்

56 வெறுப்பின் நடனம்

57 முஸ்லிம்கள் வாழ தகுதியற்றவர்கள்

66 பேரச்சத்தின் உறைவிடம்

71 இருமுறை எரிந்து இன்னும் தகித்துக் கொண்டு...



குஜராத் இனப்படுகொலை நடந்தது என்ன?
‘தெகல்கா’வின் புலனாய்வு
தமிழாக்கம் : அ. முத்துக்கிருஷ்ணன்
முதல் பதிப்பு : ஜனவரி 2008
இரண்டாம் பதிப்பு : பிப்ரவரி 2008
மூன்றாம் பதிப்பு : ஏப்ரல் 2014
■ விலை : ரூ. 130
தட்டச்சு, வடிவமைப்பு : பிரேமா, சுந்தர்
■ மொழியாக்க உரிமை பெற்ற பதிப்பு
குஜராத் இனப்படுகொலை 2002
© அ. முத்துக்கிருஷ்ணன்

Gujarat Genocide 2002
Tehelka Investigation
Translated by :
A. Muthu Krishnan
First Edition : January 2008
Second Edition : February 2008
Third Edition : April 2014
This Edition is a Tamil Translation of Tehelka Speical Issue on Gujarat 2002 Dated 3.11.2007 Vol. No.47
**(Language Rights Secured Edition)**

வெளியீடு

வாசல்
வாசல் பதிப்பகம்
402, முதல் தெரு
வசந்த நகர்
மதுரை - 625 003
செல் : 98421 - 02133

எஸ் – 5, மகாலட்சுமி அடுக்ககம்
26/13 குளக்கரை சாலை
சென்னை - 600 034
பேசி : 044 - 2822 1314
தலித் முரசு

# பயங்கரங்களின் நிழலில்



**அ. முத்துக்கிருஷ்ணன்**
மொழிபெயர்ப்பாளர்

சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் மிக முக்கியமான நாட்களாக நினைவு கொள்ள வேண்டியவை – அக்டோபர் 25,26, 2007. இந்த இரு நாட்களும் பல செய்தி தொலைக் காட்சிகளில் ஒளிபரப்பப்பட்ட காட்சிகள், ஒரு நாட்டையே கொஞ்சம் கொஞ்சமாக மவுனத்தில் உறைய வைத்தது. 2000 முஸ்லிம்களை கொன்று குவித்து, அய்ந்து ஆண்டுகளுக்கு முன்பு மாபெரும் இனப்படுகொலையை நிகழ்த்தியவர்கள், முதன் முறையாக காமிரா முன் தோன்றி பெருமிதம் பொங்க – தங்களின் செயல்களை துல்லியமாக விவரித்தார்கள். அரசு அதிகாரிகள், அரசு வழக்கறிஞர்கள், பா.ஜ.க. தலைவர்கள், பஜ்ரங் தள் தொண்டர்கள் எனப் பலரும் கொலைகாரர்களில் அடக்கம்.

இந்த குற்றங்களின் பாதுகாவலர்களான தில்லி பா.ஜ.க. தலைவர்கள் கமுக்கமாக இருப்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், காங்கிரஸ் ஏன் அமைதி காக்கிறது? இந்த கொலைகாரர்களில் பலர் தற்பொழுது காங்கிரஸ் கட்சியின் பெரும் பொறுப்புகளில் உள்ளதாலா? அல்லது காங்கிரஸ் கட்சியை சேர்ந்த பலர், கோத்ரா இனப்படுகொலையிலேயே பங்கு கொண்டதாலா? இல்லை எனில் இவர்களின் மவுனம், துல்லியமான சமிக்ஞைகளை தெரிவித்துக் கொண்டிருக்கிறதா?

'தெகல்கா'வின் இந்த அரிய புலனாய்வு பற்றி நாடாளுமன்றத்தில் பேசியவர்கள் இடதுசாரிகள், லாலு பிரசாத், மாயாவதி ஆகியோர் மட்டுமே. மனித உரிமை ஆர்வலர்கள், அறிவுஜீவிகள் என சமூகத்தின் ஒரு சிறிய பகுதி பேசியிருக்காவிட்டால், மொத்தத்தில் இந்தப் புலனாய்வுகள் கரைந்து போயிருக்கும். ஊடகங்கள் கூட மேலோட்டமாகப் பேசிவிட்டு, வேறு கதைப்புகள் நோக்கிச் சென்று விட்டன. அதிலும் பலர் தொடர்ந்து 'தெகல்கா' வின் இந்த பாணி இதழியலை வசை பாடத் தவறவில்லை. ஊடகங்களுக்கு இன்று அரசு மற்றும் இந்திய – பன்னாட்டு முதலாளிகளின் தயவின்றி வாழத் தெரியாது. தனித்துவமான ஒரு வாழ்க்கையை தீர்மானித்த 'தெகல்கா'வால் எந்தத் தயக்கமுமின்றி – அதிகாரங்களுக்கு எதிராக துணிவுடன் உரக்க பேச முடிகிறது!



ஆயுத பேர ஊழல், சாகிரா ஷேக், ஜெசிகா லால், சஞ்சய் தத், மோடியின் போலி என்கவுன்டர்கள் என 25–க்கும் மேற்பட்ட மறைக்கப்பட்ட உண்மைகளை வெளிக்கொணர முடிந்தது. இது போன்ற இதழியலாளர்கள் இல்லையென்றால், மெல்ல மெல்ல ஒரு நிலப்பரப்பின் மக்கள் சமூகம் அடிமைகளாக உருமாற்றம் பெரும் என்பதில் சந்தேகம் இல்லை. மறுபுறம் நீதிக்காகக் குரல் கொடுப்பவர்களை, போராடுபவர்களை இந்த நாடு அடையாளம் காண மறுக்கிறது. கிரிக்கெட் விளையாடும் சச்சின் தெண்டுல்கர் உலகப் பிரபலம். ஆனால், தன் வாழ்வை பணயம் வைத்து குஜராத் இனப்படுகொலை தொடர்பான வழக்குகளை 5 ஆண்டுகளாக நடத்தும் தீஸ்தா செடல்வாட்டை, ஏன் ஊடகங்கள் கண்டு கொள்வதில்லை? ஒரு மாபெரும் நாகரிகம், வளரும் பொருளாதாரமாக மட்டுமே சுருங்கிப்போனது.

'தெகல்கா' புலனாய்வு உண்மைகள் வெளிவந்ததும் உலகம் முழுவதிலிருந்தும் குடிமைச் சமூகத்தின் குரல்கள் உருப்பெறத் தொடங்கின. உயிரைப் பணயம் வைத்து ஆறு மாதங்கள் புலனாய்வை மேற்கொண்ட ஆஷிஷ் கேத்தன் மற்றும் 'தெகல்கா' குடும்பத்தினருக்கு – வழக்கறிஞர்கள், சட்ட நிபுணர்கள், எழுத்தாளர்கள், போராளிகள் என பெருங்கூட்டம் பாராட்டுகளைத் தெரிவித்தது. நம் காலத்தின் உண்மையான நாயகர்களாக இவர்கள் திகழ்கிறார்கள். ஆம், அதிகாரத்துக்கு எதிராக கலகம் செய்யும் வீரர்கள்.

வேறு வகையில் பார்த்தால், இது யார் செய்திருக்க வேண்டிய வேலை? 2002 பிப்ரவரி இறுதியில் இனப்படுகொலை நடத்தப்பட்டது. அடுத்த ஆறுமாத காலத்தில் விசாரணைகள் நிகழ்ந்து, மறு விசாரணையும் நடந்து நவம்பர் 2003 வாக்கிலாவது அரசாங்கம் தனது தீர்ப்பை வழங்கியிருக்க வேண்டும். இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள வாக்குமூலங்களை குஜராத் காவல் துறை அல்லவா பெற்றிருக்க வேண்டும்? இது போன்ற இனப்படுகொலைகளை செய்து வரும் பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ்.மறுபுறம் 'பண்பாட்டுக் காவலர்'களைப்

போல வலம் வருகின்றன. குருதி தோய்ந்த கரங்களால் கடவுளைத் தொழுதல், தேர்தலில் முழக்கமிடுதல் என ஒப்பனைகள் கச்சித மாய் தொடர்கின்றன.

இவ்வளவு கொடூரங் கள் ஆதாரங்களுடன் வெளிவந்த பிறகும், மீண் டும் நரேந்திரமோடி வெற்றி வாகை சூடி பதவியில் அமர்ந்திருக்கிறார். இதில் வியப்படைவதற்கு ஏதும் இருக்கிறதா? எதுவும் இல்லை என்றே தோன்று கிறது. மதவாதத்தை கொள்கையாகக் கொண்டவர்கள், குஜராத் சமூகத்தில் கடந்த 40 ஆண்டுகளாக தங்கள் செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்த அதற்கான சூழலை உருவாக்கி வருகிறார்கள். பால்வாடிகள், பள்ளி கள், கல்லூரிகள், கோயில்கள், மருத்துவமனைகள் என அவர்களின் கரங்கள் நுழையாத இடமேயில்லை. 1985 முதல் நரோடாவிலும் கேதாவிலும் ஆயுதப்பயிற்சியளிக்கும் 'ஷாகா'க்களை ஆர்.எஸ். எஸ். தொடர்ந்து நடத்தி வருகிறது. லத்தி கம்புகளை எறிந்துவிட்டு அவர்கள் தானியங்கி துப்பாக்கிகளை கையில் பிடித்து, இருப்பது ஆண்டுகள் ஆகிவிட்டது.



நீங்கள் கடவுளின் பெயரால் கொலை செய்ய உரிமை பெற்றவர் கள் என்றால், எத்தகைய கடவுளை நீங்கள் வணங்குகிறீர்கள்?

தொடர்ந்து ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இந்த வன்ம முகாம்களில் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். அடுத்த கட்டமாக இந்த முகாமில் பங்கு கொண்டவர்கள், குஜராத் அரசின் பல்வேறு துறை களிலும் பணியில் அமர்த்தப்பட்டார்கள். இந்த பிரதிகளில் வரும் பலரும் இந்த வதை முகாம்களின் அங்கத்தினரே. ஆயுதங்களை வழங்கும் காவல் துறையினர், கொலைகாரர்களுக்கு ஆதரவாக செயல்படும் அரசு வழக்கறிஞர் எனப் பல வேடங்களை அவர்கள் ஏற்றிருக்கிறார்கள். இந்த மரண வியாபாரிகளுக்கு இந்திய முதலா ளிகள் பக்கபலமாய் உள்ளனர். கடந்த இரண்டு ஆண்டுகளாக அம்பானி, ரத்தன் டாடா என இப்பெரும்படை மோடியுடன் அளவளாவியதை நாம் தொலைக்காட்சிகளில் கண்டோம். ஆர்.எஸ்.எஸ்.க்கு பெரும் நிதி வழங்கும் வெளிநாட்டு வாழ் இந்தியர்களுக்கும், இந்திய முதலாளிகளுக்கும் 'தெகல்கா' தனியான திரையிடலை ஏற்பாடு செய்யலாம்.

சமூகத்தில் விதைக்கப்பட்டுள்ள இந்த நஞ்சை எப்படி அப்புறப்படுத்துவது? தேர்தலுக்குத் தேர்தல் பா.ஜ.க.வை உக்கிர மாய் எதிர்த்து முழக்கம் போட்டால், மதவாதம் அழிந்துவிடுமா? மதவாத எதிர்ப்புப் பிரச்சாரம் ஊடக புகைப்பட வெளியீட்டால் நிறைவுறுமா? மதச்சார்பின்மை பேசுகிறவர்கள் மதவாதத்தை மிகவும் தட்டையாகப் புரிந்து கொண்டுள்ளார்களா? மதவாதத்தை எதிர்ப்பதற்கான பண்பாட்டுத் தளத்திலான வேலைத் திட்டம் ஏன் உருவாக்கப்படவில்லை? கே.என். பணிக்கர், ராம் புன்யானி போன்று மனதின் அடியாழத்திலிருந்து தொடர்ந்து பேசுபவர்களின் வார்த்தை களை நாம் வீணடித்து விட்டோமா? சாதி ஒழிப்பில் முனைப்பில் லாததால் தான், மத எதிர்ப்பை பெயரளவில் நிறுத்திக் கொள் கிறோமா? எத்திசையில் பயணித்துக் கொண்டிருக்கிறோம் நாம்?

மத வெறியின் ஆபத்தை உணராத பெரி யாரின் வழித்தோன்றல் களாக கருதிக்கொள்ளும் திராவிடக் கட்சிகள், கூச்ச நாச்சமின்றி மாறி மாறி பா.ஜ.க.வை தோளில் சுமந்து தமிழகத்தில் வளர்ப்பது சரிதானா?

இந்தப் பிரதிகள் தமிழகத்தின் எதிர்காலம் குறித்த அக்கறையுடன் தான் துரிதமாக மொழி யாக்கம் செய்யப்பட்டது. மதவெறியின் உண்மைமு கத்தை நேரில் காணும் அரிய வாய்ப்பு மீண்டும் நமக்கு கிடைத்திருக்கிறது. காலம் கனிந்து கொண்டிருக்கிறது. இந்தப் பிரதிகளில் கம்பீரமாய் வலம் வரும் பேராசிரியர் பன்துக்வாலா, காவல் துறை உயர் அதிகாரி ஆர்.பி. சிறீகுமார் ஆகியோர் நம்பிக்கையின் தூதர்களாகத் திகழ்கிறார்கள். இஷான் ஜாப்ரியின் துணைவி சக்கியா ஜாப்ரி, 'தெகல்கா' பதிவு களுடன் உச்ச நீதிமன்றத்தின் கதவுகளை தட்டிக்கொண்டிருக்கிறார். இமயமலையில் பாறைகள் உருண்டதாக வெளிவந்த பத்திரிகைச் செய்தியை அடிப்படையாகக் கொண்டு, வழக்கை தானே தாக்கல் செய்யும் உச்சநீதி மன்றம், 'தெகல்கா' புலனாய்வு மீது தன் பார்வையை பதிக்குமா? கோத்ராவில் இனப்படுகொலை செய்யப்பட்ட 2000 முஸ்லிம்களின் குடும்பங்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும். அகதிகளாக வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்ட 2 லட்சம் முஸ்லிம்களின் வாழ்க்கை மீட்டெடுக்கப்பட வேண்டும்.

••

'தெகல்கா'வின் குஜராத் 2002 சிறப்பிதழ் வெளியான சில நாட்களில், செய்தி தொலைக்காட்சி ஒன்றில் தோன்றினார் தருண் தேஜ்பால். இந்திய ஊடகங்களின் போக்கு, குஜராத் புலனாய்வு, 'தெகல்கா'வின் அனுபவங்கள், நிதி நெருக்கடிகள் எனத் தொடர்ந்த அவரது உரை, பல திசைகளில் சென்றது. இந்த சிறப்பிதழை 'தெகல்கா' வின் அனுமதியுடன் முழுமையாக மொழியாக்கம் செய்ய வேண் டும் என்கிற ஆவல், அப்பொழுது தான் முடிவாய் உருப்பெற்றது. உடனே அனுமதியும், மொழியாக்க உரிமையும் பெறும் முயற்சி களும் தொடங்கின. 'தெகல்கா'வின் பி.சி. வினோஜ் குமார் அவர் களின் உதவியின்றி, இந்த வெளியீட்டு முயற்சி சாத்தியமில்லை. இந்த வெளியீடு வரும் வரை தொடர்ந்து ஊக்கமளித்த தருண் தேஜ்பால் மற்றும் நீனா தேஜ்பால் ஆகியோருக்கும் நன்றி உரித்தாகட்டும்.

'வாசல்' – 'தலித்முரசு' ஆகிய இரு பதிப்பகங்களின் கூட்டு முயற்சியால் இந்த வெளியீடு வருவது கூடுதல் மகிழ்ச்சி. இன்னும் பலம் பொருந்திய பரந்த மேடையை உருவாக்கி, மதவெறியை முறியடிப்பதற்கான சூழல் நம்மை எதிர்நோக்கி காத்திருக்கிறது.

இந்த வெளியீடு 2008 இல் வெளிவந்த பொழுது பெரும் வர வேற்பைப் பெற்றது. இன்றைய சூழலில் வாசகர்கள் பலர் மீண்டும் இதனை எடுத்து வரும்படி வலியுறுத்தினர். பாசிச எதிர்ப்பாளர்கள், ஜனநாயக விரும்பிகள் நிச்சயம் இதனை கையில் எடுப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் களம் காண்கிறோம். அனைவருக்கும் நன்றி.

# ரத்தக்கறையை மறைக்கும் வளர்ச்சி

அ. முத்துக்கிருஷ்ணன்
எழுத்தாளர்

கோத்ரா இனப்படுகொலை இந்திய வரலாற்றில் ஒரு நிரந்தர கரும்புள்ளியாகிவிட்டது. இரண்டாயிரம் முஸ்லிம்கள் கொல்லப்பட்டதற்கு இன்றுவரை நீதி கிடைக்கவில்லை. மனித உரிமை செயல்பாட்டாளர்கள் என்கிற இந்த சமூகத்தின் ஒரு சிறுபான்மைக் குழு மட்டுமே இம்மக்களின் நீதிக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது.

நரேந்திர மோடியின் அரசியல் வாழ்க்கையின் பல கனவுகளை கோத்ரா இனப்படுகொலை ஒத்தி வைத்துக்கொண்டே வந்தது. நரேந்திர மோடியின் ரத்தம் தோய்ந்த கைகளை அவரால் அவ்வளவு எளிதில் கழுவிவிட இயலாது என்பதை அவரே அறிவார். இனப்படுகொலை நிகழ்ந்து 2002க்குப் பின் இன்றுவரை இத்தனை பெரிய ஒரு கொடூர நிகழ்வுக்கு அவர் வருத்தம்கூட தெரிவிக்கவில்லை. ஒரு காரில் பயணம் செய்யும் பொழுது ஓட்டுநர் ஒரு சிறிய நாய்க்குட்டியின் மீது வண்டியை ஏற்றி விட்டார் என்றால் வருத்தப்படத் தானே வேண்டும் என்று மிக அலட்சியமாக இது குறித்து கருத்து தெரிவித்திருந்தார். கடந்த மூன்று முறை தொடர்ச்சியாக முதல்வராக வெற்றி பெற்ற நரேந்திர மோடி, இந்த இனப்படுகொலை தொடர்பான வழக்குகளை எல்லா விதங்களிலும் நடத்தவிடாமல் முட்டுக்கட்டை போட்டுக்கொண்டே வந்தார்.

குஜராத்தில் சிறுபான்மையினர் தொடர்ந்து அச்சுறுத்தப்படுவதும், போலி மோதல் சாவுகள் நடப்பதும், தலித்துகள் மற்றும் பிற ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிரான கொடுமைகளும் ஒரு வாடிக்கையாகவே நடைபெற்று வருகின்றன. இந்த ரத்தக் கறைகளை கழுவ மோடி கண்டுபிடித்த புதிய ஏற்பாடுதான் வளர்ச்சி எனும் மாயை. இன்று வளர்ச்சி எனும் பிம்பத்திற்குப் பின்னால் உலகில் எதை வேண்டுமானாலும் நீங்கள் மறைத்து விடலாம் என்பதே புதிய நியதியாக மக்களிடையே பரப்பப்பட்டு வருகிறது. இன்று மோடியின் குஜராத் குறித்த வளர்ச்சியின் பிம்பமும் இவ்வாறே கட்டமைக்கப்பட்டு வருகிறது. இந்த பிம்பத்தை உருவாக்குவதற்கு இந்தியப் பெருமுதலாளிகள் கணிசமாக உதவி வருகின்றனர்.

**தலித்துகள், சிறுபான்மையினர், பிற்படுத்தப்பட்டவர்கள், பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு செலவிடப்பட வேண்டிய அரசின் வருவாயை – வளர்ச்சி எனும் பெயரில் – பெரும் முதலாளிகளுக்கு மடைமாற்றி அதன் மூலம் தன் கைகளில் உள்ள ரத்தக் கறைகளை மறைக்க முயலும் கதைதான் இது.**

கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் இந்திய மொழிகளில் வெளியாகும் நாளிதழ்களில் 1500 முழு பக்க வண்ண விளம்பரங்களை மோடி வெளியிட்டுள்ளார். இவ்வாறாக கடந்த 10 ஆண்டுகளாக ஒரு பிம்பத்தைக் கட்டமைக்கும் மாபெரும் திட்டத்தில் மோடி ஈடுபட்டுள்ளார். 2007 முதல் அவர் நடத்தும் Vibrant Gujarat நிகழ்வை அவருக்கு Gray World Wide என்ற நிறுவனம் அமைத்துக் கொடுத்தது. அதன் பின்னர் 2009 முதல் அமெரிக்க நிறுவனமான 'ஆப்கோ'வுடன் (APCO) மக்கள் தொடர்புகளுக்கான பெரும் ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது. கடந்த பத்து ஆண்டுகளாக நரேந்திர மோடி என்ன உடை அணிய வேண்டும், என்ன உரை நிகழ்த்த வேண்டும், எப்படியான முகபாவங்களுடன் அவர் ஒவ்வொரு சந்திப்பிலும் நடந்து கொள்ள வேண்டும், அவரது எந்த புகைப்படம் ஊடகங்களில் வெளிவர வேண்டும் என்பது முதல் அனைத்துமே இந்நிறுவனத்தின் கட்டளைப்படிதான் நடக்கிறது. ஆக, இன்று நம் மத்தியதர வர்க்கம் பார்த்து வியக்கும் மோடியின் பிம்பம் என்பது, 2000 கோடி ரூபாய் செலவில் பத்தாண்டுகள் கடும் உழைப்பில் ஒரு அமெரிக்க இயக்குநர் குழுவே பின்னணியில் இயக்குகிறது; அதில் நடிப்பவர்தான் நரேந்திர மோடி.

இந்த பிம்ப உருவாக்கத்தை முழு வீச்சில் செய்ய பல அமைப்புகள் தொடங்கப்பட்டன, ஏற்கனவே ஆர்.எஸ்.எஸ் இன் துணை அமைப்புகளாக இருந்த பல அமைப்புகள் இப்பணியில் இணைந்தன. Desh Gujarat என்ற அமைப்பு மோடியின் இணையதள உருவாக்கப் பராமரிப்பில் ஈடுபட்டு வருகிறது. Sanskardham என்கிற பள்ளி அகமதாபாத்தில் இயங்கி வருகிறது. இதில் படிக்கும் பள்ளி மாணவர்கள் மூன்று ஷிப்டுகளாக பிரிக்கப்பட்டு, இவர்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மின்னஞ்சல்களின் வழியே – இணையதளங்களில் எங்கெல்லாம் நரேந்திர மோடியை பற்றிய கட்டுரைகள் பிரசுரிக்கப்படுகிறதோ – அங்கெல்லாம் சென்று விவாதிக்க வேண்டும்; அவர்களின் மின்னஞ்சலுக்கு அனுப்பப்படும் கருத்துகளை சொந்த மொழியில் மாற்றி, அதனை ஒரு மருத்துவர், வழக்குரைஞர், தொழிலதிபர் போல் பாவனையில் 'கமெண்டு' போட வேண்டும். இந்தப் பள்ளி நரேந்திர மோடியின் ஆலோசனைப்படி தொடங்கப்பட்டது. இதில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பினரின் குழந்தைகள்தான் பெரும்பான்மையாகப் படித்து வருகிறார்கள். ட்விட்டர், முகநூல் மற்றும் வலைத்தளங்களில் மோடிக்கு ஆதரவாக லைக் மற்றும் கருத்துகள் பதிவிட அகமதாபாத்தில் இரு இடங்களில் 400 பேர் வேலையில் முழுநேரமாக அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் 3 ஷிப்டுகளில் இயங்குகிறார்கள்.

National Indian American Public Policy Institute என்கிற அமைப்பு அமரிக்காவின் சிகாகோவில் இயங்கி வருகிறது. அண்மையில் இந்த அமைப்பு ஏற்பாடு செய்து மூன்று அமெரிக்க செனேட்டர்கள் குஜராத்தை சுற்றிப் பார்க்க வந்தார்கள். இவர்களின் வருகை ஊடகங்களில் பெரிதாக பிரசுரிக்கப்பட்டது. பின்னர்தான் இந்த மூவரும் குஜராத் அரசு செலவில் வந்து சென்றவர்கள் என்கிற தகவல் வெளியானது. Overseas Friends of BJP என்ற இந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் விஜய் ஜாலியின் கடும் முயற்சியில் தான் மோடிக்கு 'வார்டன் பிசினஸ்' பள்ளியில் பேச அழைப்பு வந்தது. Namo Gujarat என்ற தொலைக்காட்சி நரேந்திர மோடியின்

வளர்ச்சி பிம்பத்தை மட்டுமே பிரச்சாரம் செய்ய உருவாக்கப்பட்டது. Europe India Chamber of Commerce தான் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் காமரூன் குஜராத் வருவதற்கு காரணமான அமைப்பு. Indian Americans For Freedom என்ற அமைப்பு தான் தொடர்ச்சியாக மோடிக்கு அமெரிக்க அரசு விசா வழங்க வேண்டும் என்று ஹிலாரி கிளிண்டனுக்கு கடிதம் எழுதியது. அமெரிக்க வாழ் குஜராத்திகளின் நிதி உதவியுடன் இயங்கும் Hindu American Foundation தொடர்ச்சியாக அமெரிக்க வாழ் இந்தியர்கள் மத்தியில் மோடியை பிரபலப்படுத்தியது. இந்த எல்லா நிறுவனங்களுக்கும் பணம் பட்டுவாடா செய்து வேலை வாங்க வேண்டிய பொறுப்பு ஆப்கோ நிறுவனத்தைச் சார்ந்தது.

ஆப்கோவின் கடுமையான முயற்சியால்தான் கனடா அரசு குஜராத்தில் முதலீடு செய்ய சம்மதித்தது. இது தவிர உலகத்தின் பல பல்கலைக்கழகங்களில் உள்ள ஆய்வாளர்களுக்கு பெரும் தொகையையும் எல்லா விவரங்களையும் கொடுத்து குஜராத்தின் வளர்ச்சியை கட்டுரைகளாக எழுத கட்டளையிட்டது. அக்டோபர் 2012இல் குஜராத் அரசின் சோலார் திட்டத்தை மிகச் சிறந்த திட்டம் என Project Management Institute விருது அளித்தது. Project Management Institute நிறுவனத்தின் மக்கள் தொடர்பு பொறுப்பும் ஆப்கோ நிறுவனம் வசம்தான் உள்ளது என்பதை நாம் இங்கு பொருத்திப் பார்க்க வேண்டும்.

2011இல் சர்வதேச குஜராத்திகள் மாநாட்டை அமெரிக்காவில் Friends of Gujarat என்ற அமைப்பு நடத்தியது. இந்த மாநாட்டில் நரேந்திர மோடி இணையத்தின் வாயிலாக குஜராத்தில் இருந்த படியே பேசினார். இந்த Friends of Gujarat அமைப்பு ஆப்கோவால் தொடங்கப்பட்டது. இது போலவே கஜகஸ்தான் ஜனாதிபதி நூர்சுல்தான் நசார்பாவேவும் ஆப்கோவின் வாடிக்கையாளர்தான். அவரது ஊழல், சர்வாதிகாரத்தை மறைக்க இதே போல் மக்கள் தொடர்பு பொறுப்பை ஆப்கோ வசம் ஒப்படைத்திருந்தார். அப்பொழுது ஆப்கோ நிறுவனம் இதே போல் Friends of Kazhakasthan என்கிற அமைப்பை தொடங்கி, உலக ஊடகங்களில் எல்லாம் ஜனாதிபதி நூர்சுல்தான் நசார்பாவேவுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது; மரியாதை இருக்கிறது என்று வெளிநாட்டுப் பத்திரிகைகளிலும் அதன் அடுத்த கட்டமாக உள்நாட்டுப் பத்திரிகைகளிலும் கட்டுரைகள் எழுதியது; விளம்பரம் கொடுத்தது.

ஆப்கோவின் கரங்கள் உலகம் முழுவதும் பரந்து விரிந்து கிடக்கிறது. ரஷ்யாவின் பெரும் தொழில் அதிபர் மிகைல் கோர்தோவ்ஸ்கி முதல் நைஜீரிய சர்வாதிகாரி சானி ஆபச்சா வரை எல்லோருமே ஆப்கோவின் வாடிக்கையாளர்கள்தான். இதனை எல்லாம் விட, பாலஸ்தீனத்தின் மீது தினசரி குண்டு மழை பொழியும் இஸ்ரேல் அரசு பற்றி உலக ஊடகங்கள் எல்லாம் – நல்ல செய்திகள் எழுதி தொழில்நுட்பத்தில் இஸ்ரேல் போல் வருமா என்று செய்தி வெளியிடும் பத்திரிகைகள் – இஸ்ரேலின் ரத்தக்கறை படிந்த கைகளை தொழில்நுட்ப உறைகளில் மறைத்து வருகின்றன. இந்த நாசக்கான வேலையை கச்சிதமாக செய்ய இஸ்ரேல் அரசு ஆப்கோ

**மோடியின் எலும்புத் துண்டுகளுக்கு நடனமாடும் ஊடகங்கள் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. நரேந்திர மோடிக்கும் இந்திய முதலாளிகளுக்கும் உள்ள நெருக்கமும், ஹிட்லருக்கும் முசோலினிக்கும் அன்றைய முதலாளிகளுடன் இருந்த நெருக்கமும் வேறு வேறு அல்ல என்பதை நாம் ஒப்பிட்டுப் பார்த்தால் புரியும்.**

நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

நரேந்திர மோடியின் ஹாலிவுட் படத்தின் உருவாக்கத்தில் உள்ள வெவ்வேறு துறைகளைப் பற்றி நாம் பார்த்தோம். இதற்கு எல்லாம் யார் பணம் கொடுத்தது? மோடியின் ஆசிர்வாதம் இருந்தால் குஜராத் மாநிலத்தின் எல்லா இயற்கை வளங்கள், தடையில்லா மின்சாரம், அரிசி, பொரி விலையை விட மலிவாக ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் என எல்லாம் உங்களுக்குதான். இதனால்தான் இந்திய முதலாளிகள் நரேந்திர மோடியை கட்டித்தழுவி போஸ் கொடுத்து புகைப்படம் எடுக்கப் படையெடுக்கிறார்கள்.

நரேந்திர மோடி ஆட்சிப் பொறுப்பு ஏற்கையில் அதானி குழுமத்தின் சொத்து மதிப்பு 2,816 கோடி ரூபாய். இன்று அந்த நிறுவனத்தின் சொத்து 35,881 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. எல்லாம் மோடியின் ஆசிர்வாதம்தான். ஒரு துறைமுகம் கட்டுவதற்கு மட்டும் அதானிக்கு சுமார் 45,000 ஏக்கர் நிலத்தை வெறும் 33 கோடி ரூபாய்க்கு மோடி வழங்கினார். இதன் கைமாறு ஆப்கோ வழியாக பெரும் தொகையை அதானி குழுமம் மோடி பிம்பம் உருவாக்கும் திட்டத்திற்கு மடைமாற்றுகிறது. இன்று நரேந்திர மோடி இந்தியா முழுவதும் சுற்றி வருவது அதானியின் சொந்த விமானத்தில்தான் என்பதையும் நீங்கள் மறந்துவிடக் கூடாது. மோடியின் புண்ணியத்தில் மேலும் ஒரு குஜராத்தி 'போர்ப்ஸ்' பட்டியலுக்குச் சென்றது மட்டும்தான் சாதனை.

இதே போல் மேற்கு வங்கத்தில் இருந்து குஜராத் நோக்கி வந்த டாடா நானோவின் (கார் நிறுவனம்) கதையும் உலகம் அறிந்ததே. இது நாள் வரை டாடா மோடியிடம் இருந்து பெற்ற சலுகைகள் 33 ஆயிரம் கோடியை தாண்டும். குஜராத்தில் இருந்து வெளிவந்த நானோ காரின் விலை ஒரு லட்சம் ரூபாய் என்றால், அதில் மாநில அரசு பல்வேறு வகையில் அளித்த மானியங்களை கணக்கிட்டால் அது ஒரு காருக்கு 30 ஆயிரம் ரூபாய் வரை இருக்கக்கூடும் என பல பொருளாதார அறிஞர்கள், ஆய்வாளர்கள் துல்லியமாக தங்களின் கணக்குகளை முன்வைக்கிறார்கள்.

இதுபோலவே ரிலையன்ஸ், எஸ்ஸார் எனப் பல நிறுவனங்கள் ஆயிரம் கோடிகளில் சலுகைகள் பெற்றன. மோடி நடித்தது போதாது என்று இந்திய வெளிநட்டு முதலாளிகள் பலர் வந்து மோடி நடத்திய Vibrant Gujarat இல் ஆண்டுக்கு இரு முறை நடித்துச் சென்றார்கள். இந்த முதலீட்டு மாநாட்டில் இவர்கள் எல்லாம் ஒன்றாக நின்று புகைப்படத்திற்கு போஸ் கொடுத்துவிட்டு, தங்கள் மனதிற்குப் பிடித்த தொகையில் ஒரு தொழிற்சாலை தொடங்க இருப்பதாக அறிவிப்பார்கள். அன்று மாலையே குஜராத் வளர்ந்து விட்டது; இத்தனை கோடி வந்துவிட்டது என்று மோடி அறிக்கை விடுவார்.

இப்படியாக நடந்த நிகழ்வுகளில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் எத்தனை தொழிற்சாலைகள் தான் உண்மையாகவே குஜராத்திற்கு வந்துள்ளன என்பதை அறிய பல போராளிகள் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் தொடர்ச்சியாக முயன்று பல சான்றுகளைப் பெற்றனர். அதில் பொதுவாக 17 முதல் 20 சதவிகிதம் மட்டும் தான் முதலீடாக

வந்தது; மற்றவை எல்லாம் வெற்று அறிவிப்பு தான் என்கிற உண்மை வெளியானது. ஆனால் இவற்றை எல்லாம் மோடியின் எலும்புத் துண்டுகளுக்கு நடனமாடும் ஊடகங்கள் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. நரேந்திர மோடிக்கும் இந்திய முதலாளிகளுக்கும் உள்ள நெருக்கமும், ஹிட்லருக்கும் முசோலினிக்கும் அன்றைய முதலாளிகளுடன் இருந்த நெருக்கமும் வேறு வேறு அல்ல என்பதை நாம் ஒப்பிட்டுப் பார்த்தால் புரியும்.

நரேந்திர மோடியின் ஹாலிவுட் படம் யாருக்காக எடுக்கப்பட்டது? கடந்த ஆண்டு இதனை பற்றிய ஒரு விவாதத்தில் தில்லியின் மூத்த பத்திரிகையாளர் ஒருவர் சொன்னார்: இந்த மக்கள் தொடர்பு 'ஸ்டண்ட்' எல்லாம் மொத்த தேசத்தை மிரட்ட என்றுதான் அனைவரும் நினைக்கிறார்கள். ஆனால் கதை அப்படி அல்ல; நரேந்திர மோடி இந்த மொத்த மக்கள் தொடர்பு திட்டத்தை தொடங்குகிற நேரம் அவரது மனதில் இருந்த ஒரே குறி தனது கட்சி மட்டுமே. ஆம், இதை எல்லாம் அவர் தனது பாரதிய ஜனதா கட்சியின் பல மட்டத் தலைவர்களுக்காகவே தான் செய்தார். அதன் துணை விளைவாக இந்த தேசத்தின் மத்திய தர வர்க்கம் மிரண்டு போகும் என்பதுதான் அவருடைய எதிர்பார்ப்பு.

பொதுவாக மக்களிலிருந்து விடுபட்டு இணையம் மற்றும் சமூக வலைத்தளங்களே கதி என்று கிடப்பவர்கள் இந்த பிரச்சாரத்திற்கு இரையாகிவிட்டதை கண்கூடாகப் பார்க்க முடிகிறது. பொதுவாக பங்குச் சந்தையில் முதலீடு செய்து விட்டு நாட்டின் வளர்ச்சி விகிதத்தில் இருக்கும் ஒருவித மந்தம் குறித்த பொறுமையின்மையுடன் இருக்கும் மத்திய தர வர்க்கம்தான் நரேந்திர மோடியின் மக்கள் தொடர்பு வலையில் கச்சிதமாக விழுந்தார்கள். ஊடகங்களின் நாடித் துடிப்பாக பங்கு சந்தைகள் திகழ்வதால், அதன் முதலீட்டாளர்களின் முகபாவனைக்கு ஏற்ப பக்குவமாக செய்திகளை வெளியிடுவதில் அதன் அறம் அடங்கிவிடுகிறது.

இதே போல் குஜராத் மாநிலத்திற்கு செல்பவர்களுக்கு அங்கு எந்த வளர்ச்சியும் நடக்கவில்லை என்பது யாரும் சொல்லாமலேயே விளங்கும். இரு நகரங்களில் முளைத்துள்ள சில கட்டடங்கள், தொழிற்சாலைகள் தவிர மொத்த குஜராத்தும் தனது வழக்கமான நிலையில் தான் உள்ளது என்பதை அகமதாபாத், சூரத், பாவ்நகர், வடோத்ரா உள்ளிட்ட நகரங்களில் இருந்து பத்து கிலோ மீட்டர் எந்த பேருந்தில் ஏறி பயணித்தாலும் உணர்ந்துவிடலாம். இது தவிர குஜராத் எங்கும் மது ஆறாகவே ஓடுகிறது என்பது அங்கு சென்றவர்களுக்கு மட்டுமே தெரியும்.

இந்த ஹாலிவுட் படத்தின் முடிவில் நமக்கு புரியும் விஷயம் ஒன்றே. இன்றைய நாளிதழ்கள், வார இதழ்கள், தொலைக்காட்சிகளில் எல்லாம் நிகழ்ச்சிகளுக்கு நடுவில் விளம்பரங்கள் போடுவார்கள். ஆனால் நாம் மொத்தமாகப் பார்ப்பதே விளம்பரம் தான். நாம் வாசிக்கும் செய்திகள் முழுக்க பிரிக்க முடியாத அளவு Paid News உள்ளது. இந்த பணம் பெற்றுக் கொண்டு வெளியிடப்படும் செய்திகளுக்கு Advertorial, Special Feature, Editorial என்று புதிய புதிய பெயர்கள் வைக்கிறார்கள். ஆனால் இவை எல்லாம் பணம் பெற்று வெளியிடப்படும் செய்திகளே. இந்த போக்கிற்கு பலியாகாத பத்திரிகைகளே இங்கு இல்லை எனலாம். அண்மையில் மார்க்சிஸ்ட் கட்சியின் அதிகாரபூர்வ பத்திரிகையான 'தேசாபிமானி' நரேந்திர மோடியின் முழுபக்க விளம்பரங்களை வெளியிட்டது.

பணம் பெற்றுக் கொண்டு செய்திகளை வெளியிடும் போக்கு அதிகரிக்க அதிகரிக்க பத்திரிகைகள் மற்றும் அவை வெளியிடும் செய்திகளின் மீதான நம்பிக்கை சரிந்து கொண்டே வருகிறது. இதனை எல்லாம் விட இந்த செய்திகளை எல்லாம் மக்கள் தொடர்பு நிறுவனங்களே கொடுத்து விடுவதால் செய்தி சேகரிப்பு மற்றும் உண்மையான பத்திரிகையாளர்களுக்கு வேலை இல்லாமல் போய் விடுகிறது. இந்த Paid News கலாச்சாரத்திற்கு பின்பு இந்தியா முழுவதும் பல பத்திரிகையாளர்களை பல நிறுவனங்கள் வேலையைவிட்டு துரத்தியது. இந்த இடத்தில் அற்புதமாக பிம்பங்கள் உருவாக்கும் எழுத்திற்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

கட்சிக்காரர்களை விட பிரமாதமாக எழுதும் மக்கள் தொடர்பு எழுத்தாளர்கள் உருவாகிவிட்டார்கள், அதே போல் கட்சிக்காரர்களை விட பிரமாதமாக ஒரு கட்சிக்கு ஆதரவாய் பேசும், விவாதிக்கும் செய்தி தொலைக்காட்சி வர்ணனையாளர்கள் வரை புதிய வகை மாதிரிகள் உருவாகிவிட்டன. இந்த நேரத்தில் ஊடகங்களில் பணிபுரியும் எல்லா கட்சிகளின் ஜால்ராக்களின் தனி சொத்தையும் கூட நாம் கண்காணிக்க வேண்டும். அர்னாப் கோஸ்வாமி முதல் பர்காதத் வரை எல்லோரும் இந்த மக்கள் தொடர்பு வலையில் சிக்கிக்கிடப்பதை பல தருணங்களில் இந்த தேசமே பார்த்து நகைத்தது. நிச்சயம் வரும் காலங்களில் முக்கிய ஊடகவியலாளர்களின் சொத்து மதிப்பை கூட நாம் கண்காணிப்புக்கு உட்படுத்த வேண்டும்.

தலித்துகள், சிறுபான்மையினர், பிற்படுத்தப்பட்டவர்கள், பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு செலவிடப்பட வேண்டிய அரசின் வருவாயை – வளர்ச்சி எனும் பெயரில் – பெரும் முதலாளிகளுக்கு மடைமாற்றி அதன் மூலம் தன் கைகளில் உள்ள ரத்தக் கறைகளை மறைக்க முயன்ற கதைதான் இது. இதனை கடைக்கோடி குடிமகன் வரை கொண்டு சேர்க்க வேண்டியது நம் கடமை.

## பாபர் மசூதியை திட்டமிட்டே இடித்தனர்!

பாபர் மசூதி இடிப்பு என்பது மிகவும் நுட்பமாக, சிறப்பு பயிற்சி பெற்ற தொண்டர்களை வைத்தே சங்பரிவார் நிகழ்த்தியது என்பது பற்றி 'கோப்ரா போஸ்ட்' 3.4.2014 அன்று வெளியிட்ட ஆய்வில் தெரிவித்துள்ளது. குஜராத் மாநிலத்தில் உள்ள சர்கேஜ் என்ற கிராமத்தில் இதற்காக தேர்வு செய்யப்பட்ட 38 பேருக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. இவர்கள் 38 பேரும் ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரிகள். ஒரு ரகசிய கூட்டத்தில் வி.எச்.பி. யின் தலைவர்கள் இந்த 38 பேர் கொண்ட லக்ஷ்மன் படையிடம் எப்படியாவது மசூதியை இடித்து தகர்த்து விடுங்கள் என்று உத்தரவிட்டது. இவர்கள் தோல்வியடைந்தால் சிவசேனை தொண்டர்கள் மசூதியை தகர்க்க இரண்டாம் படையாக 'டைனமைட்'டுடன் காத்திருந்தார்கள். பாபர் மசூதி இடிப்பு பற்றிய முழு விவரமும் வெகு முன்பாகவே அத்வானிக்கும் பி.வி. நரசிம்மராவுக்கும் தெரிந்திருந்தது என்று 'கோப்ரா போஸ்ட்' தெரிவித்துள்ளது.




# ஒரு குளிர்ந்த கிரகணம்

**இங்கே ஆணவமான போர்த்திறம் வாய்ந்தவர்கள் – தலைவர்கள், அதிகாரிகள், தத்துவவாதிகள் இருந்தார்கள். அவர்களுடன் காலாட்படை வீரர்கள் அங்கு வன்முறை, கொலை, கொள்ளையை நிகழ்த்தினார்கள். இந்த இனப்படுகொலை திட்டமிட்டு நிகழ்த்தப்பட்டது.**

கோத்ராவுக்குப் பிறகு நிகழ்ந்த சம்பவங்கள் எதுவுமே தன்னியல்பாக நடந்தவை அல்ல. சதியின்றி இது நிகழ வாய்ப்பில்லை. திட்டமிடப்படாத, தூண்டப்படாத மதக் கலவரமும் அல்ல. இது ஒரு படுகொலை. ஆம், இது ஒரு இனப்படுகொலை!

மிகுந்த ஆணவமான போர்த் திறத்துடன், நகர்ப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் வசிக்கும் முஸ்லிம்கள் இலக்கானார்கள். இந்துக்களின் ஒரு பெரும் பகுதி, ஒற்றை நோக்கத்துடன் அணி திரட்டப்பட்டது. அது முஸ்லிம்களை கொல்ல வேண்டும் என்பதாகும். எங்கும் எந்தவழிமுறையிலாவது, முதலில் கத்தியால் குத்துவது, முடமாக்குவது, பின்பு தீயிட்டுக் கொளுத்துவது – செத்த பிறகோ, உயிரோடோ 'தெகல்கா'வின் இந்தப் புலனாய்வில் பலரும் முஸ்லிம்கள் எரிக்கப்படுவதையே விரும்பியதாக தெரிவித்தார்கள். ஏனெனில், இஸ்லாத்தில் மரணத்துக்குப் பிறகு எரிக்கப்படுவது அவர்களின் நடைமுறையல்ல. பிப்ரவரி 27 சபர்மதி எக்ஸ்பிரஸ் கோத்ராவில் கொளுத்தப்பட்ட பிறகு அடுத்த மூன்று நாட்கள், அந்த மாநிலத்தில் அரசு இல்லா நிலை நீடித்தது. இந்து அமைப்புகளின் அர்ப்பணிப்பு மிகுந்த உறுப்பினர்களைக் கொண்ட தாக்குதல் படைகள் உருவாக்கப்பட்டன – விஸ்வ இந்து பரிஷத், பஜ்ரங்தள், கிசான் சங் (விவசாயிகள் சங்கம்), அகில் இந்திய மாணவர் பேரவை மற்றும் பாரதிய ஜனதா கட்சி அதில் முக்கிய பங்காற்றின. மாநிலம் முழுவதும் மசூதிகள், தர்காக்கள் தரைமட்டம் ஆக்கப்பட்டன. 73 முஸ்லிம் வழிபாட்டுத் தலங்கள் அகமதாபாத்தில் மட்டும் கொளுத்தப்பட்டன. சபர் காந்தாவில் அய்ம்பத்தி அய்ந்து, வடோத்ராவில் இருபத்தி இரண்டு. குஜராத்தில் இந்த அவலங்களை நிகழ்த்தியவர்களை நீங்கள் இரு பிரிவுகளாகக் கொள்ளலாம். திரைக்குப் பின்னால் மறைவிலிருந்து இதனை இயக்கிய ஆணவமான போர்த் திறம் வாய்ந்தவர்கள், சதிகாரர்கள். அடுத்த பிரிவினர், களத்தில் இருந்த காவிப் படையைச் சேர்ந்தவர்கள். தங்களை வன்மம் நிறைந்த இந்துத்துவாவிற்கு ஒப்புக் கொடுத்த இவர்கள் – கொலை, கொள்ளை, பாலியல் வன்முறையில் ஈடுபட்டனர். சில நேரங்களில் திட்டமிடுபவர்களும் படுகொலையில் பங்கேற்றனர்.

**இந்து அமைப்புகளின் உறுப்பினர்களைக் கொண்ட தாக்குதல் படைகள் உருவாக்கப்பட்டன – விஸ்வ இந்து பரிஷத், பஜ்ரங் தள், கிசான் சங், அகில இந்திய மாணவர் பேரவை மற்றும் பாரதிய ஜனதா கட்சி அதில் முக்கியப் பங்காற்றின.**



அகமதாபாத்

# படுகொலை தலைநகரம்

**நரோடா, குல்பர்க், தரியாபூரில் இருந்த ஆயுதம் ஏந்திய கொலைகாரர்கள் – சங் பரிவாரின் ஒவ்வொரு வார்த்தையையும் கட்டளையாக ஏற்றனர்**

குஜராத் கலகத்தின் பயங்கர படுகொலைகள், அகமதாபாத் நகரத்தின் நரோடா கிராமத்திலும் நரோடா பாட்டியாவின் குடியிருப்புகளிலும் நிகழ்ந்தது. அதில் பஜ்ரங்தளத்தைச் சேர்ந்த உள்ளூர் தலைவர் பாபு பஜ்ரங்கிதான் முக்கிய சதிகாரர். சபர்மதி சம்பவம் நிகழ்ந்த சில கணங்களிலேயே அவர் படுகொலையின் திட்டத்தை வகுக்கத் தொடங்கினார். பிப்ரவரி 27 மாலையிலேயே ஆயுதங்கள், எரி பொருட்கள் சேகரிக்கப்பட்டன. வி.எச்.பி., பஜ்ரங்தள் மற்றும் 'சாரா' சமூகத்தை சேர்ந்தவர்களைக் கொண்ட ஒரு குழுவை உருவாக்கினார் பாபு பஜ்ரங்கி. இந்த குழுவை சேர்ந்த சுரேஷ் ரிச்சர்ட் மற்றும் பிரகாஷ் ராத்தோடு ஆகிய இருவரிடமும் 'தெகல்கா' உரையாடியது. இருவரும் முஸ்லிம்களை கொல்வதின் மூலம் இந்துத்துவத்தின் மேன்மைக்கு சேவை செய்ய இயலும் என நம்பினார்கள், நம்ப வைக்கப்பட்டார்கள். பிப்ரவரி 2008 அன்று கொலைகாரப் படையுடன் பஜ்ரங்கி, நரோடா பாட்டியா, நரோடா காவ் ஆகிய பகுதிகளுக்கு விரைந்தார். அந்தப் பகுதி பா.ஜ.க. எம்.எல்.ஏ.வான மாயாபேன் கோட்னானியும் இந்தப் படையை வழிநடத்தினார்.

ரிச்சர்ட் மற்றும் ராத்தோட் ஆகிய இருவரும் 'தெகல்கா'வின் பதிவுகளில் அந்த நாள் முழுவதும் எம்.எல்.ஏ. கோட்னானிதான் தங்களை வழிநடத்தியதாக விவரிக்கிறார்கள். அவர் முஸ்லிம்களை பார்த்த இடத்திலேயே வேட்டையாட உத்தரவிட்டாராம். கோட்னானியின் நம்பிக்கைக்குரிய தளபதியான பா.ஜ.க. உறுப்பினர்பிபின்பஞ்சல், தன்சிறிய படையுடன் ஆயுதம் ஏந்தி சுறுசுறுப்பாய் செயல்பட்டார். கொன்று குவிப்பது நிகழ்ந்து முடியும் வரை பஜ்ரங்கியும், வி.எச்.பி. மாநில செயலர் ஜெய்தீப் பட்டேலும் தொடர்ந்து தொலைபேசியில் உரையாடிய வண்ணம் இருந்தனர். ஆனால், அவர் தனது உரையாடலில் எங்குமே பஜ்ரங்கி மற்றும் படேலின் பங்களிப்பைப் பற்றி குறிப்பிடவில்லை. இருப்பினும் அவர் படேலிடம் மரணங்களின் எண்ணிக்கையை தெரிவித்ததாக சொல்கிறார். நரோடா கிராமதில் உயிர்தப்பிய பலரும் நரோடா வந்த கலவரக்காரர்களை வழிநடத்தியது படேல்தான் எனத் தீர்க்கமாகக் கூறுகிறார்கள். அன்றைய அஸ்தமனத்தில் மொத்த எண்ணிக்கை–அதாவது பஜ்ரங்கி திட்டமிட்ட முஸ்லிம் உயிர்கள்–நரோடாவில் மட்டும் அது 200-அய் தாண்டியது. இந்த எண்ணிக்கையை அரசாங்கம் ஏற்கவில்லை. அதிகாரப்பூர்வமாக நரோடா பாட்டியா மற்றும் நரோடா கிராமத்தில் 105 பேர் கொல்லப்பட்டதாக அரசு தெரிவிக்கிறது.

அகமதாபாத் நகரத்தில் கலவர வெப்பம் அதிகப்படியாகப் பயணித்தது என்றால், அது மயானக் கறையாக மாறிய நரோடாவில்தான். சில கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மேகானி நகரில் வி.எச்.பி. தலைவர் மற்றொரு கொலைப் படையை வழிநடத்திக் கொண்டிருந்தார். அங்கு அவர்களின் இலக்கு ஒரு குல்பர்க் கூட்டுறவு குடியிருப்பு. அது முஸ்லிம்கள் அடர்த்தியாக வசிக்கும் பகுதி. 'தெகல்கா' இந்தப் படுகொலையில் பங்கேற்ற மூன்று நபர்களை சந்தித்தது – மங்கிலால் ஜெயின், பிரகலாத் ராஜு மற்றும் மதன் சாவல். இம்மூவரும் அந்தப் பகுதியில் சிறு வியாபாரங்கள் செய்பவர்கள். மூவரின் மீதும் கலவரம் தொடர்புடைய வழக்குகள் பதிவாகியுள்ளன. வி.எச்.பி. தலைவர்கள் அதுல் வாய்த் மற்றும் பதத் தேவிதான் இவர்களையும் வேறு சில குழுக்களையும் வழிநடத்தினார்களாம். இந்த இருவரின் மீதும் முதல் தகவல் அறிக்கை குற்றம் சாட்டுகிறது. ஆனால், காவல் துறை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யும்போது, இவர்கள் மீதான குற்றங்கள் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தன.

காங்கிரஸ் எம்.பி. இஷான்ஜாப்ரியை எவ்வாறு கை, கால்களை வெட்டி பின்பு அவரது உடலின் உறுப்புகளை கு விய லாக்கி தீயிட்டார்கள் என்பதை சவால் மிகுந்த விவரணைகளுடன் கூறுகிறார். குல்பர்க் படுகொலையில் அரசு அறிவித்த எண்ணிக்கை 39. ஆனால் 'தெகல்கா' விடம் தெரிவிக்கப்பட்ட விபரங்களின் படி அது பெரும் எண்ணிக்கை.

அகமதாபாத்தின் மதவாத பதட்டம் மிக்க பகுதிகளை காலுபூர் மற்றும் தரியாபூர் ஆகிய பகுதிகளில் வேட்டைகளை வழிநடத்திய வி.எச்.பி. தலைவர்களான ராஜேந்திர வியாஸ் மற்றும் ரமேஷ் தாவே ஆகிய இருவரையும் சந்தித்து 'தெகல்கா' உரையாடியது. வி.எச்.பி.யின் அகமதாபாத் நகரத் தலைவரான ராஜேந்திர வியாஸ்தான் சபர்மதி எக்ஸ்பிரசுக்கும் பொறுப்பாளர். அவர் ரயில் கொளுத்தப்பட்டு 59 கரசேவகர்கள் இறந்த அன்று வி.எச்.பி. தொண்டர்களிடம் இவ்வாறு கூறியுள்ளார்: ''இந்த ஒரு நாள் போட்டியில் முஸ்லிம்கள் நமக்கு 60 ஒட்டகங்கள் என இலக்கை நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால் நாம் இப்போது டெஸ்ட் போட்டி விளையாடி பதிலளிப்போம். 600-அய் எட்டும் வரை ஓயமாட்டோம்.'' காலுப்பூரில் வசிக்கும் வியாஸ் 'தெகல்கா' பதிவில் அவர் அய்ந்து முஸ்லிம்களைசுட்டுக் கொன்றதாகவும், ஒன்பது முஸ்லிம் வீடுகளை எரித்ததாகவும் கூறுகிறார். தரியாபூரில் வி.எச்.பி.யின் பொறுப்பாளர் ரமேஷ் தவே. அவர் 20 ஆண்டுகளாக அவருக்கு எதிர்பட்ட அனைத்து முஸ்லிம்களையும் கொன்று குவிப்பதாக, தன் கூட்டாளிகளுடன் இலக்கு நிர்ணயித்ததாக விளக்குகிறார். ''இந்த முறை ஒவ்வொருவராய் தேர்வு செய்து கொன்றாராம்.'' தவே தன் நண்பர்களுடன் இணைந்து 10 சிறிய துப்பாக்கிகளை ஏற்பாடு செய்ததையும் கூறுகிறார்.

எழுத்துப்படி **பாபு பஜ்ரங்கி**

# ‘அவர்களை கொன்ற பிறகு நான் மகாராணா பிரதாப் ஆக என்னை உணர்ந்தேன்’

**கொள்ளையும் இல்லை, பாலியல் வன்முறையும் இல்லை – இந்த பஜ்ரங் தள் தலைவரின் மனம் எல்லாம் கொலைவெறி மட்டுமே**



செப்டம்பர் 1, 2007

**பஜ்ரங்கி :** எனது பங்களிப்பு இவ்வாறாக இருந்தது. நான்தான் நரோடா பாட்டியாவில் நடவடிக்கையை முதலில் தொடங்கினேன். நாங்களும் அந்தப் பகுதியில் வசிப்பவர்களும் ஒன்று கூடினோம். என் வீட்டிலிருந்து பாட்டியா அரை கிலோ மீட்டர் தூரம்தான். அந்த சம்பவம் நிகழ்ந்த போது நான் கோத்ரா சென்றிருந்தேன். அங்கு பார்த்ததை என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை. அடுத்த நாள் நாங்கள் அவர்களுக்கு தக்க பதிலடி கொடுத்தோம்.

**தெகல்கா :** கோத்ராவில் எதை உங்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை?

**பஜ்ரங்கி :** கோத்ரா படுகொலையை பார்த்த எவருக்கும் அப்படித்தான் தோன்றியிருக்கும். உடனே அவர்களை வெட்டி துண்டாட வேண்டும். அப்படித்தான் அது இருந்தது.

**தெகல்கா :** நீங்கள் அங்கிருந்தீர்களா?

**பஜ்ரங்கி :** ஆமாம்... ஆமாம்... நான் அவர்களோடு இருந்தேன். கோத்ரா படுகொலை நிகழ்ந்தது, நான் அதைப் பார்த்தேன். திரும்பி வந்ததும் பதிலடி கொடுத்தோம்.

**தெகல்கா :** எப்படி இத்தனை குறைந்த நேரத்தில் இத்தனையையும் ஒருங்கிணைத்தீர்கள்?

**பஜ்ரங்கி :** சிறிது நேரமே... நாங்கள் அனைத்தையும் அன்று இரவே ஒருங்கிணைத்து விட்டோம். 29-30 பேர் கொண்ட குழுவை உருவாக்கினோம். துப்பாக்கி வைத்திருந்தவர்கள் அனைவரின் வீடுகளுக்கும் அன்று இரவு சென்று, அவைகளை எங்களிடம் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொண்டோம். அப்படி யாராவது தர மறுத்தால் அடுத்த நாள் சுட்டு விடுவதாக மிரட்டினேன், அவர்கள் இந்துவாக இருந்தாலும். அதனால் பலரும் தங்களிடம் இருந்த துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களை கொடுத்தார்கள். இப்படியாக 23 துப்பாக்கிகள் கிடைத்தன. ஆனால் எவரும் குண்டடிபட்டு சாகவில்லை. நடந்தது இதுதான். நாங்கள் அவர்களை ஒரு பெரும் குழியை நோக்கித் துரத்தினோம். அங்கு அவர்களை சுற்றி வளைத்து கொன்றோம். பின்பு 7 மணி அளவில் அறிவித்தோம்.

**தெகல்கா :** இது பாட்டியாவில் நிகழ்ந்ததா? அப்படித்தான் அது அழைக்கப்படுகிறது இல்லையா?

**பஜ்ரங்கி :** ஆமாம்... ஆமாம்... பாட்டியாதான்.

**தெகல்கா :** அந்த பாட்டியா பகுதியை கொஞ்சம் விவரியுங்கள்.

**பஜ்ரங்கி :** பாட்டியாவில் அரசு போக்குவரத்து பணிமனை உள்ளது. அதன் மதில் சுவர் நீண்டு உயர்ந்து செல்கிறது. அதன் அருகிலிருந்து பாட்டியா தொடங்குகிறது. பாட்டியாவுக்கு எதிரில் ஒரு மசூதி உள்ளது. அதன் பக்கத்தில் பெரும் பள்ளம் இருக்கிறது. அங்கு தான் எல்லோரையும் கொன்று குவித்தோம். 7 மணி அளவில் நான் உள்துறை அமைச்சரையும், ஜெய்தீப் படேலை (வி.எச்.பி. பொதுச் செயலர்)யும் அழைத்து எத்தனை நபர்கள் கொல்லப்பட்டார்கள் என தெரிவித்தேன். இனி எல்லாம் உங்கள் கைகளில்தான் உள்ளது. இருப்பினும் அவர்கள் என்ன செய்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. அதிகாலை 2.30 மணிக்கு என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. நான் அங்கு இருந்ததாக முதல் தகவல் அறிக்கை கூறியது... காவல் துறை ஆணையர் என்னைப் பார்த்த இடத்தில் சுடும்படி ஆணை பிறப்பித்தார்.

**தெகல்கா :** யார், நரேந்திர மோடியா?

**பஜ்ரங்கி :** ஆணையர் உத்தரவிட்டார்.

••

**பஜ்ரங்கி :** நாங்கள் ‘சரஸ்’ சமூகத்துடன் இணைந்து பாட்டியா கொலைகளை நிகழ்த்தினோம். அதன் பிறகு நாங்கள் அனைவரும் சிறைச்சாலைக்கு சென்றோம். நாங்கள் சிறையில் அடைக்கப்பட்டவுடன் மக்கள் எங்களுக்கு ஏராளமாக பணம் கொடுத்தார்கள். நான் பணக்காரன் என்பதால் எனக்கு கவலையில்லை. ஆனால், விஸ்வ இந்து பரிஷத்தின் தலைவர்கள் ஏழைகளைப் பற்றி கவலைப்படவில்லை. அவர்கள் கையில் சல்லி காசுகூட இல்லை. நான் சிறையிலிருந்து தொடர்ந்து ஏழைகளுக்கு உதவும்படி கேட்டுக் கொண்டேன். தண்டிக்கப்பட்டவர்களுக்கு உதவுங்கள், ஏதாவது செய்யுங்கள். அவர்கள் அய்ந்து ஆறு மாதங்கள் உதவி செய்துவிட்டு நிறுத்திக் கொண்டார்கள்.

எங்கள் மீதான வழக்குகளை நீதிமன்றத்தில் வாதிடுவதாக வாக்குறுதி அளித்தார்கள். ஆனால் இன்றுவரை யாரும் துரும்பைக்கூட அசைக்கவில்லை. பிரவீன் தொகாடியா (வி.எச்.பி. அகில உலக செயலர்) வெளிப்படையாகவே வாக்குறுதியளித்தார். அப்படி வீடுகளுக்கு வேறு ஏதும் வழிகளில் சேதங்கள் ஏற்பட்டால்தான் அந்த இழப்பை ஈடு கட்டுவதாக வாக்கு கொடுத்தார். ஆனால், அவர்கள் சேகரித்த அவ்வளவு பணத்தையும் என்ன செய்தார்கள் என்று தெரியவில்லை. யாருக்கும் பணம் எதுவும் கொடுக்

கப்படவில்லை. அய்ந்து ஆறு மாதங்கள் ரேஷன் கொடுத்தார்கள். அதைத் தவிர வேறு எதுவும் இல்லை.

**தெகல்கா :** நீங்கள் ஜெய்தீப்புடன் மட்டும்தான் தொடர்பில் இருந்தீர்களா?

**பஜ்ரங்கி :** வி.எச்.பி.யிலிருந்து அவர் மட்டும்தான் என்னுடன் உரையாடினார்.

**தெகல்கா :** முஸ்லிம்கள் கொல்லப் பட்ட அன்று...

**பஜ்ரங்கி :** நான் 11-12 முறை ஜெய்தீப் பாயிடம் பேசினேன். எங்கள் விருப்பப்படி கொன்று அந்த இடத்தை சுடுகாடாக மாற்றி விட்டோம். நான் அதற்காகப் பெருமைப் படுகிறேன். மீண்டும் ஒரு வாய்ப்பு கிடைத் தால் இன்றும் நிறைய பேரை கொல்லுவேன்.

**தெகல்கா :** அப்போது ஜெய்தீப் எங்கு தங்கியிருந்தார்?

**பஜ்ரங்கி :** பிரவீன் பாயின் மருத்துவ மனையான தன்வந்திரியில்தான் ஜெய்தீப் அமர்ந்திருந்தார். அது பாபு நகரில் உள்ளது. அவர் அங்குதான் இருந்தார். இருப்பினும் நாங்கள் செய்யப்போவதை நான் அவரிடம் கூறவில்லை. நரோடாவிலும் நரோடா பாட்டியாவிலும் நாங்கள் ஒரு முஸ்லிம் கடையைக்கூட விட்டு வைக்கவில்லை, நாங்கள் தீயிட்டுக் கொளுத்தினோம். அவர் களை கொன்றோம். இதுதான் நாங்கள் செய்தது. அதுவரையிலும் அவர்களுக்கு என்ன நிகழ்கிறது என்று தெரியாது; ஆனால் எண்ணிக்கையை கேட்டவுடன் அவர்கள் பயந்து போனார்கள்.

••

**பஜ்ரங்கி :** நரோடா மற்றும் நரோடா கிராமம் அரை கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. அந்த இரு இடங்களிலும் நாங்கள் நிறையவே செய்தோம். ஏறக்குறைய கசாப்பு செய்து விட்டோம். பின்பு அந்த பிணங்களை கிணற்றுக்குள் தள்ளினோம். முதலில் அவர் பேசவில்லை என்று நினைக்கிறேன் (இது 'தெகல்கா' அவரை சந்திக்கும் நான்காவது முறை). பத்திரிகையாளர்கள் மற்றும் பல ரும் என்னிடம் வந்து பாட்டியா சம்பவம் நிகழ்ந்தபோது நீங்கள் எங்கிருந்தீர்கள் என்று கேட்பார்கள். நான் அதில் ஈடுபட வில்லை என்று கூறுவேன். நான் எங்கோ வெகுதொலைவில் ஒரு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தேன்.

••

**தெகல்கா :** உங்களுக்கு தெரியும். கோர்தான் சபாடியா எல்லாவற்றையும் குழப்பிவிட்டார் இல்லையா? பாட்டியா கொலைகளின்போது அவர் உங்களிடம் என்ன உரையாடினார்?

**பஜ்ரங்கி :** நான் கோர்தான் சபாடியா விடம் பேசினேன். அவரிடம் நான் நடந்த அனைத்தையும் கூறினேன். அவர் உடனே என்னை குஜராத்தை விட்டு வெளியேறி தலைமறைவாகச் சொன்னார். அவர் என்ன தான் சொல்கிறார் என்று கேட்டேன். ஆனால் அவர் உடனே ஓடிவிடும்படி கூறி, எங்கும் எந்த சந்தர்ப்பத்திலும் நமக்குள் நிகழ்ந்த உரையாடலை சொல்ல வேண்டாம் என்றார்.

••

**தெகல்கா :** எல்லாம் எப்படி நிகழ்த்தப் பட்டது என்று கூறுங்கள்... துப்பாக்கிகள்... சிலிண்டர்கள்...

**பஜ்ரங்கி :** அது அவர்களுடைய (முஸ் லிம்கள்) சிலிண்டர்கள்தான். எந்த வீடுக ளுக்குள் எல்லாம் நாங்கள் நுழைந்தோமோ உடனே அங்கிருக்கும் சிலிண்டரை கைப் பற்றி அதை எரித்தோம். பின்பு அது திடும் என வெடித்தது... எல்லா சந்தர்ப்பத்திலும் எங்கள் வசம் துப்பாக்கிகள் இருந்தன. அது எவ்வளவு இனிமையான நேரம் என என்னால் கூற இயலாது. இருப்பினும் எங்கள் சகாக் கள் நால்வர் அதில் உயிரிழந்தனர். இதில் கூட எந்த விசாரணையும் நிகழவில்லை.

**தெகல்கா :** நீங்கள் அந்த மசூதியின் மீது ஏறி பன்றியை கட்டி தொங்கவிட்டீர்களா?

**பஜ்ரங்கி :** நாங்கள் ஒரு முழு டேங்கர் லாரியை அந்த கட்டடத்துக்குள் நுழைத்தோம். அது முழுவதுமாக நிறைந்திருந்தது.

**தெகல்கா :** அது பெட்ரோல் டேங்கர், இல்லையா?

**பஜ்ரங்கி :** இல்லை அது டீசல். அந்த வாகனத்தை மசூதியின் உட்பகுதிக்கு செலுத்தி பின்பு தீயிட்டோம்.

**தெகல்கா :** அப்படியென்றால் பாட்டி யாவில் பற்றிய நெருப்பிற்கு, இந்த டேங்கர் வெடிப்புதான் காரணம் இல்லையா?

**பஜ்ரங்கி :** மசூதியில்தானே...

**தெகல்கா :** மசூதியில்தான்...

**பஜ்ரங்கி :** அந்த நேரம் எல்லாவற்றுக் கும் நான்தான் பொறுப்பாளராக இருந் தேன். நான் செய்ய நினைத்ததை எல்லாம் செய்து முடித்தேன்.

**தெகல்கா :** அந்த குழியில் இருந்தது எண்ணெய்... அங்கு மக்கள் கூடியிருந் தார்கள்.

**பஜ்ரங்கி :** அது ஒரு பெரிய குழி... நீங்கள் ஒருபுறமிருந்து உள்ளே இறங்கி மறு முனையில் வெளியேற முடியாது. அவர்கள் அனைவரும் ஒன்று கூடியிருந்தனர். ஒரு வரையொருவர் பற்றத் தொடங்கினர்... அவர்கள் சாகும் தருவாயில்கூட நீயும் சாக வேண்டியதுதானே, நீ இருந்து என்ன செய்யப் போகிறாய், நீ பிழைத்து என்ன ஆகப் போகிறது என அவர்களுக்குள் பேசிக் கொண்டனர். அதனால்தான் மரண எண்ணிக்கை கூடியது.

**தெகல்கா :** பின்பு மக்கள் எண் ணெய்யை உள்ளே ஊற்றினார்கள்.

**பஜ்ரங்கி :** எண்ணெய் மற்றும் எரியும் டயர்கள்...

**தெகல்கா :** எண்ணெய் எங்கிருந்து வந்தது?

**பஜ்ரங்கி :** அதுவா... எங்களிடம் நிறைய தளவாடங்கள் இருந்தன. நாங்கள் கேன்களின் ஏற்கனவே எண்ணெய் ஊற்றி வைத்திருந்தோம். முதல் நாள் இரவே பெட்ரோல் பம்பில் அவை நிறைக்கப்பட் டன. பெட்ரோல் பங்க் உரிமையாளர்கள் எங்களுக்கு பெட்ரோலையும், டீசலையும் இலவசமாகக் கொடுத்தார்கள்.

••'

**தெகல்கா :** முஸ்லிம்கள் துண்டு துண் டாக வெட்டப்பட்டார்கள்.

**பஜ்ரங்கி :** துண்டாடப்பட்டார்கள், எரிக்கப்பட்டார்கள்... பல மாதிரியாக நிகழ்ந்தது... நாங்கள் இவர்களை கொளுத் துவதைதான் விரும்புகிறோம், ஏனெனில், இந்த 'தேவடியாமகன்'கள் இறந்த பின் எரிக் கப்படுவதை விரும்புவதில்லை. அவர்களுக்கு அதில் பயம். தங்களுக்கு இது நடந்துவிடும் அது நடந்து விடும் என்று கூறுகிறார்கள்.

எனக்கு ஒரே விருப்பம்தான்... ஒரே கடைசி ஆசை... நான் சிறையில் அடைபட விரும்பவில்லை. துக்கிலிடப்படுவது குறித்து கவலைப்படவில்லை. என்னை தூக்கிலிடுவதற்கு முன் இரண்டு நாட்கள் அவகாசம் கொடுங்கள். நான் ஜுஹாபூரா வரை சென்று வருகிறேன் (அது முஸ்லிம் கள் அடர்ந்து வசிக்கும் பகுதி) அங்கு 7-8 லட்சம் முஸ்லிம்கள் வசிக்கிறார்கள். நான்

அவர்களை முடித்துவிடுவேன். இன்னும் சிலர் கட்டாயம் சாக வேண்டும். 25-50,000 பேராவது சாக வேண்டும்.

**தெகல்கா :** உங்களுக்கு எதிராக எத்தனை பேர் சாட்சியம் அளித்துள்ளார்கள்?

**பஜ்ரங்கி :** பதினான்கு முஸ்லிம்கள் மற்றும் 16 போலிசார். அந்த 14 முஸ்லிம்களில் பலர் ஜுஹாபூரா சென்றுவிட்டார்கள். அவர்களுக்கு பணம் கிடைத்தது. தலைக்கு 7 லட்சம் ரூபாய்... நரேந்திர மோடி அவர்களுக்கு எவ்வளவு வழங்கப்படும் என்று எப்பொழுதுமே கூறவில்லை. அவர் நிவாரணங்களை அறிவித்தார். பின்பு 20,000 ரூபாய்க்கான காசோலைகளை கொடுத்தார். பின்பு அதுவும் முடங்கிப் போனது. அதன் பிறகு அவர் யாருக்கும் எதுவும் கொடுக்கவில்லை. ஆனால் மத்திய அரசு அவர்களுக்கு ஆதரவளித்தது.

••

**தெகல்கா :** வேறு வார்த்தைகளில் சொல்வதானால், நீங்கள் கொலை செய்யப் பயன்படுத்திய வழிமுறைகள் வரலாற்றில் எழுதப்படும்.

**பஜ்ரங்கி :** அட! எங்க முதல் தகவல் அறிக்கையிலேயே அது எழுதப்பட்டுள்ளது. அந்த கர்ப்பிணிப் பெண்ணை நான் வகுந்தேன், கொ......ளி..... அது என்னவென்று காண்பித்தேன். எங்கள் ஆட்கள் கொல்லப்பட்டால் எப்படிப் பழி தீர்ப்போம் என்று காட்டினேன். நான் ஒன்றும் சோறு தின்பவன் கிடையாது. ஒருவனையும் விடவில்லை. அவர்களை நாம் இனப் பெருக்கம் செய்யக்கூட அனுமதிக்கக் கூடாது. நான் அதை இன்றும் கூறுகிறேன். அவர்கள் யாராக இருப்பினும் பெண்கள், குழந்தைகள் யாராயினும் அவர்களை நாம் எதுவும் செய்யக் கூடாது, துண்டாடுவதைத் தவிர. குப்பையில் எரியுங்கள், அடியுங்கள், கொளுத்துங்கள் 'தேவடியா மகன்'களை. இந்துக்கள் மோசமாக இருக்கலாம். நான் ஏன் இதை சொல்கிறேன். ஏனென்றால் நான் பார்த்திருக்கிறேன். பிறரைப் போலவே இந்துக்களும் மூர்க்கமானவர்கள்... பலரும் கொள்ளையடிப்பதில் நேரத்தை வீணடித்து விட்டார்கள். டேய்... அவங்கள உயிரோட விடாதீங்கடா. அந்தப் பொருட்கள் எல்லாம் நம்முடையதே.

**தெகல்கா :** சிலர் வன்புணர்வும் செய்தார்களா?

**பஜ்ரங்கி :** இல்லை. அங்கு வன்புணர்வு நிகழவில்லை.

**தெகல்கா :** ஒன்றிரண்டு சரஸ் ஆகக் கூட இருக்கலாம்.

**பஜ்ரங்கி:** சில 'சரஸ்' சமூகத்தினர் பெண்களை எடுத்துக் கொண்டார்கள் என்றால், அது வேறு விஷயம். நாங்கள் குழுவாக படையெடுத்துச் செல்கிறோம். அது வன்புணர்வுக்கான இடமே இல்லை. எல்லோரும் கொலை வெறியுடன் அலைந்தோம். நாங்கள் கொன்று குவித்துக் கொண்டிருந்தோம். சிறிய சந்துகளில் முஸ்லிம்களை எதிர் கொள்ள வேண் டியிருந்தது. அங்கு வாக்கு வாதம், தகராறு நடக்கும். அவர்கள் முடிந்த



வரை பலம் கொண்டு எதிர்த்தார்கள். நாங்கள் சிலரை கொன்ற கணத்தில் அடுத்த இடம் நோக்கி செல்வோம். இந்த களேபரத்தில் பெண்கள் சிலர் தப்பிச் செல்ல முயன்று, அதை 'சாரா'க்கள் சிலர் பிடித்திருந்தால் அது வேறு கதை. அன்று நிகழ்ந்தது பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையே நிகழ்ந்தது போலிருந்தது. எங்கு பார்த்தாலும் பிணங்கள். அது நாம் காண வேண்டிய காட்சி. ஆனால் படம் பிடிக்க வேண்டியது அல்ல. அது யார் கையிலாவது சிக்கி விட்டால்... அங்கு சில வீடியோகாரர்கள், ஊடகக்காரர்கள் இருந்தார்கள். அவர்களையும் நாங்கள் தீயிட்டுக் கொளுத்தினோம். எங்களை பல மீடியாக்கள் ஏமாற்றவும் செய்தார்கள். அவர்கள் ஜெய் மாதா ஜி என கூறி விட்டு தப்பிச் சென்று விடுவார்கள். அதுவும் நடந்தது. நெற்றியில் சிவப்புத் திலகமிட்டு ஜெய் சிறீராம், ஜெய் மாதா ஜி என முழக்கமிடுவார்கள்.

**தெகல்கா :** எப்படி மாநில ரிசர்வ் காவல் படையினர் மக்களை காப்பாற்றினார்கள் என்று கூறுங்கள்?

**பஜ்ரங்கி :** ஒரு முஸ்லிம் மட்டும்தான் இருந்தான். சயீத்... அவன் பெரும் பதவியிலிருந்தவன்.

**தெகல்கா :** அவர் ஒரு அதிகாரி.

**பஜ்ரங்கி :** ஆம். அவன் ஒரு அதிகாரிதான். அந்த கேம்பிற்குப் பின்னால்தான் வெட்டுவது, தீயிடுவது நிகழ்த்தப்பட்டது. அந்த குழியில் விழாதவர்கள் காவல்படை வளாகத்துக்குள் நுழைந்தனர். அங்கிருந்த ரிசர்வ் படையினர் உள்ளே நுழைந்தவர்களை விரட்டியத்தார்கள். ஆனால் அந்த அதிகாரி வாகனத்தில் வந்திறங்கியதும் அனைவரையும் உள்ளே அனுமதிக்கும்படி கேட்டுக் கொண்டார். அவர் உத்தரவு பிறப்பிக்கும் உரிமை படைத்தவர். ஒரு உயர் அதிகாரி. அதனால் பலர் காப்பாற்றப்பட்டார்கள். குறைந்தது 500 பேர் இல்லையெனில், அவர்களுக்கும் மேலே சென்றிருப்பார்கள். அந்த அதிகாரி மீதும் சுடப்பட்டது. அவர் எனக்கு எதிரான சாட்சியாகவும் உள்ளார்.

**தெகல்கா :** ஆனால் நரேந்திர மோடி அவருக்கு பதவி உயர்வு அளித்துள்ளாரே...

**பஜ்ரங்கி :** அது அவனை சத்தம் இல்லாமல் இருக்கச் செய்ய... அதனால் பாட்டியாவில் நல்ல வேலைகள் நடந்தது. இன்றும் நான் முஸ்லிம்களுக்கு எதிராகப் போராடி வருகிறேன். போராடிக் கொண்டேயிருப்பேன். எனக்கும் அரசியலுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நான் சொல்வது என்னவென்றால், வி.எச்.பி. ஒரு அமைப்பு... இந்து அமைப்பு... நம் அரசியல் முஸ்லிம்களை கொல்வது, அடிப்பது, எறிப்பது மட்டுமே.

**தெகல்கா :** முஸ்லிம்களை கொன்று குவித்த பிறகு எவ்வாறு உணர்ந்தீர்கள்?

**பஜ்ரங்கி :** மகிழ்ச்சியாக இருக்கிறது அல்லவா... நான் அவர்களை எல்லாம் கொன்றுவிட்டு வீடு திரும்பினேன். உள்துறை அமைச்சருடன் உரையாடிவிட்டு உறங்கச் சென்றேன். நான் ராணா பிரதாப்பைப் போல் உணர்ந்தேன். மகாராணா பிரதாப்பைப் போல் ஏதோ செய்து விட்டதாக... அவரைப் பற்றிய கதைகளை கேட்டிருக்கிறேன். ஆனால் அவர் அன்று செய்ததை நானே செய்தேன்.'

எழுத்துப்படி **ராஜேந்திர வியாஸ்**



# ‘நான் கலவரங்களுடன் தொடர் புடையவன் என்பதை நிரூபிக்க நானாவதி முயன்றார்’

**சபர்மதி எக்ஸ்பிரசில் இருந்த கரசேவகர்களின் பொறுப்பாளர் ராஜேந்திர வியாஸ். கோத்ரா இந்த படிப்பினையை நினைவில் கொள்ளும் என்கிறார்**

**சூன் 8, 2007**

**வியாஸ் :** நான்தான் கோத்ராவிலிருந்த ரயில் தொடர்புடைய விஷயங்களுக்கு பொறுப்பாளர்.

**தெகல்கா :** ஜெய்தீப் இதனை என்னிடம் கூறினார்...

**வியாஸ் :** அந்த நேரம் ‘ஆஜ் தக்’-அய் சேர்ந்தவர்கள் என்னிடம் வந்தார்கள். அவர்களிடமும் நான் இதைத்தான் கூறினேன். பொறுங்கள், என் தோள்கள் 59 உடல்களை தூக்கிச் சுமக்கும் அளவிற்கு பலம் பொருந்தியவை அல்ல. மிகுந்த மன வேதனையுடன் கூற வேண்டியதுள்ளது, நம்முடன் வந்தவர்களை நாம் விட்டு விடுவோம்... நம்முடன் 300 பெண்கள் இருக்கிறார்கள். அதனால்தான் நாம் இத்துடன் நிறுத்திக் கொள்கிறோம். இல்லையெனில் மொத்த கோத்ராவும் இன்னொரு புறம் எரிக்கப்பட்டிருக்கும்.

...நாம் வளையல் அணிந்து கொண்டிருக்கவில்லை... இந்துவாக தங்களை கருதுபவர்கள், என்னுடன் வந்துள்ள இளைஞர்கள் மற்றும் இந்த உலகின் எந்த மூலையில் வசிப்பவராக இருப்பினும், எல்லோரும் எங்களை செவிமடுத்து கேட்க வேண்டும். முஸ்லிம்கள் எங்களுடன் ஒரு நாள் போட்டி விளையாடி 60 ஓட்டங்கள் என்ற இலக்கை தீர்மானித்திருக்கிறார்கள். நாம் என்ன விலை கொடுத்தாகிலும் இந்த பந்தயத்தில் விளையாட வேண்டும். 600 ஓட்டங்களை எட்டும் வரை யாரும் விளையாட்டை நிறுத்தி விடாதீர்கள்... அப்போது பஞ்ச் மகாலின் ரேன்ஜ் ஆபிசர் பீபக் ஸ்வரூப் என்னுடன் இருந்தார். அவர் என்னிடம் நான் செய்வது சரியானதல்ல என்று கூறினார். அதற்கு கடுமையான விளைவுகள் நிகழும் என்றார். நான் முஸ்லிம்கள் பயன்படுத்தும் மொழியில் எவ்வளவோ எடுத்துரைத்தேன். அதாவது நான் மோசமான வசவுகளை உதிர்த்தேன். நம் முதல்வர் நரேந்திர மோடி உரக்க சிரிக்கத் தொடங்கினார். எவனை எப்படி வெட்டியிருக்கிறார்கள் என்று பாருங்கள். ஏனென்றால் அவன் அந்தப் பகுதியை சேர்ந்த முஸ்லிம். நான் முஸ்லிம் பகுதியில்தான் குடியிருக்கிறேன். இந்த வீடு, இந்த சுவர்கூட ஒரு முஸ்லிமுக்குச் சொந்தமானது. அப்படித்தான் இருக்கிறது. இந்த காலனியே முஸ்லிம்களுடையதுதான். இந்த இரண்டடி கதவு மட்டுமே இந்துவுக்கு சொந்தமானது. நான் இங்கே என் தாட்டியத்தால், பலத்தால் வாழ்கிறேன்.

**தெகல்கா :** எனக்கு ஒன்றை சொல்லுங்கள். கோத்ராவில் ரயில் எரிந்தபோது நீங்கள் நரேந்திர மோடியுடன் இருந்தீர்கள். முதல் எதிர்வினை என்னவாக இருந்தது?

**வியாஸ் :** முதலமைச்சராக இருப்பதால் நரேந்திர மோடியால் வெளிப்படையாக ‘முஸ்லிம்கள் அனைவரையும் கொல்லுங்கள்’ என்று கூற முடியவில்லை. என்னால் அதை வெளிப்படையாகக் கூற முடிந்தது. ஏனென்றால் நான் விஸ்வ இந்து பரிஷத்-அய் சார்ந்தவன். பிரவீன் தொகாடியாவால் இதைக் கூற முடியும். ஆனால் அவரால் (நரேந்திர மோடி) சொல்ல முடியாது. அது எப்படி என்றால், எங்கள் குஜராத்தியில் நாங்கள் சொல்வோம். ‘குருட்டு கண்ணால் பார்ப்பது, அதாவது, முஸ்லிம்களால் ஏற்கனவே மனம் நொந்து போயிருந்தால், எதை வேண்டுமானாலும் செய்யுங்கள் என முழு சுதந்திரம் கொடுத்தார்.

காவல் துறை எங்களுடன்தான் இருந்தது. அதாவது நான் சொல்வதைப் புரிந்து கொள்ளுங்கள்... காவல் துறை எங்களுக்கு எல்லா ஒத்தாசையும் வழங்கியது. அது போலதான் மொத்த இந்து சமூகமும். நரேந்திர அண்ணன் அதில் மிகவும் கறாராக இருந்தார். இல்லையேல் காவல் துறை எதிர் தரப்பில் இருந்திருக்கும்.

**தெகல்கா :** ஆமாம். காங்கிரஸ் அரசாக இருந்திருந்தால்...

**வியாஸ் :** இல்லை. நான் சொல்வது என்னவென்றால், காவல் துறை எதிர் துருவமாக செயல்பட்டிருக்கும். அதனால்தான் நானாவதியின் ஆட்கள்... என்னை மூன்று முறை குறுக்கு விசாரணை செய்தார்கள். என் வாக்குமூலத்தைப் பதிவு செய்தார்கள். இந்த கலவரங்கள் என்னால்தான் நிகழ்ந்தது என்பதை நிரூபிக்க முயன்றார்கள். ஏனெனில், நான்தானே இவற்றுக்கு எல்லாம் பொறுப்பாளர். நான் இதுக்கெல்லாம் பயந்தவன் இல்லை. அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும்.

**தெகல்கா :** கோத்ரா நிகழ்ந்தபோது எவ்வாறு இந்துக்கள் ஒன்றிணைந்தார்கள்?

**வியாஸ் :** என் சொந்த விஷயத்தை எடுத்துக் கொள்ளுங்களேன். என் மகள் மூர்க்கமாக தாக்கப்பட்டார், அவர் மீது திராவகம் வீசப்பட்டது. அவர் முகம் முழுவதும் கருகிப் போனது. 15 நாட்கள் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்... என் வீட்டின் நிலையைப் பாருங்கள். இரும்பு கிராதியை பாருங்கள். முற்றிலுமாக என் வீட்டை தீக்கிரையாக்கப் பார்த்தார்கள். ஆனால் நாங்கள் சும்மா விடவில்லை. அவர்களின் ஒன்பது வீடுகளை கொளுத்தினோம். ...எத்தனை?

**தெகல்கா :** ஒன்பது

**வியாஸ் :** பிறகு நாலு பேரை கொன்றோம். அப்படித்தான் அவர்களை அடக்கினோம். எனக்கு எந்த குற்ற உணர்வும் இல்லை. போலிஸ்தான் முதலில் சுட்டது என நான் நிரூபித்தேன். போலிஸ் சுட்டது. ஆனால் நாங்கள்தான் தொடங்கினோம்.

**தெகல்கா :** இது இப்போது உங்கள் ஏரியாவாக மாறிவிட்டது.

**வியாஸ் :** இது நிகழ்ந்துள்ளது. ஏனென்றால் நான் எதற்கும் பயங்கொள்பவன் அல்ல.

●●

**வியாஸ் :** 85இல் காங்கிரஸ் சோலங்கியின் தலைமையில் ஆட்சியிலிருந்தபோது, இந்துக்கள் பரவலாக பல தாக்குதல்களுக்கும் வசைகளுக்கும் ஆளானார்கள். தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் மதக் கலவரங்கள் நடந்தது. அப்போது ரிமோட் கன்ட்ரோல் முஸ்லிம்களின் கைகளில் இருந்தது. முஸ்லிம்களின் வீடுகளில் பணம் புழங்கியபோது எல்லாம் மதக் கலவரங்கள் நடந்தது. ஆனால் அது மாதத்தின் 10 முதல் 20 தேதிக்குள் நடக்காது. அவர்களுக்கு சம்பளம் 10 ஆம் தேதிதான் பட்டுவாடா செய்யப்படும். அதனால்தான் அந்த தேதியிலிருந்து கலவரம். இப்படித்தான் அது இடைவிடாமல் நடந்தது. இதை நீங்கள் யாரிடம் வேண்டுமானாலும் கேளுங்கள்...

●●

**வியாஸ் :** நாங்கள் இங்கிருந்து கிளம்பியபோது, எங்களுடன் 1800 பேர் இருந்தனர். அதில் 300 பெண்கள் அடக்கம். ஆனால் பயணச்சீட்டு 50 பேருக்கு மட்டுமே எடுக்கப்பட்டது. மற்றவர்கள் ராமரின் பெயரால் பயணித்தார்கள். இதைத்தான் லாலு பிரசாத் யாதவ் சுட்டிக்காட்டினார். இவர்கள் இத்தனை பேரும் பயணித்ததற்கான ஆதாரம் என்னவென்று. அந்த 50 பயணச்சீட்டுகளை வாங்கியதே ஏதாவது பரிசோதகர் வந்தால், அல்லது பிரச்சனை எழுந்தால் இதோ எங்களிடம் பயணச்சீட்டு உள்ளது என்பதை காண்பிப்பதற்காகத்தான்.

ரயில் அயோத்தியிலிருந்து திரும்பி வந்தபோது அங்கே அரை மணி நேரம் நிற்கும். அப்போது அது பைசியாபாத்திலிருந்து வரும். அந்நேரம் பெண்கள் எல்லோரும் தங்கள் தலைவர்கள் இவ்வாறு பொறுப்பில்லாது நடப்பதாக தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள், அவர்கள் நடைமேடையில் சுதந்திரமாக உலவினார்கள். பெண்கள் பெரும் நெரிசலில் இடிபட வேண்டியிருந்தது. அதனால் நான் கூறினேன். பெண்கள் முன்பதிவு செய்யப்பட்ட இருக்கைகளில் அமரட்டும். நாம் அனைவரும் முன்பதிவு இல்லாத பெட்டியில் ஏறிக்கொள்வோம் என்று நாங்கள் முன்பதிவு இல்லாத பொது பெட்டிக்குச் சென்றோம். பாவம் அந்த அப்பாவிகள்தான் இறந்துபோனார்கள். அதாவது எஸ்-6இல் பயணித்தவர்கள். அந்தப் பெட்டிதான் கொளுத்தப்பட்டது. முன்பதிவு இருக்கைகளைப் பெற்றிருந்தவர்கள்.

●●

**வியாஸ் :** நாங்கள் அங்கும் சண்டையிட்டோம் (கோத்ராவில்) பெண்களை ரயிலிலிருந்து இறக்கினோம். அவர்களைச் சுற்றி பாதுகாப்பு வளையம் அமைத்தோம். அதன் பின் எதற்காகப் பொறுத்து நிற்கிறீர்கள், போய் அனைவரையும் கொல்லுங்கள் என்றேன். பிறகு மசூதியை முற்றாகக் கொளுத்தினோம்.

**தெகல்கா :** கோத்ராவில் தானே?

**வியாஸ் :** அங்கேயே மூன்று பேரை குத்தி கொன்றோம். பின்பு எங்களுக்குக் கொடுக்கப்பட்ட கேரேஜை கொளுத்தினோம். பின்பு டயர்களில் தீப்பற்றி அதுவும் எரிந்தது. அது வெடிகுண்டைப் போல ஓசை எழுப்பியது. அது பரோடாவிலிருந்து தீபக் ஸ்வரூப் ராணுவ போலிசை அழைத்திருந்த நேரம். நிலைமை கட்டுக்கடங்காமல் போய் விட்டது என்பதை அவர் தெரிந்து கொண்டார். நாங்கள் தவறிழைப்பதாக அவர் கூறினார். போய் உங்க அம்மாவை போய் ஓ...டா என நான் சொன்னேன். நாங்கள் என்ன தவறை செய்து விட்டோம். அட 'தேவடியா மகனே'! நீ ஒரு இந்துதானடா... உங்க அப்பன் என்ன துலுக்கனா... அப்படித்தான் அது சென்றது.

---

எழுத்துப்படி **ரமேஷ் தவே**

# 'எனக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. என்ன இது மொத்த குஜராத்தும் உறங்கிக் கொண்டிருக்கிறதா?'

## மோடியின் அறிக்கைகளை கேட்டு வன்மம் அடைந்து, தவே மற்றும் வி.எச்.பி.யினர் இலக்குகளை இனம் கண்டு ஒவ்வொருவராய் கொல்லத் தொடங்கினர்

**சூன் 12, 2007**

**தவே :** எது நடந்ததோ (கோத்ராவில்), அது நன்றாகவே நடந்தது. எதுவாகிலும் ராஜேந்திர வியாஸ்தான் கோத்ராவில் நிகழ்ந்ததற்குப் பொறுப்பாளர்.

**தெகல்கா :** அவர் ரயிலின் பொறுப்பாளர். அப்படிதானே...

**தவே :** நானும் அவருடன் துணை பொறுப்பாளராக இருந்தேன்.

**தெகல்கா :** நீங்கள் ரயிலில் இருந்தீர்களா?

**தவே :** இல்லை. நான் செல்லவில்லை. எனக்கு சர்க்கரை வியாதி என்பதால் நான் வீட்டில் இருந்துவிட்டேன். 9.30 மணி இருக்கும். எனக்கு நடந்த சம்பவங்களை தெரிவித்த அழைப்பு வந்தது.

**தெகல்கா :** ராஜேந்திர பாய் தான் உங்களை தொலைபேசியில் அழைத்தார்...

**தவே :** ஆமாம் அவர் தான். இப்ப என்ன என்று அவர் கேட்டார். நான் கோத்ராவுக்கு 12 மணி அளவில் வந்துவிடுவதாக தெரிவித்தேன். பின்பு அவர் நான் கோத்ரா வர வேண்டியது இல்லை என்றார். பலரும் அப்போது கோத்ரா கிளம்பி சென்று கொண்டிருந்தார்கள். ஆனால் சூழ்நிலை கட்டுக்கடங்காமல் சென்றுவிட்டது. அது சரியாக கையாளப்பட வேண்டிய நிலையி

லிருந்தது. நான் கவலை கொள்ள வேண்டாம் என்றேன். பின்பு அவர் அழத் தொடங்கினார். ராஜேந்திர பாய் கூறினார், நம்மவர்கள் 60 பேர் இறந்துவிட்டார்கள். நாம் ஒரு நாள் போட்டி விளையாடிக் கொண்டிருக்கிறோம்.

**தெகல்கா :** அவர் அதை என்னிடம் கூறினார்...

**தவே :** ஒரு நாள் போட்டி விளையாட வேண்டும். 600 வரை நீ கவலை கொள்ள வேண்டாம் என்றேன். எல்லாம் கடவுளின் ஆசிர்வாதத்துடன் நடக்கும். பின்பு இறந்தவர்களை எல்லாம் இங்கே எடுத்து வந்தார்கள்... அந்தக் காட்சி...

**தெகல்கா :** அந்தக் காட்சிகளை நான் பார்த்திருக்கிறேன், விஸ்வ இந்து பரிஷத் அலுவலகத்தில்...

**தவே :** அலுவலகத்தில்... நாங்கள் அங்கு இரவில் சென்றோம். சூழ்நிலை மிகவும் துன்புறுத்தியது. எல்லோரிடமும் ஒரே போல கோபம், சஞ்சலம்... பல ஆண்டுகளாக இதே நிலைதான் உள்ளது. நரேந்திர மோடி எங்களுக்கு முழு ஆதரவு அளித்தார்.

**தெகல்கா :** கோத்ராவுக்கு வந்து சேர்ந்தபோதும், அங்கிருந்து திரும்பும்போதும் நரேந்திர மோடியின் எதிர்விளைவு எப்படியிருந்தது?

**தவே :** கோத்ராவில் அவர் கடுமையான அறிக்கையை வெளியிட்டார். அவரே கலவரமடைந்திருந்தார். அவரும் குழந்தைப் பருவத்திலிருந்து ஒரு 'ஸ்வயம் சேவக்' தானே! அப்படியொரு கோபம் அவர் முகத்தில். அதுவரை அவர் வெளியே பொதுவில் காட்சியளிக்கவில்லை. ஆனால் காவல் துறை செயலற்றுப் போனது. அடுத்த நாள் காலை 10.30 மணி அளவில் நாங்கள் இரங்கல் ஊர்வலம் நடத்தினோம், வி.எச்.பி. அலுவலகத்திலிருந்து... இதுதான் வெளியே தெரிவிக்கப்பட்ட விஷயம். நடந்தது என்னவென்றால் 10.45 போல ராஜேந்திர பாய் என்னை தொலைபேசியில் அழைத்து, குஜராத் உறங்கிக் கொண்டிருக்கிறதா என்றார். அப்படியில்லை சற்றுப் பொறுத்திருங்கள். என் பங்கிற்கான பதிலடி உடனே நிகழும் என்றேன். உடனே நாங்கள் சம்பவ இடத்திற்குச் சென்றோம். அங்கிருந்து மொத்த குஜராத்தும் பற்றி எறியத் தொடங்கியது. அந்த இடம் தரியாபூர்.

●●



**தவே :** இது காந்தாரிபூர். இங்கு இந்துக்கள் குறைந்து வருகிறார்கள். முஸ்லிம்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே வருகிறது.

**தெகல்கா :** அவர்கள் கூடிக் கொண்டிருக்கிறார்கள்...

**தவே :** இது எங்கள் எல்லை. இதற்குப் பின்புறம் உள்ள வீடு அப்துல் லத்தீபுடையது. கோத்ரா இனப்படுகொலையின் போது, கொள்ளை தொடங்கியது பதினொரு மணி அளவில். அடுத்த நாள் பதினொன்று வரை சண்டை நீடித்தது.

**தெகல்கா :** அவர்களும் உங்களை நோக்கிச் சுட்டார்களா?

**தவே :** அவர்கள் சுடவில்லை. இந்த முறை எல்லோரும் இந்துக்களின் பக்கம். அப்போது எனக்கு மதேபுரா பொறுப்பு வழங்கப்பட்டது. அருகில்தான் உள்ளது. இங்கு 123 கலவர வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இதில் 15 வழக்குகள் 302 ஆவது பிரிவின் கீழ் வரும். உங்களுக்கு இது புரியும் என்று நினைக்கிறேன். நாங்கள் எங்கள் கண்களில் கடந்த 20-25 ஆண்டுகளாக எதிர்ப்படும் அனைவரையும் கொன்று குவித்தோம்.

**தவே :** கோத்ராவில் நாங்கள் எடுத்த வீடியோ பதிவுகளை மக்களுக்குப் போட்டுக் காண்பித்தோம். என்ன நடக்கிறது என்றால்... அங்கு சீற்றம் நிலவியது. பின்பு பெரும் எரிமலை வெடித்துக் கிளம்பியது. நாங்கள் நிறைய சேதங்களை ஏற்படுத்தினோம். எங்கள் திட்டம் கோத்ராவை தரை மட்டமாக எரிப்பதுதான்... எல்லா துலுக்கனையும் எரிப்பதுதான்... பின்பு அனைவரையும் ஒன்றிணைக்க வேண்டும். சூழ்நிலையை கையாள வேண்டும்.

**தெகல்கா :** அந்த நேரம் எல்லா பெரும் முக்கியஸ்தர்களும் அங்கு வந்து பார்வையிடத் தொடங்கினார்கள். காலுப்பூரில் எதிர்வினை இருந்ததா?

**தவே :** நாங்கள் மிக அழுத்தமான தாக்குதலில் ஈடுபட்டோம்.

**தெகல்கா :** எத்தனை பேர் கொல்லப்பட்டார்கள்?

**தவே :** இங்கே உட்புறங்களில் மட்டும் 60-70 பேர். ஆனால் பலிவந்து மக்கள் தரியாபூரிலும் காலுபூரிலும் என்ன செய்தார்கள் என்றால்... அங்கு 3-4 பகுதிகள் உள்ளது. ஜுஹாபூரா, ஷாபூர், தரியாபூர் மற்றும் காலுப்பூர். கலவரத்தை செய்துவிட்டு இங்கு வந்து ஒளிந்து கொள்வார்கள்.

●●

**தெகல்கா :** நான் ஹரேஷ் பாயுடன் மனம் திறந்த உரையாடலில் ஈடுபட்டேன். ஹரேஷ் பாய் அவர்களின் பட்டாசு தொழிற்

சாலையில்தான் வெடிகுண்டுகள் தயாரிக்கப் பட்டன.

**தவே :** ஆமாம். அங்குதான் அவை தயாரிக்கப்பட்டன. நாங்கள் இங்கு இல்லை யென்றால், வெளியே சென்றிருப்போம். கணேஷ் ஷியாம் பட்டேல்தான் அனை வரையும் அழைத்து கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார்.

**தெகல்கா :** தரியாப்பூரில், காலுப்பூரில் கலவரங்கள் தொடங்கியபோது நீங்கள் ஆயுதங்கள் வைத்திருந்தீர்களா?

**தவே :** ஏற்கனவே சில வந்துவிட்டன...

**தெகல்கா :** ஆனால் இந்துக்கள் ஆயுதங்கள் வைத்துக் கொள்வதில்லை.

**தவே :** அவர்களிடம் ஆயுதங்கள் இல்லை. இருந்தபோதிலும் எங்கள் சகோ தரர் சிலவற்றை கொண்டு வந்தார். எப் படியும் இது வாள்களின் காலம் இல்லை. எல்லோருக்கும் ஆயுதங்கள் வேண்டும் தானே.

**தெகல்கா :** அவர்கள் எத்தனை ஆயு தங்களை கொண்டு வந்தார்கள், 2-3..., அது ஸ்டாண்டுடனானது?

**தவே :** இல்லை. அது 8-10 இருக்கும்.

●●

**தெகல்கா :** நான் நம் போராளிகளை சந்திக்க இயலுமா? சிறையிலிருந்து வெளியே வந்தவர்கள்? சும்மா ஒன்று இரண்டு பேரை.

**தவே :** யோகி என்ற பெயருடைய ஒரு வன் இருந்தான். நீங்கள் ஹர்சத் பாயை சந்தித்திருக்கிறீர்களா, ஹர்சத் பாய் கில்லெட் வாலா?

**தெகல்கா :** இதுவரையில்லை. ராஜேந் திர பாய் அவரது பெயரை எனக்கு கொடுத் தார். ஆனால் நான் சந்தித்ததில்லை.

**தவே :** ஓட்டலை கொளுத்தும்போது, அவன் மீதும் தீப்பற்றி விட்டது. 75 சதவிகித காயங்கள்.

**தெகல்கா :** எந்த ஓட்டல்? பரோடா வில் உள்ள பெஸ்ட் பேக்கரியா?

**தவே :** இல்லை, இல்லை. இது வேறு.

**தெகல்கா :** இது ஒரு முஸ்லிம் ஓட்டல்.

**தெகல்கா :** அது காலுப்பூரில் உள்ளதா?

**தவே :** இல்லை. அந்தப் பக்கம் நாராயன்பூரா அருகில்.

**தெகல்கா :** முஸ்லிம்கள் சிலர் இறந்து போனார்களா?

**தவே :** ஒருவன் கொல்லப்பட்டான்.

**தெகல்கா :** அப்படியென்றால் 75 சத விகித காயங்கள் ஹர்ஷத் பாய்க்கு ஏற்பட்டது.

**தவே :** அவனை இப்போது பார்த்தா லும் அது போலவே உள்ளது. 75 சதவிகித தீக்காயங்கள். அவனை காப்பாற்றுவது எளி தாக இருக்கவில்லை. 4-5 லட்சம் செல விடப்பட்டன. 1,25,000 முறை மந்திரத்தை ஜெபித்துள்ளான்.

**தெகல்கா :** அவனைத் தவிர வேறு யாரையும் நான் சந்திக்கக் கூடுமா? அந்த வாகன காப்பகம் நடத்துபவரை...

**தவே :** இல்லை. அவன் இப்போது ஊரில் இல்லை. அவன் இவற்றைப் பற்றிப் பேச மாட்டான். அவன் சொன்னது போல அவனது தொழிலில் அவன் இந்துக்கள், முஸ்லிம்கள் ஆகிய இருவரையும் சந் தித்தாக வேண்டும்.

**தெகல்கா :** அவன் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதா?

**தவே :** அது கலவரத்துக்கு முன்பு பதிவு செய்யப்பட்டது. அது முஸ்லிம் ஒருவரை கொலை செய்த வழக்கு. அவன் அதில் கைது செய்யப்பட்டான்.

**தெகல்கா :** இல்லை, கோத்ராவுக்குப் பிறகு...

**தவே :** இல்லை, கோத்ராவுக்குப் பிற கில்லை. முக்கியமாக நடந்தது என்னவென் றால் இங்கு யாரும் சண்டையிடவில்லை. அவர்கள் இங்கிருந்து சென்று விடுவார்கள். தரியாபூர், காலுப்பூரில் சாராயம் காய்ச்சு பவர்கள்தான் அங்கும் இங்கும் சென்று கலவரம் செய்தார்கள்.

**தெகல்கா :** எந்த மாதிரியான சூழ்ச்சி யான வியூகங்கள் பின்பற்றப்பட்டன? ஒரு நிலையான முறை பின்பற்றப்பட்டதா, இல்லை அடித்து நொறுக்கி விட்டு ஓடிவிடு வது தானா?

**தவே :** இல்லை. தந்திரம் தான் முதன் மையானது.

**தெகல்கா :** கூலிப் படையினரை திறம் படப் பயன்படுத்துவது...

**தவே :** அவர்களை நாங்கள் நேர டியாகப் பயன்படுத்தினோம், அது இப் போதும் தொடர்கிறது.

**தெகல்கா :** யாரைப் போல? ஏதாவது நபர்களை கூறுங்களேன்?

**தவே :** அந்த முஸ்லிம்களின் பெயர் கள் எனக்கு நினைவில்லை. ஆனால் அங் கிருந்தவர்களை தேர்வு செய்து கொன் றோம். மதேபூராவில் கட்கி என்று ஒருவன் இருந்தான். அங்கு கலவரம் நடந்தபோது அவன்தான் முதலில் வெளியேறினான். அன்று அவனை குறிவைத்துக் கொன்றோம். அதற்கு இரு வகையான நன்மைகள் இருந் தன. இந்துக்கள் மன எழுச்சி பெற்றார்கள், முஸ்லிம்கள் மனமுடைந்து போனானர்கள்.

●●

**தெகல்கா :** கோத்ரா சம்பவம் நிகழ்ந்த அன்று விஸ்வ இந்து பரிஷத் கூட்டங்கள் ஏதும் நடந்ததா? ஏதும் திட்டங்கள், சதிகள் வகுக்கப்பட்டதா? ஏதேனும் பொதுவான தந்திரங்கள் உங்கள் மத்தியில் எழும்பி யிருக்க வேண்டுமே?

**தவே :** இல்லை. அது நடந்தது. ஆனால் அந்நேரம் சுழல் களியாட்டம் போலிருந்து... அது அமைப்புக்கு மிகவும் உறுதுணையானது. அப்படி சூழல்களின் பயனாகத்தானே அமைப்பு உருப்பெற் றுள்ளது. அப்படி ஒரு காலம் இருந்தது.

**தெகல்கா :** 27 ஆம் தேதி கோத்ரா படு கொலை நிகழ்ந்தவுடன் அகமதாபாத்தில் இருந்த தலைவர்கள் அனைவரும் ஒருவரை யொருவர் தொடர்பு கொண்டு சூழ்ச்சிகளை வகுத்தார்களா?

**தவே :** அது நடந்தது...

**தெகல்கா :** இல்லை. ஊரடங்கு உத்தர வால் அவர்களை சந்திக்க இயலவில்லையா?

**தவே :** இல்லை. ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தாலும் எங்களால் எங் கும் சென்று வர இயலும். அதற்காகவே பல சந்துகள் இருந்தன. அப்படி இல்லையென் றாலும் நாங்கள் சாலைகள் வழியே செல் வோம். 8-10 கூட்டங்கள் நடக்கத்தான் செய்தன. எங்கள் வியூகப்படி நாங்கள் பலி வாங்க வேண்டும். இன்று கொடுக்கும் பதி லடியில் அடுத்த 10 ஆண்டுகள் அமைதி நிலவ வேண்டும்.

# ‘அவரை துண்டு துண்டாக வெட்டினார்கள். பிறகு உயிருடன் தீயிட்டார்கள்’

**குல்பர்க்கை சேர்ந்த இந்த குற்றவாளி, காங்கிரஸ் எம்.பி. இஷான் ஜாப்ரியை தரையில் எட்டி உதைத்து பின்பு கொலை செய்த கும்பலைச் சேர்ந்தவன்**

செப்டம்பர் 8, 2007

**சாவல் :** நான் அன்று அங்கிருந்தேன். நாள் எல்லாம் அங்கும் இங்கும் ஓடித் திறந்தேன். அவர்கள் ஜாப்ரி சாகிப்பை கூப்பிட்டு வந்தபோது நான் அவர்களுடன் இருந்தேன். அவரை தரையில் போட்டு எட்டி உதைத்தார்கள். முதுகில் மிதித்தார்கள். அவரை வெட்டிக் கூறுபோட வேண்டும் என்றார்கள்.

**தெகல்கா :** கொஞ்சம் விபரமாக விவரியுங்கள். அது எங்கு தொடங்கியது?

**சாவல் :** 8.30-9 மணி இருக்கும். நான் என் கடையிலிருந்தபோது வி.எச்.பி.யினர் வந்தார்கள். கடையை அடைக்கச் சொன்னார்கள். 9-9.30 மணிக்கு என் முன் ஒரு கடை கொளுத்தப்பட்டது. அப்போதுதான் எல்லாம் தொடங்கிவிட்டதாக உணர்ந்தேன்.

**தெகல்கா :** அது முஸ்லிம்களின் கடையா?

**சாவல் :** ஆமாம். அது நடந்ததும் மக்கள் திக்கு தெரியாமல் ஓடத் தொடங்கினார்கள். அப்பா என்னை கடையை அடைத்து விடும்படி கூறினார். அது எங்கள் பகுதிதான். நான் கடையை திறந்து வைத்திருந்தாலும் யாரும் எதுவும் செய்ய இயலாது. இருப்பினும் அது நன்றாக இருக்காது என்பதால் அடைத்தேன். இது மதம் தொடர்புடைய பிரச்சனை என்பதால், எல்லா கடைகளும் அடைத்திருப்பதுதான் நல்லது. அப்பாவின் விருப்பமும் அதுவே. வாருங்கள் எல்லோரும் வீட்டுக்குச் செல்லலாம். பிறகு 10.30-11 மணி போல் நான் வெளியே கிளம்பினேன். வெளியே வந்ததும் கலவர கும்பலுடன் சங்கமித்தேன். கலவரம் நடந்தபோது நான் அவர்களுடன் இருந்தேன். அது 2-2.30 மணி நேரம் நடந்தது.

**தெகல்கா :** யார் இந்த வன்முறை கும்பலுக்கு தலைமை தாங்கியது?

**சாவல் :** பலரும் அந்த கும்பலில் இணைந்திருந்தனர். கடை கொளுத்தப்பட்டவுடன் எல்லோரும் கூடத் தொடங்கினார்கள்.

**தெகல்கா :** அந்த கும்பலில் வி.எச்.பி. யினரும் இருந்தனரா?

**சாவல் :** அனைவரும் வி.எச்.பி. யினர்தான்.

**தெகல்கா :** யார் அதில் வி.எச்.பி. தலைவர்?

**சாவல் :** அப்போது எனக்கு அதில் யார் தலைவர் என்று தெரியாது. நான் தொழில் செய்பவன் என்பதால், இதில் எனக்கு பல தகவல்கள் தெரிந்திருக்கவில்லை. அதன் பிறகுதான் இந்த தொடர்புகள். பின்பு அதுல் அண்ணனை சந்தித்தபோதுதான் இவரும் அன்று இருந்தார் என்பதை நினைவு கூர்கிறேன். அதுல் இருந்தார், பாரத் இருந்தார். அவர்கள்தான் என்னை விடுவிக்க சிறைச்சாலைக்கு வந்தார்கள். இந்த பையன்களும் அங்கு சிறைச்சாலைக்கு வந்தார்கள். அங்குதான் இவர்களை சந்தித்தேன். அவர்கள் மத்திய சிறைச்சாலைக்கு வராதபோதும் என்னை நன்றாக கவனித்தார்கள். காவல் நிலையத்திற்கு நான் வரும்போது என்னை வந்து சந்திப்பார்கள். அப்போதுதான் இவர்களைப் பற்றி உணரத் தொடங்கினேன். என்னை ஏன் கைது செய்தார்கள், அவர்களின் பெயர்கள் ஏன் விடுவிக்கப்பட்டன என நான் யோசிக்கத் தொடங்கினேன். ஏன் அதுல் வாய்த், பரத் தேவியாய் பெயர்கள் இடம்பெறவில்லை? நான் இதற்கு பெரும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. ஏனென்றால் இவர்கள் என்னை வெளிக்கொணர உதவக்கூடும். அதனால் நான் வார்த்தைகளை உதிர்க்கவில்லை. என்னுடன் இருந்த 40 பையன்களும் இது பற்றி ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

**தெகல்கா :** ஆனால் அனைவருக்கும் தெரிந்திருந்தது.

**சாவல் :** எல்லோருக்கும் தெரியும். ஆனால் எங்களுக்குள் நடந்த சம்பவம் பற்றி கூட பேசிக் கொள்வதில்லை. எங்களுக்கு எதுவும் தெரியாது என்பதை மட்டும் கூறி வந்தோம். இல்லையேல் நாங்கள் மாட்டிக் கொள்வோம். முதல் குற்றப்பத்திரிகையில் மண்ணெண்ணை பயன்படுத்தப்பட்டதாக பதிவு செய்யப்பட்டது. அந்த குற்றப்பத்திரி



கையின் படி நான் 5.30-6.00 மணி வாக்கில் சுடப்பட் டிருந்தேன், எர்டா சாகிப் இருந்த போது...

**தெகல்கா :** யார் உங்களை சுட்டது?

**சாவல் :** எர்டா சாகிப்தான் அப்படி கூறினார். அந்தப் பகுதி முழுவதும் நான் உங்களுக்கு ஓரிடத்தை காண்பித்தேன் அல்லவா?

**தெகல்கா :** ஆமாம்.

**சாவல் :** நான் அங்கு ஓரமாக நின்று கொண்டிருந்தேன். அவருக்கு அருகில் 8-15 பேர் நின்றிருந்தார்கள். நாங்கள் அவரிடம் கேட்டோம், ஏன் இவர்களை காப்பாற்றுகிறீர்கள் என்று?

**தெகல்கா :** நீங்கள் இதனை எர்டாவிடம் சொன்னீர்களா?

**சாவல் :** மக்கள்... நாங்கள் 8-15 பேர். எல்லோரும் இதனைக் கேட்டார்கள். ‘‘என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?’’

**தெகல்கா :** முஸ்லிம்களை எங்கு அழைத்துச் செல்கிறீர் என்று கேட்டார்கள்?

**சாவல் :** நாங்கள் எங்கு அழைத்துச் செல்கிறீர்கள் என்று கேட்டோம். அவர் என்ன செய்கிறார் என்பதை சொன்னார்.

**தெகல்கா :** அவர் என்ன சொன்னார்?

**சாவல் :** அவர் இதை செய்யுங்கள் என்று சொன்னார். முஸ்லிம்களை ஏற்றிக் கொண்டு செல்லும் வாகனம் இங்கு வரும் போது கான்ஸ்டபிள் ஓடி விடுவார். உடனே வாகனத்தை கொளுத்த வேண்டும். இங்கே எல்லாம் நிகழ்ந்து முடிந்து விடும். யார் மீதும் வழக்கிற்கான காரணமே இருக்காது. படம் இங்கே முடிந்து விடும். இதை அவர் கூறுகிறபோது பகரீ சமூகத்தைச் சார்ந்தவர் கள், சாட்சியம் சொல்லக் கூடியவர்களைத் தான் அழைத்துச் செல்கிறார்கள் எனப் புரிந்து நாளை அவர்களையும் பிடித்துச் செல்லக் கூடும் என கருதி எர்டா மீது கற்களை வீசத் தொடங்கினார்கள். அவரை ஒரு கல் தாக்கியது. நான் அங்கிருந்து ஓடி விட்டேன். அவன் உடனே துப்பாக்கியை எடுத்து என்னை நோக்கி ஓடாதே என எச்சரித்தார். நான் என் மச்சானுடன் ஓட முற் படும்போது அவர் என் மீது சுட்டார்.

**தெகல்கா :** எர்டா சாகிப் உங்களை சுட் டார் இல்ல? அது தவறாகவா...

**சாவல் :** அது தவறாக சுடப்பட்டதுதான். அது என் கையில் பட்டது. பெரும் காயம் ஏற்பட்டது. ஆனால் மருத்துவமனைகள் எதுவும் திறந்திருக்கவில்லை. எல்லாம் மூடிக் கிடந்தது. உடனே அரசு மருத்துவ மனைக்கு சென்றேன். இதுபோல் எந்த நிகழ் வின் பகுதியாகவும் நான் செயல்பட்டதில்லை என்பதால் எனக்கு எதுவுமே புரியவில்லை. அன்று என் உண்மையான பெயர் அரசு மருத் துவமனை ஆவணங்களில் பதிவு பெற்றது.

**தெகல்கா :** பின்பு அன்று காலை ஜாப்ரியை எப்படி கொன்றீர்கள்?

**சாவல் :** ஜாப்ரியா... இவர்கள் எல் லோரும் அவரை பிடித்தார்கள். தரையில் போட்டு மிதித்தார்கள். தரதரவென்று இழுத் துச் சென்றார்கள்.

**தெகல்கா :** நீங்கள் ஜாப்ரியை மிதித் தீர்களா?

**சாவல் :** மிதித்தேன்.

**தெகல்கா :** அவர் கீழே சரிந்தார்.

**சாவல் :** கீழே விழுந்தான். அது இல்லை. அவனது கையைப் பிடித்து இழுத் துச் சென்றார்கள். அய்ந்து ஆறு பேர் அவனைப் பிடித்துக் கொண்டார்கள். பிறகு ஒருவன் பெரிய வாளால் அவரை வெட்டி னான். அவரது கை, கால், உடல் உறுப்புகள் எல்லாம் துண்டாக்கப்பட்டது. பின்பு அவனது உடல் மீது விறகு வைத்து உயிரு டன் கொளுத்தப்பட்டார்.



**தெகல்கா :** ஜாப்ரியை நீங்கள் துண்டு துண்டாய் வெட்டும்போது எர்டா வந்து காப்பாற்றவில்லையா?

**சாவல் :** யாரும் எதுவும் செய்யவில்லை. எர்டா அப்போது அங்கில்லை. அவரது வா கனத்தில் அவர் மேகானி நகர் சென்றிருந் தார். அதனால் அவருக்கு ஜாப்ரி கசாப்பு செய்யப்பட்டது தெரியாது. எல்லாம் 1-1.30-க்குள் நடந்து முடிந்தது.

**தெகல்கா :** ஆனால் ஜாப்ரியின் குடும்பத்தினர் எப்படியோ தப்பி விட்டனர் அல்லவா?

**சாவல் :** இல்லை. தப்பவில்லை. அவர் மனைவி மட்டுமே தப்பினார். தன்னை ஓர் இந்துவாக பாவித்து அவர் தப்பி விட்டார்.

**தெகல்கா :** அவரது மகள் ஒருவர்கூட தப்பிவிட்டாரோ?

**சாவல் :** அவரது குடும்பத்தில் வேறு யாரும் தப்பவில்லை. அங்கு அப்போது இல்லாதவர்கள் மட்டுமே தப்பினார்கள். அவரது மனைவிகூட தான் ஓர் இந்து, தான் வீட்டு வேலை செய்பவர், படேர்வாலி குடி யிருப்பில் வசிப்பவர், ஏன் என்னை நீங்கள் கொல்ல வேண்டும். நான் ஒரு வேலைக்காரி தானே என்றார். அவர் இந்துவைப் போல் நன்றாக உடை உடுத்தியிருந்தார். நல்ல முறையில் உடுத்தியிருந்தார்.

**தெகல்கா :** அடையாளம் காண முடி யாததால் அவர் தப்பி விட்டார் இல்லையா?

**சாவல் :** அவர்களை எனக்கு எந்த வகை யிலும் பழக்கம் இல்லை. அதனால் அவர் களை எனக்கு தெரியவில்லை.

••

**தெகல்கா :** குல்பர்க் சொசைட்டி எவ் வளவு பெரியது? அங்கே எவ்வளவு பேர் வசிக்கிறார்கள்?

**சாவல் :** நிறைய பேர் வசிக்கிறார்கள்?

**தெகல்கா :** இப்போது மீண்டும் மக்கள் அங்கு வந்து வசிக்கத் தொடங்கியுள்ளார்களா?

**சாவல் :** யாரும் திரும்பி வரவில்லை. அது மூடிக் கிடக்கிறது. அது ஒரு சிறைச்சா லையைப் போல உள்ளது. எவரும் எட்டிக் கூட பார்க்கவில்லை.

**தெகல்கா :** ஆனால் அன்று மாலை அங்கு சிலர் தப்பினார்களா?

**சாவல் :** 40 பேர் ஓடிவிட்டார்கள். சிலர் முன்பே கிளம்பிவிட்டார்கள்.

**தெகல்கா :** நீங்கள் எப்படி குல்பர்கில் நுழைந்தீர்கள்?

**சாவல் :** வீடுகளில் இருந்த சமையல் எரிவாயு சிலிண்டர்கள் சேகரிக்கப்பட்டன. அதை சொசைட்டியின் சுற்றுச் சுவர் அருகில் வைத்தார்கள். பின்பு பேக்கரியில் இருந்து குழாய் போன்ற சாதனங்களை எடுத்து வந்து சிலிண்டரை திறந்தார்கள். பின்பு தொலை வாக சென்று தீப்பந்தம் போல் துணியால் செய்து சிலிண்டரை சுவரின் மீது வீசி எறிந்தார் கள். பின்பு நாங்கள் உள்ளே நுழைந்தோம்.

**தெகல்கா :** அது மிகவும் உயரமாக இருந்ததா?

**சாவல் :** நல்ல உயரம். அது இரண்டு அடி அகல சுவர், எப்படியும் 15-20 அடி உயரம் இருக்கும். அதன் மீது முள் வேலி போடப்பட்டிருந்தது.

**தெகல்கா :** ஒன்று இரண்டு சிலிண்டர் களால் சுவர் உடைந்ததா?

**சாவல் :** ஒன்றை அவர் அருகே வைத்து, ஒன்றை எறிந்தார்கள், சிலிண்டர் களால் சுவர் உடைந்துவிடும். சிலிண்டர்கள் சக்தி வாய்ந்தவை.

**தெகல்கா :** அதனால் உள்ளே இருந்த வீடுகளிலும் தீப்பற்றியது.

**சாவல் :** அங்கு குடியிருந்தவர்களின் வீட்டுப் பொருட்களைக் கொண்டே வீடு களை கொளுத்தினார்கள். எதுவும் வெளியி லிருந்து கொண்டு செல்லும் அவசியம் ஏற்படவில்லை. அவர்களின் பொருட் களாலேயே அவர்களின் வீடுகளை சாம்ப லாக்கினோம். பாட்டியாவிலும் இதே தான் நிகழ்ந்தது.

எழுத்துப்படி **பிரகலாத் ராஜு**

# 'பரிஷத்காரர்கள்தான் என்னைப் பிணையில் வெளியே எடுத்தார்கள்'

**குல்பர்க் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ராஜு ஆறு மாதங்கள் சிறையில் கழித்தார். ஆனால் அது வசதியாக இருந்ததாக அவர் கூறுகிறார்.**



செப்டம்பர் 8, 2007

**தெகல்கா :** எத்தனை மாதங்கள் சிறையில் கழித்தீர்கள்?

**ராஜு :** நான் சிறையில் ஆறரை மாதங்கள் இருந்தேன்.

**தெகல்கா :** அந்தக் காலத்தில் என்ன விதமான உதவிகளை வி.எச்.பி.யினர் செய்தார்கள்?

**ராஜு :** பொருட்களை எல்லாம் வீட்டுக்கே சென்று கொடுத்து விடுவார்கள்.

**தெகல்கா :** என்ன ரேஷன் சாமானா?

**ராஜு :** எனக்கு இரண்டு குழந்தைகள் இருக்கின்றன. அவர்கள் படிக்கிறார்கள். வாய்தா தேதிகளில் வி.எச்.பி.யினர் நீதிமன்றத்திற்கு வருவார்கள். அவர்கள் என்னிடம் நீ குழந்தைகளுக்கு பள்ளிக் கட்டணம் கட்ட வேண்டியது இல்லை என்றும் பள்ளி நிர்வாகத்திடம் பேசிவிட்டதாகவும் தெரிவித்தார்கள். அவர்கள் பள்ளிக்கூடத்திற்கு சென்றார்கள். ஆனால் கட்டணத்தை செலுத்தவில்லை. வெளியே வந்த பிறகு நானே அந்த மொத்த கட்டணத்தையும் ஒரே தவணையில் செலுத்த வேண்டியதாகி விட்டது.

**தெகல்கா :** அவர்கள் பள்ளிக் கட்டணத்தை கட்டிவிடுவதாக உங்களிடம் கூறியிருந்தார்களா?

**ராஜு :** ஆமாம். அவர்கள் பள்ளிக்குச் சென்றார்கள். பாரத் தேவி அங்கு சென்றார். ஆனால் எந்தப் பயனும் இல்லை.

**தெகல்கா :** குல்பர்க் சம்பவம் நடந்த போது வி.எச்.பி.யினர் உங்களுடன் இருந்தார்களா?

**ராஜு :** அவர்கள் இருந்தார்கள். 8.30 மணி அளவில் அவர்கள் மேகனி நகரிலிருந்து புறப்பட்டார்கள். கடைகளை அடைக்கும்படி சொன்னார்கள். நான் 7.30 மணி அளவில் அவர்களுடன் இணைந்தேன். அதுல் பாயுடன் நானும் குற்றம் சாட்டப்பட்டேன்.

**தெகல்கா :** அதுல் வாய்த்?

**ராஜு :** ஆமாம். அவர்தான் அனைவரும் ஒன்றாய் செல்ல வேண்டும் என்றார்.

**தெகல்கா :** எங்கே?

**ராஜு :** கூட்டம் அதிகமாகிக் கொண்டே சென்றது.

**தெகல்கா :** குல்பர்க் சென்றவுடன் என்ன நடந்தது?

**ராஜு :** கல்லெறிதல் தொடங்கியது. எதிர்த் திசையிலிருந்து சுடத் தொடங்கினார்கள். நாங்கள் உடனே வீடுகள் நோக்கி சென்று விட்டோம். நான் முஸ்லிம் பகுதியில் குடியிருப்பதால், அங்கிருந்து என் குழந்தைகளை அப்புறப்படுத்தினேன்.

**தெகல்கா :** குழந்தைகளுடன் வீட்டை விட்டு கிளம்பி விட்டீர்களா?

**ராஜு :** குல்பர்க்கிலிருந்து என் வீட்டிற்கு அதே வழிதான். நாங்கள் பின் வழியாகச் சென்றோம் – ரயில்வே தண்டவாளம் உள்ள வழியாக அங்கே என் காலில் அடி பட்டது.

**தெகல்கா :** உங்கள் காலில் கல் வந்து அடித்ததா?

**ராஜு :** சிறிய குண்டு.

**தெகல்கா :** பின்பு நீங்கள் குழந்தைகளை வீட்டில் விட்டீர்களா?

**ராஜு :** குழந்தைகளை விட்ட பிறகு மருத்துவமனைக்குச் சென்றேன்.

**தெகல்கா :** அங்கிருந்து மருத்துவமனைக்குச் சென்றீர்கள்.

**ராஜு :** அந்த இடத்திலிருந்து ஒரு மணிக்கு கிளம்பி விட்டேன்.

**தெகல்கா :** மருத்துவமனையிலிருந்தா?

**ராஜு :** இல்லை. அந்தப் பகுதியிலிருந்தே... அதாவது குல்பர்கிலிருந்து. நான் சிவில் மருத்துவமனையிலிருந்து அய்ந்து மணிக்கு வந்தேன். அந்நேரம் அனைவரையும் அப்புறப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

**தெகல்கா :** பிணங்களையா?

**ராஜு :** இல்லை. உயிர் பிழைத்தவர்களை.

**தெகல்கா :** அவர்களை எடுத்துச் சென்றார்கள்.

**ராஜு :** பிணங்களை இரவில் எடுத்துச் சென்றார்கள். முதலில் இரவு 11 மணிக்கு. இரண்டாவது விடிந்ததும்.

**தெகல்கா :** அந்த நேரம் நீங்கள் எதுவும் செய்யவில்லையா?

**ராஜு :** அந்நேரம் அங்கு கல் எறிவது மட்டுமே நிகழ்ந்தது.

**தெகல்கா :** நீங்கள் கல் எறிதல் நடந்த போது மட்டும்தான் இருந்தீர்கள்.

**ராஜு :** என்னால் உள்ளே செல்ல முடிய வில்லை.

**தெகல்கா :** பின்பு குல்பர்கிற்குள் யார் தான் நுழைந்தது?

**ராஜு :** உள்ளே யார் இருந்தார்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் அவர் கள் உள்ளூர்க்காரர்கள் அல்ல.

**தெகல்கா :** அவர்கள் வெளியூரிலி ருந்து வரவழைக்கப்பட்டவர்கள். ஆனால் அதில் வி.எச்.பி.யினர் இருந்தார்களா?

**ராஜு :** ஆமாம். இருந்தார்கள்.

**தெகல்கா :** ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் யாரும் அங்கு இருந்தார்களா?

**ராஜு :** அவர்கள் திரிசூலத்தை சுமந்து சென்றார்கள். பஜ்ரங்தள்.

**தெகல்கா :** உள்ளே சென்றவர்கள் பஜ்ரங் தளத்தினர்தான் இல்லையா?

**ராஜு :** (ஆமாம். என்பதற்கு ஒப்பு தலாக தலை அசைக்கிறார்)

**தெகல்கா :** அனைவரும் கையில் திரி சூலம் வைத்திருந்தார்கள்.

**ராஜு :** ஆமாம்... திரிசூலம் ஏந்தி யிருந்தார்கள்.

**தெகல்கா :** அப்ப... உங்களை காவல் துறை எங்கு பிடித்தது?

**ராஜு :** என் பெயரும் அதிலிருந்தது.

**தெகல்கா :** உங்களை இரண்டாவது நாள் பிடித்தார்களா?

**ராஜு :** அவர்கள் என்னைப் பிடிக்க வில்லை. விசாரணை நடைபெற்றதும் நாங் கள் அந்த இடத்தை விட்டுக் கிளம்பினோம். பின்பு சேதன்பாய் ஷாவை சந்தித்தோம் (அரசு வழக்கறிஞர்) அவர் மூன்று நான்கு மாதங்கள் எங்காவது சென்று விடும்படி அறிவுறுத்தினார்! தயாராக இருக்கச் சொன் னார். வீட்டை விட்டு ஒரு மாதமாவது தலை மறைவு ஆகிவிடும்படி சொன்னார். நான் அதை செய்தேன். இருப்பினும் கிரைம் பிரிவு என்னை துன்புறுத்தத் தொடங்கியது. அதன் பிறகு நானே சரணடைந்தேன். அவர் கள் என்னை நன்றாக நடத்தினார்கள்.

**தெகல்கா :** கிரைம் பிரிவினரா? (குற்றப் பிரிவு)

**ராஜு :** அவர்கள் என்னுடன் இணக்க மாக நடந்து கொண்டார்கள். வீட்டில் இருப் பது போலவேயிருந்தது. என் குடும்பத்தினர் என்னைப் பார்க்க வருவதுண்டு.

**தெகல்கா :** பிணையில் வெளிவர உங் கள் சொந்த பணத்தை செலவழித்தீர்களா?

**ராஜு :** இல்லை. அதை வி.எச்.பி.யினர் பார்த்துக் கொண்டார்கள்.

**தெகல்கா :** உங்களை விஸ்வ இந்து பரி ஷத்தினர்தான் பிணையில் எடுத்தார்களா?

**ராஜு :** (ஆம் என்பதாக தலை அசைக் கிறார்) பத்தொன்பது பேர் ஒன்றாக வெளியே வந்தார்கள்.



எழுத்துப்படி **மங்கிலால் ஜெயின்**

# 'அவர்களை வீடுகளை விட்டு வெளியே இழுத்து வந்தோம்'



**'இன்னும் மூன்று மணி நேரம் உள்ளது' என காவல் துறை ஆய்வாளர் எர்டா கூறியதை, குல்பர் கிலிருந்த கலவர கும்பலுக்கு தெரிவித்ததும் அதில் ஜெயினும் இணைந்து விட்டார்.**

செப்டம்பர் 8, 2007

**தெகல்கா :** நீங்கள் பேசிக் கொண்டிருந்தபோது குறிப்பிட்ட காவல் துறை ஆய்வாளரின் பெயர் என்ன?

**மங்கிலால் ஜெய்ன் :** எர்டா

**தெகல்கா :** எர்டாவா? அவர் என்ன செய்தார்?

**ஜெயின் :** அவர் எங்களுக்கு ஆதரவு அளித்தார். அன்று காவல் துறை பொது மக்கள் பக்கமே செல்லவில்லை?

**தெகல்கா :** முஸ்லிம்கள் பக்கம்கூட செல்லவில்லையா?

**ஜெயின் :** இந்துக்களிலிருந்தும் தூர விலகித்தான் இருந்தார்கள். எல்லாவற்றையும் 2-3 மணி நேரத்தில் முடித்திடுங்கள் என்றார் அவர்.

**தெகல்கா :** அப்படியென்றால் அவர் உங்களுக்கு 2-3 மணி நேரம் கொடுத்தார்.

**ஜெயின் :** கதையை முடித்திட....

**தெகல்கா :** எல்லாவற்றையும் முடித்திட....

**ஜெயின் :** இந்த சூழல் அகமதாபாத் முழுமையிலும் நீடித்தது (இது புரிந்து கொள்ளப்பட்டது) எந்த வெளி ஆட்களும் வர இயலாது. யார் வந்தாலும் அது மாலை ஆகிவிடும். அதனால் வேலையை உடனே முடிக்க வேண்டும்.

**தெகல்கா :** அவர் உங்களை 2-3 மணி நேரத்தில் எல்லாம் முடிக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

**ஜெயின் :** அவர் சொன்னதும் கலவரக் கும்பல் வன்மத்துடன் கிளம்பியது. சிலர் கொள்ளையடித்தார்கள். சிலர் கொலை செய்தார்கள். ஒருவரை வெளியே இழுத்து வெட்டி தீயிட்டார்கள். இது போல் பல சம்பவங்கள் நிகழ்ந்தன.

**தெகல்கா :** சொசைட்டியிலிருந்தவர்கள் மட்டும் கொல்லப்பட்டார்களா?

**ஜெயின் :** இல்லை சார். வெளியாட்களும் கொல்லப்பட்டார்கள். பல ஏழை முஸ்லிம்கள் தெருக்களில் வசிக்கிறார்கள். பணக்காரர்கள் குல்பர்க் சொசைட்டியில் வாழ்கிறார்கள். தெருக்களில் வசிப்பவர்கள் தொழிலாளிகள், மெக்கானிக், மற்றும் தினக் கூலிகள். எப்போது எல்லா சூழ்நிலையும் பதட்டமடைகிறதோ, உடனே இஷான் ஜாப்ரி அனைவருக்கும் அடைக்கலம் கொடுப்பார். உள்ளே ஒரு மசூதி உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் எல்லோருக்கும் அன்னதானம் போடுவார். கலவர காலங்களில் அவர்தான் பாதுகாவலர். அவர் மிகவும் ஆற்றல் வாய்ந்தவர். அவர் தொலைபேசியில் அழைத்தால் உடனே காவல் துறையினர் வந்து விடுவார்கள். அவரது பகுதியில் எப்போதுமே காவல் துறையினர் முகாமிட்டிருப்பார்கள். அதனால் மக்கள் பாதுகாப்புணர்வு கொண்டார்கள்.

**தெகல்கா :** அன்று நீங்கள் கூட்டத்தின் ஓர் அங்கத்தினராக... ஜெய் சிறீராம் முழக்கம் போட்டுக் கொண்டிருந்தீர்கள்.

**ஜெயின் :** ஜெய் சிறீராம் கூறுவது அவர்களுக்கு கடும் போதை ஏற்றுவது போலிருந்தது. நான் நண்பர்களுடன் குழுமியிருந்தேன். ஜெய் சிறீராம்.

**தெகல்கா :** இதில் பங்கேற்ற நம்மவர்கள் யார்?

**ஜெயின் :** இங்க பாருங்க சார். அங்கு ஏராளமான முகங்கள் இருந்தன. அதை நினைவில் கொண்டுவர இயலவில்லை. பாபு நகர், மேகானி நகர் என தொலைவிலிருந்து பலர் வந்திருந்தனர்.

**தெகல்கா :** பாரத் தேவி, அதுல் வாய்த் நிறைய சண்டைபோட்டார்களோ?

**ஜெயின் :** இவர்களும் அந்தக் கூட்டத்திலிருந்தார்கள். அன்று நிறைய இளைஞர்கள் இருந்தார்கள். எப்படியும் மொத்தம் 50,000 பேர் இருக்கும். இதில் யார் எவர் என எப்படி காண்பது? இது வெறியான கிளர்ச்சி மேலோங்கியிருந்த கூட்டம். இவர்கள் இறைச்சி உண்ணக்கூடியவர்கள். இவர்கள்தான் வெறிபிடித்தவர்கள்.

**தெகல்கா :** எதற்காக இந்த முஸ்லிம்களை நாம் கொன்றோம்?

**ஜெயின் :** அவர்களை வீடுகளிலிருந்து வெளியே இழுத்துப்போட்டு வெட்டினார்கள். தீயிட்டார்கள். ஏற்கனவே தீ கொழுந்து விட்டு எரிந்தது... பெட்ரோல்.

**தெகல்கா :** பெட்ரோல் கிடைத்துக் கொண்டிருந்ததுதானே.

**ஜெயின் :** பெட்ரோல், மண்ணெண்ணெய் கிடைத்துக் கொண்டிருந்தது. வாகனம் வைத்திருந்தவர்கள் அதைக் கொண்டு வந்தார்கள். எங்களுடன் வாருங்கள், நம் இந்து சகோதரர்கள் அங்கே தாக்கப்படுகிறார்கள். வாருங்கள்.

**தெகல்கா :** இவர்கள் விஸ்வ இந்து பரிஷத்தை சார்ந்தவர்கள் தானே?

**ஜெயின் :** அவர்கள் பெரும் எண்ணிக்கையில் வாகனங்களில் வந்தார்கள். வேறு

கிடைத்த வாகனங்களிலும் வந்தார்கள். அவர்களை சுற்றி வளைத்தார்கள். லங்கா (இலங்கை) முற்றாக அழிக்கப்பட்டது. இவர்கள் எல்லாம் அருகில் வசிப்பவர் களே. எதிர்ப்பட்டவர்களை எல்லாம் கொன் றார்கள். இதுதான் கீழ்தளம், அங்கு அடைக் கலம் புகுந்தவர்கள் தப்பி விட்டார்கள். எப்படியும் 70-80 பேர் இருக்கும்.

**தெகல்கா :** அங்கு மக்கள் ஒழிந்தார்களா?

**ஜெயின் :** ஆமாம். மாலை ஏழு மணி அளவில் ஆட்கள் அங்கு பதுங்கியிருப்பது தெரிய வந்தது. அங்கிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட் டார்கள். 80-90 பேர் கொல்லப்பட்டார்கள். 90 பேர் செத்திருக்க வேண்டும். ஆனால் பிணம் கிடைத்தவர்கள் மட்டும்தான் கணக் கில் வந்தார்கள். பலரை காணவில்லை. ஜாப் ரியின் உடலை மீட்க முடியவில்லை. அவர் முற்றிலும் எரிந்துவிட்டார். அவருடைய உடல் முற்றிலும் சாம்பலானது.

---

எழுத்துப்படி **பிரகாஷ் ராதோட் மற்றும் சுரேஷ் ரிச்சர்ட்**

# ‘சரஸ்’ சமூகம் முஸ்லிம்களை எப்படி கொன்றது என்பதை ஆர்.எஸ்.எஸ். விளக்கிக் கூறும்’

**இந்த கலவரங்களில் ஈடுபடுத்த, தாழ்த்தப்பட்டவர்களை வெற்றிகரமாக அணி திரட்டியது ஆர்.எஸ்.எஸ். நரோடா பாட்டியா வில் தங்களை நிரூபித்தார்கள் ராதோட் மற்றும் ரிச்சர்ட்**

ஆகஸ்ட் 12, 2007

**தெகல்கா :** பாட்டியாவை சேர்ந்த சிலர் இன்னும் சிறையில் இருக்கிறார்களா?

**ராதோட் :** இல்லை, இல்லை பாட்டியா விலிருந்து இல்லை.

**தெகல்கா :** பி.ஜே.பி.காரரான பிபின் பஞ்சல் உள்ளேதான் இருக்கிறார் இல்லையா?

**ராதோட் :** பிபின் வெளியே இருக்கிறார். உள்ளே இருப்பவர் சசிகாந்த் (எ) துனியா.

**தெகல்கா :** பிபின் எங்கு வசிக்கிறார்?

**ராதோட் :** அவர் கிருஷ்ணா நகரில் வசித்தார். ஆனால் இப்பொழுது எங் களுக்குத் தெரியவில்லை.

**தெகல்கா :** அவர் அப்போது இங்கு தான் இருந்தாரா?

**ராதோட் :** அவர் இருந்தார். பசங்க எல் லாம் அவரோடுதான் இருந்தார்கள். அவர் சாமான்களை (ஆயுதங்களை) விநியோகித் துக் கொண்டிருந்தார்.

**தெகல்கா :** வாள்கள் மற்றும் லத்தி யுடன் ‘சரஸ்’கள் கலவரத்தில் ஈடுபட்டார்கள்.

**ராதோட் :** இல்லை. சிலரிடம் திரிசூலங் களும், வாள்களுமிருந்தன. நீ சந்திச்சயே சுரேஷ் ரிச்சர்டு, அவனிடம் துப்பாக்கி தவிர வேறு எல்லா ஆயுதங்களும் இருந்தன.

**தெகல்கா :** விநியோகிக்கும் அளவுக்கு இருந்ததா?

**ராதோட் :** குட்டா என்று ஒருவர் இருந் தார். இப்ப சிறையில் உள்ளார். அவர் பரோ லில் வெளியே வந்தபோது ஓடிவிட்டார். அதனால்தான் மீண்டும் உள்ளே இருக் கிறார். அவன் பலரை கொன்று குவித்தான். மிகுந்த துணிச்சல்காரன்.

**தெகல்கா :** அன்று பிபின் எங்கிருந்தார்?

**ராதோட் :** நாங்கள் எல்லாம் முதலில் சிதறி திரிந்தோம். பின்பு பிபின் பஞ்சல் வந் தார். அவருடன் பெரும் பட்டாளமே வந் தது. எல்லோரும் சிறீராம், சிறீராம் என்று கூறியபடி வந்தார்கள். நம் சகோதரர்களை கொன்று விட்டார்கள், நாம் பாடம் கற்பிக்க வேண்டும். தீ எரியத் தொடங்கியதும்... முஸ்லிம்களும் கூடி விட்டார்கள்.

**தெகல்கா :** முஸ்லிம்களா...

**ராதோட் :** அவர்களை அடித்து விரட் டினோம். ஒன்று இரண்டு பேரை தீயில் எறிந்தோம்.

**தெகல்கா :** சுரேஷ் ரிச்சர்ட் கூட்டத்தில் இருந்தாரா...

**ராதோட் :** அவன் நன்றாக சண்டை யிட்டான். குட்டா, நரேஷ் சாராவும்தான். முஸ்லிம்கள் ரிச்சர்டை கண்டால் பயப்படு வார்கள். போலிஸ்கூட பயப்படுகிறது. அவன் மட்டும் இயலாதவனாக இல்லை என்றால், அவன்...

●●

**தெகல்கா :** நீங்கள் எல்லோரும் வி.எச்.பி.யுடன் நெருடலின்றி மகிழ்ச்சியா கத்தானே இருக்கிறீர்கள்?

**ராதோட் :** வி.எச்.பி.யிலிருந்து இங்கு எவன் வருகிறான்? பாபு பஜ்ரங்கி மட்டும் எங்களைப் பார்க்க வருவார். அவருக்கு முன்னால் நாங்களே சிறையிலிருந்து வெளியே வந்தோம். அவர்தான் கடைசி யாக வெளியே வந்தார். ஆனால் அவர் சிறையிலிருந்தபடியே எங்களை விசாரித்துக் கொண்டிருந்தார். என்ன சங்கம். எங்கள் பெண்கள் ஜான்சி ராணியைப் போல் சண் டையிட்டார்கள். நாங்கள் (சரஸ்) முதலில் சென்றோம். எங்களை வி.எச்.பி. பின் தொடர்ந்தது. ஒவ்வொரு கிணறாக நிறைத் தோம். டிராக்டர்கள் நிறையும் அளவுக்கு ஆட்களை எரித்தோம்.

**ரிச்சர்ட் :** என் குழந்தையின் மீது ஆணையாக கூறுகிறேன். என் அம்மா சத்தியமாகக் கூறுகிறேன். நாங்கள் இல்லை யென்றால், இன்னும் 30-35 இந்துக்கள் கொல்லப்பட்டிருப்பார்கள்.

●●



**ரிச்சர்ட் :** சம்பவம் நடந்த அன்று நாங்கள் நினைத்ததை மாலை வரை செய்தோம். 7.30-7.15 இருக்கும். நரேந்திர மோடி வந்தார். இதோ இங்கே என் வீட்டுக்கு வெளியேதான். என் தங்கை அவருக்கு ரோஜா மாலை சூட்டினார்.

**தெகல்கா :** நரேந்திர மோடி...

**ரிச்சர்ட் :** அவர் கருப்புப் பூனை பாதுகாப்புப் படையுடன் வந்தார். அம்பாசிடர் காரிலிருந்து வெளியே இறங்கி நடந்து வந்தார். என் தங்கை மாலை அணிவித்தார். பெரிய மனிதர்... பெரிய மனிதர்தானுங்க...

**தெகல்கா :** அவர் வெளியே சாலைக்கு வந்தாரா?

**ரிச்சர்ட் :** அட... இங்க எங்க வீட்டுக்கு பக்கத்துலங்க. பிறகு இந்த வழியாகப் போனார். நரோடாவில் எல்லாம் எப்படி நடக்கிறது என்று பார்த்தார்.

**தெகல்கா :** அதாவது பாட்டியா சம்பவம் நடந்த அன்று?

**ரிச்சர்ட் :** அதே மாலை...

**தெகல்கா :** பிப்ரவரி 28

**ரிச்சர்ட் :** 28...

**தெகல்கா :** 2002

**ரிச்சர்ட் :** இந்தப் பகுதி முழுக்க சென்றார். எங்கள் பழங்குடி இனக்குழு ஆசிர்வதிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார். எங்கள் தாய்மார்களும் ஆசிர்வதிக்கப் பட்டவர்கள்தான் என்றார் (எங்களைப் பெற்றெடுத்ததால்).

**தெகல்கா :** அவர் 5 மணிக்கு வந்தாரா இல்லை 7 மணிக்கா?

**ரிச்சர்ட் :** 7-7.30 மணி இருக்கும். அப்போது மின்சாரம் இல்லை. எல்லாம் கலவரத்தில் எரிந்து சாம்பலாகி இருந்தது.

••

**ரிச்சர்ட் :** நாங்கள் எல்லாவற்றையும் எரித்துவிட்டு அப்பதான் திரும்பியிருந்தோம். அப்போது இந்த சாக்கடையில் முஸ்லிம்கள் ஒளிந்திருப்பதாக தகவல் கிடைத்தது. அங்கே நாங்கள் சென்றபோது வீடுகள் முற்றிலும் எரிந்து போயிருந்தது. 28 பேர் சாக்கடையில் ஒளிந்திருந்தனர். நாங்கள் சாக்கடையின் மூடியை எடுத்து அடைத்தோம். அவர்களைப் பின் தொடர்ந்து நாங்கள் சென்றிருந்தால், ஆபத்தில் சிக்கியிருப்போம். அந்த மூடியின் மீது பெரிய கற்களை அடுக்கினோம். பின்பு அங்கு 8-10 பிணங்களை கண்டார்கள். அவர்களின் உயிரைக் காக்கத்தான் உள்ளே சென்றார்கள். ஆனால் அதிலிருந்த வாயுக்கள் அவர்களை பலி கொண்டது. இது மாலையில் நிகழ்ந்தது. ஆனால் கொலைவெறி இரவு 8 மணி வரை தொடர்ந்தது.

**தெகல்கா :** நீங்கள் மீண்டும் உள்ளே சென்று விட்டீர்கள்...

**ரிச்சர்ட் :** நாங்கள் உள்ளேதான் இருந்தோம். அஸ்தமனத்தில் எல்லாம் அடங்கி வந்தது. நாங்களும் அலுத்துவிட்டோம். மனுஷங்கதானே. பின்னே அலுப்பு வராதா... கற்களை எறிவது, குழாய்கள் கொண்டு அடிப்பது, கத்தியால் குத்துவது, இவற்றைதான் நாங்கள் செய்தோம். மிதமிஞ்சிய நெஞ்சுத் துணிச்சல் இல்லாமல் நாங்கள் இந்தக் காரியத்தை செய்திருக்க முடியாது.

••

**ரிச்சர்ட் :** மாயா பேன் அன்று முழுவதும் தனது திறந்த ஜீப்பில் சுற்றிக் கொண்டிருந்தார்.

**தெகல்கா :** பாட்டியா படுகொலைகள் நடந்த அன்றா?

**ரிச்சர்ட் :** (அவர்) காவி பட்டையை நெற்றியில் அணிந்து கொண்டு ஜெய் சிறீராம், ஜெய் சிறீராம் என முழக்கமிட்ட வண்ணம் இருந்தார். அவர் வேலைகளை தொடரும் படி கூறினார், நான் இங்கே இருக்கிறேன் (உங்களை காப்பதற்கு) என்றார் அவர் வெள்ளை சேலையும் நெற்றியில் காவிப் பட்டையும் அணிந்திருந்ததால், நானும் என் நெற்றியில் காவிப் பட்டை அணிந்திருந்தேன்.

••

**ரிச்சர்ட் :** பேட்டரிகள் எரிந்து கொண்டிருந்தன. எரிவாயு சிலிண்டர்கள் எரிந்தது. லாரிக்கு அடியில் சில பன்றிகள் உறங்கிக் கொண்டிருந்தன. நாங்கள் 4-5 சரஸ்கள் கூடி ஒரு பன்றியை கொன்றோம். பிறகு அந்த பன்றியை தூக்கி மசூதியின் உச்சியில் கட்டித் தொங்கவிட்டோம். அப்படியே ஒரு காவிக் கொடியையும் அங்கு கட்டினோம். 8-10 பேர் மேலே ஏறியிருப்போம். நாங்கள் எவ்வளவோ முயன்றும் மசூதியை தரைமட்டம் ஆக்க முடியவில்லை.

••

**ரிச்சர்ட் :** எங்கள் சகோதரர்களில் ஒருவர் டேங்கர் லாரியை கொண்டு வந்தார். தாக்கர் நகர் குறுக்கு சாலையிலிருந்து... முஸ்லிம்களை கொன்றுவிட்டுதான் டேங்கரை எடுத்து வந்தார். அதைப் பின் நோக்கிச் செலுத்தி மசூதியை உடைத்தோம் (அது வெடித்தது). தீயணைப்பு வாகனத்திலிருந்து தண்ணீர் பீறிடுவது போல பெட்ரோல் வடிந்தோடியது. பின்பு கொளுத்தப்பட்டது.

**தெகல்கா :** டேங்கரை யார் கொண்டு வந்தது?

**ரிச்சர்ட் :** எங்கள் சகோதரர் ஒருவர்...

**தெகல்கா :** வி.எச்.பி.யை சார்ந்தவரா?

**ரிச்சர்ட் :** இல்லை. அவர் நம் இந்து சகோதரர்தான். உள்ளே இருந்தவர்கள் அனைவரும் செத்து விட்டார்கள்.

**தெகல்கா :** 'சரஸ்'கள் பாலியல் வன்புணர்வில் ஈடுபட்டார்கள் என்று கூறப்படுகிறதே?

**ரிச்சர்ட் :** இங்க பாருங்க ஒரு விஷயம் உண்மை. ஆயிரக்கணக்கான ஆண்கள் பசியாய் இருக்கும்போது ஏதாவது பழத்தை உண்பதில்லையா? எப்படியும் அந்தப் பழங்களைப் பிழிந்து எறியத்தான் போகிறோம். இங்க பாருங்க நான் பொய் சொல்லவில்லை. அம்மன் என் முன்னே இருக்கிறாள் (சாமி படத்தை நோக்கி கை நீட்டுகிறார்) எப்படியும் பல முஸ்லிம் பெண்கள் கொன்று எரிக்கப்பட்டார்கள், சிலர் பழங்களை நோக்கிச் சென்றிருக்கலாம்.

**தெகல்கா :** சில பாலியல் வன்முறைகள் நிகழ்ந்திருக்கலாம்.

**ரிச்சர்ட் :** இல்லை, நிறையவே நடந்திருக்கும். அட! அங்கே நம் சகோதரர்கள் இருந்தார்கள். இந்து சகோதரர்கள், ஆர்.எஸ்.எஸ்., வி.எச்.பி. சகோதரர்கள்... அவர்கள் ஈர்க்கப்பட்டிருப்பார்கள் இல்லையா? பழங்கள் கைவசம் இருந்தால், யாருக்குத்



தான் ஆசை வராது. அவர்களை எவ்வளவு துன்புறுத்தினாலும் அது போதாது. எவளையும் விட்டு விடக் கூடாது, இங்க பாருங்க எம் பொண்டாட்டி உட்கார்ந்திருக்கா அவள் முன்னாலயே சொல்கிறேன். பழங்கள் இருந்ததால் எடுத்து சுவைத்தேன்... சாப்பிட்டேன்... நானும் சாப்பிட்டேன்... நான் ஒரு பழத்தை சாப்பிட்டேன்.

**தெகல்கா :** ஒன்றை மட்டுமா?

**ரிச்சர்ட் :** ஒரு முறைதான். பிறகு கொன்று குவிக்க செல்ல வேண்டியதிருந்தது (ராத்தோட் பக்கம் திரும்பி பாலியல் வல்லுறவு செய்து கொன்ற பெண்ணைப் பற்றி பேசுகிறார்) அட வந்தது பழைய பொருட்கள் வியாபாரியின் மகள். நசீமா... நசீமா எத்தனை மிருதுவானவள். கனிந்தவள். அவள் மீது நான் ஏறினேன்.

**தெகல்கா :** அவர் மீதா?

**ரிச்சர்ட் :** மிகச் சரியாக...

**தெகல்கா :** அவர் பிழைத்தாரா?

**ரிச்சர்ட் :** இல்லை. அவளை பாடம் செய்து, ஊறுகாயாக மாற்றினேன்.


••

**ரிச்சர்ட் :** இன்று நான் உங்களுக்கு ஒன்றை சொல்கிறேன். உங்களுக்கு ஒரு குழந்தையிருந்து அதை தீயிட்டால் உங்கள் மனமும் சேர்ந்து எரியும்தானே. பிழைத்தவர்கள் என்னை நொண்டி என வசை மாறி பொழிந்தார்கள். நான் அவர்களின் குழந்தைகளை தீயிட்டுக் கொளுத்தியவன். சிலர் நெற்றியில் காவித் திலகமிட்டு தப்பினார்கள். சிலர் குடிசைகளில் மறைந்து...

**தெகல்கா :** இந்துக்களாக உருமாறி கடந்தார்கள்.

**ரிச்சர்ட்:** ஜெய் சிறீராம் என்று கூறிக் கொண்டே ஒரு கூட்டம் வந்தது. ஆனால், அதில் யார் எந்த சமூகத்தவர் என எங்களுக்கு தெரியும். அதனால் அவர்களை கொன்றோம். ஆர்.எஸ்.எஸ்., பஜ்ரங் தளத்தை சேர்ந்தவர்களை விசாரித்துப் பாருங்கள். சரஸ் இனத்தை சேர்ந்தவர்கள்தான் முஸ்லிம்களை பூண்டோடு ஒழித்தது என்று கூறுவார்கள். ஒவ்வொருவரையும் குறிவைத்து... ஒவ்வொன்றாய்...











# வாசல்

வாசல் பதிப்பகம், 202, முதல் தெரு, வசந்த நகர், மதுரை - 625 00 ■ செல் : 98421 - 02133



## வடோத்ரா

# கரியாய் போன நகரம்

**இரண்டு மாத காலத்தில் எல்லா முஸ்லிம் குடியிருப்புப் பகுதிகளும் தொடர்ந்து தாக்குதலுக்குள்ளானது. பெஸ்ட் பேக்கரியில் 14 பேர் உயிருடன் கொளுத்தப்பட்டனர்!**

அகமதாபாத்தில் கட்டவிழ்த்து விடப்பட்ட கலவரங்களுடன் ஒப்பிட முடியாவிட்டாலும், குஜராத்தின் இரண்டாவது பெரிய நகரமான வடோத்ராவில் தொடர் தாக்குதல்கள் முஸ்லிம்கள் மீது நிகழ்ந்தது. முதல் சுற்று பிப்ரவரி 27 அன்று தொடங்கியது, அது மார்ச் 2 வரை நீடித்தது. அதில் தான் மார்ச் 1 அன்று அனுமன் தெக்ரியில் உள்ள பெஸ்ட் பேக்கரியில் 14 பேர் உயிருடன் கொளுத்தப்பட்டனர். அதன் பிறகு மார்ச் 15–மே2 என கலவரம் தொடர்ந்தது. இடைப்பட்டதில் மார்ச்25 அன்றும் பயங்கரங்கள் நிகழ்ந்தன.

அந்த நகரத்தின் ஒவ்வொரு முஸ்லிம் குடியிருப்புப் பகுதியும் குறி வைத்து தாக்கப்பட்டது. கிசான்வாடி, சாமா, ஆஷா பிலி சால், மாதவ்பூர் II, மக்கர்பூரா, அதூட்நகர், ராகோபூரா, நூர் பார்க், கரேலிபாக், கோத்ரி கிராமம், ஹாஜிமியான் கா சாரா, அனுமன் தெக்ரி, ரோசன்நகர், பணிகடே, தாய்வாடா மற்றும் மச்சி பித்தீ ஆகிய பகுதிகள் இந்து மதவெறியர்களின் களியாட்டத்திற்கு ஆளாயின. நூற்றுக்கணக்கான முஸ்லிம்களின் வீடுகள், வியாபாரத் தளங்கள் கொள்ளையடிக்கப்பட்டு எரிக்கப்பட்டன.

வடோத்ரா நகரத்தில் புதிதாக உருவான பகுதி தான் சாமா. அங்கு ஆதிக்கம் செலுத்தக் கூடிய அளவு இந்துக்கள் வசிக்கின்றனர். அங்கு எம்.எஸ்.பல்கலைக் கழக இயற்பியல் பேராசிரியர் ஜே.எஸ். பந்தூக்வாலா வசிக்கிறார்.

வடோத்ராவில் மதிக்கப்படும் பிரமுகரின் வீடு, பிப்ரவரி 28 அன்று 20 பேர் கொண்ட மதவெறி கும்பலால் தாக்கப்பட்டது. அவரும் அவருடைய மகளும் அருகில் இருந்த இந்து வீடுகளில் தஞ்சம் புகுந்தனர். அந்த கும்பல் பின்பு சென்று விட்டது. சமையல் எரிவாயு சிலிண்டர்கள், ஆயுதங்கள் என அந்த கும்பல் பலத்துடன் மீண்டும் மார்ச் 1 அன்று அடுத்த தாக்குதலை நிகழ்த்தி பந்தூக்வாலாவின் வீட்டை கொளுத்தியது. அதிகாரவர்க்கத்தை சார்ந்த வேறு இரு முஸ்லிம்களின் வீடுகளும் எரிந்து சாம்பலாக்கப்பட்டன.

‘தெகல்கா’ கலவரக்காரர் ஒருவரை சென்றடைந்தது. அவர்தான் இந்த மூன்று வீடுகளையும் கொளுத்திய தமந்த்பட். அவர் எம்.எஸ். பல்கலைக்கழகத்தின் தலைமை கணக்கர். ஆனால் அவரது உண்மையான ஈடுபாடு, முஸ்லிம்களை சேதப்படுத்துவது தான். பல்கலைக்கழகத்தில் பணியாற்றிக் கொண்டே அவர் வடோத்ரா எம்.பி. ஜெயாபேன் தாக்கூரின் தனி செயலாளராகவும் பணிபுரிகிறார். சபர்மதி ரயில் சம்பவம் நடந்த அன்று வி.எச்.பி., ஆர்.எஸ்.எஸ், பா.ஜ.க., ஏ.பி.வி.பி ஆகிய அமைப்புகளின் தலைமையின் கூட்டம் வடோத்ராவில் நடந்ததை பட் வெளிப்படையாகத் தெரிவித்தார். ஆர்.எஸ்.எஸ். உறுப்பினரான பட் அந்த கூட்டத்தில் கலந்து கொண்டார். அங்கு தான் முஸ்லிம்களை தாக்குவதற்கான வரைவுகள் உருவாக்கப்பட்ட அதே நேரத்தில், கலவரத்தில் ஈடுபடுபவர்களை சட்ட ரீதியாக காப்பாற்றுவதற்கான திட்டங்களும் வகுக்கப்பட்டன.

‘தெகல்கா’ மற்றொரு பா.ஜ.க. தலைவரான தீபக் ஷா வை சந்தித்தது. அவர் பட் கூறிய தகவல்களை உறுதிப்படுத்தியதுடன், அந்த கூட்டம் நிகழ்ந்த நர்மதா பிள்ளை வீட்டைப் பற்றியும் கூறினார். திபக் ஷா, எம்.எஸ். பல்கலைக்கழகத்தின் சிண்டிகேட் உறுப்பினர். அவர், பாபு பஜ்ரங்கி எவ்வாறு அகமதாபாத் நகரத்தை துவம்சம் செய்தார் என்பதை விவரித்தார். தாழ்த்தப்பட்ட சாதியினர் எவ்வாறு முஸ்லிம் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டார்கள் என்பதையும் அவர் விளக்கினார்.

# ‘அந்த யோசனை மோடியிடம் இருந்தே வந்தது’

எழுத்துப்படி **திமந்த் பட்**



**ஒவ்வொரு நிமிட திட்டமிடுதலும், அணி திரட்டலும் எவ்வாறு நிகழ்ந்தது என்பதை விவரிக்கிறார் பல்கலைக்கழகத் தலைமை தணிக்கையாளர்**

மே 19, 2007

**திமந்த் பட் :** என் மீது இரண்டு குற்றச்சாட்டுகள் உள்ளன.... நான் இந்த மொத்த பல்கலைக்கழகத்தின் தலைமை கணக்கர் மற்றும் தணிக்கையாளர்... இது, பணத்திற்கும் பிழைப்பிற்குமானது... எல்லோருக்கும் பணம் தேவை தானே... இது எலும்பை முறிக்கும் வேலை... ஒரு தீவிர இந்து அடிப்படைவாதத்தை வளர்க்க வேண்டும் என கோரிக்கை விடுத்தால், அங்கு நான் முதல் தொண்டனாக இருப்பேன். நான் உடனே அங்கு சென்று சொல்வேன்: சகோதரர்களே! லத்தியை வீசிஎறிந்துவிட்டு கையில் ஏ.கே.56 அய் எடுங்கள்... எடுங்கள் ஏ.கே.56 அய்! ஏனென்றால், நமது எதிரிகள் யார் என்பது நமக்குத் தெரியும். இந்துக்களுக்கு இரண்டு எதிரிகள்... முஸ்லிம்கள் மற்றும் கிறித்துவர்கள்... இவர்கள் பாக்டிரியா, வைரசை போன்றவர்கள்... அடுத்து நம் மூன்றாம் எதிரிகள் கம்யூனிஸ்டுகள்... சிகப்பு திமிங்கலம்... அவர்கள் வளர்ந்து வருகிறார்கள்... அவர்களோடு நீங்கள் போக வேண்டும் என்றால், உங்களுக்கு அதிகாரம் வேண்டும்... அந்த அதிகாரத்தை உங்கள் லத்திகளிலிருந்து பெற வாய்ப்பில்லை... துப்பாக்கி தோட்டா தான் சரி...

நாம் ஆர்.எஸ்.எஸ். ஷாகாவுக்கு சென்று லத்திகளை கையில் எடுத்துப் பயிற்சி செய்கிறோம்... அதில் சிறிய மாற்றம் தான் இப்பொழுது ஏ.கே.56 அதில் இடம் பெற வேண்டும், அப்படி இந்து படை உருவாக வேண்டும்.

**பட் :** கோத்ரா சம்பவத்துக்குப் பிறகு தான் இந்த எதிர்வினைகள். பிறகு தகுந்த சூழல் பரிவாரால் உருவாக்கப்பட்டது... அதாவது ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க., பஜ்ரங் தள், துர்காவாகினி ஆகிய அமைப்புகளின் தலைவர்களாய்... அதற்கு நரேந்திர மோடியின் முழு ஆதரவு கிடைத்தது... இந்துக்கள் இவ்வாறாக கொளுத்தப்படுவதை விரும்புவதாக யாராவது தைரியம் இருந்தால் வெளிப்படையாக சொல்லட்டும்... அப்படி இந்துக்களுக்கு எதிராக சூழ்ச்சிகள் இருந்ததால்தான், அவர் முழு ரயிலையும் எரிக்க (சபர்மதி எக்ஸ்பிரஸ்) முயன்றார்கள்... இதற்குப் பின்னும் நாம் எதுவும் செய்யவில்லை என்றால்... இதற்கு தகுந்த பதிலடி கொடுக்கவில்லை என்றால்... மேலும் ஒரு ரயில் எரிக்கப்படும்... இந்த யோசனைதான் மோடியிடமிருந்து வந்தது... நான் அந்த ஆட்டத்தில் கலந்து கொண்டேன்.

**தெகல்கா :** அது எங்கு நடந்தது?

**பட் :** பரோடாவில் தான்... அது ஒரு ரகசியமான இடம்...

அதற்கு அடுத்து உடனடியாக... கோத்ரா நிகழ்ந்த அன்று... இரு வேறு கூட்டங்கள் நடந்தன அகமதாபாத் மற்றும் பரோடா... அதில் தான் எல்லா நடவடிக்கைகளும் தீர்மானிக்கப்பட்டன. எல்லோரும் அதில் ஆஜராகி இருந்தோம். பி.ஜே.பி., ஆர்.எஸ்.எஸ்., வி.எச்.பி. இனி தாமதிப்பது இல்லை என தீர்மானித்தோம். நமக்கு வலிமை இருக்கிறது என்றால் உடனே எதிர்வினை ஆற்றுவோம். இனி தற்காப்பாக செயல்படுவதில்லை என ஏகமனதாகத் தீர்மானித்தோம். அதை இன்று இரவே தொடங்க வேண்டும்.

**தெகல்கா :** இது. தலைமையின் கூட்டமா அல்லது கீழ்மட்ட உறுப்பினர்களின் கூட்டமா?

**பட் :** இது, உறுப்பினர்களுக்கான கூட்டம் தான். ஆனால் அதற்கான செய்திகள் மேலிருந்து வந்தன. அதை நடைமுறைப் படுத்தியவர்கள் எங்கள் தொண்டர்களே.

**தெகல்கா :** அந்தக் கூட்டத்தில் எத்தனை பேர் கலந்து கொண்டார்கள்?

**பட் :** 65 – 70 பேர் இருக்கும்

**தெகல்கா :** 65–70

**பட் :** பரோடாவின் முக்கிய உறுப்பினர்கள் அனைவரும். அகமதாபாத்தில் இருவர் இருந்தனர். அந்த இடத்தை நான் கூற மாட்டேன். அது ரகசியமானது. அது பரிவாருடையது. அகமதாபாத்தில் கட்சிக்கு ஒரு பண்ணை வீடு உள்ளது. அங்கிருந்து தான் எல்லா விநியோகமும் தொடங்கியது. திட்டம் வகுக்கப்பட்டது. காவல் துறை யாரையாவது கைது செய்தால் (நாங்கள் அதை விடுவிப்போம்). உடனே வெளியே கொண்டுவருவோம் (உள்ளே இருப்பவர்களை). அன்று இரவு வழக்கறிஞர்கள் குழு அமைக்கப்பட்டது.

இந்துக்கள் காயம் அடைந்தால் அவர்களை எவ்வாறு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வது, எப்படி உதவுவது என முழு திட்டமும் உருவானது. ‘இந்து ஜிஹாத்’தை தொடங்குவதற்காக. அதில் வெற்றியுமடைந்தோம். என்ன செய்வது என யோசித்துக் கொண்டிருந்தோம். அதனால் மூன்று அடி நீள இரும்பு தடிகளை தருவித்தோம். இரும்புத்தடிகள், பஜ்ரங்தள் தொண்டர் என்றால் திரிசூலம். மிகுந்த திட்டமிடுதல்களுடன் ஆயுதங்களை விநியோகித்தோம். தேவையான இடங்களுக்கு ஆயுதங்களை விநியோகித்த பிறகு இந்துக்கள் புத்துணர்வு பெற்றனர். கோத்ரா சம்பவம் நடந்த வரை எந்த உயர் சாதி இந்தும் களமிறங்கியதில்லை. பனியாக்கள். படேல். அவர்கள் வெளியே வரவே மாட்டார்கள். வழக்கறிஞர்கள், காவல் துறை என பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டதை அவர்களுக்கு தெரிவித்துதான் அணிதிரட்டினோம். கைது செய்யப்பட்டால், உடனே வெளியே வந்து விடலாம்.

**தெகல்கா :** அந்த உத்தி பலித்தது.

**பட் :** அது மிக நன்றாக வேலை செய்தது. எங்கள் குடியிருப்புப் பகுதியிலிருந்த பெண்கள் கூட கிளம்பி விட்டார்கள். பின்பு அனைவரையும் எச்சரிக்கும் முறையை ஏற்படுத்தினோம். இருட்டான நேரங்களில் ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் இருந்தது. அதனால் நான் இருளில் வெளியே வந்து சமையல் பாத்திரங்களை தட்டி ஒலி எழுப்புவேன். டன் டன் டன் அதிகாலை இரண்டு மணிக்கு ஒலி எழுப்பியதும் நிமிடங்களில், 500 பேர் அவர்களின் தடிகளுடன் திரண்டனர், என்ன என்ன என்று கேட்டுக்கொண்டே! இந்த எச்சரிக்கை குஜராத் முழுவதும் உருவாக்கப்பட்டது. பரோடா அகமதாபாத்திலும் இதுவே.

**தெகல்கா :** பரோடா மற்றும் அகமதாபாத் தான் பிரச்சாரத்தை முன்னெடுத்துச் சென்றன.

**பட் :** இது என்னுடைய பகுதி. நீங்கள் பந்தூக்வாலாவை கேள்விப்பட்டிருக்கிறீர்களா?.

**தெகல்கா :** அந்த பேராசிரியர்.

**பட் :** அவன் ஓய்வுபெற்றுவிட்டான். அவன் ஒரு முஸ்லிம்.பேரா முஸ்லிம்.இயற்பியல் முனைவர் அறிவியல் மனிதன். முஸ்லிம்கள் மத்தியில் படித்தவர்கள் தான் தீவிர அடிப்படைவாதிகள். இந்துக்களில் படித்தவர்கள் தாராள மனம் படைத்தவர்களாக இருக்கிறார்கள். பந்தூக்வாலா பல்கலைக் கழகப் பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார். இப்போது ஓய்வாக இருக்கிறார். ஏதோ அமைப்பு நடத்துகிறார்.

**தெகல்கா :** கலவரங்களின் போது அவர் கும்பல்களை அணிதிரட்டினாரா?

**பட் :** கலவரம் நடந்தபோது அவரது பங்களா, என் சொசைட்டி முன்தான் இருந்தது. சரியாக எதிரில். அவன் பங்களாவை முற்றாக எரித்தோம். உடைத்து தரை மட்டமாக்கினோம். அவன் ஓடிவிட்டான். அதற்குப் பின்னும் சேதப்படுத்தினோம். பல இந்துக்கள் அங்கு கூடினார்கள். இன்னொரு அரசு அதிகாரி பெர்சாதா அங்கிருந்தார். அவரும் என் பகுதியை சார்ந்தவர். அவனது வீட்டையும் கொளுத்தினோம். எங்களுக்கு எந்த வருத்தமும் இல்லை. இதை இந்துக்களுக்காக செய்தோம். புயல் பரோடாவிலிருந்தே கிளம்பியது. ஷாமா ரோடு, பணிகடே. மான்ட்வீ, மீரானி. இவை பதட்டமான பகுதிகள். இந்த பெர்சாதா பஞ்சாயத்து துறையின் வளர்ச்சி அதிகாரி. அவனும் படித்தவன். அவனும் ஓடிவிட்டான். வேறு ஒருவனும் ஜீ.எஸ்.எப்.சி.'யில் இருந்தான். அவன் படித்தவன். ரசாயன என்ஜினியர். அவனும் இந்து மேலாதிக்கத்தால் ஓடிவிட்டான். கோத்ராவுக்குப் பிறகு இந்துக்கள் தங்கள் வீடுகளில் ஆயுதங்கள் வைத்துக் கொள்கிறார்கள். அவர்களின் ஒழுங்குமுறை ஊக்கம் பெற்றுள்ளது.

**தெகல்கா :** இந்துக்களின் நம்பிக்கை உயர்ந்துள்ளது.

**பட் :** இப்பொழுது இந்துவாய் இருப்பது பெருமைக்குரியது. இந்துக்கள் இப்பொழுது அதை உணர்கிறார்கள். உயர் சாதியினர் முதல் முறையாக சங்பரிவாருக்கு ஆதரவாக வெளிப்படையாக வந்துள்ளனர்.

# "ஓநாய்கள் துரத்த ஓடும் முயலைப் போல நான் ஊரை விட்டே வெளியேறினேன்"

**வடோத்ராவில் வசிக்கும் பேராசிரியர் பந்தூக்வாலாவின் வீடு அவரது நண்பர்களாலேயே தாக்கப்பட்டது. அவலங்களுடன் இசைந்து வாழ நேர்ந்ததால், எல்லாவற்றையும் மன்னித்து விட்டதாக அவர் ஹரிந்தர் பவேஜாவிடம் கூறுகிறார்**

***உங்கள் வீட்டுக்கு என்ன நேர்ந்தது?***

*பிப்ரவரி 26 அன்று சாவர்க்கரை பற்றி உரை நிகழ்த்துமாறு என்னை அழைத்தார்கள். அன்றே என் கதை தொடங்கிவிட்டது. அது காவிப்படைகள் ஏற்பாடு செய்திருந்த மாநாடு. எந்த முஸ்லிமும் அவரைப் பற்றி பேசுவதில்லை, அதனால் நீங்கள் வந்து உரையாற்றுங்கள் என அழைத்தார்கள். இறுதியாக நான் ஒப்புக்கொண்டேன். அவர்கள் என்னைப் பணிவுடன் நடத்தினார்கள். இது இரவு 8 மணி அளவில் இருக்கும். நான் முஸ்லிம்களுக்கும் ஆர்.எஸ்.எஸ்.-க்கும் மத்தியில் உரையாடலைத் தொடங்க வேண்டிய நேரமிது என வலியுறுத்தினேன். என் மற்றொரு கருத்து – சாவர்க்கரின் பாதையின் படி, இந்தியாவில் மிகப்பெரும் முஸ்லிம் மக்கள் தொகை அன்னியப்படுத்தப் பட்டிருக்கும். அடுத்த நாள் காலை கோத்ரா சம்பவம் நிகழ்ந்தது. என் வீடு தான் முதல் தாக்குதல் நிகழ்ந்த இடம். என்னுடைய பரோடா இல்லம் இரு முறை தாக்கப்பட்டது. முதலில் பிப்ரவரி 28, பின்பு மார்ச் 1. பிப்ரவரி 28 அன்று என் காரை எரித்தார்கள். சோகம் என்னவென்றால் அவர்கள் அனைவரும் என் நண்பர்கள்.*

*அவர்கள் என் மகளை பெயர் சொல்லியே*

அழைத்தார்கள். அதன் பிறகு இரண்டு போலிசார் என் வீட்டு வாசலில் காவலுக்கு அமர்த்தப் பட்டார்கள். அடுத்த நாள் எல்லாம் மிகுந்த திட்டமிடுதல்களுடன் நிகழ்ந்தது. ஒரு பெரும் கூட்டம் திரட்டப்பட்டது.உள்ளூர் பி.ஜே.பி. கவுன்சிலரின் தலைமையில் வன்மமான முழக்கங்களை முழங்கினார்கள். அந்த கும்பல் வைத்திருந்த ஆட்டோவில் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் இருந்தன. அவர்கள் வந்ததும் நான் வீட்டை விட்டு குதித்து ஓடினேன். என்னைத் தேடி பின் தொடர்ந்தார்கள். ஆனால் அவர்களால் என்னை கண்டுபிடிக்க இயலவில்லை. ஒரு பார்ப்பனக் குடும்பம் என்னை அவர்கள் வீட்டு குளியல் அறையில் பதுக்கி வைத்தது. இஷான் ஜாப்ரிக்கு செய்ததை எனக்கு செய்யத் துடித்தார்கள். அந்த இரு காவல் துறையினரும் எது வேண்டுமானாலும் 15 நிமிடங்களில் செய்யுங்கள் என அவகாசம் கொடுத்தார்கள்.

***யார்? அந்த பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்ட காவலர்களா?***

ஆம் அவர்களே தான்! அந்த கும்பல் பல கருவிகளை வைத்திருந்தது. முதலில் வீட்டை உடைத்து கொள்ளை அடித்தார்கள். என் மனைவி சமீபத்தில் தான் இறந்து போனார். பளிங்கு, வெள்ளி பொருட்களின் பெரும் சேகரிப்பு அவருடையது. இது நடக்கும் பொழுதே என் மகளும் குதித்து விட்டார். அவர்கள் உள்ளே வந்து எரிவாயுவை கசியவிட்டு பின்பு தீயிட்டு, கொள்ளையடித்த பொருட்களுடன் ஓடிப்போனார்கள்.

இதுவெல்லாம் மிகுந்த திட்டமிடுதல்களோடு தான் நிகழ்ந்ததாகத் தெரிகிறது. அவர்கள் என்னை வெளியே அழைத்தார்கள். நான் குளியல் அறையை விட்டு வெளியே வந்தேன். பரோடா நகரத்தின் முக்கிய குடிமக்கள் மற்றும் நண்பர்கள் என் கையில் பம்பாய் செல்வதற்கான விமான டிக்கெட்டை கொடுத்தார்கள். உடனே கிளம்புங்கள், வி.எச்.பி.யினர் உங்களை கொல்லத் துடிக்கிறார்கள் என்றார்கள். காவல் துறை வாகனத்தில் கண்ணாடிகளை ஏற்றிவிட்டு, அசுர வேகத்தில் என்னை விமான நிலையம் அழைத்து வந்தார்கள். நகரம் தீப்பிடித்து எரிவதைப் பார்த்து கதறி அழுதேன். நான் பரோடா நகரத்தில் அறியப்பட்டவன். ஆனால் நான் அந்த நகரத்திலிருந்து ஓநாய்கள் துரத்த ஓடும் முயலாய் வெளியேறினேன். மொத்த சூழலே அச்சத்தை ஏற்படுத்தியது. நான் கடவுளிடம் என்ன வேண்டினேன் என நினைவிருக்கிறது : ''கடவுளே என் சமூகம் நிர்மூலமாக்கப்படுகிறது. அவர்களை காப்பாற்று!''

***நீங்கள் நீண்ட இடைவெளிக்குப் பிறகுதான் திரும்பினீர்களா?***

மூன்று மாதங்கள் கழித்து தான் வந்தேன். நான் அமெரிக்காவில் இருந்தேன். அங்கு என் நண்பர் நீ அடைக்கலம் புகலாம் என வலியுறுத்தினார். அதற்கான தகுதியும் இருந்தது. ஆனால் நான் கூறினேன், இல்லை, குஜராத் முஸ்லிம்களுக்கு என் தேவையிருக்கிறது.

***உங்களுக்கு திமந்த் பட் என்கிற பெயருடைய நபரை தெரியுமா?***

உண்மையில் வருந்துகிறேன், இருங்கள் நினைவு கூர்கிறேன். பட் என் மகளுடன் மிகவும் அன்பாகப் பழகுபவர்.

***அய்ந்து ஆண்டுகள் கழித்து இப்பொழுது குஜராத்தில் முஸ்லிமாக வாழ்வது எத்தனை கஷ்டமானது?***

இன்று அந்தப் பகுதிக்கு என்னால் செல்ல இயலாது. என் கார் அந்த சாலையின் திசையில் செல்லாது. என் மனைவி அங்கு தான் இறந்தார். என் குழந்தைகள் அங்கு தான் வளர்ந்தன. என்னை தாக்க வந்தவர்களை நான் மன்னித்து விட்டேன். அது தான் என்னை அவலங்களுடன் இசைந்து வாழ உதவியிருக்கிறது.



எழுத்துப்படி **தீபக் ஷா**

# ‘அது வரலாறு காணாததாக இருக்க வேண்டும்’

**சபர்மதி எக்ஸ்பிரஸ் சம்பவம் நிகழ்ந்த அன்று எவ்வாறு பழிவாங்கும் நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டன என்பதை விளக்குகிறார் வடோத்ராவின் மூத்த பா.ஜ.க. தலைவர்**

மே 20, 2007

**தெகல்கா :** நீங்கள் பரோடாவை வந் தடைந்த பொழுது நேரம் என்ன (கோத்ரா விலிருந்து)?...

**தீபக்ஷா:** மூன்று, நான்கு மணி யிருக்கும்.

**தெகல்கா :** காயம்பட்டவர்களை மருத் துவமனையில் அனுமதித்து விட்டு...

**தீபக்ஷா:** நாங்கள் ஒரு பெரிய ஆம்பு லன்சில் சென்றோம். நேரடியாக மருத்துவ மனைக்கு. உடனே அனுமதித்தோம். பின்பு கோத்ரா எம்.பி. கோபால்சிங்கை சந்தித் தோம். பின்பு ரயில் கலெக்டரை சந்தித் தோம். காவல் துறையினருக்கும் எம்.பி.க் கும் ஆணைகள் நேரடியாக வழங்கப் பட்டன. ஆணைகள் மிக நேரடியானவை. எந்த இந்துவும் கைது செய்யப்படக்கூடாது. முஸ்லிம்கள் எல்லோரையும் பிடியுங்கள். எங்களிடம் நடுநிலை பற்றிப் பேசாதீர்கள். நடுநிலை சார்ந்த விஷயங்கள் குறித்து பின்பு பார்த்துக் கொள்ளலாம். இப்பொழுது முழு அதிகாரத்துடனும், பலத்துடனும் முதலில் பாடத்தை கற்பிப்போம்.

**தெகல்கா :** கோத்ராவிலா?

**தீபக்ஷா:** நாங்கள் பல இடங்களுக்குச் சென்றோம். எல்லோருடைய பார்வையும் அழுத்தம் நிறைந்ததாக இருந்தது. வி.எச்.பி.யை சேர்ந்த ஜெய்தீப் எங்களுடன் இருந்தார். எங்கள் தொண்டர்கள் அனை வரும் சாலையில் சங்கமித்தனர். அங்கு கடும் சீற்றம் நிலவியது. இந்த முறை முஸ் லிம்களை விட்டு விடுவதில்லை என்பது அங்கு பொது மனநிலையாக இருந்தது. நாங்கள் பரோடாவை வந்தடைந்த போது அங்கு ஊரடங்கு போன்ற சூழல் நிலவியது. ஊடகங்களின் வாயிலாக அந்த பயங்கர நிகழ்வு குறித்து நகரமே அறிந்திருந்தது. அந்த கோபம் தன்னியல்பானது. நீங்கள் நடந்து செல்லும் சாலையில் இருக்கும் ஒவ்வொரு முஸ்லிம் கடையும் கொளுத்தப் பட்டது.

**தெகல்கா :** இவையெல்லாம் எப்படி ஒருங்கிணைக்கப்பட்டது?

**தீபக்ஷா:** அடுத்த இரண்டு நாட்கள் பார்ப்பவரை எல்லாம் குறி வைத்து தகர்ப்பது தான் பரோடாவில் நிகழ்ந்தது. தொலை தூரத்து மன்சர்பூர், அல்கர்பூரி, கோத்ரியில் கூட அப்படித்தான். இந்தப் பகுதியில் சாதா



ரண கல் எரிதல் சம்பவம் கூட நிகழ்ந்தது இல்லை. கலவர வரலாறு இல்லாத பகுதி கள். அந்தப் பகுதியிலும் குறிப்பாக பதட் டத்தை உருவாக்கி முஸ்லிம் கடைகளை கொளுத்தினோம்.

**தெகல்கா :** இரவு பரோடாவில் நடந்த கூட்டத்தில் நீங்கள் கலந்து கொண்டீர்களா?

**தீபக்ஷா:** ஆமாம்... நான் கூட்டத் துக்குச் சென்றேன். இத்தனைப் பெரிய சம் பவத்திற்குப் பிறகும் நாம் உணரவில்லை என்றால், களமிறங்கி அவர்களுக்கு பதிலடி கொடுக்காவிட்டால், மீண்டும் நாம் சத்த மின்றி அடங்கிவிட்டால் – அவர்கள் வன் முறையை மீண்டும் கையில் எடுத்து எதை யும் செய்வார்கள். முதலில் பந்த் நடத்த அழைப்பு விடுங்கள்.

**தெகல்கா :** வி.எச்.பி.யினர் மட்டும் தான் கூட்டத்தில் பங்கு பெற்றார்களா?

**தீபக்ஷா:** இல்லை இல்லை. எல்லோ ரும் வந்தார்கள். சங்பரிவாரின் உறுப்பினர் கள் அனைவரும் வந்தனர். மண்டல். அதா வது வி.எச்.பி. ஏற்பாடு செய்யும் மாபெரும் நிகழ்வுகளில் பங்குபெறுபவர்கள், இளை ஞர் அணியும் அழைக்கப்பட்டிருந்தது. 100 – 150 பேர்களுக்கு மேல் இருக்கும்.

**தெகல்கா :** அகமதாபாத் போல், இங்கு எந்த விருந்தினர் இல்லத்தில் கூட்டம் நடந்தது?

**தீபக்ஷா:** ஆமாம், அது நர்மதா விருந் தினர் இல்லத்தில் நடந்தது.

**தெகல்கா :** நர்மதா விருந்தினர் இல் லம். அங்கு யாரும் குறிப்பிட்டு எதைப் பற் றியாவது பேசினார்களா?

**தீபக்ஷா:** எல்லோரும் அவரவர் கருத்தை வெளிப்படுத்தினார்கள். வரலாறு இது போன்று ஒரு நிகழ்வை சந்தித்திருக்கக் கூடாது.

**தெகல்கா :** திமந்த் பாய் நீங்கள் வகுத்த தந்திரங்கள் குறித்து சொன்னார். ஏதோ வழக் கறிஞர்களின் குழுவைப் பற்றி எல்லாம்.


**தீபக்ஷா:** அது சரி. ஏன்னா போலிஸ் விசாரணையை நடத்தும். அதிலிருந்து நம் மவர்களை காப்பாற்ற வேண்டாமா?

**தெகல்கா :** அந்த சட்டக் குழுவில் யார் யார் இடம் பெற்றார்கள்?

**தீபக்ஷா:** சஞ்சய்பாய் ஜோஷி இருந் தார். நீரா ஜெயின் இருந்தார். ராஜேந்திர திரி வேதி. பங்கஜ் சபர். துஹார் வியாஸ்.

**தெகல்கா :**யாரெல்லாம் தாக்குதலில் ஈடுபடுத்தப்பட்டார்கள்?

**தீபக்ஷா:** போர்க் குணம் மிக்க சமூகங் கள் இருந்தன. சர்வா, பக்ரி, அவர்கள் எல் லாம் இது போன்ற சமயங்களில் முன்வரு வார்கள். அவர்கள் இறைச்சி உண்ணக் கூடி யவர்கள். அவர்களிடம் ஆயுதங்கள் இருக் கும். அதனால் முன்னணியில் செல்வார்கள். அதனால் எல்லாமே முறைப்படுத்தப்பட்டி ருந்தன. கார்களும் இருந்தன. இந்த முறை நிறைய ரப்பாரிகள் வந்தனர். பத்ரிக்கள், பர மர்கள் மற்றும் மராத்தி பேசக்கூடிய பலரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.




# தப்பி ஓட திசையில்லை

**‘வெளியிலிருந்து கதவைப் பூட்டிவிட்டு உள்ளேயே வைத்து (துலுக்கனை) கொளுத்துங்கள்’ இந்த ‘போர்ப் பிரகடன’த்தின் கீழ்தான் மொத்த படைகளும் அணிவகுத்தன – வி.எச்.பி. தலைவர் ஒருவர் 500 முஸ்லிம்களை கொல்லப்போவதாக சபதம் ஏற்கிறார்.**

அதிகப்படியான பொருளாதார சேதங்களை சந்தித்தவர்கள் சபர்காந்தா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். நூற்றுக்கணக்கான முஸ்லிம் குடும்பங்கள், வியாபார தளங்கள் தரைமட்டமாக்கப்பட்டன. வி.எச்.பி.யின் பகுதி பொறுப்பாளர் அனில் படேல் தான் அந்தப் பகுதியில் நடந்த இனப்படுகொலையின் திட்டத்தை வகுத்தவர். சபர்மதி சம்பவம் நிகழ்ந்ததும் 500 முஸ்லிம்களை கொல்லப்போவதாக சபதம் ஏற்கிறார் அல்லது தனது பதவியை துறப்பதாக ‘தெகல்கா’விடம் கூறுகிறார் படேல்.

‘‘எங்கள் போர்ப்பிரகடனம் வெளியிலிருந்து கதவை பூட்டிவிட்டு உள்ளயே வைத்து கொளுத்து துலுக்கனை’’ என ‘தெகல்கா’வுக்கு தெரிவிக்கிறார் படேல். அவர் வி.எச்.பி., ஆர்.எஸ்.எஸ். தொண்டர்களிடம் முஸ்லிம்களின் சொத்துகளுக்கு சேதம் விளைவித்து, அவர்களை கொன்று குவியுங்கள் என வெளிப்படையாகவே கூறியதாகத் தெரிவிக்கிறார்.

**பிரவீன் தொகாடியா மாவட்ட அளவிலான எல்லா நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்ததாக, இனப்படுகொலையை முதன்மையாக நின்று திட்டமிட்ட அனில் படேல் தெரிவிக்கிறார்.**

சபர்காந்தா மாவட்டத்தில் ஒரு கிராமம் கூட இந்தத் தாக்குதலிலிருந்து தப்பவில்லை. 126 முஸ்லிம் வீடுகள் படேலின் சொந்த கிராமத்தில் சாம்பலாயின.

எங்களிடம் எந்த ஒற்றை அணுகுமுறையும் இல்லை. அதிகப்படியான சேதங்களையும் பாதிப்புகளையும் ஏற்படுத்துவது தான் நோக்கம் என்கிறார். மேலும், மாவட்ட அளவில் எல்லா விஷயங்களையும் பிரவீன் தொகாடியா ஒருங்கிணைத்ததாகக் கூறுகிறார். பிரவீன் வி.எச்.பி. யினரை எச்சரிக்கையுடன் காவல்துறையிடம் சிக்கிக் கொள்ளாமல் பணியாற்றச் சொன்னார். சபர்காந்தாவில் மட்டும் 1,545 வீடுகள், 1,237 வியாபாரத் தளங்கள் எரிக்கப்பட்டன. 549 கடைகள் சூறையாடப்பட்டன.



# ‘மிகச்சிறிய கிராமங்கள் கூட தப்பவில்லை’

**மூத்த காவல் துறை அதிகாரிகளின் ஒத்துழைப்பு, தாக்குதல்களில் இணைந்த காங்கிரஸ் தொண்டர்கள் என விரிவாகப் பேசுகிறார் வி.எச்.பி. தலைவர் அனில் பட்டேல்**

ஜூன் 13, 2007

**அனில் பட்டேல் :** நீங்கள் கேள்விகளை கேளுங்கள். நான் பதிலளிக்கிறேன்.

**தெகல்கா :** எனக்கு இந்தப் பகுதியைப் பற்றி நிறைய விபரங்கள் தெரியாது.

**அனில் பட்டேல் :** இந்த சபர்காந்தா மாவட்டத்தைப் பற்றி நான் உங்களுக்கு கூறுகிறேன். அதிகப்படியான எப்.அய்.ஆர்.கள் இங்கு தான் பதிவு பெற்றன. கோத்ராவுக்கு அடுத்தபடியாக நான் தான் வி.எச்.பி. சார்பாக எல்லா வழக்குகளையும் நடத்தினேன், அதனால்தான் எனக்கு தெரியும். இங்கு 40 கொலைகள்; அங்கு 60 கொலைகள் நடந்தன.

**தெகல்கா :** தன்சுராவில் மட்டுமா?

**அனில் பட்டேல் :** இல்லை சபர்காந்தா. சபர்காந்தா முழுமையிலும், கிராமங்களை கொளுத்தும் விஷயத்தில் ஒரு சிறிய கிராமம் கூட தப்பவில்லை. இந்த மாவட்டத்தில் ஒரு முஸ்லிம் வீடுகூட தப்பவில்லை. பிப்ரவரி 27 அன்று காலை 9 மணிக்கு ரயில் எரிக்கப்பட்டதை நான் தொலைக்காட்சியில் பார்த்தேன். அது மிகப்பெரிய சம்பவம் என்பதை உணர்ந்தேன். இதற்கு மிகப்பெரும் எதிர்வினை இருக்கும் என்று புரிந்தது. அடுத்த நாள் பந்த் நடக்கப் போவதாக மாநிலத் தலைமையிலிருந்து தகவல் வந்தது. அடுத்து ஒரு நண்பரை சந்தித்தேன். அவர் நான் எவ்வாறு பதில் கொடுப்பேன் என்று கேட்டார்.

**தெகல்கா :** அவர் ஒரு முஸ்லிமா?

**அனில் பட்டேல் :** இல்லை, அவர் இந்து. நான் செய்யப்போவதை இந்த மொத்த உலகமும் நாளை பார்க்கும் என்றேன். அன்று இரவு 10 மணி அளவில் எனக்கு வி.எச்.பி. அலுவலகத்திலிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. கருகிய நிலையில் இருந்த என் மாவட்டத்தைச் சேர்ந்த 16 கரசேவகர்களை அடையாளம் காணும்படி என்னை வரச்சொன்னார்கள். அந்த உடல்களை அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி சொன்னார்கள். கோத்ராவுக்கான முதல் எதிர்வினை, என் கிராமமான பட்காவுனில் நடந்தது. அது தன்சுரா அருகில் உள்ளது. பரோடா ரயில் நிலையத்தில் நடந்த கத்திக் குத்து. குத்தியவர் எங்கள் பட்காவுனை சேர்ந்தவர். பிறகு ஆனந்த ரயில் நிலையத்தில் சிலர் குத்தப்பட்டார்கள். அதுவும் எங்கள் தொண்டர் ஒருவர் திரிசூலத்தால் குத்தினார். எங்கள் தொண்டர்கள் திரும்பி வந்தார்கள். அடுத்த நாள் சதுக்கத்தில் எல்லோரும் ஒன்றுகூடி தக்க பதிலடி கொடுப்போம் என சபதம் ஏற்றனர்.

**தெகல்கா :** பரிஷத் உறுப்பினர்கள் மட்டும்தான் இருந்தார்களா?

**அனில் பட்டேல் :** இல்லை, மொத்த இந்து சமூகமும் அங்கிருந்தது. காங்கிரஸ் தொண்டர்களும் எங்களுடன் ஒன்றிணைந்தனர். பா.ஜ.க.வும் இருந்தது. சில காங்கிரஸ் தொண்டர்கள் முஸ்லிம்களை பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். அந்த எம்.எல்.ஏ. ஹரிபாய் படேல் – அவன் முஸ்லிம்களை பாதுகாக்க முயன்றான் – அவன் இறந்து விட்டான். இன்னொருவன் அய்க்ரோபாய் மிஸ்திரி பெரும் பணக்காரன். அவரும் முஸ்லிம்களை பாதுகாக்க முயன்றார். வன்முறை நடந்த அதே நேரம் வேறு ஒரு சம்பவமும் நிகழ்ந்தது. பாபு ஹக்கீம் என்கிற முஸ்லிமின் வீட்டில் பெண்களின் நிர்வாணப் படங்கள் கண்டெடுக்கப்பட்டன. அது ஒரு இந்து பெண்ணுடையது. முற்றிலும் நிர்வாணம். அந்த பெண்ணைப் போலவே ஹக்கிமும் நிர்வாணமாக இருந்தார். இது போல் 6 – 7 படங்கள் இருந்தன. இதை நாங்கள் ஹரிபாயிடம் காட்டி சொன்னோம், பாருங்கள் அந்த முஸ்லிம் என்ன செய்கிறார் என்று. அவர் எழுந்து அங்கிருந்து நடந்து சென்றுவிட்டார்.

**அந்த சம்பவம் தொலைக்காட்சியில் தொடர்ந்து ஒளிபரப்பப்பட்டது. கரசேவகர்கள் கொல்லப்படும் காட்சி, மீண்டும் மீண்டும் அன்று நாளெல்லாம் தொலைக்காட்சியில் ஓடியது. காங்கிரஸ்காரர்கள் உட்பட நாங்கள் அனைவரும் ஒன்றுபோல் உணர்ந்தோம்.**

**தெகல்கா :** காங்கிரசை சேர்ந்த ஹரி.

**அனில் பட்டேல் :** ஆமாம். இன்னொருவனும் இருந்தான். அர்விந்த் ஜெய் சிங். அவனும் முஸ்லிம்களும்.

**தெகல்கா :** போராளிகள் எவ்வாறு ஊக்கமளிக்கப்பட்டார்கள்?

**அனில் பட்டேல் :** அந்த சம்பவம் தொலைக்காட்சியில் தொடர்ந்து ஒளிபரப்பப்பட்டது. கரசேவகர்கள் கொல்லப்படும் காட்சி மீண்டும் மீண்டும் அன்று நாளெல்லாம் தொலைக்காட்சியில் ஓடியது. காங்

கிரஸ்காரர்கள் உட்பட நாங்கள் அனைவரும் ஒன்றுபோல் உணர்ந்தோம், நாம் இந்துக்கள் தாக்கப்பட்டிருக்கிறோம். நாங்கள் செய்த அனைத்தையும் அவர்களும் செய்தார்கள், மசூதியை தகர்க்க வெடி வைத்தது உட்பட.

**தெகல்கா :** தான்சுராவில் ஒரு மசூதி தகர்க்கப்பட்டது.

**அனில் பட்டேல் :** ஒரு மவுல்வி கொல்லப்பட்டார். மசூதி சேதமடைந்தது. அங்கு ஒரு மசூதி தான் இருந்தது.

**தெகல்கா :** மவுல்வி எரிக்கப்பட்டாரா?

**அனில் பட்டேல் :** ம்... ம்.......

**தெகல்கா :** அவர் உயிருடன் எரிக்கப்பட்டாரா?

**அனில் பட்டேல் :** இல்லை, அவரை அழைத்துச் சென்று தீர்த்துக்கட்டி விட்டார்கள் (தலையை வெட்டி சீவுவது போல் சாடை காட்டுகிறார்)

**தெகல்கா :** பெரிய வாளால்....

**அனில் பட்டேல் :** இல்லை, கோடாரியால். நான் மருத்துவமனைக்குச் சென்று பார்வையிட்ட பிறகு (கரசேவகர்களின் உடல்கள் அங்கு தான் வைக்கப்பட்டிருந்தன) அதிகாலை 4 மணிக்குத் திரும்பினேன். அப்பொழுதே நான் தீர்மானித்துவிட்டேன். இன்று எதிர்வினை இல்லையென்றால் வி.எச்.பி.யை விட்டு வெளியேறுவது என்று.

**தெகல்கா :** ஆமாம்... அது மானப் பிரச்சனை ஆகிவிட்டது.

**அனில் பட்டேல் :** 500 முஸ்லிம்கள் கொல்லப்பட்டுவிட்டால் இனி நான் பணி புரிய மாட்டேன். எல்லாம் முடிந்த பிறகு நான் யோசித்தேன். என்னைப்போல் தான் மற்றவர்களும் நினைத்தனர். அப்பொழுது தான் மீண்டும் தீர்மானித்தேன், இனி அவர்களைத் தாக்கும் பொறுப்பு எங்களுடையது. எங்கள் சகோதர, சகோதரிகளை கொளுத்தியவர்களும் எரிந்து தான் சாக வேண்டும்.

**தெகல்கா :** குழந்தைகளுமா?

**அனில் பட்டேல் :** கதவுகளைப் பூட்டி விட்டு உள்ளே வைத்து கொளுத்துங்கள். மொத்த குடும்பத்தையும் கொல்லுங்கள். என்ன நடந்தாலும் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். கதவுகளை தாளிடுங்கள், யாரும் தப்பிவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். இதன் பிறகு நிகழும் எல்லாவற்றையும் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்.

**தெகல்கா :** அப்ப தன்சுராவில் வீடுகள் எல்லாம் தீயிடப்பட்டன.

**அனில் பட்டேல் :** பல... 126 வீடுகள் தன்சுராவில் இருந்தது. அவை எல்லாம் சேதப்படுத்தப்பட்டன. மொத்த மாவட்டத்தில் ஒரே ஒரு கிராமத்தில் மட்டும் 75 சதவிகித முஸ்லிம்கள் வீடு திரும்பவில்லை.

**தெகல்கா :** திரும்பவில்லையா...?

**அனில் பட்டேல் :** அகமதாபாத்தில் வெடிகுண்டுகள் ஹரேஷ்பாயின் சொந்த தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டன. அது இங்கு எப்படி வேலை செய்தது?

**தெகல்கா :** இங்கு பல ஆழ்குழாய் கிணறு தோண்டும் நிறுவனங்கள் உள்ளன. அதனால் டயனமைட் கிடைப்பதில் சிரமம் இல்லை. எங்களிடம் சில நிபுணர்களும் உள்ளனர். அவர்கள் இங்கு சிலவற்றை செய்து (வெடிகுண்டுகள்) அகமதாபாத்துக்கு சப்ளை செய்தனர்.

**அனில் பட்டேல் :** அகமதாபாத்துக்கா?

**தெகல்கா :** இங்கிருந்தும் அனுப்பினோம்.

**அனில் பட்டேல் :** எதையாவது செய்யுங்கள் என பகலில் கூறினேன். ஆனால் எனக்கு நம்பிக்கையில்லை.

**தெகல்கா :** உறுதியில்லையே?

**அனில் பட்டேல் :** நான் மிகுந்த அலுப்புடன் இருந்தேன். ஒரே பதட்டம். நிறைய தொலைபேசி அழைப்புகள் வந்தன. ஒரு மணி அளவில் பயாத்ரோடு பகுதியில் 2500 பேர் திரண்டுள்ளதாக அழைப்பு வந்தது.

**தெகல்கா :** பயாத் ரோடு?

**அனில் பட்டேல் :** அதனால் பயாத் ரோட்டுக்கு விரைந்து சென்று நம்மவர்கள் எரித்துக் கொல்லப்பட்டுள்ளார்கள். நீங்கள் எதை வேண்டுமானாலும் செய்யுங்கள் என்றேன். கிராமங்களுக்குச் சென்று கொல்லுங்கள். அதன்பிறகு 30 சம்பவங்கள் நடந்தன. பயாத்திலிருந்து தன்சுராவுக்கு வந்தேன். தன்சுரா பகுதியே தீக்கோலமாக இருந்தது. எங்கள் ஆட்கள் தான் பதட்டத்தை உருவாக்கினார்கள். ஆனால் மெல்ல மற்றவர்களும் இணைந்து கொண்டனர். சிலர் எதிர்ப்பு தெரிவித்தனர். சில காங்கிரஸ் பசங்க ப்ரபுல். மோதாசாவின் சங்கராம் சிங். சாத்தம்பாவின் முன்னாபாய். அவர்கள் (முஸ்லிம்களை) காப்பாற்ற முயன்றார்கள். காங்கிரஸ்காரர்கள் எதிர்ப்பு தெரிவிக்க முயன்றார்கள். ஆனால் பெரும்பான்மையினர் எங்களுடன் இருந்தார்கள்.

**தெகல்கா :** பெரும்பான்மையினர் உங்களுடன் இருந்தார்கள். யாராவது போராளிகள் முன்னின்றார்களா?

**அனில் பட்டேல் :** போராளிகள் எல்லாம் செய்தார்கள். வெட்டுவது... கொல்வது.

**தந்திரங்கள்... அப்படி தந்திரங்கள் என எதுவும் இல்லை. முக்கியமானது, கடுமையாக எதிர்த்து அடிப்பது. தான் எவ்வளவு முடியுமோ அவ்வளவு முஸ்லிம்களை சேதப்படுத்துவது. எந்த வகையிலும் எரிப்பது, கொல்வது.**

**தெகல்கா :** சோலங்கி (டி.எஸ்.பி.) முழு ஆதரவு அளித்தாரா?

**அனில் பட்டேல் :** யாரோ மன்சூரி. அவர் ‘சிமி’ ஆதரவாளர்.

**தெகல்கா :** ‘சிமி’ ஒரு தீவிரவாத இயக்கம் இல்லையா?.

**அனில் பட்டேல் :** அவன் (மன்சூரி) ஒரு காய்கறி விற்பனையாளர். அவன் வெட்டிக் கொல்லப்பட்டான். இரவு எனக்கு அரவிந்தபாய் சோனியிடமிருந்து அழைப்பு வந்தது. நம் இணை அமைச்சர், அவர் நிகழ்ந்த சம்பவத்தை தெரிவித்தார். சம்பவம் நடந்த இடத்தில் அவர் இருந்தாரா என்று கேட்டேன், இல்லை, சில பஜ்ரங் தள் தம்பிகள் தான் இருந்தார்கள். அவர்களை எச்சரிக்கையாக, பாதுகாப்பான இடத்தில் இருக்கும் படி வலியுறுத்தினேன். அடுத்த நாள் காலை அரவிந்த் பாய் கைது செய்யப்பட்ட தகவல் வந்தடைந்தது. நான் பிலோடா சென்று டி.எஸ்.பி.யை அழைத்தேன். நானும் ஜெயந்திபாயும் டி.எஸ்.பி.யை அழைத்தோம். நானும் ஜெயந்திபாயும் டி.எஸ்.பி.யை சந்திக்கச் சென்றோம். அவர் அரவிந்த பாயை விடுவிப்பதாகத் தெரிவித்தார். கைது அறிக்கையில் எல்லாம் துல்லியமாக இருந்தது. ஆனால் அவர் நீதிமன்ற காவலுக்கு

மாற்றப்படுவதற்கு முன்னால் அலுவலகத்துக்கு (வி.எச்.பி.) போகச் சொன்னார்கள்.

**வி.எச்.பி. யினர் பலரும் என் மீது எப்படியும் வழக்குப் பதிவு செய்திட வேண்டும் என முனைந்தார்கள். ஆனால் சோலங்கி, அரவிந்த பாய் ப்ரம்பத், பிரவீன் தொகாடியா மற்றும் நான் கடைப்பிடித்த எச்சரிக்கைகள்தான் என்னை காப்பாற்றியது...**

**தெகல்கா** : அலுவலகத்துக்குச் செல்லவா?.

**அனில் பட்டேல் :** அவர் அலுவலகத்தில் அடுத்த ஒன்றரை மாதங்கள் தங்கியிருந்தார்.

**தெகல்கா :** முக்கியப் பங்களிப்பு, வி.எச்.பி. பஜ்ரங் தளத்துடையது.

**அனில் பட்டேல் :** நானும் சங்பரிவாரும் நிறைய செய்தோம். எதையும் கேட்காமலேயே சங் அனைத்தையும் செய்தது. பல சங் உறுப்பினர்கள் சிறை சென்றார்கள். அருகில் சதம்பா என்கிற கிராமம் உள்ளது. அதிகாரியான அவர் மீது அய்.பி.சி. 302இன்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டது. மோடாசாவில் ஒரு முஸ்லிம் பெண்மணியை கொன்றது தொடர்பாக இன்னும் அவர் மீது வழக்கு உள்ளது. அவரைப் போல் அம்ருத்பாயும் வட்ட முதன்மை அதிகாரி, அவரும் ஏராளமான காரியங்கள் செய்தார்.



**தெகல்கா :** அவருடைய பெயர் என்ன?

**அனில் பட்டேல் :** அம்ருத் பாய் பிரஜாபதி...

**தெகல்கா :** அவர் இன்னும் சிறையில் தான் இருக்கிறாரா?

**அனில் பட்டேல் :** இல்லை அவர் பிணையில் வந்து விட்டார்

**தெகல்கா :** அவர் 'சங்' அய் சேர்ந்தவரா?

**அனில் பட்டேல் :** அவர் மோடசா மாவட்ட வி.எச்.பி. தலைவர். மற்றொருவர் அசோக் பாய். அவரும் சிறைக்குச் சென்றார்.

**தெகல்கா :** அவரும் வி.எச்.பி.காரரா?

**அனில் பட்டேல் :** ஆமாம் வி.எச்.பி.தான். பலரும் என் மீது எப்படியும் வழக்குப் பதிவு செய்துவிட வேண்டும் என முனைந்தார்கள். ஆனால் சோலங்கி, அரவிந்தபாய் ப்ரம்பத், பிரவீன் தொகாடியா மற்றும் நான் கடைப்பிடித்த எச்சரிக்கைகள் (என்னை காப்பாற்றியது)... பின்பு நான் சிறையில் இருந்தவர்களை கவனித்துக் கொண்டேன். அவர்களுக்கு உணவு ஏற்பாடு செய்வது, அவர்களது வழக்குகளைப் பார்த்துக்கொள்வது.

தந்திரங்கள்... அப்படி தந்திரங்கள் என எதுவும் இல்லை. முக்கியமானது, கடுமையாக எதிர்த்து அடிப்பது. எவ்வளவு முடியுமோ அவ்வளவு முஸ்லிம்களை சேதப்படுத்துவது. எந்த வகையிலும் எரிப்பது, கொல்வது. படித்தவர்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்பது தெரிந்திருந்தது. ஆனால் கதவை உடைப்பதைக் கூட இந்து மதத்தை முன்னெடுத்துச் செல்லும் செயலாக மக்கள் கருதினார்கள்.

**தெகல்கா :** தன்சுராவில் முஸ்லிம்கள் கொல்லப்பட்டார்கள்.

**அனில் பட்டேல் :** ஆமாம். மவுல்வி கொல்லப்பட்டார்.

**தெகல்கா :** நீங்கள் தான் மொத்த மாவட்டத்தின் பொறுப்பு.

**அனில் பட்டேல் :** நான் நான்கு வட்டங்களைப் பார்த்துக் கொண்டேன். தன்சுரா, பயாத், மேக்ராஜ், மால்பூர், மோதாசா.

**தெகல்கா :** இந்த வட்டங்களில் எத்தனை முஸ்லிம்கள் கொல்லப்பட்டார்கள்?

**அனில் பட்டேல் :** முப்பதுக்கும் மேல்.

**தெகல்கா :** பலரை காணவில்லை, இல்லையா?

**அனில் பட்டேல் :** பயத்தில் பலரை காணவில்லை. மோதாசாவில் 60 லாரி ஓட்டுநர்கள் திரும்பவேயில்லை

**தெகல்கா :** லாரி ஓட்டுநர்கள்?

**அனில் பட்டேல் :** மும்பையிலிருந்து பிரவீன் தொகாடியா மாவட்ட அளவில் பார்த்துக் கொண்டார்.

**தெகல்கா :** நீங்கள் அவருடன் உரையாடினீர்களா?

**அனில் பட்டேல் :** ஆமாம்.

**தெகல்கா :** கலவரங்களின் போது...

**அனில் பட்டேல் :** நீங்கள் செய்வதில் கவனமாக இருங்கள். அவர் என்னிடம் வழக்குகளைப் பற்றியும் கூறினார். முக்கிய களப்பணியாளர்கள் சிறைக்குச் சென்று விடக்கூடாது. அது களத்தில் உள்ளவர்களின் நம்பிக்கையை சீர்குலைக்கும். அடியாட்கள் கைது செய்யப்பட்டால் பரவாயில்லை, அவர்களை பிணையில் வெளியே எடுத்திடலாம். ஆனால் நம் முக்கிய தொண்டர்கள், உறுப்பினர்கள் யாரும் மாட்டிக் கொள்ளக் கூடாது. அம்ருத் பாப்புக்கு 302 (செக்ஷன்) கிடைத்தது. மோடாசா மாவட்டத் தலைவரும் குற்றம் சாட்டப்பட்டவர். இதற்குப் பிறகு பலரும் சிறை சென்றனர்.

**படேல் :** மோதாசா கிராமத்தில் மட்டும் தான் இந்துக்களை விட முஸ்லிம்களின் கை ஓங்கியிருந்தது. அவர்கள் நம் பஜ்ரங் தளத்தை சேர்ந்தவர்களை தாக்கினார்கள். பின்பு 60–70 முஸ்லிம் கடைகள் எரிக்கப்பட்டன. ஆனால், கோத்ராவுக்குப் பிறகு நாங்கள் ஆதிக்கத்தில் திளைத்தோம்.



# குண்டு தயாரிப்பாளர்கள்

ஆஷிஸ் கேத்தன்



# திகிலூட்டும் வியாபாரிகள்

**குஜராத்தில் உள்ள வி.எச்.பி. மற்றும் பஜ்ரங்தள்ளை நீங்கள் தீவிரவாத குழுக்களிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. வெடிகுண்டுகள், ராக்கெட் லாஞ்சர்கள், துப்பாக்கிகள் என இவை அனைத்தையும் அவர்கள் மாநிலம் முழுவதும் தயாரித்து விநியோகித்தும் வந்தார்கள்.**

குஜராத்தில் 2002–இல் முஸ்லிம்களின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இனப்படுகொலையில் முக்கியப் பங்காற்றியது இரு குழுக்கள்–விஸ்வ இந்து பரிஷத் மற்றும் அவர்களது இளைஞர் அணி என அழைக்கப்படும் பஜ்ரங்தள். பல குடிமை சமூக அமைப்புகள், மனித உரிமை ஆர்வலர்கள் இவர்களின் செயல்பாடுகள் குறித்து தொடர்ந்து உரக்கப் பேசியும் – மிகச்சிலரின் மீது தான் கொலை, கலவரம் தொடர்புடைய வழக்குகள் பதிவாகியுள்ளன. பாபு பஜ்ரங்கி என்கிற பஜ்ரங் தள் வெறியர் வழக்குகளை சந்திப்பவர்களில் ஒருவர். ஆனால் ரத்தக் கறை படிந்த பல தலைவர்கள் எந்த நடவடிக்கையும் இன்றி கடந்து சென்றனர். வி.எச்.பி.யும் பஜ்ரங் தள்ளும் பா.ஜ.க.வின் நீட்சியே. அந்த சமயம் மாநிலத்திலும், மத்தியில் கூட்டணி ஆட்சியிலும் அவர்கள் தான் அதிகாரத்தில் இருந்தார்கள். வி.எச்.பி, பஜ்ரங் தள் ஆகிய அமைப்புகள் எவ்வாறு இந்தப் படுகொலைகளை நிகழ்த்தியது என்பது ‘தெகல்கா’வின் ஆய்வுகளில் புலப்பட்டது. இந்தத் திட்டங்களை முழுமையாக செயல்படுத்த அவர்களுக்கு ராணுவ தளவாடங்கள் தேவைப்பட்டன. வாள், கத்தி, திரிசூலம் என கையால் சண்டையிடும் ஆயுதங்கள் முதல் போருக்கான ஆயுதங்கள் வரை எல்லாமே தேவைப்பட்டன. பெரும் எண்ணிக்கையிலான வர்களை கொல்ல படைகள் தேவைப்பட்டன. குஜராத்தில் உள்ள வி.எச்.பி. மற்றும் பஜ்ரங் தள்ளை நீங்கள் தீவிரவாத குழுக்களிலிருந்து பிரித்துப் பார்க்க இயலாது. வெடிகுண்டுகள், ராக்கெட் லாஞ்சர்கள், துப்பாக்கிகள் என இவை அனைத்தையும் தயாரித்து, மாநிலம் முழுவதும் விநியோகித்தும் வந்தார்கள். கோத்ரா சம்பவத்திற்குப் பிறகு இந்த ஆயுதங்கள் பெருமளவில் கொலைகாரர்கள் கைகளில் கொடுக்கப்பட்டன.

எழுத்துப்படி **ஹரேஷ் பட்**

# ‘ராக்கெட் செலுத்தும் கருவி ஒன்றை நாங்கள் இங்கு தயாரித்தோம்’



**அவரது பட்டாசு தொழிற்சாலையில் எவ்வாறு வெடிகுண்டுகள் தயாரிக்கப்பட்டு, மாநிலம் முழுவதும் கடத்தப்பட்டன என்பதை விவரிக்கிறார் கோத்ரா சட்டமன்ற உறுப்பினர்.**

ஜூன் 1, 2007

**ஹரேஷ் பட் :** லத்திகளை விட்டொழியுங்கள்... அவர்களுக்கு (ஆர்.எஸ்.எஸ்.) துப்பாக்கிகள் இயக்க கற்றுக் கொடுங்கள். பஜ்ரங் தள் உறுப்பினர்களுக்கு ஆயுதப் பயிற்சியளிக்கப்படுகிறது. நான் தான் இந்த தேசத்தில் அத்தகைய பயிற்சி முகாமை நடத்திய முதல் நபர். அப்படி ஒரு பயிற்சியை குஜராத்தில் 1987இல் நடத்தினேன், ஏழு இளைஞர்களைக் கொண்டு.

**தெகல்கா :** 87 இலா?

**ஹரேஷ் பட் :** ஆமாம். 87இல் தான். (பாபர் மசூதி) இடிக்கப்பட்டது அல்லவா. அதற்கும் நான் தான் பயிற்சியளித்தேன். அதற்கு தேசம் முழுவதிலிருந்தும் 40 இளைஞர்கள் வரவழைக்கப்பட்டார்கள். சர்கேஜிலும் நான் பஜ்ரங் தள் தொண்டர்களுக்குப் பயிற்சியளித்தேன். அது பின்பு சர்ச்சையை கிளப்பியது. அந்த சர்கேஜ் பயிற்சியைப் பற்றி மக்களவையில் ராஜேஷ் பைலட் பேசினார். அது பெரிய கட்டடத்தை தகர்ப்பது தொடர்புடைய பயிற்சி.

**தெகல்கா :** நீங்கள் பாபர் மசூதியை கூறுகிறார்களா?

**ஹரேஷ் பட் :** ஆமாம். அகமதாபாத்தின் சர்கேஜில் நான் தான் இடிப்பது தொடர்புடைய பயிற்சியளித்தேன்.

**தெகல்கா :** பைலட் கூட கேள்வியெழுப்பினாரே.

**ஹரேஷ் பட் :** ஆமாம். பின்பு சி.பி.அய். விசாரனையும் இங்கு நடந்தது.

**தெகல்கா :** உங்களுக்கு எதிராகவா?

**ஹரேஷ் பட் :** என் மீது, பயிற்சியளித்த அனைவரின் மீதும்.

**தெகல்கா :** சரி.

**ஹரேஷ் பட் :** இன்றும் அந்தப் பயிற்சி தொடர்கிறது. முதலில் அந்தப் பயிற்சியை தான் அளித்தோம். ராணுவத்தில் தரப்படும் அதே பயிற்சி ஜூடோ, கராத்தே, துப்பாக்கி சுடுதல். ராணுவத்தைப் போல தடைகள் தாண்டுதல். உயரத்திலிருந்து குதிப்பது (பங்கீ). ஒரு சுவற்றிலிருந்து அடுத்ததுக்கு தாவுவது. எல்லாம் 15நாள் பயிற்சியில். சமீபத்தில் கூட ஒரு பயிற்சி முடிந்தது.

**தெகல்கா :** கோத்ரா 2002இல் நிகழ்ந்த போது இப்ப, இந்துக்கள் யாரும் ஆயுதங்கள் வைத்திருப்பதில்லை. அப்பொழுது அவர்களுக்கு எப்படி ஆயுதங்கள் கிடைத்தன?

**ஹரேஷ் பட் :** நான் சொந்தமாக துப்பாக்கி தொழிற்சாலை நடத்துகிறேன். நான் பட்டாசு தொழிலையும் நடத்துகிறேன். அங்கு தான் எல்லா வெடிகுண்டுகளும் தயாரிக்கப்பட்டன. டீசல் குண்டு, குழாய் குண்டு. எல்லாம் அங்கே தான் பின்பு அங்கிருந்து அவற்றை விநியோகித்தோம். பஞ்சாபிலிருந்து இரண்டு லாரிகளில் வாள்கள் வரவழைத்தோம். இங்கு தரீயா என்ற கிராமத்தில் தான் எல்லாம் நடந்தது. அங்கிருந்து விநியோகம் தொடங்கியது. அந்த நேரம் ஆயுதங்களின் பெரும் தேவையிருந்தது.

**தெகல்கா :** எங்கிருந்து ஆயுதங்கள் கிடைத்தன?

**ஹரேஷ் பட் :** மத்தியப்பிரதேசம், உத்திரப்பிரதேசத்திலிருந்து நாட்டுத் துப்பாக்கிகள் கிடைத்தன. துப்பாக்கிகள் வேறு பல இடங்களிலிருந்தும் கிடைத்தன. ஆனால் இங்கிருந்து தான் விநியோகித்தோம். இது பெரிய ரகசியம். இதுவரை நான் இதைப் பற்றி வெளியே பேசியதில்லை.

**தெகல்கா :** இந்துக்கள் ஆயுதங்கள் வைத்திருப்பதில்லை என்று எனக்குத் தெரியும். காய்கறி வெட்டும் கத்தியைத் தவிர.

**ஹரேஷ் பட் :** நாங்கள் விநியோகித்த ஆயுதங்களின் எண்ணிக்கையைப் பார்த்து எங்கள் ஆட்களே திகைத்துப் போனார்கள். இங்கு தயாரித்து பின்பு அதை சோதிப்போம். ஒரு குழாயை வைத்துக் கொண்டு முழுமையான ராக்கெட் செலுத்தும் கருவியை செய்தோம். அதில் 595 என்ற வெடிகுண்டை வைத்தோம். அதை இயக்கினால் 9 அங்குல கனமுடைய சுவற்றைக் கூட அது தகர்க்கும்.

**தெகல்கா :** ஹரேஷ் அண்ணா! நீங்கள் கான்பூரில் இருந்து ஆயுதங்கள் வரவழைத்ததாக கூறுகிறீர்கள். ஆனால், அங்கு ஊரடங்கு நிலவியதே.

**ஹரேஷ் பட் :** ஏன் கொண்டு வர முடியாது? எதையும் கொண்டு வரலாம்.

**நாங்கள் விநியோகித்த ஆயுதங்களின் எண்ணிக்கையைப் பார்த்து எங்கள் ஆட்களே திகைத்துப் போனார்கள். இங்கு தயாரித்து பின்பு அதை சோதித்தோம்.**

**தெகல்கா :** இல்லை, ஊரடங்கு நடைமுறையில் இருந்திருக்குமே என யோசித்தேன்.

**ஹரேஷ் பட் :** பீகாரிலிருந்து வரவழைத்தேன். மத்தியப் பிரதேசத்திலிருந்து.

**தெகல்கா :** ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் இருந்த போது அது எப்படி சாத்தியம்?

**ஹரேஷ் பட் :** பொருட்கள் வரும், எதுவும் வர முடியும்.

**தெகல்கா :** மற்ற மாநிலங்களிலிருந்து வருவதால் எல்லையை கடக்க வேண்டியது வருமே.

**ஹரேஷ் பட் :** ஆமாம். கடத்திக் கொண்டு தான் வருவார்கள். இரு முறை அல்ல, பலமுறை அது போல் வந்துள்ளது.

**தெகல்கா :** அப்படிப் பார்த்தால் அப்போது கான்பூரில் நம் அரசு இல்லை.

**ஹரேஷ் பட் :** அங்கும் இல்லை. மத்தியப்பிரதேசத்திலும் இல்லை.

**தெகல்கா :** மத்தியப் பிரதேசத்திலும் இல்லையோ?

**ஹரேஷ் பட் :** பீகார், ம.பி. உ.பி. எங்குமில்லை

**தெகல்கா :** எப்படி இத்தனை முறை வரவழைக்க முடிந்தது.

**ஹரேஷ் பட் :** இதை எல்லாம் என்னிடம் கேட்காதீர்கள்.



பிரவீன் தொகாடியாவுடன் ஹரேஷ் பட்

**தெகல்கா :** ஆனால் அவை வந்தது.

**ஹரேஷ் பட் :** அவை உறுதியாக வந்தன. நீங்கள் (வி.எச்.பி. பொருளாளர்) ரோஹீத் பாயிடம் செய்யப்பட்ட ஏற்பாடுகளை கேளுங்கள். ஏராளமான இந்துக்கள் செத்துக்கொண்டிருந்தார்கள். அப்போது என்ன செய்யப்பட்டது? இது போன்ற கேள்விகளை நீங்கள் கேட்டிருக்க வேண்டும்.

**தெகல்கா :** வாள்கள் மட்டும் தான் வந்ததா?

**ஹரேஷ் பட் :** இல்லை, அவர் உங்களிடம் எல்லாவற்றையும் கூறுவார். நாங்கள் குழாய்கள் கொண்டு லாஞ்சர்கள் செய்து சோதித்தோம். அதாவது ராக்கெட் லாஞ்சர். அதை நாங்கள் வெடிமருந்து கொண்டு நிரப்பினோம். பின்பு மூடி, ஒரு சன்னமான 595 உள்ளூர் தயாரிப்பைப் பற்ற வைத்து வெடிக்கச் செய்தோம்.

**தெகல்கா :** இவை எங்கும் பயன்படுத்தப்பட்டதா?

**ஹரேஷ் பட் :** எல்லைப் பகுதிகளில் நிறைய பயன்படுத்தியுள்ளோம், அவர்கள் அசந்து போனார்கள், எப்படி இவ்வளவையும் பல இடங்களுக்கு எடுத்துச் செல்வது,

**தெகல்கா :** அவை அகமதாபாத்தில் பயன்படுத்தப்பட்டதா?

**ஹரேஷ் பட் :** ஆமாம். அகமதாபாத்தில் ரோஹித் உங்களுக்கு கூறுவார்.

---

எழுத்துப்படி **அனில் பட்டேல்**



# ‘வெடிகுண்டு தயாரிப்பதில் நிபுணர்கள் உதவினார்கள்’

**சபர்காந்தாவில் வி.எச்.பி. உறுப்பினர்களுக்கு சொந்தமான கல் குவாரிகளில் இருந்து வெடிகுண்டுகள் கடத்தி வரப்பட்ட விதத்தை விவரிக்கிறார், வி.எச்.பி.யின் முக்கியத் தலைவர்**

ஜுன் 13, 2007

**தெகல்கா :** அகமதாபாத்தில், ஹரேஷ் பாயின் தொழிற்சாலையில் வெடிகுண்டுகள் தயாரிக்கப்பட்டன. இங்கு என்ன நடந்தது?

**படேல் :** இங்கு பல ஆழ்குழாய் கிணறு தோண்டும் நிறுவனங்கள் இருந்ததால், டயனமைட் கிடைத்தது. பின்பு எங்களிடம் சில நிபுணர்களும் இருந்தார்கள். அவர்களும் செய்து (வெடிகுண்டு) அகமதாபாத்துக்கு அனுப்பினார்கள்.

எழுத்துப்படி **தவால் ஜெயந்தி பட்டேல்**

# ‘நெருக்கமான மோதல்களில் வெடி குண்டுகள் உதவியாக இருந்தன’

**கல்குவாரிக்கு சொந்தக்காரர் தனது சொந்த வெடிகுண்டு தயாரிப்பு குறிப்புகளை நம்முடன் பகிர்ந்து கொள்கிறார். இவர் வி.எச்.பி.யின் வட்டப் பொறுப்பாளர்**

சூன் 13, 2007

**தெகல்கா :** நான் அனில் பாயுடன் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தேன். அவர் மனம் திறந்து உரையாடினார். அவர் எனக்கு டைனமைட் பற்றிச் சொன்னார். இங்கு ஒரு சுரங்கம் உள்ளதா?

**படேல் :** ஆமாம், இங்கு தான் உள்ளது.

**தெகல்கா :** இங்கு வெடிகுண்டுகள் தயாரிக்கப்பட்டவை?

**படேல் :** எல்லாம் இங்கிருந்து தான் சென்றன. எப்படியும் எங்கள் பணி இங்கு பாறைகளை தகர்ப்பதுதான்.அந்தப் பொருட்களைத் தான் பயன்படுத்தினோம்.அதை எளிதாகப் பயன் படுத்தலாம்.

**தெகல்கா :** டயனமைட்?

**பட்டேல் :** எங்களது வேலையே அதை வைத்து பாறைகளைத் தகர்ப்பது தான் என்று சொன்னேனே...

**தெகல்கா :** டைனமைட்டை வைத்தா?... இங்கு அப்போது (2002) எத்தனை குண்டுகள் தயாரிக்கப்பட்டன?.

**படேல் :** நிறைய வெடிகுண்டுகள். ஏராளமான நாட்டு வெடி குண்டுகளை இங்கு தயாரித்து அனுப்பினோம்.

**தெகல்கா :** ஆயிரம்? இரண்டாயிரம்?

**படேல் :** அவை சிறிய சந்துகளில் பயன்பட்டன. நேருக்கு நேர் மோதல்களில். ஜீஹாபூரா, காலுபூர். அது சரி பாதி இந்து பகுதிகள்.

**தெகல்கா :** வெடிகுண்டுகள் செய்யும் நிபுணர்கள் அப்போது உங்களிடத்தில் இருந்தார்களா?

**படேல் :** ஆமாம் ஆமாம். அம்ருத்பாய் படேல் என்று ஒருவர் இருந்தார்.

**தெகல்கா :** அவர் வெடிகுண்டுகளை தயாரித்தாரா?

**படேல் :** அவர் எங்களுக்கு சொல்லிக் கொடுத்தார். அவர் முன்பு சிறையில் இருந்தவர்.

**தெகல்கா :** அதை எப்படி செய்வது என்று எனக்கு கற்றுத் தருவீரூர்களா? (படேல் உடனே தனது ஆட்களை வெடிகுண்டு தயாரிக்கும் பொருட்களை எடுத்து வரும்படி குஜராத்தி மொழியில் கூறுகிறார்)





**தரை பெரும் அதிர்வுடன் பிளக்கும். அப்படி யென்றால் அது மனிதர்களை என்ன செய்யும் என்று கற்பனை செய்து பாருங்கள். இதை பாறைகளில் துளையிட பயன்படுத்துவார்கள். ஆர்.டி.எக்ஸ். கலந்த ஒரு கலவையும் உள்ளது.**

**படேல் :** பாறைகளைத் தகர்ப்போம். பின்பு அவற்றில் வெடி மருந்தை வைத்து (டயனமைட்) மீண்டும் தகர்ப்போம். தரை பெரும் அதிர்வுடன் பிளக்கும். அப்படியென்றால், அது மனிதர்களை என்ன செய்யும் என்று கற்பனை செய்து பாருங்கள். இதை பாறைகளில் துளை யிட பயன்படுத்துவார்கள். ஆர்.டி.எக்ஸ். கலந்த ஒரு கலவையும் உள்ளது.

**தெகல்கா :** ஆர்.டி.எக்ஸ். (RDX)?

**படேல் :** கலவை RDX ஒன்று உள்ளது. வெள்ளைப் பொடி போன்றது. பின்பு அதில் கம்பியை (வயர்) இணைக்க வேண்டும். பின்பு வயருடன் பேட்டரி. அதை அழுத்தி திருகினால் வெடிக்கும். அதை மொபைல் போன் பேட்டரியால் கூட வெடிக்கச் செய்யலாம். அதற்கு 20 வாட்ஸ் ஆற்றல் வேண்டும். இப்போது நாங்கள் எல்லா வற்றையும் நடைமுறைகளாக மாற்றி விட்டோம். முன்பு எல்லாம் கொளுத்தி எறிவோம். அது எல்லாவற்றையும் தகர்த்தெரியும். பெரிய பெட்டிகளில். பான் மசாலா பெட்டிகள். அதை நிரப்பி, கொளுத்தி பின்பு எறிய வேண்டும்.





# காவல் துறையின் பங்களிப்பு

ஆஷிஸ் கேத்தன்

# காக்கி உடையணிந்த ரகசிய கொலைகாரர்கள்

**ரகசிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளிப்பது முதல், முஸ்லிம்கள் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தியது வரை, கலவரக்காரர்களுக்கு பல்வேறு உதவிகளையும் செய்தது காவல் துறை!**

பாவ்நகர் மாவட்ட கோகா ரோட்டில் உள்ள மதராசாவில் 200 குழந்தைகள் தங்கியிருந்தனர். மார்ச் 2, 2002 அன்று மாலை 6 மணியளவில் ஒரு இந்து கொலைவெறி கும்பல் ரத்தம் குடிக்க உள்ளே சென்றது. அப்போதைய பாவ்நகர் எஸ்.பி. யான ராகுல் சர்மா, உடனே துப்பாக்கிச் சூடு நடத்தி கலவரக்காரர்களை விரட்டினார். கும்பல் கலைக்கப்பட்டு குழந்தைகள் காப்பாற்றப்பட்டனர். அடுத்த இரண்டு வாரங்கள் பாவ்நகரில் பல சம்பவங்களில் காவல் துறை தீவிரமாக தலையிட்டு சூழலை மீட்டெடுத்தது. மார்ச் 16 வாக்கில் பாவ்நகரில் துப்பாக்கிச் சூட்டில் மட்டும் 8 பேர் இறந்தனர்–5 இந்துக்கள், 2 முஸ்லிம்கள். தக்க நேர தலையீடுகள் கொலைகளை தவிர்த்தது. இருப்பினும் மார்ச் 16 காலை 10 மணிக்கு ராகுல் சர்மாவுக்கு உள்துறை அமைச்சர் கோர்தான் சபாடியாவிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது.

''சபாடியா கூறினார். என் பணியில் நான் சரியாக இருந்தபோதிலும் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை விகிதம் சரியில்லை; அவர் முஸ்லிம்களை விட இந்துக்கள் அதிகம் இறந்தது குறித்து வருத்தம் தெரிவித்தார். அங்கு களத்தில் உள்ள நிலைமை கும்பலின் தன்மையைப் பொறுத்து தான் நிகழ்ந்தது என்று தெரிவித்தேன்'' என சர்மா நானாவதி – ஷா கமிஷனுக்கு வாக்குமூலம் அளித்தார்.

மார்ச் 1, 2002 அன்று 10.20 மணிக்கு டி.ஜி.பி. கே. சக்கரவர்த்தி கூடுதல் படைகள் கேட்டு தனது நிலையை தெரிவித்தார் சர்மா. ''உங்களுக்கு உடனே ரிசர்வ் படைகள் அனுப்பப்படும். அது நாளை காலை வந்தடையும். ஆனால் இதற்கு மேல் எந்த உதவியும் எதிர்பார்க்காதீர்கள். மொத்த அதிகார வர்க்கமும் சமரசம் செய்துள்ளது'' என்றார் டி.ஜி.பி.

இந்த உரையாடல்கள் மொத்த இனப்படுகொலை சூழலில் காவல் துறையின் போக்கை வெட்ட வெளிச்சமாக்குகிறது. பல இடங்களில் காவல் துறையினரும் கலவரக் கும்பலுடன் இணைந்து குஜராத்தை தீயிட்டனர். கொலைவெறி கும்பல்களை உசுப்புவது, ஆயுதங்களை கொடுப்பது, அவர்களை மாவட்டங்களுக்கு அழைத்துச் செல்வது, ஏற்கனவே இந்துக்களின் தாக்குதலுக்கு ஆளான முஸ்லிம்களின் மீது துப்பாக்கிச் சூடு நடத்துவது வரை– காவல்துறை தன்னால் முடிந்த வழிகளில் எல்லாம் ஒத்திசைவு அளித்தது.

சதிகாரர்களுக்கும் கலவரக்காரர்களுக்கும் எந்த வகையில் எல்லாம் உதவி கிடைத்தன, எப்படி சட்டத்தின் பாதுகாவலர்கள், சீருடையணிந்த கலவரக்காரர்களாக உருமாறினார்கள் என்பதை ஆதாரங்களுடன் விளக்குகிறோம்.



எழுத்துப்படி **பாபு பஜ்ரங்கி**



# ‘அவர்களின் கண்களும் வாயும் மூடப்பட்டிருந்தன’

**நரோடா பாட்டியாவுக்குள் எங்களை நுழைய விடாமல் காவல் துறை தடுத்திருக்கலாம். ஆனால், அவர்கள் அப்படி செய்யவில்லை என்கிறார், பஜ்ரங்தள் வெறியர்**

செப்டம்பர் 1, 2007

குஜராத்துக்கு நரேந்திர மோடி செய்ததைப் போல, வேறு யாராலும் செய்ய முடியாது. அவரது ஆதரவு இல்லையென்றால், எங்களால் கோத்ராவை நிகழ்த்தியிருக்க முடியாது. ஏனென்றால் பலவிதத்திலும் காவல் துறை எங்கள் முன்தான் நின்றது, எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு. அவர்களின் கண்களும், வாயும் மூடப்பட்டிருந்தன. அப்போது காவல் துறை நினைத்திருந்தால் எங்களை அனுமதிக்காமல் தடுத்திருக்கலாம். அந்த குடியிருப்பு சொசைட்டிக்கு ஒரு நுழைவு வாயில் தான் இருந்தது. அங்கிருந்து பாட்டியா தொடங்கும்.எங்களை தடுப்பதாக இருந்தால் அவர்கள் 50 பேர் அங்கிருந்தார்கள். அவர்களால் அதை செய்திருக்க முடியும். காவல் துறையின் முழு ஒத்துழைப்பு எங்களுக்கிருந்தது. இது நரேந்திர அண்ணனின் அரசியல். குஜராத்தில் எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது. எங்களுக்கு இவர்களிடமிருந்து (முஸ்லிம்கள்) கொஞ்சம் விடுதலை கிடைத்தது. அவர்கள் வரம்புமீறி துணிச்சலானவர்களாக மாறி வந்தார்கள்.

முஸ்லிம்கள் தொடர்ந்து தொலைபேசியில் காவல்துறையை அழைத்தார்கள். காவல் நிலையத்துக்குச் சென்ற வண்ணமிருந்தார்கள். சலிம் என்று ஒருவன் அவர்களில் இருந்தான். அவன் நரோடா பாட்டியாவின் தாதா போன்றவன். அவன் காவல் துறை ஜீப்புக்குள் ஏறிவிட்டான். உள்ளேயே நான் தான் அவனை வெளியே தர தரவென இழுத்தேன். போலிசார் அவனை கொல்லுங்கள் என்றனர். அவன் உயிரோடிருந்தால், நமக்கு எதிராக சாட்சியம் அளிப்பான். இந்த ‘தேவிடியா மகன்’ உயிரோடிருந்தால், அவர்கள் போலிஸ் வாகனத்துக்குள் ஏறி என்னை வெளியே இழுத்துப்போட்டார்கள் என்பது போல் பேசிக் கொண்டு அலைவான்.

●●

(இறுதியில் எப்படியும் 700–800 பிணங்கள் இருந்தன) அவை எல்லாம் அகற்றப்பட்டன. இத்தனை பிணங்களும் ஓரிடத்தில் இருந்தால், அது அவருக்குப் பெரும் பிரச்சனையாகிவிடும் என்றார் காவல்துறை ஆணையர். அதனால் உடனே பிரேதங்களை அகமதபாத் நகரத்தின் பல பகுதிகளுக்கு எடுத்துச் சென்று வீசினோம். பிரேத பரிசோதனைக்காக அவை அரசு மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட போது அது இந்தப் பகுதி, இது அந்தப் பகுதி என கூறப்பட்டது.

●●

ஆகஸ்ட் 10, 2007

நள்ளிரவு 2.30 மணிக்கு காவல் துறை ஆய்வாளர் (மைசூர்வாலா) என்னை அழைத்தார். அவர் இங்கே (காவல் நிலையத்துக்கு) வந்துவிட வேண்டாம் என்றார். எனக்கு எதிராக கண்டதும் சுட உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. பாபு பஜ்ரங்கியை எங்கு பார்த்தாலும் சுட்டுத் தள்ளுங்கள். என்னை எங்காவது ஓடிவிட சொன்னார் (மைசூர்வாலா). அவரால் எனக்கு எதுவும் செய்ய இயலாது என்றார். அவர் என்னை தொலைபேசியில் அழைத்ததைக் கூட வெளியே யாரிடமும் கூறிவிட வேண்டாம் என்றார். யோசித்துப் பாருங்கள் என் குழந்தைகள் அதைக்கேட்டு என்ன நிலைக்கு ஆளாகியிருப்பார்கள்?

●●

(நான்கு மாதங்கள் கழித்து) நரேந்திர மோடி என்னிடம் சொன்னார். அவருக்கு ஏராளமான நெருக்கடியாம். ஊடகங்கள், தொலைக்காட்சியில் இது பெரும் சர்ச்சையாக இருந்தது. பாபு பஜ்ரங்கி ஒரு கொலைகாரன். லாலுகூட நாடாளுமன்றத்தில் ஏன் அவரை கைது செய்யவில்லை என்று கேள்வி எழுப்பினார். அதனால் என்னை சரண்டர் ஆகும்படி நரேந்திர மோடி கேட்டுக்கொண்டார். நான் சரி தலைவா! என்றேன். நீங்கள் சொல்வதால் என்னை ஒப்புத் தருகிறேன்.

நான் அருகில் காந்தி நகரில் சரணடைந்தேன். அது பெரிய நாடகம். எல்லாம் நாடகம். காவல் துறைக்கும் குற்றப்பிரிவுக்கும் நான் அந்த வழியாக செல்லவிருக்கிறேன் என்பது முன்பே தெரியும். அப்போதைய குற்றப் பிரிவு (துணை) ஆணையர் பி.பி. பாண்டேயும் இருந்தார். 12–13 கார்கள் வந்தன. இவர்கள் பிலோடாவிலிருந்து காந்தி நகர் வரை சாலையில் காத்துக் கிடந்தனர். சில வாகனங்கள் மீது சோதனைகள். நான் இறங்க வேண்டியதாகிவிட்டது. இதுவும் நாடகத்தின், நடிப்பின் ஒரு பகுதி தான். நான் நேரடியாக குற்றப் பிரிவு அலுவலகம் சென்றிருந்தால் ஊடகங்கள், தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் என்னை மொய்த்திருப்பார்கள். எல்லாம் நாடகம் தானே! அவர்கள் சும்மா படம் காட்டத்தான் இவை அனைத்தையும் செய்வதாகச் சொன்னார்கள்.

எழுத்துப்படி **சுரேஷ் ரிச்சர்ட்**

# ‘‘காவல் துறையினர் எப்படியும் 70–80 பேரை கொன்றிருப்பார்கள்’’

**நரோடா பாட்டியாவை சேர்ந்த குற்றவாளி தனக்கு காவல் துறை செய்த உதவியை நினைவு கூர்கிறார்**



ஆகஸ்ட் 12, 2007

காவல் துறையினர் எங்களோடு இருந்தனர். இப்ப கூட என்னால் சொல்ல இயலும். அந்த நாள் மகத்தானது. அவர்கள் எங்கள் முன் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். அவர்கள் எப்படியும் 70–80 பேரை கொன்றிருப்பார்கள். பெண்களைக் கூட அவர்கள் விட்டு வைக்கவில்லை.

••

நாங்கள் எல்லாவற்றையும் கொளுத்திவிட்டு திரும்பி வந்தோம். அப்போது தான் காவல் துறை எங்களை அழைத்தது. முஸ்லிம்கள் சாக்கடையில் மறைந்திருப்பதை அவர்கள் தான் சொன்னார்கள். நாங்கள் அங்கு சென்ற போது, எல்லாமே எரிந்திருந்ததை கண்டோம். ஆனால் 7–8 பேர் சாக்கடையில் மறைந்திருந்தனர். அதை வெளியிலிருந்து மூடினோம். அவர்களுக்குப் பின்னால் நாங்கள் சென்றிருந்தால் ஆபத்தில் சிக்கியிருப்போம். மேலே மூடியை அடைத்து பெரும் கற்களை அதன் மீது போட்டோம். தங்கள் உயிரை தற்காக்க அவர்கள் மறைந்திருந்தனர். ஆனால் உள்ளே இருந்த விஷ வாயு அவர்களை கொன்றது. கலவரம் இரவு 8.30 மணி வரை நடந்தது.

---

## நரேந்திர மோடி காவல் துறையை எங்களுக்காக பணிபுரியச் செய்தார்.

– **ராஜேந்திர வியாஸ்,** வி.எச்.பி. தலைவர்

## ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் இருந்தபோது எனக்கு பயணிக்க சிறப்பு அனுமதி இருந்தது.

– **திமந்த்பட்,** எம்.எஸ். பல்கலைக்கழக தலைமை தணிக்கையாளர்

## நீங்கள் ஜெய் சிறீராம் எனக் கூறினால், காவல் துறையினர் புரிந்து கொள்வார்கள்.

– **தவால் ஜெயந்தி பட்டேல்,** வி.எச்.பி. தலைவர்

# ‘காவல் துறையினர் அரசின் விருப்பம் போல செயல்பட்டார்கள்’

**ஆர்.பி. சிறீகுமாகு** – முன்னாள் உளவுத்துறை ஏ.டி.ஜி.பி. கலவரக்காரர்கள் கருதுவது போலவே, அரசாங்கம் அவர்கள் பக்கம் தான் இருந்தது என்பதை **ஹிரிந்தர் பவேஜா**வுடனான உரையாடலில் கூறுகிறார்

***சபர்காந்தாவிலிருந்து ஆயுதங்கள் கடத்தப்பட்டது குறித்து, நீங்கள் உளவுத் துறை ஏ.டி.ஜி.பி. யாக அறிக்கை தாக்கல் செய்தீர்களா?***

*2002இல் சில முஸ்லிம் பகுதிகளில் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. அவை வடகம் பகுதியில் இருக்கும் இரும்புப் பட்டறையில் தயாரிக்கப்பட்டவை என எங்களுக்கு தகவல் கிடைத்தது. நான் எழுத்துப்பூர்வமான என் அறிக்கையாக அகமதாபாத் காவல் துறை தலைவர் கே.ஆர். கவுஷிக்கிற்கு அனுப்பினேன். அவர்கள் சோதனை நிகழ்த்திய போது அங்கு எதுவும் கிடைக்கவில்லை. பின்பு தான் சோதனை அதிகாரிகள் தகவலை சம்பந்தப்பட்டவர்களுக்கு கசியவிட்டது தெரியவந்தது. அதனால் தான் எதுவும் கண்டறியப்படவில்லை. இந்தத் தகவலை ‘இந்துஸ்தான் டைம்ஸ்’ நாளிதழ் முதல் பக்க கட்டுரையாக வெளியிட்டது. என்னை தொடர்ந்து நச்சரித்தும் எதுவும் நிகழவில்லை. அங்கே நாட்டு வெடிகுண்டுகள் தயாரிக்கப்படுவது குறித்த அழுத்தமான சந்தேகம் நிலவியது.*

***இந்த ஆயுதங்கள் தான் கலவரங்களின் போது பயன்படுத்தப்பட்டதா?***

*அந்த தகவல்கள் பின்பு தான் வந்தது. எனக்கு எதிராக விசாரணை எதுவும் எடுக்க இயலாது என்றார் டி.ஜி.பி. ஏன் என்றால் தகவல்களைப் பரிமாறுவது, உளவுப்பிரிவின் வழக்கமான நடைமுறை.*

***சோதனை அதிகாரிகளின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா?***

*(சிரிப்பு) சோதனை அதிகாரிகளின் நடவடிக்கை எல்லாம் அரசாங்கத்தின் அரசியல் நலன் சார்ந்ததாக இருந்தது. அந்த ஆயுதங்கள் எல்லாம் முஸ்லிம்களிடம் இருந்து கைப் பற்றப்பட்டதாகத்தான் காட்டினார்கள். அப்போது தான் காவல் துறை சட்ட ஒழுங்கை நிலை நாட்டப் பாடுபடுவதாக நற்பெயர் கிட்டும். அதே நேரம், ஆகஸ்ட் 15 அன்று ஆயுதங்களைப் பறிமுதல் செய்ததற் காக டி.ஜி.பி. வன்சாராவுக்கு விருது வழங்கப்பட்டது.*



***கலவரம் நடந்த பொழுது ஆயுதங்கள், வெடிகுண்டுகள் கொண்டு வரப்பட்டது குறித்து அறிக்கை எதுவும் தாக்கல் செய்தீர்களா?***

*நானவதி – ஷா கமிஷனிடம் நான் தாக்கல் செய்த உறுதிமொழி யில் என் அறிக்கைகள் இடம் பெற்றுள்ளன. அதில் திரிசூலங்கள் விநியோகம் தொடர்பாக அறிக்கை உள்ளது. நான் ஏப்ரல் 2002இல் பொறுப்பேற்கும் பொழுது வெறித்தனங்கள் அடங்கிவிட்டது. முதல் தகவல் அறிக்கைகள் முறையாகப் பதிவு செய்யப்படவில்லை. பல குற்றங்களை ஒன்றிணைத்து விட்டார்கள். கலவரக் கும்பல்களை தலைமை தாங்கிய வி.எச்.பி. தலைவர்களின் பெயர்கள் இடம் பெறவில்லை எனப் பல அறிக்கைகளை அனுப்பினோம். இது பெரும் சர்ச்சையாக உருவெடுத்தது. இந்த அறிக்கைகள் எதன் மீதும் அரசாங்கம் தொடர் நடவடிக் கையோ, விளக்கமோ கேட்கவில்லை. இது மிகவும் முக்கியமானது.*




# குழப்பத்தின் ஊற்றுக்கண்

இதற்கு முந்தைய பகுதிகளில் எவ்வாறு வி.எச்.பி. மற்றும் பஜ்ரங்தள் தலைவர்கள் திட்டமிட்டு இந்த இனப்படுகொலையை நிகழ்த்தினார்கள் என்று பார்த்தோம். சபர்மதி ரயில் சம்பவம் நிகழ்ந்ததும் எப்படி பெரும் கொலைவெறிக்கான தயாரிப்புகள் செய்யப்பட்டன என்பதைப் பார்த்தோம். எப்படி வெவ்வேறு காவி அமைப்புகளைக் கொண்டு செயல் குழுக்கள் அமைக்கப்பட்டன, எப்படி காவல் துறை கண்களை மூடி மவுனம் காத்தது, அதுமட்டுமின்றி கலவரக்காரர்களுடன் தோள் கொடுத்து கொலைகளை செய்தது, குற்றவாளிகளை தண்டிக்காமல் எப்படி நீதித்துறையும் சாட்சிகளை மிரட்டி விலைக்கு வாங்கியது...

மொத்தப் படுகொலையும் செய்துவிட்டு, அதன் பிறகு அந்தக் கயவர்களைப் பாதுகாப்பதிலும் பா.ஜ.க. அரசு மற்றும் வி.எச்.பி., பஜ்ரங்தள் தொண்டர்கள் பெரும் பங்காற்றினர். 'ரிங் மாஸ்டர்' எப்படி கலவர பூமிக்கு சென்று வந்தார்? மொத்த எதிர்வினையும் தற்செயலாக நிகழ்ந்தவையா? ஒருங்கிணைக்கப்படாதவையா? மேடையிலிருந்து ஒரு காண இயலாத கை – எல்லா கடிவாளங்களையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்ததா?

**ஒவ்வொரு குற்றவாளியும் முதல்வர் நரேந்திர மோடியின் துணையின்றி இத்தனை பெரிய இனப்படுகொலை நிகழ்வது சாத்தியமில்லையென எடுத்துரைத்தனர்.**

அந்த மாநிலத்தை ஆண்டு கொண்டிருந்தவர், இந்த இனப்படுகொலையில் எத்தகைய பங்கு வகித்தார்? அவரது அரசாங்கம் எப்படி பல்வேறு கரங்களைக் கொண்டு உதவி புரிந்தது? காவல் துறையின் ஒத்துழைப்புக்கு மோடி தான் காரணமா? பாபு பஜ்ரங்கி, அனில் பட்டேல், ஹரேஷ் பட் போன்ற ரத்தவெறி பிடித்தவர்களுக்கு பச்சை கொடியசைத்தது மோடிதானா? கொலைகாரர்களிடமிருந்தே உண்மையை வரவழைக்க 'தெகல்கா' முயன்றது. மோடி பற்றியும் அவரது பங்களிப்பு குறித்தும் அவர்கள் கூறியது இதுவே.

எழுத்துப்படி | பாபு பஜ்ரங்கி

# ‘என்னை வெளியே கொண்டு வர நரேந்திர மோடி மூன்று முறை நீதிபதிகளை மாற்றினார்’



**பின்னாட்களில் ‘பர்சானியா’ படம் ஓடவிடாமல் நிறுத்திய இவரின் மீது எப்போதுமே மோடிக்கு இரக்கம் தான்**

ஆகஸ்ட் 10, 2007

**தெகல்கா :** பாட்டியா சம்பவம் நடந்த அன்று, மோடி உங்களுக்கு ஆதரவளித்தாரா?

**பஜ்ரங்கி :** அவர்தான் எல்லாவற்றை யும் இசைவாக்கியவர். இல்லையெனில் எங்களுக்கு இத்தனை பலம் கிடைத்திருக் காது. எங்கும் அவரது உதவிகள்தான். போலிசாருக்கு வேறு மாதிரியாக அவர் உத் தரவிட்டிருந்தால் அவர்கள் எங்களை ஓ... இருந்திருப்பார்கள். அவர்களிடம் முழு அதிகாரமிருந்தது.

**தெகல்கா :** எந்த அதிகாரம்?

**பஜ்ரங்கி :** நகரம் முழுவதும் அவர் களின் கட்டுப்பாட்டில் தான் இருந்தது. அதுதான் குஜராத் எங்குமிருந்த நிலை. (ஆனால்) அடுத்த இரண்டு நாட்கள் மோடியின் கட்டுப்பாடுதான். அடுத்து நிறைய நெருக்கடிகள். மூன்றாவது நாள் முதல் சோனியா – வோனியா எல்லாம் இங்கு வந்தார்கள்.

••

**தெகல்கா :** நரேந்திர மோடி உங் களைப் பார்க்க வந்தாரா (சிறைக்கு)?

**பஜ்ரங்கி :** அவர் என்னைப் பார்க்க வந்தால் பெரும் சர்ச்சையில் மாட்டிக் கொள்வார். அதனால்தான் அவர் பார்க்க வேண்டும் என நான் எதிர்பார்க்கவில்லை. இன்றும் எதிர்பார்க்கவில்லை.

**தெகல்கா :** தொலைபேசியிலாவது உரையாடினாரா உங்களுடன்?

**பஜ்ரங்கி :** அப்படிப் பேச வாய்த்திருக் கிறது. அப்படி வெளிப்படையாக இல்லை. பிறகு இந்த உலகமே பாட்டுப் பாடத் தொடங்கி விடும்.

**தெகல்கா :** நீங்கள் தலைமறைவாக இருந்த நேரத்தில்?

**பஜ்ரங்கி :** ம்.... நான் இரண்டு மூன்று முறை பேசியிருக்கிறேன்.

**தெகல்கா :** அவர் உங்களை ஊக்கப் படுத்தினாரா?

**பஜ்ரங்கி :** அவன் ஒரு ஆம்பளை. நரேந்திர அண்ணன் என் மீது வெடிகுண்டை கட்டிக்கொண்டு குதிக்கச் சொன்னால், நான் நொடிப் பொழுதில் அதை செய்திடுவேன். எங்கு வேண்டுமானாலும் குதித்து விடு வேன், இந்துக்களுக்காக.

**தெகல்கா :** அவர் இல்லையென்றால் குல்பர்க், நரோடா பாட்டியா எல்லாம்.

**பஜ்ரங்கி :** நிகழ்ந்திருக்காது. சிரமப் பட்டிருக்க வேண்டியிருக்கும்.

**தெகல்கா :** பாட்டியா படுகொலை நிகழ்ந்த அன்று மோடி அங்கு வந்தாரா?

**பஜ்ரங்கி :** நரேந்திர மோடி பாட்டியா வுக்கு வந்தார். அவரால் அந்த துல்லியமான சம்பவ இடங்களுக்கு வர முடியவில்லை. கறுப்புப் பூனை, கமாண்டோக்கள் எல்லாம் இருக்கானுங்களே. ஆனாலும் அவர் பாட்டி யாவுக்கு வந்து எங்கள் ஆரவாரத்தைப் பார்த்தார். அவர் வந்து நல்ல சூழலை ஏற் படுத்திக் கொடுத்தார்.

**தெகல்கா :** நீங்கள் எல்லாம் ஆசிர் வதிக்கப்பட்டவர்கள் என்று கூறினார்.

**பஜ்ரங்கி :** அவர் வந்ததே அடுத்த நாள் காரியங்கள் தடைபடாமல் நடைபெற வேண்டும் என்பதை உறுதிப்படுத்தத்தான். அவர் எல்லா பகுதிகளுக்கும் சென்றார். இந்து, முஸ்லிம் எல்லாரையும் பார்த்து உற்சாகப்படுத்தினார். நல்லது செய்தீர்கள். இன்னும் நிறைய செய்யுங்கள்.

••

**பஜ்ரங்கி :** படுகொலை நிகழ்ந்த பிறகு ஆணையில் எனக்கு எதிராக உத்தரவு களைப் பிறப்பித்தார். என்னை வீட்டை விட்டு வெளியேறச் சொன்னார்கள். நான் ஓடிவிட்டேன். மவுண்ட் அபுலில் இருக்கும் குஜராத் பவனில் என்னை நரேந்திர மோடி தங்கவைத்தார். ஏறக்குறைய 4, 5 மாதங்கள். அதன் பின்னும் நரேந்திர மோடி சொன் னதை அப்படியே செய்தேன். நரேந்திர மோடி செய்ததைப் போல வேறு யாராலும் குஜராத்துக்கு செய்ய முடியாது. நரேந்திர மோடியின் ஆதரவு இல்லையென்றால் எங் களால் பலி வாங்கியிருக்க முடியாது.

••

**பஜ்ரங்கி :** நரேந்திர மோடி என்னை சிறையிலிருந்து வெளியே எடுத்தார். அவர் தொடர்ந்து நீதிபதிகளை மாற்றிக்கொண்டே இருந்தார். நான் எப்படியும் வெளியே வர வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். இல்லை என்றால் என்னால் வந்திருக்க இய லாது. முதல் நீதிபதி டோலக்கியாஜி. அவர் பாபு பஜ்ரங்கி தூக்கிலிடப்பட வேண்டும் என்றார். ஒருமுறை அல்ல நான்கு அய்ந்து முறை என சொல்லி கோப்பை எடுத்து வீசி னார். அடுத்து வந்தவர் நான் தூக்கிலிடப்பட வேண்டும் என்று கூறி நிறுத்திக்கொண்டார். அடுத்து மூன்றாவது ஆள். அதற்குள் சிறை யில் 4, 5 மாதங்கள் ஓடிவிட்டன. அப் போது நரேந்திர மோடி விரைவில் வழி பிறக்கும் என செய்தி அனுப்பினார். அடுத்து அக்னஷ மேகதா என்ற பெயரு டைய நீதிபதி வந்தார். அவர் கோப்புகளை யும் பார்க்கவில்லை, எதையும் பார்க்க வில்லை. நேரடியாக (பிணை) அனுமதிக் கப்பட்டது என்றார். நாங்கள் விடுதலையா னோம். இதை வைத்தே கடவுள் இருக்கிறார் என நம்புகிறோம். நாங்கள் இந்துத்துவாவிற் காக உயிரைவிடத் தயாரானோம்.

**வேறு எந்த முதல்வரும் செய்ய முடியாததை மோடி செய்தார்.**

– ஹரேஷ் பட்

**ஒரு நாளைக்கு இரண்டு முறை தேநீர், உணவு வீட்டிலிருந்தே வந்துவிடும்.**

– மங்கிலால் ஜெயின்

**மோடி முதல்வராக இருந்திருக்காவிட்டால் அவர் வெடிகுண்டையும் வீசியிருப்பார்.**

– அரவிந்த் பாண்டியா

**ஆயுதங்களை எல்லாம் மிகவும் பாதுகாப்பாக நகரமெங்கும் விநியோகித்தார்கள்.**

– அனில் படேல்

**காவல் துறையினர் எங்களை வேடிக்கை பார்த்தது தவிர வேறு எதனையும் செய்யவில்லை.**

– பிரகலாத் ராஜு



குற்றவியல் அரசு வழக்கறிஞர்கள்

# பலியானவர்களும் குருடாய் போன நீதியும்

**கலவரங்களுக்கு முன்பே தற்காத்துக் கொள்ள சங்பரிவாரங்கள் ஆயத்தமாயின. அவர்கள் மிகுந்த கவனத்துடன் வழக்கறிஞர்களை தேர்வு செய்தனர்**

படுகொலைகளை திட்டமிட்டு கண்காணித்து செயல்படுத்திய அரசு, அதற்குப் பிறகும் அதே முனைப்புடன் தான் இருந்தது. கலவரங்கள் தொடங்குவதற்கு முன்பே அவர்கள் தண்டிக்கப் படவிருக்கும் இந்துக்களை வெளியே கொண்டு வருவதற்கான வழிமுறைகளை ஆராய்ந்தார்கள்.

திமந்த் பட் மற்றும் தீபக்ஷா ஆகியோர் பா.ஜ.க.வின் வடோத்ரா கிளை உறுப்பினர்கள், பட், எம்.எஸ். பல்கலைக்கழகத்தின் தலைமை கணக்கரும், ஆட்சிக்குழு உறுப்பினரும் ஆவார். அவர்கள் சபர்மதி சம்பவம் நடந்த இரவே வழக்கறிஞர்கள் கொண்ட அமர்வு உருவாக்கப்பட்டதை வெளிப்படையாக 'தெகல்கா'வுக்கு தெரிவித்தார்கள். ஏற்கனவே வி.எச்.பி.யில் கணிசமான எண்ணிக்கையில் வழக்கறிஞர்கள் இருந்தார்கள். அவர்களை தவிர்த்து தனியார் வழக்கறிஞர்கள் மற்றும் குற்றவியல் அரசு வழக்கறிஞர்கள் என அனைவரும் இணைந்து எளிதாக்கினார்கள்.

தீபக் ஷா பல வழக்கறிஞர்களை குறிப்பிட்டு கூறினார் – வடோத்ராவை சேர்ந்த ராஜேந்திர திரிவேதி, நீரஜ் ஜெயின், துஷார் வியாஸ் – அந்த தயாரிப்புக் கூட்டத்திலேயே பங்கேற்றார்கள்.

சபர்காந்தா மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்களான நரேந்திர படேல் மற்றும் மோகன் படேல் ஆர்.எஸ்.எஸ். கலவரக்காரர்களுக்கு சட்ட உதவி வழங்க அமைக்கப்பட்ட 'சங்கலன்' என்கிற அமைப்பு குறித்து 'தெகல்கா'விடம் தெரிவித்தனர். தனியார் வழக்கறிஞர்கள் பலர் வி.எச்.பி. அனுதாபிகள். அவர்கள் தான் கலவரக்காரர்கள், கொலைகாரர்களின் சார்பாக வாதாட நேரடியாக ஆஜராயினர். குற்றவியல் அரசு வழக்கறிஞர்கள் பலரும் மறைமுக உதவிகளை செய்தனர்.

குற்றவியல் அரசு வழக்கறிஞர்கள் குற்றங்களை மேலும் வலுவாக்குவதற்கு பதிலாக, அந்த வழக்குகளில் குற்றவாளிகளுக்கு உதவினர். அதனால் பல வழக்குகளில் இரு தரப்பு வழக்கறிஞர்

களும் கூட்டாக செயல்பட்டனர், ஒரே பக்கத்தில் இருந்தனர். கொலை, வன் புணர்வு, கொள்ளையின் பக்கம். இந்த சூழலில், எந்த நம்பிக்கை தான் முஸ் லிம்களுக்கு மிஞ்சியிருந்தது? காவல் துறையினர் முதலில் கொலைகாரர் களுடன் கை கோத்தனர். இப்போது வழக்கறிஞர்களும்.

நரோடா பாட்டியா தொடர்புடைய குற்றவாளிக்காக ஆஜரான அகமதாபாத் வழக்கறிஞர் சேதன் ஷா தான் இத்த கைய நடைமுறையில் முதலில் ஆஜரா னார். பின்பு அரசாங்கம் அவரை குல்பர்க் சொசைட்டி வழக்கில் அரசு வழக்கறிஞராகவே நியமித்தது. குல்பர்க் வழக்கின் முக்கிய குற்றவாளியான பிர ஹலாத் ராஜுவை 'தெகல்கா' சந்தித் தது. அவன் காரியங்களை செய்து கொண்டிருந்த பொழுதே அவனிடம் சேத்தன் ஷா எப்போது அவன் காவல் துறையிடம் சரணடைய வேண்டும் என்பதை தெரிவித்து விட்டார்.

மேஹ்சானா மாவட்டத்தில் வி.எச். பி.யின் மாநில செயலாளர் திலிப் திரி வேதி மிகப்பெரும் அரசு/தனியார் வழக் கறிஞர்களின் படையுடன் நீதிமன்ற நட வடிக்கைகளை கவனித்துக் கொள் கிறார். மேஹ்சானா வில் இரு வழக்குகள் பிரதானமானவை–விஸ்நகரில் தீப்பாதர் வாசா சம்பவம் மற்றும் சர்தார்பூரா சம்பவம் இந்த இரு சம்பவங்களும் மொத்த குடிமைச் சமூகத்தின் மனசாட் சியையே உலுக்கின. அங்கு மிகக் கொ டூரமான முறையில் மக்கள் கொன்று குவிக்கப்பட்டார்கள். அங்கு நீதிமன்றத் தில் குற்றவாளிகளின் ஜாமீன் மனுக் களை எதிர்த்து வாதாடியிருக்க வேண் டிய திரிவேதி அவர்களுக்கு ஜாமீன் கிடைக்க உதவி புரிந்தார் என குடிமைச் சமூக அமைப்புகள் குற்றம் சாட்டின. மக்கள் அமைப்புகள் குஜராத் உயர் நீதி மன்றத்திலும், உச்சநீதிமன்றத்திலும் முறையிட்டதின் பயனாக, இனி திரி வேதி கலவரம் தொடர்புடைய வழக்கு களில் ஆஜராகக் கூடாது என தீர்ப்பளிக் கப்பட்டது. சூன் 15, 2007 அன்று திரி வேதியை சந்திக்க நீதிமன்ற வளாகத் துக்கு சென்றது 'தெகல்கா'.

வி.எச்.பி.யின் மாநில செயலாளர் என்ற பதவியின் அதிகாரத்துடன் தான் குஜராத் முழுவதும் நடந்த கலவரம் தொடர்புடைய வழக்குகளை ஒருங் கிணைத்ததாக திரிவேதி தெரிவித்தார். எங்கள் பத்திரிகையாளர் அவருடைய சேம்பரில் உரையாடிக்கொண்டிருந்த போது, இருவர் உள்ளே வந்து குற்ற சாட்சிகள் இந்துக்கள் மீதான வழக்குகள் குறித்து உரையாடிச் சென்றனர். அவர் களின் வழக்கிற்கு ஒரு வழக்கறிஞர் தேவை என அவர்கள் வந்து கோரிக்கை வைத்தனர். திரிவேதி உடன் வந்தவருக் காக பல தொலைபேசி அழைப்புகளை எடுத்து வழக்கறிஞரை உறுதிசெய்ய முயன்றார். அதற்கு அடுத்து அவர்கள் இருவரும் வெளியேறினார்கள். அந்த வழக்கில் தற்காப்பாக வாதாடியவருக்கு திடீரென நோய் வந்துள்ளதாக திரிவேதி



சொன்னார். அதனால் தான் புதிய வழக் கறிஞரை நியமிக்கும் பொறுப்பு தனக்கு வந்தது என்றார். எல்லா வேலையையும் தானே செய்ய வேண்டியுள்ளது என அலுத்துக்கொண்டார்.

அரசு வழக்கறிஞர்களை ஒருங்கி ணைப்பது, தற்காப்பு வழக்கறிஞர் களுடன் உரையாடுவது, வழக்குகளை மீண்டும் விசாரணை செய்யும் காவல் துறையினருடன் விவாதிப்பது. மேஹ சானா தொடர்புடைய 74 வழக்குகளில் இரண்டில் மட்டும் தான் தண்டனை வழங்கப்பட்டது.

பல வழக்கின் விபரங்களை, பல நீதி மன்றங்களில் நடந்த விவாதத்தையும் கூறினார். பின்பு கோத்ராவுக்குப் பின் மேஹ்சானா வில் நிகழ்ந்த கொடூரமான கொலைகளை விவரித்தார். பல வழக்கு களில் உச்சநீதிமன்றம் தலையிட்டுள்ளது. இருப்பினும் குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் பிணையில் தான் உள்ள தாக மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். சந்தார்பூரா கலவர வழக்கில் எப்படி குற்ற வாளிகளுக்கு மேஹ்சானா நீதிமன்றம் பிணை அளித்தது என்பதையும் அன்று நீதிமன்றத்தில் பாதிக்கப்பட்டவர்கள் போட்ட பெரும் கூச்சலையும் நினைவு கூர்ந்தார். அடுத்த நாள் 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளிதழ், முதல் பக்கத் தலைப்புக் கட்டுரையாக இதனை வெளியிட்டது. அதில் திரிவேதி ஒரு தலைபட்சமாக செயல்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டது.

உரக்க சிரித்துக்கொண்டே திரிவேதி தன் மீது சுமத்தப்பட்டுள்ள எல்லா குற் றச்சாட்டுகளும் உண்மையாக இருந்த போதிலும் அவற்றில் எதையும் நிரூ பிக்க இயலாது என்றார். இனப்படுகொ லை களுக்குப் பின்பு எல்லா மாவட்ட தலைநகரங்களிலும் குற்றவியல் அரசு வழக்கறிஞர்கள், பரிஷத் உறுப்பினர்கள், காவல் துறை அதிகாரிகளைக் கொண்ட கூட்டங்களை நடத்தினார் திரிவேதி.

சபர்காந்தா மாவட்டத்தின் வி.எச்.பி. தலைவரான பாரத் பட் அய் 'தெகல்கா' சந்தித்தது. அரசு குற்றவியல் வழக்கறிஞ ரான அவர், குற்றம் சாட்டப்பட்டவர் களை விடுவிக்க தன்னாலான வழிகளில் உதவி வருவதாகத் தெரிவித்தார். அரசு வழக்கறிஞராக செயல்படாமல் ஒரு தரக ராக நீதிமன்றத்துக்கு வெளியே வழக்கு களை பைசல் செய்தார் அவர்.

எழுத்துப்படி **திலிப் திரிவேதி**

# ‘சில வழக்குகள் வலிமையற்றவை. கடவுளின் ஆசிர்வாதத்தால் சமாளித்தோம்’



**மூத்த வழக்கறிஞரும் வி.எச்.பி. பொதுச் செயலாளருமான இவர் கலவரங்கள் தொடர்புடைய எல்லா வழக்குகளையும் தானே ஒருங்கிணைத்ததாகவும், அதற்கு மாநிலம் முழுவதும் உள்ள வழக்கறிஞர்கள் ஆதரவு அளித்ததாகவும் கூறுகிறார்**

ஜுன் 13, 2007

**திலிப் திரிவேதி:** நான் தான் மொத்த வழக்குகளையும் ஒருங்கிணைத்தேன். அதுவும் வி.எச்.பி.யின் பொதுச் செயலாளராக இருந்து கொண்டே அனைத்தையும் – நீதிமன்றங்களிலும் அவை தொடர்புடைய எல்லா விஷயங்களையும் ஒருங்கிணைத்தேன். எல்லா வழக்கறிஞர்களும் தங்களின் மதிப்புமிகு சேவையை வழங்கியதால் தான் என்னோடு மிகவும் நெருக்கமானார்கள்.

**தெகல்கா:** அதனால் தான் அரவிந்த் பாய் பாண்டியா (நானாவதி ஷா ஆணையத்திற்கான குற்றவியல் அரசு வழக்கறிஞர்) உங்கள் பெயரை சொல்லிக்கொண்டேயிருந்தார்.

**திலிப் திரிவேதி:** கடவுளின் ஆசியால் அரவிந்த்பாய் பாண்டியாவைப் போல் பல வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். என் மீது நம்பிக்கையும் மரியாதையும் கொண்டுள்ளார்கள். இந்த விஷயத்தைப் பொறுத்தவரை, என் சொல்படியே நடந்தார்கள். இது கடவுளின் ஆசி. நான் அந்த வழக்கறிஞர்களுக்கு எதுவும் கொடுத்ததில்லை.

**தெகல்கா:** அனைவரும் அவர்களால் ஆன வழிகளில் உதவினார்கள்.

**திலிப் திரிவேதி:** இது மட்டும் இல்லை, இன்னும் பல வழிகளில் உதவியுள்ளார்கள். எப்படியும் நல்ல காரியம் செய்துள்ளோம் என்கிற மன ஆறுதல் இருக்கும். (இருவர் அலுவலகத்திற்குள் நுழைந்து கலவரம் தொடர்புடைய வழக்கு பற்றி விவாதித்தார்கள். இந்த உரையாடல் குஜராத்தி மொழியில் நடந்தது. ஒரு வழக்கறிஞரை அமர்த்த திரிவேதியின் உதவியை நாடி அவர்கள் வந்திருந்தார்கள். திரிவேதி சில வழக்கறிஞர்களை தொலைபேசியில் அழைத்து உரையாடுகிறார்)

**தெகல்கா:** இது கலவரம் தொடர்புடைய வழக்கா?

**திலிப் திரிவேதி:** ஆமாம், இது கலவரம் தொடர்புடையதுதான். அந்த வழக்கு கலோல் நீதிமன்றத்தில் நடைபெறுகிறது. அந்த வழக்கை நடத்திய வழக்கறிஞருக்கு முக்கிய அறுவை சிகிச்சை. அவர் படுத்த படுக்கையாக கிடக்கிறார்.

**தெகல்கா:** அதனால் புதிய வழக்கறிஞர் தேவைப்படுகிறதோ?

**திலிப் திரிவேதி:** வேறு வழக்கறிஞரை ஏற்பாடு செய்ய வேண்டும். எங்கு வழக்கு நடந்தால் என்ன, நீங்கள் வழக்கறிஞரை அமர்த்த யாரைப் பார்ப்பீர்கள்?

**தெகல்கா:** குற்றம் சாட்டப்பட்டவர்கள் இந்துக்களா?

**திலிப் திரிவேதி:** ஆமாம்... இந்து. அது என்னவென்றால், இதை எல்லாம் நான் தான் நிர்வகிக்க வேண்டும். வாக்குமூலங்கள், தற்காப்பு வழக்கறிஞர், குற்றவியல் அரசு வழக்கறிஞர் ஆகியோருடன் சமரசம், என எல்லாம் என் ஒருங்கிணைப்பே.

**தெகல்கா:** எத்தனை மாவட்டங்களை நிர்வகிக்கிறீர்கள்?

**திலிப் திரிவேதி:** ஒட்டுமொத்த குஜராத். இவர்கள் எல்லோருடனும் தொலைபேசியில் உரையாட வேண்டும். நாம் பேசிக்கொண்டிருந்தோமே அதைப் போல. இப்ப அவங்க போயி அவரை பார்த்திடுவாங்க.

**தெகல்கா:** அப்ப தற்காப்பு வழக்கறிஞரை பார்த்து விடுவார்கள்.

**திலிப் திரிவேதி:** ஆமாம். எல்லாம் சரியாக நடைபெறும். யாருக்கு எங்கு பிரச்சனை என்றாலும் என்னை தொலைபேசியில் கூப்பிடுவார்கள். உடனே சம்பந்தப்பட்டவர்களிடம் பேசிவிடுவேன். டி.ஜி.பி.யை சந்திப்பது, அவருக்கு கீழ் உள்ள டி.அய்.ஜி., துணை டி.அய்.ஜி. இப்படி எல்லோரிடமும் பேசுவதும் தான்.

**தெகல்கா:** இது எல்லாம் உங்கள் பொறுப்பு?

**திலிப் திரிவேதி:** ஆமாம், நாங்கள் தான் செய்வோம். செய்து விடுவோம். எந்த இடத்தில் யாருக்கு தொடர்பு இருக்கிறது என்பதை கண்டுணர வேண்டும். எல்லாம் கடவுளின் கருணை. எல்லா இடங்களிலும் சமாளித்து விட்டோம். சமயங்களில் சில வழக்குகள் வலிமை பெற்றவை. 12 வழக்குகளில் மூன்றில் மட்டும் தான் தண்டனை. அதுவும் முஸ்லிம் நீதிபதிகளால். அது இருக்கட்டும்.

●●

**திலிப் திரிவேதி:** நானாவதி – ஷா கமிஷனிலிருந்து ஏராளமான ஆதரவு இருக்கிறது. அடுத்தது நாங்கள் இந்துக்களை தற்காத்துக் கொள்ள செய்த ஏற்பாடுகள். அதற்காக, பா.ஜ.க. தனக்கான ஏற்பாடுகளை செய்துகொள்கிறது. சங், பரிஷத் அவர்களுக்கு தேவையானவற்றை ஏற்பாடு செய்து கொள்கிறார்கள். இது போன்ற வேலைப் பிரிவினை ஒத்து வராது.

**தெகல்கா:** மொத்தம் எத்தனை வழக்குகள் மேஹ்சானாவில் பதிவு செய்யப்பட்டன?

**திலிப் திரிவேதி:** மேஹ்சானாவில் மட்டும் 182 வழக்குகள், அதில் 78இல்

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப் பட்டுள்ளது. இரண்டு வழக்குகள் அதன் பின் தாக்கலானது. இந்த 80இல், 3 கிடப் பில் உள்ளது, மூன்று அல்லது நான்கு, மீதி 76 முடிந்து விட்டது.

**தெகல்கா:** இந்துக்களுக்கு ஆதர வாகவா?

**திலிப் திரிவேதி:** இரண்டு வழக்கு களில் தான் தண்டனை வழங்கப்பட்டது. மீதி 74 வழக்குகளிலும் குற்றம் சாட்டப் பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். அந்த இரண்டையும் மேல் முறையீடு செய்து அதில் ஒன்றில் விடுதலை பெற்றோம். அந்த அடுத்ததையும் இப்பொழுது உயர்நீதி மன்றத்தில் முறையீடு செய்துள்ளோம். அப் பீல் ஏற்கப்பட்டுள்ளது. அதனால் அவர் களுக்குப் பிணையும் கிடைத்துள்ளது. அந்த குற்றம் கூட தவறானது தான். சில மாவட் டங்களில் இன்னும் சிறையில் தான் உள்ளார் கள். ஆனால் 3000 இந்துக்களுக்கு மேல் கைது செய்யப்பட்டார்கள். இதில் 100–150 பேருக்கு பிணை கிடைக்கவில்லை.

**தெகல்கா:** கோத்ராவை தொடர்ந்து நடந்த கலவரங்களில் மேஹ்சானா தான் மிக வும் பாதிக்கப்பட்டது.

**திலிப் திரிவேதி:** பல இடங்களில் அது மிகவும் ஆபத்தாக உருவெடுத்தது. பீஸ் நகர், பீஜாப்பூர் வட்டம்.

**தெகல்கா:** பீஜாப்பூர்.

**திலிப் திரிவேதி:** பீஜாப்பூர். சர்தார்பூர் என்று ஒரு கிராமம் உள்ளது. அங்கு முஸ் லிம்களின் வீடுகள் கொளுத்தப்பட்டதில், 14 பேர் தண்டிக்கப்பட்டனர். மிகவும் வலிமையான ஒரு வழக்கு. அதற்கு உச்சநீதி மன்றம் தடைவிதித்துள்ளது. இப்போது நான் நிம்மதியாக இருக்கிறேன். ஏன் என்றால் அதில் அனைவருக்கும் பிணை கிடைத்து விட்டது.

**தெகல்கா:** இப்போது கவலைப்படுவ தற்கு எதுவும் இல்லை.

**திலிப் திரிவேதி:** மற்றொரு சம்பவம் பீஸ்நகரில் நடந்தது. அதை விஸ்தார் என்று அழைப்பார்கள். அங்கே ஒரு அலுவலகம் உள்ள பீஸ்நகர் வட்டத்தை தீப்தர்வாஜா என்று அழைப்பார்கள்.

**தெகல்கா:** தீப்தர்வாஜா... வா....

**திலிப் திரிவேதி :** தீப்தர்வாஜா

**தெகல்கா:** அர்விந்த்பாய் எனக்கு கூறி யிருக்கிறார். தீப்தர்வாஜா

**திலிப் திரிவேதி:** அந்த வழக்கிலும் உச்சநீதிமன்றம் தடைவிதித்துள்ளதோ.

**தெகல்கா:** அங்கு எத்தனை முஸ்லிம் கள் கொல்லப்பட்டார்கள்?

**திலிப் திரிவேதி:** அப்படி அதிகமாக எதுவும் இல்லை.

**தெகல்கா:** சொத்துகளுக்கு தான் சேதம் விளைவிக்கப்பட்டதோ?

**திலிப் திரிவேதி:** ஆமாம், அதிக சேதம் சொத்துகளுக்குதான். அங்கு நிறைய பிரேதங்கள் கிடைக்கவில்லை. அவை வெவ் வேறு இடங்களில் தான் இருந்தது. தீயிடப் பட்ட இடம் குளத்துக்கு அருகில் உள்ளது. இன்னும் இரண்டு மூன்று வழக்குகள் உள்ளன. காடி தாலுக்காவில் ஒன்று உள்ளது. மேதாக்ரஜ் என்று ஒரு கிராமம் உள்ளது. அங்கு நடந்த சம்பவமும் பெரியது. கடி நகரத்தில் நடந்த சம்பவத்தில் கூட விடுதலை கிடைத்தது. கிடைத்த ஒன்றிரண்டு தண்ட னைகள் உஜ்ஜா வட்டத்தைச் சார்ந்தது.

**தெகல்கா:** எங்கே?

**திலிப் திரிவேதி:** உஜ்ஜா. அங்கே வட்ட அலுவலகம் உள்ளதால். சொத்துக்கு தான் சேதம்.

**தெகல்கா:** அப்படியும் தண்டனை கிடைத்ததோ?

**திலிப் திரிவேதி:** ஆமாம், 32 பேருக்கு தண்டனை. அங்கு கலவரக் கும்பல் இருந்தது.

**தெகல்கா:** அந்த வழக்கில் நீங்கள் தானே அரசு தரப்பில் பிளீடர்

**திலிப் திரிவேதி:** இல்லை.

**தெகல்கா:** அந்த வழக்கில் நீங்கள் இல்லையா?

**திலிப் திரிவேதி:** நீதிபதி தண்டனை கொடுத்ததற்கு வேறு காரணங்கள் இருக் கிறது.

**தெகல்கா:** அவர் இந்து நீதிபதியா?

**திலிப் திரிவேதி:** ஆம்... அவர் இந்து நீதிபதி தான். ஆனால், அவர் தண்டனை கொடுத்தற்கு வேறு காரணம்.

**தெகல்கா:** ஏதும் உள்ளூர் அரசியலா?

**திலிப் திரிவேதி:** அரசியல் இல்லை. அவருக்கும் உயர் நீதிமன்றத்திற்கும் ஏதோ பிரச்சனை. இதை செய்வதின் மூலம் தான் சார்பற்றவர் என்பதை காட்ட அவர் முயன் றார். மொத்தத்தில் 95 பேர் குற்றம் சாட்டப் பட்டவர்கள். 62 பேர் விடுதலையானார் கள். 32 பேர் தண்டிக்கப்பட்டார்கள். இதில் அப்பீல் செய்யப்பட்டுள்ள 32 வழக்கு களிலும் சில தள்ளுபடியாகிவிடும்.

**தெகல்கா:** அவையும் விடுதலை பெற்றுவிட்டதா?

**திலிப் திரிவேதி:** இல்லை. எல்லோ ரும் வெளியே தான் இருக்கிறார்கள். ஏனென்றால் அவர்களின் தண்டனை 3 ஆண்டுகளுக்குதான். அன்றே பிணைக்கு விண்ணபித்தோம். இல்லையேல் உயர் நீதி மன்றத்திற்கு செல்ல வேண்டும். அதுவும் கிடைத்து விட்டது. எல்லாம் நடந்து கொண் டேயிருக்கும்.

**தெகல்கா:** கோத்ராவில் யார் குற்ற வியல் அரசு வழக்கறிஞர்?.

**திலிப் திரிவேதி:** பியுஷ் காந்தி. அவரும் வி.எச்.பி.யை சேர்ந்தவர்.

**தெகல்கா:** மேஹ்சானாவில் மீண்டும் வழக்குகள் விசாரிக்கப்பட்டதா?

**திலிப் திரிவேதி:** நான் சொன்னேனே இரண்டு வழக்குகள்.

**தெகல்கா:** இரண்டு வழக்குகள்.

**திலிப் திரிவேதி:** இல்லை. அவர்கள் நாங்கள் இப்படியெல்லாம் செய்துள்ளோம் என உச்ச நீதிமன்றத்திற்கு காட்ட வேண் டும். அதனால் எல்லா மாவட்டங்களிலும் ஏதாவது ஒன்று செய்யப்பட்டுள்ளது.

**தெகல்கா:** மேஹ்சானாவில் எந்த இரண்டு வழக்குகள்.

**திலிப் திரிவேதி:** கொள்ளை, எரிப்பு. ரன்திக்பூரில் தொடங்கியதிலிருந்தே வி.எச். பி., பா.ஜ.க., சங் என அனைவரும் இருந்த னர். எல்லாம் இந்து சமூகத்தைச் சேர்ந்தவர் கள். அவர்கள் எல்லோரைப் பற்றியும் நாங்கள் கவலைப்படுகிறோம். சபர்மதி சிறையில் அடைபட்ட எல்லோருக்கும் உணவு ஏற்பாடு செய்தோம். அதற்காக முழு சமையல் கூடமே நடத்தினோம்.

எழுத்துப்படி **பாரத் பட்**

# ‘நான் குற்றம் சாட்டப்பட்ட எவரிடமும் பணம் பெறவில்லை’

**இந்துக்களுக்கு எதிராக வாதிட்டாலும், அவர்களை காப்பாற்றுவதை தனது புனித கடமையாகக் கருதுகிறார் குற்றவியல் அரசு வழக்கறிஞர் பரத் பட்**



ஜூன் 17, 2007

**பட் :** பாருங்கள். தொடக்கத்தில் ஒரு சூழல் உருவாக்கப்பட்டது. அந்த சூழலைத் தான் காவல் துறையும் நீதித்துறையும் எதிர் பார்த்தது. உதவ வேண்டும் என்கிற உணர்வு இருந்ததால் தான் மனம் உகந்து உதவினார்கள். ஏனென்றால் அவர்களும் இந்துக்கள் தானே.அதைவிட அவர்கள் கூட இசைக்கு ஏற்ப ஆடுபவர்கள் தான். இசையை நிறுத்தும் போது தான் அவர்கள் தங்கள் உடல் சோர்வை உணர்ந்து ஆட்டத்தை நிறுத்துவார்கள். இந்தச் சூழலில் எந்தவித ஊழியர்களால் தான் நிற்க இயலும்.

**தெகல்கா :** முழுமையான ஈடுபாடுடைய...

**பட் :** ஈடுபாடுடைய நான், இயக்கப் பணிகளில் ஈடுபடுபவர்கள் காலப் போக்கில் தங்கள் உற்சாகத்தை இழந்து விடுகிறார்கள். நான் இரு நீதிபதிகளுக்கு புத்தகங்கள் கொடுத்தேன். ‘ஜிகாதை’ பற்றி பிரவின் அண்ணன் (தொகாடியா) எழுதியது.

**தெகல்கா :** அந்தப் புத்தகம் என்னிடம் உள்ளது.

**பட் :** அட! உங்களிடம் உள்ளதா?. பாருங்கள் அவர்களுடைய (முஸ்லிம்கள்) மதப்பற்று தீவிரமானது. நம்மை ஒப்பிடுகையில் நம்மிடம் அந்தத் தீவிரம் குறைவு.

**தெகல்கா :** இந்த மாவட்டத்தில் எத்தனை வழக்குகள் பதிவாகியுள்ளன?

**பட் :** ஆயிரத்து நானூறு வழக்குகள். மொத்த மாவட்டத்திலும்

**தெகல்கா :** மோடா சாவில்?

**பட் :** மோடாசாவில் மொத்த வழக்குகள் 1400.... அதில் 600 – 550 வழக்குகள் ஆரம்பத்திலேயே முடிவுக்கு வந்து விட்டன. மற்றவைகளை அவர்கள் மீண்டும் விசாரித்தார்கள், அவைகளை மீண்டும் விசாரணைக்கு உட்படுத்தத் தொடங்கிய போது மக்கள் நிம்மதியை இழந்தார்கள். அது கூட உச்ச நீதிமன்றம் இந்த நிலைப்பாட்டை எடுத்ததால் தான். மக்கள் பயப்படுகிறார்கள். கீழ் நீதிமன்றங்களில் உள்ள நீதிபதிகளுக்கு நெஞ்சுரம் போதாது. துணிச்சல் இல்லை.

**தெகல்கா :** அவர்கள் தொடக்கத்தில் துணிவுடன் செயல்பட்டார்களா?

**பட் :** ஆரம்பத்தில் அப்படி செயல்பட்டார்கள், தற்சமயம், மேல் நீதிமன்றங்களில் பரோடா வழக்கை மீண்டும் புதிதாக விசாரிக்க உத்தரவிட்டிருக்கிறார்கள்.

**தெகல்கா :** பெஸ்ட் பேக்கரி...

**பட் :** ஆமாம் பெஸ்ட்பேக்கரி தான். அதன்பிறகு தான் புதியவர்கள் மனம் சோர்ந்து விட்டார்கள்.

**தெகல்கா :** இருப்பினும் மக்கள் மத்தியில் ஆதரவு உள்ளது தானே...

**பட் :** நாங்கள் எங்கள் கடமையை நிறைவேற்றுவதில் உறுதியோடிருக்கிறோம், என்ன நடந்தபோதிலும். நான் முஸ்லிம்களுடன் கடுமையாக இருந்தேன். அவர்கள் தங்கள் வாக்குமூலங்களை மாற்றிக்கொண்டேயிருந்தார்கள். கூடுதல் வாக்குமூலங்கள் கொடுத்தார்கள். நான் அதற்கு சான்று தகுதி இல்லை என கூறினேன். ஆனால், இந்த கீழ் நீதிமன்ற நீதிபதிகள் இருக்கிறார்களே, அவர்களும் நிறைய தவறுகளை செய்கிறார்கள். அவர்களுக்கு அவர்களை விட மூப்பானவர்களை கண்டு பயம். இது ஒரு ஊழல் படிந்த போலிஸ்காரன், தன் மேல் அதிகாரியைப் பார்த்து பயப்படுவது போன்றது. ஏனென்றால் எஸ்.பி. யால் அவரை பணி நீக்கம் செய்ய இயலும்.

**தெகல்கா :** காவல் துறையின் மனப்பாங்கு இப்போது எப்படி இருக்கிறது?

**பட் :** காவல் துறையின் மனப்பாங்கா?

**தெகல்கா :** மீண்டும் விசாரணைக்கு உட்படுத்தப்படும் வழக்கு தொடர்பாக கேட்டேன்.

**பட் :** அவர்கள் எங்களுக்கு எதிராக செயல்பட மாட்டார்கள். இருப்பினும் வேலை பறிக்கப்படுவது குறித்த பய உணர்வு அவர்களிடம் இருக்கிறது. எங்களுக்கு அவர்கள் உதவுகிறார்கள். செவிமடுத்துக் கேட்பார்கள். எங்கள் பார்வைகளை ஒப்புக் கொள்வார்கள். இவைகளிலிருந்து கூடுதலான நிவாரணப் பணம் பெற முஸ்லிம்கள் முயல்வது அவர்களுக்குத் தெரியும். சமீபத்தில் எங்களிடமிருந்து 6.5 லட்சம் ரூபாய் பெற்று விட்டார்கள். இதை முடிவுக்கு கொண்டுவர...

**தெகல்கா :** எந்த வழக்கு?

**பட் :** ஒரு கலவர வழக்கில். செக்சன் 436

**தெகல்கா :** அது மோடாசா வில் நிகழ்ந்ததா?

**பட் :** அவன் 20 லட்சம் கேட்டான் ஆனால் அதை 10இல் பைசல் செய்தோம்.

**தெகல்கா :** அவர்கள் தண்டிக்கப்பட்டார்களா?

**பட் :** இல்லை. அதன் பிறகுதான் பணம் கொடுத்து சரிகட்டிவிட்டோமே. உங்களுக்கு கிடைக்குமா? உங்களுக்கு பிரச்சனைகள் எதுவும் வராது என்றால் நீங்கள் பணம் கொடுப்பீர்களா?

**தெகல்கா :** எந்த வகையிலும் மாட்டேன்.

**பட் :** ஆனால் பணம் கொடுத்த பிறகும் பயமாகத்தான் உள்ளது. திடீரென வழக்கில்

தண்டனை கூட வழங்கப்படலாம். அதை விட இதில் தொடர்ந்த மன அழுத்தம் தருகிற திகிலான மனநிலைக்கு ஆளாகினோம். அதைவிட நம் சமூகத்திலும் காட்டிக் கொடுக்கும் துரோகிகள் இருக்கிறார்கள். அந்த 25 குற்றம் சாட்டப்பட்டவர்களில் 3 பேர் திடீரென காட்டிக் கொடுக்கும் துரோகிகளாக மாறிவிட்டார்கள். நீங்கள் போகும் வழி சரியில்லை, நிச்சயம் தண்டனை கிடைக்கப் போகிறது என சிலர் சொன்னவுடன் அவர்கள் பின்வாங்கினார்கள்.

**தெகல்கா :** எவ்வளவு பணம் திரட்டப்பட்டது?

**பட் :** மக்கள் தாங்களாகவே முன் வந்து கொடுத்தார்கள்.

**தெகல்கா :** குற்றம் சாட்டப்பட்டவர்களா?

**பட் :** அவர்களும் கொடுத்தார்கள். இதற்கு முன் நான் எல்லா மாவட்ட வழக்குகளையும் நிர்வகித்த போது, நான் எந்த குற்றம் சாட்டப்பட்டவரிடமும் பணம் பெறவில்லை. நான் குற்றம் சாட்டப்பட்டவர்களின் கிராமங்களில் கூட்டங்கள் நடத்தினேன், அங்கிருந்த வசதி படைத்தவர்களிடம் நான் எடுத்துக் கூறினேன். காஷ்மீர், பஞ்சாப், ஹரியானா, உத்திரப்பிரதேசம் என பல மாநிலங்களில் மதராசாக்கள் தொடங்கப்பட்ட இடங்களில் வசித்த பணக்காரர்களின் சொத்து எல்லாம் நிர்மூலமாகி விட்டது. சிலர் 5,000 சிலர் 10,000 சிலர் லட்சங்கள் கூட கொடுத்தார்கள், இப்படி 5 – 7 லட்சம் வசூலானது. பட்டப் பகலில் தன் வாளால் அவன் அந்த மனிதரை துண்டு துண்டாய் வெட்டிய வழக்கு என்பதால், அவ்வளவு தொகை தேவைப்பட்டது. அய்ந்து நபர்கள் தான் செய்தார்கள். ஆனால் கவுரமான வேறு சிலரை பாதிக்கப்பட்டவர்கள் குற்றம் சாட்டினார்கள். உதாரணத்திற்கு மருந்துக் கடை முதலாளி.

**தெகல்கா :** மோடாசாவில்?

**பட் :** இல்லை பிலோடாவில்... அங்கு 4,60,000 ரூபாய் கொடுத்து முடித்தோம், அதில் 4 லட்சம் நான் மக்களிடம் வசூல் செய்த பணம்.

**தெகல்கா :** இது ஆரம்பத்தில் நடந்ததா?

**பட் :** ஆரம்பத்தில் தான்

**தெகல்கா :** மறு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட வழக்குகளில் எத்தகைய பிரச்சனைகள் எழுந்துள்ளது?

**பட் :** இப்போது மறு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட வழக்குகளில் பிரச்சனை என்னவென்றால், நம்மிடம் தியாகம் செய்யக்கூடிய வழக்கறிஞர்கள் இல்லை. அத்தகைய வழக்கறிஞர்களை அமர்த்த நிறைய பணம் செலவிடப்பட வேண்டும்.

**தெகல்கா :** நீங்கள் இந்த வழக்குகளை வாதிடுவதில்லையா. நீங்கள் குற்றவியல் அரசு வழக்கறிஞர் தானே?

**பட் :** நான் குற்றவியல் அரசு வழக்கறிஞர்தான் ஆனால் நமக்கு தற்காப்பு வழக்கறிஞர் தேவை.

**தெகல்கா :** அவர்கள் உங்களிடமிருந்து ஏதும் உதவிகள் பெற இயலாதா?

**பட் :** அவர்களுக்கு என்னிடமிருந்து எல்லா உதவிகளும் கிடைக்கிறது. எனக்கு தோன்றுவது என்னவென்றால் கண்டித்திடுவேன். நீங்கள் எல்லா கிராமத்திலிருந்தும் வருகிறீர்கள். அங்கேயே இதை முடிவுக்கு கொண்டு வரவேண்டியது தானே, இரு தரப்பு கவுரவமும் காக்கப்படும். உங்களிடம் போதுமான சொத்துகள் உள்ளன. அமைதியுடன் வாழுங்கள். நடந்தது நடந்ததாக இருக்கட்டும். பற்களும் நாக்கும் வாய்க்குள் தானே இருக்கிறது. நீங்கள் உங்கள் முன்னோர்கள் வாழ்ந்த கிராமத்தில் வாழ விரும்பினால். எப்படியும் நீங்கள் உங்கள் கிராமத்தை விட்டு வெளியேறி பாகிஸ்தான் போகப்போவதில்லை. அவன் குற்றம் செய்தவன் அவனை மன்னியுங்கள். அவன் ‘மன்னித்துக் கொள்ளுங்கள்’ என்று கூறுவான். நீங்களும் மன்னிப்பு கோருங்கள். இருவரின் கவுரவத்தையும் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.

**தெகல்கா :** சிலர் நீங்கள் கூறுவதை ஒப்புக்கொள்கிறார்களா?

**பட் :** ஆமாம் ஒப்புக்கொள்கிறார்கள்.

**தெகல்கா :** அவர்கள் சமரசம் செய்து கொள்ள பணம் கேட்பதில்லை.

**பட் :** சிலர் பணம் பெற்றுக்கொண்டு ஒப்புக்கொள்வார்கள். சிலர் தாங்களாகவே முன் வருவார்கள்.

**தெகல்கா :** இப்படி எத்தனை வழக்குகளை உடன்பாட்டிற்கு கொண்டு வந்தீர்கள்?

**பட் :** எப்படி?

**தெகல்கா :** முஸ்லிம்கள் ஒப்புக் கொண்டது போல?

**பட் :** 25 சதவிகிதமான வழக்குகளில் ஒப்புக்கொண்டார்கள்.

••

**தெகல்கா :** மற்ற வழக்குகளில் பிரச்சனை ஏதும் உள்ளதா?

**பட் :** நீதிபதிகளைப் பொறுத்தவரை அவர்கள் மிகவும் பயப்படுகிறார்கள். வாக்குமூலங்கள் இல்லாதபோது பிறகு அவர்கள் என்ன தான் செய்வார்கள்? தற்சமயம் சபர்காந்தாவில் நடத்தப்பட்ட வழக்குகள் எல்லாவற்றையும் மறுவிசாரணை செய்யத் தொடங்கிவிட்டார்கள். அந்த மாவட்டத்தில் தான் மிக அதிகமான வழக்குகள் மறு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

**தெகல்கா :** சபர்காந்தாவிலா?

**பட் :** இங்குள்ள மாவட்ட கூடுதல் செசன்ஸ் நீதிபதி ஒரு முஸ்லிம். ஹிம்மத் நகரில் உள்ள மாவட்ட நீதிபதியும் முஸ்லிம். இங்கு மூன்று இடங்கள் உள்ளன. சமீபமாக இத்தாரில் தொடங்கப்பட்ட செசன்ஸ் நீதிமன்றத்திலும் ஒரு நீதிபதி முஸ்லிம். அதனால்தான் இங்கு அதிகப்படியான வழக்குகள் மறுவிசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளன.

**தெகல்கா :** இத்தாரிலா...?

**பட் :** ஆமாம், இத்தாரில்தான் ஏராளமான வழக்குகளில் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அது பழங்குடியினர் சார்ந்த வழக்குகள். நான் அவர்களை எவ்வளவோ சமாதானப்படுத்த முயன்று வருகிறேன். நீங்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதால் தான் இதனை நான் கூறுகிறேன். அவர்கள் இங்கு வரும் போதெல்லாம், இங்கே தங்குங்கள் என்று கூறி உணவுக்கு எல்லாம் ஏற்பாடு செய்து, நாளை உங்கள் உறவினர் சிறையிலிருந்து விடுவிக்கப்படுவார் என்றெல்லாம் சொல்லி வி.எச்.பி. அலுவலகத்திலேயே தங்க வைப்பேன். ஒரு நாளைக்கு இரண்டு மூன்று பருப்பு ரொட்டியை அலுவலகத்திலிருந்து என் கணக்கில் செலவழித்துள்ளேன். நான் இருக்கிறேன், கவலைப்படாதீர்கள். இப்படித்தான் பழங்குடியினரை பலமுறை சமாதானப்படுத்தி உள்ளேன்.

**தெகல்கா :** பல சமயங்களில் அவர்கள் கோபப்பட்டு விடுவார்கள்....

**பட் :** சமயங்களில் கோபப்பட்டு கலவரமடைந்து விடுவார்கள். அந்தக் கூட்டமே அப்படித்தான். நேரம் கிடைத்தால் பத்து இருபது நிமிடங்களில் ஒரு பார்வை பார்த்திடலாம். ஆனால், இன்று இரவு நாம் கேத்ர்பிரம்மாவை ஒரு சுற்று சுற்றி வரலாம்.

**தெகல்கா :** கேத்ர்பிரம்மா....

**பட் :** ஆமாம் எனக்கு ஹிம்மத்நகரிலும் ஓர் அலுவலகம் உள்ளது. அங்கு தான் எல்லா வழக்குகளுக்கான வாக்குமூலங்களும் கிடக்கின்றன. குற்றப்பத்திரிகைகளும் அங்கு தான் இருக்கும். அதை நாம் ஒரு பார்வை பார்க்கலாம். இந்த பகுதியும் கடுமையாக பாதிப்புக்குள்ளானது. அஸ்ஸாம், நாகாலாந்து, கோஹிமாவில் உள்ள அதே பிரச்சனை. இந்துக்கள் கண்டு கொள்ளவில்லை என்றால் அனைவரையும் கிறித்துவர்களாக மாற்றி விடுவார்கள்.

●●

**பட் :** நம் ஆட்கள் 9 பேர் சிறையில் இருந்தார்கள். ஆனால், இப்போது வெளியே வந்துவிட்டார்கள். 15–20 நாட்களுக்கு ஒரு முறை 20–22 கிலோ சாப்பாடு பொருட்களை (ரேஷன்) நாங்கள் அனுப்பி வந்தோம். எங்கள் பகுதியில் நாங்கள் தீபாவளிக்கு பட்டாசு வெடிக்காத போதும், அங்கு ஒன்பது பெட்டி வெடி, இனிப்பு, உடைகள் என வாங்கி அனுப்பினோம். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும். ஒருவர் எங்களுக்கு வாகனத்தை இலவசமாக கொடுப்பார் (டீசலுடன்); அதை எடுத்துக்கொண்டு 15–20 நாட்களுக்கு ஒரு முறை சென்று தலைக்கு ஏழு பாக்கெட் வெல்லம் (ஒரு பாக்கெட் 500 கிராம்), ஒருவர் கோதுமை கொடுத்தார். இப்படி 10–15 நபர்களிடம் சென்று 22 நாட்களுக்கு ஒரு முறை வசூல் செய்தோம். வாகனங்கள் நிறைந்ததும் பகுதிகளுக்கு செல்வோம்.

**தெகல்கா :** பழங்குடியினருக்கா?

**பட் :** பழங்குடியினருக்காக. ஏனென்றால், அவர்களில் பலர் சிறையில் அடைபட்டிருந்தனர். பெண்களுக்கு எந்த ஆதாரங்களும் இல்லாததால் உணவை கூட ஏற்பாடு செய்ய முடியவில்லை.

**தெகல்கா :** நீங்கள் எத்தனை ஆண்டுகளாக குற்றவியல் அரசு வழக்கறிஞராக இருக்கிறீர்கள்?

**பட் :** நான் 2003 டிசம்பர் முதல் இந்தப் பதவியில் இருக்கிறேன். 2004லிலிருந்து கூட சொல்லலாம். நான் இங்கு வந்தபோது நாள் ஒன்றுக்கு 400 ரூபாய் கொடுத்தார்கள். நான் என் சொந்த காரில் தான் வருகிறேன். எரிவாயுவில் இயங்கும் கார். என் செலவே நாள் ஒன்றுக்கு 200 ரூபாய் ஆகிவிடும். எனக்கு மிஞ்சுவது 200 ரூபாய் மட்டுமே. இருப்பினும் பொறுப்புணர்ச்சியுடன் இந்த வேலையை செய்கிறேன். நான் இந்துக்களுக்காக உழைக்கிறேன்.

**தெகல்கா :** இந்த வழக்கில் நீங்கள் தான் குற்றவியல் அரசு வழக்கறிஞரா?

**பட் :** ஆமாம். எல்லா வழக்குகளிலும். என்னைப் பார்க்கும்போது புன்னகை செய்யக் கூடாது என இந்துக்களிடமும் கூறியுள்ளேன். ஒரு வார்த்தைகூட பேசக் கூடாது. அப்படி செய்தால் திட்டி விடுவேன் என கூறியுள்ளேன். நான் செய்து கொண்டிருப்பது எல்லாம் அவர்களுக்கானது தானே. நான் எல்லா விஷயங்களையும் தீர்வுக்கு கொண்டு செல்வேன். இரண்டு மூன்று கொலை வழக்குகளையே முடித்து வைத்திருக்கிறேன்.

**தெகல்கா :** அந்த வழக்குகளில் அவர்கள் விடுவிக்கப்பட்டார்களா?

**பட் :** ஆமாம், விடுதலை செய்யப்பட்டார்கள். முதலில் அவர்களை தடுமாறச் செய்வேன், பயத்துக்குள்ளாக்குவேன். பின்பு எனது அன்பை வெளிப்படுத்துவேன்.

●●

**தெகல்கா :** சபர்காந்தாவில் எத்தனை அரசு வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள்?

**பட் :** 6 – 7 பேர்

**தெகல்கா :** அதில் இந்துக்கள் எத்தனை பேர்?

**பட் :** எல்லோரும் எங்களுடன் தான் இருக்கிறார்கள். அவர்களை ஆளும் அரசு தான் பணியில் அமர்த்துகிறது. ஆனால் அவர்கள் பெயருக்கு தான் எங்களுடன் இருக்கிறார்கள். அவர்கள் பெரிய ஆர்வம் காட்டுவதில்லை. எப்போது பார்க்கும் போதும் வாங்க, ஏதாவது செய்யலாம் என்பார்கள்.

**தெகல்கா :** எத்தனை பேர் பணியை ஈடுபாட்டுடன் செய்கிறார்கள்?

**பட் :** ஹிரேந்திரபாய் திரிவேதி என்று ஒருவர் இருந்தார். அவர் இப்போது வருவதில்லை. ராஜினாமா செய்துவிட்டார். அவர் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்பட்டார்.

**தெகல்கா :** இந்து சமூகத்திற்காக?

**பட் :** இந்து சமூகத்திற்காகத்தான். அவர் தான் வி.எச்.பி.யின் மாவட்டத் தலைவர். நான் தலைவராக இருந்தேன். ஹிரேன்பாய் இருந்தார், வழக்கறிஞர் ஜேடிலால் இருந்தார். நான் தான் இவர்களை எல்லாம் ஒரு குழுவாக ஒருங்கிணைத்தேன்...





## அரசு வழக்கறிஞர்

# தீமையின் தோழன்

**நானாவதி – ஷா கமிஷன் முன் ஆஜரான அரசு வழக்கறிஞர் முஸ்லிம்கள் கொல்லப்படுவதை விட, முடமாக்குவதையே விரும்புகிறார்.**

கோத்ரா படுகொலையை தொடர்ந்து குஜராத்தில் நடத்தப்பட்ட வெறியாட்ட நாயகர்களின் பாதுகாவலர் முதலமைச்சர் நரேந்திர மோடிதான் என தேசம் தொடர்ந்து நம்புகிறது. இந்தப் பெயரை அவர் அடைவதற்கு அவரது நடவடிக்கைகள், அறிக்கைகள், கட்சி உறுப்பினர்களின் செயல்கள் மட்டுமே காரணம் அல்ல. மோடி அரசை தொடர்ந்து கண்காணித்து வரும் ஊடகங்கள், மனித உரிமை அமைப்புகள், அரசு சாராத உண்மை அறியும் குழுக்கள் என இந்த மொத்த நடவடிக்கைகளின் விளைவே இது. இந்தப் படுகொலையை விசாரிக்க அரசு அமைத்த நானாவதி – ஷா கமிஷன் ஆண்டுக்கணக்கில் வாக்குமூலங்களைப் பதிவு செய்து வருகிறது. ஆனால் இவ்வளவு முக்கியமான குற்றச்சாட்டில், குஜராத்தின் அரசு சார்பாக ஆஜராகும் அரவிந்த் பாண்டியா தான் மொத்த வழக்கையும் சமாளித்து வருவதாக கூறுகிறார்.

மோடியின் ஆதரவு இல்லாமல் இத்தனை பெரிய எதிர்த்தாக்குதலை முஸ்லிம்கள் மீது நடத்தியிருக்க இயலாது என்பதைச் சாதாரணமான மனிதர்களைப் போலவே, குஜராத் அரசின் சிறப்பு வழக்கறிஞரான அரவிந்த் பாண்டியாவும் நம்புகிறார். மோடி இந்த விஷயத்தில் என்ன கருதுகிறார் என்பதைப் பொறுத்தே பாண்டியாவின் நடவடிக்கைகளும் கட்டமைக்கப்பட்டுள்ளன. முன் முடிவுகளோடு தான் அவர் செயல்படுகிறார். மோடி மற்றும் அவரது அரசை கலவரத்தை வழிநடத்தி, உதவியதாக எழுந்த குற்றச்சாட்டுகளிலிருந்து காப்பாற்ற பெரும் வழக்கறிஞர்களின் படையுடன் அவர் அயராது உழைத்து வருகிறார். கலவரங்களின் போது மோடி வாய்மொழியாக, காவல் துறையினரை இந்துக்களுடன் இருங்கள் என்று கூறியதை 'தெகல்கா'விடம் தெரிவிக்கிறார் பாண்டியா.

''இந்து சார்பு அரசு ஆள்கிறபோது இந்த சம்பவம் நிகழ்கிறது. மக்கள் தயாராகி விட்டார்கள், அரசும் தயாராக உள்ளது. என்ன ஒரு மகிழ்ச்சியான ஒத்திசைவு'' என்கிறார் பாண்டியா.

சூன் 6 மற்றும் சூன் 8 ஆகிய இரு நாட்களில் எங்கள் செய்தியாளர் பாண்டியாவை சந்தித்தார். இரு சந்திப்புகளிலும் – ஆட்சியில் பா.ஜ.க. அல்லது வேறு அரசு இருந்திருந்தால், இந்த பழி வாங்குதல் நிகழ்ந்திருக்க வாய்ப்பில்லை என்று வலியுறுத்துகிறார் பாண்டியா. கோத்ரா படுகொலை நிகழ்ந்ததும் ஆத்திரமடைந்த மோடி, அகமதாபாத்தின் முஸ்லிம் குடியிருப்புப் பகுதியான ஜுஹாபூராவில் வெடிகுண்டும் வீசியிருப்பார்– ஆனால் அவர் வகித்த முதல்வர் பதவி தான் அதைத் தடுத்தது. ஒவ்வொரு ஆண்டும் முஸ்லிம்கள் கொல்லப்பட்ட

**ஒவ்வொரு நீதிபதியும் என்னை அவர்களின் சேம்பருக்கு அழைத்து, தங்களது அனுதாபத்தை வெளிப்படுத்தினர். சிறு இடைவெளி, வைத்து எந்த தேதியில் – வழக்கை எவ்வாறு தாக்கல் செய்ய வேண்டும் என்ற ஆலோசனைகளையும், வழிகாட்டுதல்களையும் வழங்கினர். ஏனென்றால் அவர்கள் அடிப்படையில் இந்துக்கள். அதனால் எல்லா வர்க்கங்களிலிருந்தும் மனிதர்கள் தங்கள் உதவிகளை வழங்கினார்கள்.**

நாளை 'வெற்றி நாளா'கக் கொண்டாட வேண்டும் என்கிறார் பாண்டியா. முஸ் லிம்களை கொல்வதை விட முடமாக்கு வதையே அவர் விரும்புகிறார். அப் போது தான் அவன் இந்துக்கள் எதையும் செய்யத் தகுதியானவர்கள் என்பதற் கான வாழும் சாட்சியாக, விளம்பரமாக இருப்பான். அவர்களது சொத்துகளை அழித்து, பொருளாதார சேதங்கள் ஏற்ப டுத்துவது கொல்லுவதைப் போல முக்கியமானது என்கிறார் பாண்டியா.

இது மட்டும் இல்லை. அரசாங்கத் தின் சார்பாக கமிஷன் முன் ஆஜரான பாண்டியா, அதே சமயம் கலவரக்காரர் களின் சார்பாகவும் பல வழக்குகளில் ஆஜரானார். பல வழக்குகளில் நீதிபதி கள் அவருக்கு அளித்த வழிகாட்டுதல், ஒத்துழைப்பு ஆகியவற்றைப் பற்றி 'தெ கல்கா'விடம் உரையாடினார்.

''ஒவ்வொரு நீதிபதியும் என்னை அவர்களின் சேம்பருக்கு அழைத்து தங் களது அனுதாபத்தை வெளிப்படுத் தினர். சிறு இடைவெளி வைத்துக் கொண்டே ஆலோசனைகளையும், வழி காட்டுதல்களையும் வழங்கினர். எந்த தேதியில் வழக்கை எவ்வாறு தாக்கல் செய்ய வேண்டும். ஏனென்றால், அவர் கள் அடிப்படையில் இந்துக்கள். அத னால் எல்லா வர்க்கங்களிலிருந்தும் மனி தர்கள் தங்கள் உதவிகளை வழங்கினார் கள். எங்கள் ஒன்றுபட்ட நோக்கம் இந்து மதம் செழித்திருக்க வேண்டும்''

இந்த வழக்குகளின் நடைமுறை யில் நீதித்துறை மட்டும் தங்கள் அனு கூலத்தை வழங்கவில்லை. நானாவதி–ஷா கமிஷனே இவர்களுடன் சமரசம் செய்து தான் இயங்கியது என்பதைத் தெரிவித் தார் பாண்டியா. நானாவதியுடன் அந்த கமிஷனை தலைமை தாங்கியிருக்கும் கே.ஜி. ஷா, ஒரு பா.ஜ.க. ஆதரவாள ராம்; அவருக்கு பணம் தான் முதன்மை யாம்! சூன் 8, 2007 அன்று அகமதாபாத் தில் பாண்டியாவின் இல்லத்தில் நடந்த உரையாடலின் ஒரு பகுதியே இங்கு தரப் பட்டுள்ளது.

---

எழுத்துப்படி **அரவிந்த் பாண்டியா**

# 'கே.ஜி.ஷா நம்முடைய ஆள்; நானாவதிக்கு பணம் தான் குறி'



**நானாவதி–ஷா கமிஷனிடத்திலிருந்து குற்றம் சாட்டப் பட்டவர்களுக்கு எந்த அச்சுறுத்தலுமில்லை என்கிறார் குஜராத் மாநில அரசு தலைமை வழக்கறிஞர் அரவிந்த் பாண்டியா**

சூன் 8, 2007

**தெகல்கா:** கலவரங்களின் போது முன்னணியில் யார் நிற்பது?

**பாண்டியா:** இவர் இருந்தார், அவர் இருந்தார் என்று குறிப்பிட்டுக் கூறுவது தவறிழைத்துவிடும். நடைமுறையில் வி.எச்.பி. மற்றும் பஜ்ரங் தளத்தை சேர்ந்த அனைவரும் களத்துக்கு சென்றனர்.

**தெகல்கா:** ஜெய்தீப் பாய் களத்துக்கு சென்றாரா?

**பாண்டியா:** ஜெய்தீப்பும் சென்றார். எந்த தலைவர்கள் சென்றார்கள், என்ன பங்கு வகித்தார்கள், யார் மீது எங்களுக்கு சந்தேகம் இருக்கிறது– இவை எல்லா விபரங்களும் கமிஷனிடத்தில் உள்ளது, எல்லா மொபைல் எண்களும் உள்ளன, யார் எங்கு சென்றார்கள் எந்த இடத்திற்கு...

**தெகல்கா:** ஆமாம், சில முரண்பாடு களும் எழுந்துள்ளன

**பாண்டியா:** அது இன்னும் நடந்து கொண்டுதான் உள்ளது. எனக்கு தெரியும் யாருடைய மொபைல்கள் இருந்தது, யார் யாரிடம் பேசினார்கள் எங்கிருந்து பேசினார்கள் என எல்லா ஆவணங்களும் என்னிடம் உள்ளன.

**தெகல்கா:** இதனால் இந்துக்களுக்கு ஏதேனும் பிரச்சனை எழ வாய்ப்புள்ளதா... ஜெய்தீபுக்கு...மற்ற...

**பாண்டியா:** அடடா... தம்பி... நான் தான் இவைகளை எதிர்த்து வாதாட வேண் டியவன்... கவலைப்படாதீர்கள்...இதைப் பற்றி கவலைப்பட வேண்டாம்... எந்தப் பிரச்சனையும் வர வாய்ப்பு இல்லை... அப் படி எந்தப் பிரச்சனை வந்தாலும் நான் அதைப் பார்த்துக் கொள்கிறேன்... நான் கடந்த மூன்று ஆண்டுகளை யாருக்காக செல விட்டுள்ளேன். என் சொந்த ரத்தத்திற்காக.

**தெகல்கா:** அந்த கமிஷனின் இறுதி அறிக்கை இந்துக்களுக்கு எதிராக போக வாய்ப்புள்ளதா?

**பாண்டியா:** இல்லை... இல்லை... அத னால் காவல் துறைக்கு சில பிரச்சனைகள் வரலாம். அவர்களுக்கு எதிராக அது எல் லாம் கூடும். பாருங்கள், நாம் தேர்வு செய் துள்ள நீதிபதிகள் காங்கிரஸ்காரர்கள்.

**தெகல்கா:** ஆமாம், நானாவதி மற்றும் ஷா...

**பாண்டியா:** அதுதான் ஒரே பிரச் சனை... எங்கள் தலைவர்கள் அவசர கதியில் சர்ச்சைக்குள் சிக்கிவிட்டார்கள். அவர்கள் நினைத்தது என்னவென்றால், நானாவதி சீக்கிய கலவரங்களில் தொடர்புடையதால் ஒரு காங்கிரஸ் நீதிபதியை நியமித்தால் சர்ச்சை எதுவும் எழாது என நினைத்தார்கள்.

**தெகல்கா:** அப்ப... நானாவதி உங்களுக்கு முற்றிலும் எதிர் நிலையில் இயங்குவரா?

**பாண்டியா:** நானாவதி மிகவும் விபர மானவர். அவருக்குப் பணம் வேண்டும். அந்த இருவரில் கே.ஜி.ஷா மிகவும் அறிவுள்ளவர் (விவேகமானவர்) அவர் நம் முடைய ஆள். அவர் நமக்கு ஆதரவானவர், நானாவதிக்கு பணம் தான் ஒரே குறி.

**தெகல்கா:** அவர் பணம் பண்ண வேண்டும் என்று நினைப்பவர்.

**பாண்டியா:** அது உள்விவகாரம்.

**தெகல்கா:** நானாவதி–ஷா கமிஷன் இந்துக்களுக்கு எதிராக செல்லக் கூடும்.

**பாண்டியா:** அவர்கள் கமிஷனை பல ஆண்டுகளாக நடத்துகிறார்கள். அவருக்கு பணம் வேண்டும். வேறு எதுவுமில்லை. அவர் ஒரு காங்கிரஸ்காரர்.

**தெகல்கா:** அப்ப ஷா?

**பாண்டியா:** இல்லை, ஷா நம்ம ஆள். நானாவதி ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி; ஷா ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி.

••

**பாண்டியா:** இந்தக் கலவர வழக்கு களுக்கான அரசின் சிறப்பு தலைமை வழக் கறிஞராக நான் அமர்த்தப்பட்டிருக்கிறேன். நான் வி.எச்.பி. யினரிடம் கூறிவிட்டேன். நீங்கள் எப்போதும் எந்த சந்தர்ப்பத்திலும் கமிஷன் முன் வர வேண்டியது இருக்காது. (நான் இரு விஷயங்களில் கவனம் செலுத்து கிறேன்) நீங்கள் என்னுடன் தொடர்பில் இருங்கள் அதுவே போதும். பா.ஜ.க.வினரை யும் என்னுடன் தொடர்பில் இருக்குமாறு கூறியுள்ளேன். நான் முகாம்கள் நடத்தும் இடத்திற்கு வந்து சந்திக்க வேண்டாம் என சங் ஆட்களிடமும் கூறியுள்ளேன். பெரிய எண்ணிக்கையில் ஆதரவாளர்களுடன் பழ கிய முகங்கள் பிரச்சனை தானே. தொலை பேசி தொடர்பு போதுமானது. உங்களுக்கு எது தேவை என்றாலும் தொலைபேசியில் என்னை கூப்பிடுங்கள். முகாம்கள் நடந்து கொண்டிருக்கும். எல்லா இடங்களுக்கும் நான் சென்றிருக்கிறேன். நான் இரு முகாம்களை நடத்தினேன். நான் அங்கு செல்வதே மக்களின் நன்மதிப்பைப் பெறு வதற்குதான். எதைச் செய்ய வேண்டும், எப்படி செய்ய வேண்டும்.

**தெகல்கா:** இல்லை அது சர்ச்சைகளை கிளப்பியிருக்கும்

**பாண்டியா:** வேலை பார்க்கும் முறை வித்தியாசமானது. நான் தான் இந்த கமிஷன் தொடர்புடைய முழு சூழலை, மன நிலையை உருவாக்கியவன். அதனால் தான் முஸ்லிம் கள் அவர்களது செயல்பாட்டாளர்களிடம் உரை நிகழ்த்தும் போதும் பல உரைகளில் இது எழுதப்பட்டுள்ளது. சிலவற்றை உளவுத் துறையினர் கூட பதிவு செய்திருக்கிறார்கள். அதாவது ஒரு இந்துவோ, இந்து தலை வரோ சம்பந்தப் பட்டிருந்தால் அது ஆபத் தாகிவிடும். ஆனால் அரவிந்த் பாண்டியா சம்பந்தப்பட்டால் அது 2000 மடங்கு ஆபத்தானது.

**தெகல்கா:** உங்களுக்கு எதிராக ஏதும் விசாரணை நடந்துள்ளதா?

**பாண்டியா:** ஒன்று, அது 'தெகல்கா' தொடர்புடையது. நான் காவல் துறை அதிகாரி ஆர்.பி. சிறீகுமாரை மிரட்டினேன். அது எப் படியோ கசிந்துவிட்டது. நாளெல்லாம் தொலைக்காட்சியில் ஓடியது. 'தெகல்கா' தான் கடைசியானது.





நரோடா பாட்டியா –
உயிர் பிழைக்க
பதுங்கிய கிணறே
சவக்குழியாய் மாறியது

# வெறுப்பின் நடனம்

**ஆஷிஷ் கேத்தன்**

# ‘முஸ்லிம்கள் வாழ தகுதியற்றவர்கள்’



**இனப்படுகொலை மிகத் துயரமானதாகவும் நரோடா பாட்டியாவில் முழுமையானதாகவும் இருந்தது. குற்றம் புரிந்தவர்கள் தண்டிக்கப்படாமல் வெட்கமின்றி திரிகிறார்கள்...**

சபர்மதி எக்ஸ்பிரஸ் ரயிலில் அவலச் சம்பவம் நடந்து சில மணி நேரம் கூட ஆகியிருக்கவில்லை. பி.ஜே.பி. மற்றும் அதன் பரிவாரங்களான விஸ்வ இந்து பரிஷத், பஜ்ரங்தள் மற்றும் ராஷ்ட்ரிய ஸ்வயம் சேவக் சங் (ஆர்.எஸ்.எஸ்.) ஆகிய அமைப்புகள் தீவிரமாக இந்திய வரலாற்றின் மிக பயங்கர இனப்படுகொலையை நிகழ்த்துவதற்கான தயாரிப்பு (ஆயத்த) பணிகளில் ஈடுபட்டன. பிப்ரவரி 28, 2002 – சபர்மதி ரயில் எரிப்பு சம்பவத்தின் அடுத்த நாள் அகமதாபாத் நகரம், கொடூரமான முறையில் பெரும் எண்ணிக்கையிலான கொலைகளைகண்டது. ஆயுதம் ஏந்திய காவிப் படை தெருக்களில் உலவியது. முஸ்லிம்களை கண்டதும் கொல்வது, கொள்ளை, எரிப்பு என தன் விருப்பம் போல் செயல்பட்டது. சுற்றுப்புறத்தில் அதிக ரத்தம் கசிந்தது நரோடாவில்தான். அது, முஸ்லிம்களும் இந்துக்களும் கலந்த மக்கள்தொகை கொண்ட அகமதாபாத் நகரத்தின் விளிம்பில் அமைந்த பகுதி.

பிப்ரவரி 28 ஆம் தேதி காலை 10 மணி முதல் நள்ளிரவு வரை மிகுந்த திட்டமிட்ட முறையில் பி.ஜே.பி., வி.எச்.பி., பஜ்ரங்தள் ஆகியோர் அமைத்த அழிவுப்படை அனைத்தையும் செய்து முடித்தது. துப்பாக்கிகள், திரிசூலங்கள், வாள்கள் என இவை ஆயுதங்களாக மாற்றம் பெற்றன – எரிவாயு சிலிண்டர்கள், செங்கற்கள் முதல் டீசல் டேங்கர்கள் வரை அனைத்தும் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டன. தீயிடுவதற்கு முன்னால் அவர்களை குத்தி, ஆழமாக வெட்டி, பாலியல் வன்முறைக்கு உட்படுத்தினார்கள்.

படுகொலை நடந்து கொண்டிருந்த காலம் முழுவதும் செல்போன்கள் ஒலித்த வண்ணமிருந்தது. அவர்களுக்குள் மரண எண்ணிக்கைகளை, தொடர்ந்த கால இடைவெளியில் பகிர்ந்து கொண்டனர். பொழுது சாயும் நேரம் நரோடா பாட்டியா மற்றும் நரோடா கிராமம் விசாலமான மரண பூமியாக உருமாற்றப்பட்டிருந்தது. சில மணி நேரத்திற்கு முன்னால் மனிதர்கள் உலவி வாழ்ந்த குடியிருப்புகள், பயங்கரமான படுகொலைகளின் சாட்சியாய் பிணங்கள் சிதறிக் கிடந்தன – கீத்துக் கீத்தாய் வெட்டப்பட்ட காய்கறிகள் போல, நிலக்கரியைப் போல எரிந்து.

நரோடா ஏதோ எளிதில் செல்ல முடியாத தொலைதூரத்து இடமல்ல. ஷாஹிபாக்கில் உள்ள அகமதாபாத் காவல் துறை தலைமையிடத்தின் காவல் துறை கட்டுப்பாட்டு அறையிலிருந்து வெறும் 5 கி.மீ. தொலைவு மட்டுமே. 10 மணி நேரம் ஆயுதப்படை ஒன்று கொலை வெறியுடன் நகரத்தை நிர்மூலமாக்கிய பொழுதும் நிர்வாகம் சற்றும் அசைவின்றி கிடந்தது. காவல் படைகளை அனுப்புதல், கொலைப்படையை கலைத்தல் என எவ்வித நடவடிக்கைகளும் நிகழவில்லை. முதல்வர் நரேந்திர மோடிதான் இந்த மொத்த இனப்படுகொலைக்குக் காரணம் என்பதில் குடிமைச் சமூகத்

திற்கு கடுகளவும் மாற்றுக் கருத்தில்லை. காவல் துறையினர் கட்சிக்காரர்களாக அங்கு உருமாறியதை, தப்பிப் பிழைத்தவர்கள் உறுதிப்படுத்துகிறார்கள். அது பெருங்கலவரம். அவர்கள் ஏராளமானவர்களாக இருந்தார்கள். அதனால் எங்கள் எதிர்த் தாக்குதல்கள் பலனற்றுப் போயின என்கிறது காவல் துறை. இதில் எங்களுக்கு எந்த கொடுக்கல் – வாங்கலும் கிடையாது என மறுக்கிறது அரசு. அய்ந்து ஆண்டுகள் கடந்தும் நரோடா பாட்டியா மற்றும் நரோடா கிராமத்தில் நடந்த படுகொலைகள் குறித்த நீதி விசாரணை இன்னும் தொடங்கவில்லை.

இந்த மொத்த வழக்குகளையும் மறு விசாரணைக்கு உட்படுத்துங்கள். இவைகளை எல்லாம் குஜராத்துக்கு வெளியே வேறு எங்கு வேண்டுமானாலும் விசாரியுங்கள் என்கிற கோரிக்கைகளுடன் தேசிய மனித உரிமை ஆணையம் மற்றும் சில தொண்டு நிறுவனங்கள், உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவின் மீது மூன்று ஆண்டுகள் கடந்தும் தீர்ப்பு வழங்கப்படவில்லை. குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் பிணையில் வெளியே சுதந்திரமாக உள்ளனர். தேர்தலில் நரேந்திர மோடி மாபெரும் வெற்றி பெற்றார். அடுத்ததுக்கான தயாரிப்பில் இருக்கிறார். பிழைத்தவர்களில் பலர் அகமதாபாத் நகரத்திற்கு வெளியே வசிப்பிடங்களை அமைத்துக் கொண்டனர்; தங்கள் வீடுகளுக்கு திரும்பியவர்கள், விளிம்புநிலை வாழ்க்கையை வாழ்கின்றனர் – இந்து சுற்றத்தாரின் பூரணமான பொருளாதாரமான சமூகப் புறக்கணிப்புடன்.

**நரோடா : அமைவு மற்றும் சமூக நிலை**

கர்நாடகா மற்றும் மகாராட்டிராவிலிருந்து குடியேறியவர்கள் பெரும் பகுதியாக வாழும் பகுதிதான் நரோடா. அகமதாபாத் நகரத்தின் மய்யத்திலிருந்து 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள நரோடா பாட்டியா மற்றும் நரோடா கிராமம், ஒரு காலத்தில் 2000 தினக்கூலி முஸ்லிம்களின் வாழ்விடமாகத் திகழ்ந்தது. நகரத்திற்கு வெளியே நெடுஞ்சாலையில் அமைந்த பகுதி இது. சாலையைக் கடந்தால் அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் கிட்டங்கி அருகில் இந்துக்கள் ஆதிக்கமாக வாழும் கோபிநாத், கங்கோத்ரி குடியிருப்பு சொசைட்டிகள். அகமதாபாத் மாநகராட்சிக்கு உட்பட்டிருக்கும் நரோடா பாட்டியா மற்றும் நாரோட கிராமம், துல்லியமான நகர்ப் புறச் சேரிகள் அங்கு அமைந்து 70 ஆண்டுகள் ஆகிவிட்டன. இவை இரண்டும் ஒரு கிலோ மீட்டருக்கு உட்பட்ட தூரத்தில் தான் அமைந்துள்ளன. நரோடா கிராமம் ஒப்பீட்டளவில் சிறிய பகுதி; நரோடா பாட்டியா குறுக்குமறுக்கான திகைப்பூட்டக்கூடிய சந்துகளாலானது. அடர்ந்த குடியிருப்புகள், கான்கிரீட் கட்டுமானங்கள், சில கட்டடங்கள் இரண்டு மாடி உயர்ந்து நிற்கிறது. முற்றிலும் முஸ்லிம் வசிப்பிடங்கள். நரோடா பாட்டியாவுக்கு எதிரே சாலையைக் கடந்தால் சாராநகர், பட்டியல் பழங்குடியினரான 'சாரா'க்கள் வாழ்கிற மிகப்பெரும் வாழ்விடம். சீர்மரபின மக்களான இவர்களின் அடிப்படை ஈடுபாடு – சூதாடுதல் மற்றும் கள்ளச்சாராய வணிகம். 'சாரா'க்கள் இந்து மதப் படிநிலையில் கீழ்த் தளத்தில் உள்ளவர்கள்.


சொந்த தேசத்தின் அகதிகள்

**குற்றம் சாட்டப்பட்டவர்கள் யார்?**

நரோடா பாட்டியா, நரோடா கிராமம் தொடர்புடைய சம்பவங்கள் இரண்டு முதல் தகவல் அறிக்கைகளில் பதிவு பெற்றுள்ளன. நரோடா கிராமத்தில் வெறும் 8 பேர் கொல்லப்பட்டதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவை நடக்கும்போது பார்த்தவர்கள், நரோடா பாட்டியாவில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை நூற்றை கடப்பதாகத் தெரிவித்தனர். யாருக்கும் துல்லியமாக நரோடாவில் அன்று எத்தனை பேர் கொல்லப்பட்டார்கள் என்று தெரியாது. யாருக்கும் –ஆனால் கொலை செய்தவர்களுக்குமா?

தொடர் தாக்குதல்களில் ஈடுபட்ட சங் படையினரைப் பார்த்து உயிர் பிழைத்த பலரும் – இந்த கொலைவெறிக் கும்பலை தலைமை தாங்கி வழிநடத்தியவர்கள் என பி.ஜே.பி. எம்.எல்.ஏ. மாயா பேன் கோடானி மற்றும் பஜ்ரங்தள் தலைவர் பாபு பஜ்ரங்கியின் பெயரை மீண்டும் மீண்டும் உச்சரித்தனர். குற்றப் பத்திரி கையை தாக்கல் செய்த காவல் துறையினர், சாட்சியங்கள் இல்லை என காரணம் கூறி கோடானியின் மீது வழக்கு பதிய மறுத்தனர். சில பி.ஜே.பி., வி.எச்.பி. தொண்டர்கள், சரஸ் இனத்தவர்கள் மற்றும் பாபு பஜ்ரங்கி மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. நரோடா பாட்டியா, நரோடா கிராமம் ஆகிய இரண்டிலும் நடந்த சம்பவங்கள் தொடர்பாக தலா 49 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. அந்த இரண்டு பட்டியல்களிலும் பல பெயர்கள் பொதுவாக இடம் பெற்றுள்ளன. அதில் பஜ்ரங்கி குறிப்பிடத்தகுந்தவர். மூன்று மாதங்கள் தலைமறைவுக்குப் பிறகு மிகப்பெரும் நாடக நிகழ்வு போல பாபு பஜ்ரங்கி கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட அய்ந்து மாதங்களில் குஜராத் உயர் நீதிமன்றம் அவருக்குப் பிணை வழங்கியது.

**பாபு பஜ்ரங்கி**

உயரம் 5' 3'', குடும்பப் பெயர் படேல் – பாபு பஜ்ரங்கி நரோடாவின்

மிகவும் அறியப்பட்ட உயர்ந்த மனிதர். 22 ஆண்டுகள் விஸ்வ இந்து பரிஷத், பஜ்ரங் தளத்தில் தன்னை பலமாக பொருத்திக் கொண்ட பாபு பஜ்ரங்கி, அந்த வட்டாரத்தின் அச்சம் தருகிற கொள்ளைக்காரர். பஜ்ரங்கியின் ஆட்சி நரோடாவில் இருந்து சாராநாகர்வரை நீண்டு கிடக்கிறது. அங்கும் இவரது செல்வாக்கில்தான் பல காரியங்கள் நடக்கின்றன. பல சாராக்கள் பஜ்ரங்கியை பெருமதிப்பு கொண்டவராகக் கருதுகிறார்கள்; கைமாறாக இவர் அவர்களது குற்றத் தன்மைகளை சிலாகிப்பார். அவர்கள் தான் இவரது 'ஆயுதங்கள்'. இவர் சொல்லுவார், 'கொன்று விடுங்கள், வேறு எதுவுமில்லை.'

நரோடாவை கடந்து செல்லும்



நெடுஞ்சாலைக்கு அருகில் உள்ள 'அஜந்தா எல்லோரா' வணிக வளாகத்தின் இரண்டாவது மாடியில் உள்ளது பாபு பஜ்ரங்கியின் அலுவலகம். அங்கிருந்துதான் அவரது தீர்ப்புகள் வழங்கப்படுகின்றன. மாதத்துக்கு ஒரு லட்சத்துக்கும் அதிகமான வருமானம் உடைய பாபு பஜ்ரங்கி தன்னை 'கட்டடம் கட்டுபவராக' வெளிப் படுத்திக் கொள்கிறார். இருப்பினும் அவரது முக்கிய பொழுது போக்கு முஸ்லிம்களையும் கிறித்துவர்களையும் தாக்குவதுதான். ''முஸ்லிம்கள் மற்றும் கிறித்துவர்களை அறவே வெறுக்கிறேன்'' எனக்கூறும் அவரது மனதுக்கு நெருக்கமான நோக்கம் – முஸ்லிம் பையன்களுடன் திருமணம் செய்து கொண்ட, உறவு கொண்ட இந்துப் பெண்களை 'மீட்டெடுங்கள்' என்பதாகும். அவரைக் காண தினமும் வருபவர்களில் பெரும் பாலானவர்கள் இத்தகைய பெண்களின் பெற்றோர். ''அவர்கள் காவல் நிலையத்தில் இது தொடர்பாக புகார் அளிக்கச் சென்றால், காவல் துறையினர் அவர்களை என்னிடம் அனுப்புவார்கள்'' எனப் பெருமிதம் கொள்ளும் பஜ்ரங்கி, ''975 – இது நான் காப்பாற்றிய இந்துப் பெண்களின் எண்ணிக்கை. சராசரியாக ஒரு முஸ்லிமை திருமணம் செய்து கொண்ட பெண், அய்ந்து பிள்ளைகளைப் பெறுகிறாள். எனவே, நான் 5000 முஸ்லிம்களை பிறப்பதற்கு முன்பே கொன்றிருக்கிறேன்'' என்கிறார்.

பஜ்ரங்கியின் புகழுக்கு வேறு காரணங்களும் இருக்கின்றன. அவர் தனி நபராக முன்னின்று அகமதாபாத்தில் 'பர்சானியா' திரைப்படம் திரையிடப் படுவதை தடுத்து நிறுத்தினார். அவர் திரையரங்க உரிமையாளர்களை வெளிப் படையாக மிரட்டியபோது அரசு அமைதி காத்தது. ''அந்தப் படம் இந்துக்களுக்கு எதிரானது'' – இதுவே அவருக்குப் போதுமான காரணம்.

முஸ்லிம்கள் மீதான வெறுப்பு மட்டும்தான் அவரது இந்துப் பற்றுக்கு காரணம், அவ்வளவுதான். ''என்னை தூக்கிலிட்டாலும் கவலைப்பட மாட்டேன். ஆனால் என்னிடம் வந்து உங்கள் கடைசி ஆசை என்னவென்று கேட்டால், முஸ்லிம் குடியிருப்புப் பகுதிகளின் மீது குண்டு வீசி பத்து பதினைந்தாயிரம் முஸ்லிம்களை கொல்வது என்பேன்.'' அவரது தனிப்பட்ட நடவடிக்கைகள் தவிர்த்து, முஸ்லிம்கள் பெரும் எண்ணிக்கையில் இங்கு இருப்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. ''தில்லியிலிருந்து கொல்வதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட வேண்டும். உயர் சாதியினர், வசதி படைத்தவர்கள் அதை செய்ய மாட்டார்கள். ஆனால் ஏழைகளும் சேரிகளில் வசிப்பவர்களும் அதை செய்வார்கள். அவர்களுக்கு நாம் ஆணையிட வேண்டும். முஸ்லிம்களின் நிலம், சொத்து, வீடுகள், அனைத்தை யும் எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். ஆனால் அது மூன்று நாட்களில் நடக்க வேண்டும்.'' இவ்வாறாக நீங்கள் முஸ்லிம்களை துடைத்தெறியலாம். பஜ்ரங்கியின் இரண்டாம் யோசனை – முஸ்லிம்களுக்கு ஒரு திருமணம்; ஒரு குழந்தை சட்டம் நடை முறைப்படுத்த வேண்டும். அதைவிட அவர்களுக்கு வாக்குரிமையை பறிப்பது நல்ல யோசனை.

**இனப்படுகொலைக்கான தயாரிப்புகள்**

சபர்மதி ரயில் எரிந்த பிப்ரவரி 27 அன்று கோத்ராவுக்கு சென்றார் பாபு பஜ்ரங்கி. சபர்மதி ரயிலில் எரிந்த சில உடல்களைப் பார்த்ததும் நரோடா பாட்டியா முஸ்லிம்களை பலி வாங்குவது என சபதம் ஏற்றதாக 'தெகல்கா'விடம் அவர் கூறினார். ''நான் அங்கே சவால் விட்டு சொன்னேன், இதைப் போல நான்கு மடங்கு பிணங்கள் பாட்டியாவில் விழ வேண்டும்'' என்று 'தெகல்கா'வுடனான முதல் சந்திப்பிலேயே, அவர் அன்று இரவே ஆயத்தப் பணிகளை தொடங்கி விட்டதை தெரிவித்தார். துப்பாக்கி வைத்திருந்த இந்துக்களிடமிருந்து 23 துப்பாக்கிகள் சேகரிக்கப்பட்டன – அப்படி தர விருப்பமற்றவர்களை அடுத்த நாள் சுட்டுக்கொன்று விடப்போவதாக மிரட்டினார். அவர்கள் இந்துக்களாக இருந்த போதிலும் முஸ்லிம்களை உயிருடன் கொளுத்த ஒரு பெட்ரோல் பம்பு உரிமையாளர் இலவசமாகவே எரிபொருள் கொடுத்தார். அவ்வாறாக நிறைய எரிபொருள் சேகரிக்கப்பட்டது.

**செய்து முடித்தல்**

அடுத்த நாள் காலை பத்து மணி அளவில் வி.எச்.பி. மற்றும் பஜ்ரங் தளத்தினர் நரோடா பாட்டியா வந்தடைந்தனர். முதல் தாக்குதல் தொடங்கியது. இருப்

பினும் முஸ்லிம்கள் கொடுத்த பலத்த எதிர்ப்பால் பின்வாங்க நேர்ந்ததாகத் தெரிவிக்கிறார், நரோடா பாட்டியாவின் முக்கிய குற்றவாளி சுரேஷ் ரிச்சர்ட். இந்த கட்டத்தில் பஜ்ரங்கியின் சாராயின ஆதரவாளர்களின் பெரும் படை காவிப் படையுடன் ஒன்றிணைந்து அடுத்த சுற்றுத் தாக்குதலை தொடுத்தது. 10.30 மணி அளவில் அவர்கள் நரோடா பாட்டியாவின் நூராணி பள்ளி வாசல் ஸ்தூபியை தகர்ப்பதில் வெற்றி கண்டனர். அதே சமயம் ஒரு டேங்கர் லாரியை பள்ளிவாசல் கட்டடத்திற்குள் செலுத்தி அதை தீயிட்டனர் என்று 'தெகல்கா'விடம் கூறியிருந்தார் சுரேஷ் ரிச்சர்ட். அந்த எரிபொருளைக் கொண்டு பல முஸ்லிம்களும் அவரது வீடுகளும் நெருப்பிடப்பட்டது.

முதல் சுற்றுத் தாக்குதல் நடந்தது. முஸ்லிம்கள் தங்கள் வீடுகளுக்குள் சென்று தங்களை தற்காத்து அவ்வாறு மதியம் 3 மணி வரை உள்ளேயே இருந்தனர். தாக்குதல் வலுவடைந்த மாலை 5 மணி முதல் 6 மணி வரை கலவரக் கும்பல் கொலைவெறியை கட்டவிழ்த்தது. பல சிறுமிகளும், பெண்களும் முதலில் பாலியல் செய்யப்பட்டு பின்னர் மண்ணெண்ணெய், பெட்ரோல் ஊற்றி தீயிடப்பட்டனர். சில முஸ்லிம்கள் தப்பித்து அருகில் இருந்த காவல் துறை ரிசர்வ் படை முகாமுக்குள் நுழைந்தனர். அந்த முகாமின் கமாண்டர் ஒரு முஸ்லிம். அவர் அடைக்கலம் கொடுக்காமல் இருந்திருந்தால் மரண எண்ணிக்கை இன்னும் கூடுதலாக இருந்திருக்கும் என்று 'தெகல்கா'விடம் பஜ்ரங்கி தெரிவித்திருந்தார்.

நரோடாவில் தாக்குதல் நடத்திய கொலைவெறி படையில் பலர், காக்கி கால்சட்டை அணிந்து நெற்றியில் காவிப் பட்டை அணிந்திருந்தனர். அருகில் இருந்த மாநில போக்குவரத்துப் பணிமனையிலிருந்து கேன்களில் டீசல், மண்ணெண்ணெய், எண்ணெய் ஆகியவற்றைப் பார்த்ததாக பலர் சாட்சியம் அளித்துள்ளனர். எதிர்ப்படுபவர்களின் மீது அதை ஊற்றினார்கள், தீயிட்டார்கள்; துணியால் செய்யப்பட்ட பந்தங்களை நனைத்து அதை நெருப்பிட்டு எட்டிய தூரம் வரை வீடுகளின் மீது எறிந்தனர். நரோடா திறந்த வெளிகொண்ட பகுதி. அதில் ஒருபுறம் நல்ல மேடாகவும் மறுபுறம் சரிவாகவும் சென்று பெரும் பள்ளம் போல் காட்சி தரும். அந்தப் பள்ளத்தில் பல முஸ்லிம்கள் பதுங்கியிருந்தனர். அங்கிருந்த கிணற்றுக்குள் எரிபொருளை ஊற்றி நெருப்பிட்டனர்.



அன்று மட்டும் நரோடா பாட்டியாவில் 97 பேர் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் உண்மையில், அந்த எண்ணிக்கை இன்னும் அதிகமானது. காணாமல் போனவர்கள், தங்கள் குடும்பத்தவர்கள் உறவினர்கள் சாகப் பார்த்தவர்கள் என இந்த நீண்ட பட்டியலை நீங்கள் கூர்ந்து பார்த்தால், எண்ணிக்கை நிச்சயம் மிகவும் அதிகமானதுதான். இறந்தவர்களின் உடல்கள் அடையாளம் காணும் நிலையில் இல்லை. ''நாங்கள் வெட்டினோம், எரித்தோம், இன்னும் நிறைய செய்தோம்'' என்கிறார் பஜ்ரங்கி. ''இந்த 'தேவடியா மகன்'களை தீயிட்டுக் கொளுத்துவதைத்தான் நாங்கள் விரும்புகிறோம். அவர்கள் இறந்த பின் தீயிட்டு அடக்கம் செய்யப்படுவதில்லை. அவர்கள் அதற்கு பயப்படுகிறார்கள் போலும். அது அவர்களுக்கு நடந்தே தீரும்.'' அங்கிருந்த பிணங்களில் ஏராளமானவற்றை பிழைத்தவர்களால் உரிமை கொள்ள இயலவில்லை. நானாவதி – ஷா கமிஷன் முன் சாட்சியமளிக்க ஏராளமானவர்கள் குழந்தைகள் உயிருடன் எரிக்கப்பட்டதை, பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட காட்சிகளை அப்படியே விவரித்தனர். ''நாங்கள் எவரையும் விட்டு வைக்கவில்லை'' என்கிறார் பஜ்ரங்கி. ''அவர்களை இனவிருத்தி செய்ய அனுமதிக்கக் கூடாது. யாராக இருந்தாலும் குழந்தைகள், பெண்கள், எதுவும் செய்ய வேண்டாம்; அப்படியே துண்டு துண்டாக வெட்டுங்கள், அடியுங்கள், 'தேவடியா மகன்'களை தீயிடுங்கள்.''

அன்றைய தினத்தில் கவுசர் பானு ஒன்பது மாத கர்ப்பிணியாக இருந்தார். அவர் அடி வயிற்றை வெட்டி கர்ப்பப் பையிலிருந்த சிசுவை வெளியே உருவி, வாளால் குழந்தையை குத்தி உயரே தூக்கி நடந்தார்கள். பின்பு அப்படியே தரையில் ஓங்கி அடித்தார்கள். அப்படியே தீயில் சிசுவை எறிந்தார்கள். ''அந்த கர்ப்பிணியை தான் எப்படி வகுந்து துண்டாடினேன்'' என நினைவு கூர்ந்து விவரிக்கிறார் பஜ்ரங்கி. ''அந்த அலிகளுக்கு சீற்றம் என்றால் என்னவென்று உணர்த்த வேண்டும்'' – ''நீங்கள் தொல்லை கொடுத்தால், எங்களுக்கு பதில் கொடுக்கத் தெரியும், பருப்பு – சோறு சாப்பிடுபவர்கள் அல்ல இனி...''

இரக்கமற்ற கொடுஞ்செயல்களின் அளவு கூடிக்கொண்டே சென்றது. அது அங்கிருந்தவர்கள் அனைவரையும் எங்காவது ஓடிவிட வைத்தது. எல்லா வீடுகளும் கொள்ளை அடிக்கப்பட்டு, பல நெருப்பிடப்பட்டன. பிழைத்தவர்களில் பலரை மருத்துவமனைகளில் அனுமதித்தும் எராளமானவர்கள் தங்கள் குடும்பத்தினருடன் ஒன்றிணைய ஒரு வாரம் முதல் 10 நாட்களுக்கு மேல் ஆனது. பல பெண்களுக்கு தங்கள் உடல்களை மூடிக்கொள்ள ஒட்டுத் துணியின்றி நிர்வாணமாக நிவாரண முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். சுரேஷ்

ரிச்சர்ட் 'தெகல்கா'விடம் நிறைய பாலியல் வன்முறைகள் நடந்ததாகவும் அதில் தானும் ஒன்றி சம்பந்தப்பட்டதாகவும் தெரிவித்தார்.

**தெகல்கா :** சரஸ்கள் பலாத்காரத்தில் ஈடுபட்டார்கள் என்று கூறப்படுகிறது.

**ரிச்சர்ட் :** இங்க பாருங்க, ஒரு விஷயம் உண்மை. ஆயிரக்கணக்கான ஆண்கள் பசியாய் இருக்கும்போது ஏதாவது பழத்தை தின்பதில்லையா? எப்படியும் அந்தப் பழங்களைப் பிழிந்து எறியத் தான் போகிறோம். இங்க பாருங்க நான் பொய் சொல்லவில்லை. அம்மன் என் முன்னே இருக்கிறாள் (சாமி படத்தை நோக்கி கை நீட்டுகிறார்) எப்படியும் பல முஸ்லிம் பெண்கள் கொன்று எரிக்கப் பட்டார்கள், சிலர் பழங்களை நோக்கிச் சென்றிருக்கலாம்.

**தெகல்கா :** சில பாலியல் வன்முறைகள் நிகழ்ந்திருக்கலாம்.

**ரிச்சர்ட் :** இல்லை. நிறையவே நடந்திருக்கும். அட! அங்கே நம் சகோதரர்கள் இருந்தார்கள். இந்து சகோதரர்கள், ஆர்.எஸ்.எஸ்., வி.எச்.பி. சகோதரர்கள்... அவர்கள் ஈர்க்கப்பட்டிருப்பார்கள் இல்லையா? பழங்கள் கைவசம் இருந்தால், யாருக்குதான் ஆசை வராது. அவர்களை எவ்வளவு துன்புறுத்தினாலும் அது போதாது. எவளையும் விட்டு விடக் கூடாது. இங்க பாருங்க எம் பொண்டாட்டி உட்கார்ந்திருக்கா அவள் முன்னால் சொல்கிறேன். பழங்கள் இருந்ததால் எடுத்து சுவைத்தேன்... சாப்பிட்டேன்... நானும் சாப்பிட்டேன்... நான் ஒரு பழத்தை சாப்பிட்டேன்.

**தெகல்கா :** ஒன்றை மட்டுமா?

**ரிச்சர்ட் :** ஒரு முறைதான். பிறகு கொன்று குவிக்க செல்ல வேண்டியதிருந்தது (ராத்தோட் பக்கம் திரும்பி பாலியல் வல்லுறவு செய்து கொன்ற பெண்ணைப் பற்றிப் பேசுகிறார்) அட! வந்த பழைய பொருட்கள் வியாபாரியின் மகள். நசீமா... நசீமா எத்தனை மிருதுவானவள். கனிந்தவள். அவள் மீது நான் ஏறினேன்.

**தெகல்கா :** அவள் மீதா?

**ரிச்சர்ட் :** மிகச் சரியாக...

**தெகல்கா :** அவள் பிழைத்தாளா?

**ரிச்சர்ட் :** இல்லை. அவளை பாடம் செய்து, ஊறுகாயாக மாற்றினேன்...

பலியான மற்றொரு பெண்மணி, 22 வயது சுபியா பானு. சுபியாவை அவரது தந்தையின் முன்பாகவே பாலியல் வன்முறை செய்து தீயிலிட்டார்கள். அவரை அரசு மருத்துவமனையில் அனுமதித்தும் பலனின்றி இறந்ததால், அவரது தகப்பனார் நானாவதி – ஷா கமிஷன் முன்பு சாட்சியம் அளித்தார். மகளை காப்பாற்ற முயன்ற அவரை மூர்க்கமாகத் தாக்கி அவரது தாடியை வெட்டி எறிந்தார்கள். சுபியா பானுவை தவிர்த்து அவரது குடும்பத்தினர் ஆறு பேர் கொல்லப்பட்டனர் – பையன்கள் மூன்று – மெஹ்மூத், அயூப் மற்றும் உசைன்; மற்றும் சிறு பெண்கள் – அப்ரீன் பானு, ஷஹின் பானு மற்றும் அவரது தாய் லாலி பீவி. 22 வயதுடைய சுபியா அவரது குடும்பத்தில் மூத்தவர்; ஏழு வயதுடைய உசைன் மற்றும் நான்கு வயது ஷாஹின் பானு இளையவர்கள்.

அன்று நள்ளிரவு ஒரு மணியளவில் தான் காவல் துறை ஆணையர் பி.சி. பாண்டே, நரோடா பாட்டியா வந்தடைந்தார். அவர் அந்த இடத்தை கண்காணித்து விட்டு, இந்தப் பேரழிவு நிகழ்ந்த இடம் ஹால் தீ காத் போர்க்களத்தை விட கொடூரமாக இருப்பதாகத் தெரிவித்ததாக பஜ்ரங்கி கூர்கிறார்.

படுகொலை நடந்த அன்று ப.ஜ.க. எம்.எல்.ஏ. மாயாபேன் கோடானி நகர் முழுவதும் வந்த கலவரக்காரர்களை முடிந்த அளவுக்கு கொல்லுங்கள் என வற்புறுத்தினார் என்று தெரிவிக்கிறார் சுரேஷ் ரிச்சர்ட். அதைவிட அவலம், தான் தொலைபேசியில் வி.எச்.பி.யின் பொதுச் செயலர் ஜெய்தீபிடம் நேரடி வர்ணணையாக ஒவ்வொரு படுகொலையையும் தெரிவித்ததாகக் கூறுகிறார் பஜ்ரங்கி. அவர் படேலுக்கு 11 முறை அழைத்ததாக தெரிவிக்கிறார். அவரது போனில் ஆற்றல் முடியும் வரை பேசினாராம். அன்று மாலை உள்துறை அமைச்சர் கோர்தன் சபாடியாவை அழைத்து தான் செய்த படுகொலைகள் குறித்த பெருமிதங்களைப் பரிமாறிவிட்டு, இனி தன்னைக் காப்பாற்றுவது அவரது கையில் தான் உள்ளது என பஜ்ரங்கி கூறினாராம். அன்று இரவு தூங்கச் சென்ற பொழுது அவர் மகாராணா பிரதாப் பாகவே உணர்ந்தாராம்! அன்று மாலை முதல்வர் மோடி அந்தப் பகுதிக்கு வந்த போது சந்திக்க இயலாமல் போனது குறித்து வருத்தம் தெரிவித்தார். மோடி கூட அன்று நரோடா பாட்டியாவின் உட்புறங்களுக்கு செல்லவில்லையாம். பஜ்ரங்கி கூறுகிறார், ''கடவுளுக்குகூட அன்று நரோடா பாட்டியாவுக்குள் நுழையும் சக்தியில்லை.''

**பஜ்ரங்கியின் புகழுக்கு வேறு காரணங்களும் இருக்கின்றன. அவர் தனி நபராக முன்னின்று அகமதாபாத்தில் 'பர்சானியா' திரைப்படம் திரையிடப்படுவதை தடுத்து நிறுத்தினார். அவர் திரையரங்க உரிமையாளர்களை வெளிப்படையாக மிரட்டியபோது அரசு அமைதி காத்தது.**

#### காவல் துறையின் பாத்திரம்

காவல் துறை அவ்வாறு நடந்து கொள்ளவில்லை என்றால், இத்தனை படுகொலைகள் சாத்தியமில்லை என்று அழுத்தமாக நம்புகிறார் பஜ்ரங்கி. குடியிருப்பு வளாகத்தைப் போல நரோடா பாட்டியாவுக்கு ஒரு நுழைவாயில் தான் இருந்தது. அங்கு 50 காவல் துறையினர் முகாமிட்டிருந்தனர். ''அவர்கள் நினைத்தால் எங்களை துளைத்தெடுத்திருக்கலாம்.'' ஆனால் அனைத்தையும் பார்த்தவர்கள், வாயையும், கண்களையும் மூடிக் கொண்டனர்'' என விவரிக்கிறார் பஜ்ரங்கி. தாக்குதலுக்கு ஆளான முஸ்லிம்களை காவல் துறையினரும் சுட்டதாகத் தெரிவிக்கிறார் சுரேஷ் ரிச்சர்ட். அன்று இரவு கலவரங்கள் ஓய்ந்த நிலையில் காவல் துறையினர்தான் சாராஸ்களை அழைத்து, இந்த சாக்கடையில் ஒளிந்திருக்கும் முஸ்லிம்களை கொல்லுங்கள் என்று கூறியதாகவும் ரிச்சர்ட் விவரித்தார்.

#### நடந்த பின்

'ஆக்ஷன் எய்ட்' தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் சோம்நாத் வத்சாவுடன் இணைந்து 'தெகல்கா' புலனாய்வில் களமிறங்கியது. 2002 இல் நடைபெற்ற நரோடா பாட்டியா, நரோடா கிராம படுகொலைகள், காவல் துறையின் புலனாய்வு, குற்றப்பத்திரிகைகளை மிகுந்த நுணுக்கமாக ஆய்வது,



குற்றவாளிகளை தண்டிக்காமல் காவல் துறை அவர்களுக்கு பாதுகாப்பு அளித்தது புலப்பட்டது.

**பிரேதங்களை வெவ்வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்தி குற்றத்தை குறைக்க முயன்றது :**

படுகொலை நடந்து முடிந்ததும் காவல் துறையின் முதல் வேலையே மரணத்தின் எண்ணிக்கையை குறைப்பது தான். அதிகப்படியான இறப்புகள் என்றால், அந்த அளவு அதிகமான எதிர்ப்பு குடிமைச் சமூகத்திலிருந்து வரும். பஜ்ரங்கி கொடுக்கும் தகவல்களின்படி, காவல் துறை தான் உடனடியாக நரோடா பாட்டியாவில் விழுந்த சடலங்களைப் பல்வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்தியது. அன்று 200 பேர் அங்கு கொல்லப்பட்டனர். இரவில் வந்த ஆணையர் பி.சி. பாண்டே உடனடியாக பிணங்களை அப்புறப்படுத்த உத்தரவிட்டார். ''அவைகளை லாரிகளில், ஜீப்களில் என பல வகையில் ஏற்றினார்கள். அத்தனையும் பிணங்கள்'' என்கிறார் பஜ்ரங்கி. இரண்டாவது முறை அந்தப் பிணங்கள் பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டபோது, அவை வெவ்வேறு பகுதிகளிலிருந்து கொணரப்பட்டதாக தகவல்கள் பதிவு செய்யப்பட்டன. இப்படியாக நரோடா பாட்டியா எண்ணிக்கையை 97-105 என கட்டுக்குள் வைத்தார்கள். பிரேத பரிசோதனை பதிவுகளின்படி, நரோடாவிலிருந்து 105 பிரேதங்கள் கொண்டு வரப்பட்டன. அவை கூட மருத்துவமனையில் வழங்கப்படும் உண்ட கட்டியை போல் அள்ளி வரப்பட்டது. அதிலும் சில கலவரங்கள் நடந்த நான்கு நாட்களுக்குப் பின் வந்தது.

**பிரேத பரிசோதனை நிகழ்த்தப்படாத 41 பிணங்கள்**

ஒரு சாட்சியத்தை அழித்ததைத் தொடர்ந்து அடுத்ததை நோக்கி விரைந்தது காவல்துறை. அந்த உடல்கள்–எரிந்து, ஆழமாக வெட்டப்பட்டு, துப்பாக்கி ரவைகள் பாய்ந்து, குத்து காயங்கள், வன்புணர்வின் தழும்புகள் – இந்தத் தடயங்கள் எல்லாம் நிர்வாகம் இதனை பயங்கர படுகொலை என நிரூபிப்பதற்குப் போதுமான சாட்சியங்கள். இது ஏதோ உடனே நிகழ்ந்த எதிர்ப்பு அல்ல. மிகவும் திட்டமிடுதல்களுடன் நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை என்பதை நிரூபிப்பதற்கான ஆற்றல் வாய்ந்த குறிப்புகள். நரோடா பாட்டியா, நரோடா கிராமத்திலிருந்து கொண்டு வரப்பட்ட 41 சடலங்களை பிரேதப் பரிசோதனைக்கு காவல் துறை உட்படுத்தவில்லை. ஆழ்ந்த கவலைக்குரிய இந்தப் புறக்கணிப்புகளுக்கு இதுவரை எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை. 97 பிணங்களுக்கு பிண ஆராய்ச்சிக்குரிய சான்றுகள் இருந்தது. இது, காவல் துறையின் சட்டப்பூர்வ முறைமை – அதன்படி இரண்டு பொது சாட்சியங்களின் முன்னணியில், எந்த இடத்திலிருந்து இந்தப் பிணம் எடுத்து வரப்பட்டது. அவை மீதிருந்த காயங்களின் தன்மை என்ன என்பது போன்ற தகவல்களை எழுத்துப்பூர்வமாகப் பதிவு செய்ய வேண்டும். அதன்படி, அவர்களின் சான்றுகளே நரோடா பாட்டியாவிலிருந்து 97 பிணங்கள் எடுத்து வரப்பட்டதை உறுதிப்படுத்துகிறது. ஆனால் அதிர்ச்சி தருகிற வகையில் 58

பிணங்கள் மீது மட்டுமே பிரேதப் பரிசோதனை நிகழ்த்தப்பட்டுள்ளன. நரோடா கிராமத்திலிருந்து வந்த 2 பிணங்களும் பிரேதப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை. இந்த எல்லா பிணங்களையும் நேர்மையுடன் ஆய்வு செய்திருந்தால் – அது அன்று நடந்த கோரப் படுகொலையின் உக்கிரத்தை வெளிப்படுத்தியிருக்கும். அதைவிட அந்த மொத்த படுகொலைகள் நிகழ்த்தப்பட்ட கால அளவும் துல்லியமாகக் கிடைத்திருக்கும். அதிலிருந்த கொடூரத்தின் கால அளவை, நேரத்தைக்கூட நாம் பெற்றிருக்கலாம். இவை நீதிமன்றத்தில் முக்கிய சான்றாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும். ஆனால் மிகவும் துல்லியமாக காவல் துறை இதை செய்துவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தது.

**தீர்வுக்குரிய சான்றுகளின் அழிப்பு**

குற்றம் நிகழ்ந்த இடம் புலனாய்வு நிறுவனத்திற்கு பல திறனாய்வு சார்ந்த தடயங்களை வழங்கும். நரோடா பாட்டியா மற்றும் நரோடா கிராமத்தில் குற்றவாளிகள் பின்பற்றிச் செல்லத்தக்க ஏராளமான தடயங்களை விட்டுச் சென்றது. அதன் பிறகு அங்கு சென்ற காவல் துறை அவற்றை முறைப்படி ஒவ்வொன்றாய் தடம் இல்லாமல் அழித்தது. ஏராளமான மனிதர்கள் உயிருடன் எரிக்கப்பட்ட அந்த குழியை காவல் துறையினர் சோதனைக்கு உட்படுத்தவேயில்லை – அங்கிருந்த மண், மனித தசைகள், எரிபொருளின் மிச்சம் என எந்த மாதிரிகளும் சேகரிக்கப்படவில்லை. மாறாக, காவல் துறையினரின் படுகொலை குறித்த அறிக்கையில் அந்தக் குழி இடம் பெறவில்லை. மரணத்தின் விளிம்பில் இருந்த 7 பேரின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படவில்லை; அதில் இருவர் நீண்ட சிகிச்சைக்குப் பிறகு மார்ச் 11 அன்று இறந்தனர். ஆனால் அவர்களின் வாக்குமூலங்கள் ஏன் பதிவு செய்யப்படவில்லை என்பதற்கான எந்த விளக்கமும் குற்றப்பத்திரிகையில் இல்லை.

**குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட பா.ஜ.க. எம்.எல்.ஏ.**

பா.ஜ.க. எம்.எல்.ஏ. மாயபேன் கோடானிதான் இந்த கொலைவெறி கும்பலை பல இடங்களில் வந்து ஏவி விட்டதாகப் பிழைத்துள்ள பலரும் துல்லியமாக கூறியுள்ளனர். இருப்பினும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட போது, அவரது பெயர் காவல் துறையினரின் குற்றப்பத்திரிகைகள் எதிலும் இடம் பெறவில்லை. அவருக்கு எதிரான ஆதாரங்கள் எதுவுமில்லை என்கிறது காவல் துறை. சுரேஷ் ரிச்சர்ட் மற்றும் அவரது கூட்டாளி பிரகாஷ் ராத்தோட்டின் வாக்குமூலங்களின்படி, மாயாபேன் ஏறக்குறைய எல்லா தெருக்களிலும் முஸ்லிம்களை கொல்லுங்கள் என உரக்க கூறி ரோந்து வந்ததாக உறுதி செய்யப்படுகிறது.

**நூரானி பள்ளி வாசல் தகர்ப்பு குறித்து ஆய்வேதுமில்லை**

கலவரம் நிகழ்ந்த இடம் பற்றிய காவல் துறை அறிக்கையின் குறிப்புகளின்படி, நூரானி பள்ளிவாசலில் தனது பின்புறத்தை உரசிக் கொண்டு அசோக் லேலன்ட் தயாரிப்பு எண்ணெய் டேங்கர் ஒன்று நின்றிருந்தது தெரிய வருகிறது. அதன் பதிவு எண் துல்லியமாக உள்ளது: GT-1T.73884. ஆனால் அந்த டேங்கர் பறிமுதல் செய்யப்படவில்லை. வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தை தொடர்பு கொண்டு அதன் உரிமையாளரை கண்டடைவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. அந்த டேங்கரில் நிரப்பப்பட்டிருந்த பொருளின் மாதிரிகள் சேகரிக்கப்படவில்லை. அதைவிட விந்தை என்னவென்றால், 12 காவல் துறையினர் தொடர்ந்து முகாமிட்டுள்ள நூரானி பள்ளி வாசலுக்கு அவ்வளவு அருகில் எப்படி ஒரு டேங்கர் வந்தது?

**தலைமறைவான முக்கிய குற்றவாளிகள் மீது எந்த நடவடிக்கையும் இல்லை**

பல முக்கிய குற்றவாளிகளுக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை செய்யப்பட வேண்டும் என்கிற நெருக்கடி காவல் துறைக்கு வந்த கணத்தில் அவர்கள் அனைவரும் தலைமறைவானார்கள். எடுத்துக்காட்டாக – பாபு பஜ்ரங்கி, கிஷான் கோராணி, பிரகாஷ் ராத்தோடு, சுரேஷ் ரிச்சர்ட் இவர்கள் அனைவரும் முதல் தகவல் அறிக்கை தாக்கல் பெற்ற மூன்று மாதங்களுக்குப் பிறகுதான் கைது செய்யப்பட்டனர். அதில் பிபின் பஞ்சல் ஒன்றரை ஆண்டுகளுக்குப் பிறகுதான் கைதானார். குற்றம் சாட்டப்பட்டவர்கள் தலைமறைவானால் கடைப்பிடிக்கப்படும் எந்த நடைமுறையையும் காவல் துறை பின்பற்றவில்லை. அவர்களின் வீட்டுக்கு வெளியே தலைமறைவானவர் என நோட்டிஸ் ஒட்டுவது, சொத்துகளை முடக்குவது... இன்னும் பிற.

**ஒரு வாக்குமூலம்கூட பதிவு பெறவில்லை**

நரோடா பாட்டியா மற்றும் நரோடா கிராமத்திலிருந்து படுகொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட அனைவரும் (ரிமாண்ட்) நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டார்கள். அந்த காலத்தில் காவல் துறை குற்றம் சாட்டப்பட்டவரை விசாரணைக்கு உட்படுத்தலாம். ஆனால் இந்த நீதிமன்ற காவலும், விசாரணையும் வெறும் கண்துடைப்பே. நரோடா படுகொலைகள் தொடர்புடைய குற்றப்பத்திரிகைகள் எதிலும் ஒரு வாக்குமூலம் கூட இணைக்கப்படவில்லை.

**ஓர் ஆயுதம் மட்டுமே பறிமுதல்**

2004 இல் பிபின் பஞ்சலிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட ஒரு வாளைத் தவிர, எந்த ஆயுதத்தையும் காவல் துறை பறிமுதல் செய்யவில்லை. குற்றம் நடந்த சம்பவ இடத்திலும், அதை நிகழ்த்தியவர்களிடமிருந்தும். ஆனால் பிழைத்த பலரும் கொலைவெறிபிடித்த கும்பல் தன் கைகளில் ஏராளமான வகை வகையான ஆயுதங்கள் வைத்திருந்ததை உறுதிப்படுத்துகின்றனர். கத்திகள், வாள்கள், திரிசூலங்கள், எரிவாயு சிலிண்டர்கள் மற்றும் துப்பாக்கிகள். காவல் துறையின் கூற்றுப்படி, 105 பேர் சித்திரவதை செய்து கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இத்தகைய பயங்கர நிகழ்விடத்தில் இருந்த ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றப்படாதது, நடந்த புலன் விசாரணையின் லட்சணத்தை அம்பலப்படுத்துகிறது. எரிவாயு சிலிண்டர் விநியோகஸ்தர் தனது எழுத்துப்பூர்வமான அறிக்கையில்

**ஒரு சாட்சியத்தை அழித்ததைத் தொடர்ந்து அடுத்ததை நோக்கி விரைந்தது காவல் துறை. அந்த உடல்கள் – எரிந்து, அழமாக வெட்டப்பட்டு, துப்பாக்கி ரவைகள் பாய்ந்து, குத்து காயங்கள், வன்புணர்வின் தழும்புகள் – இந்த தடயங்கள் எல்லாம் நிர்வாகம் இதனை பயங்கர படுகொலை என நிரூபிப்பதற்குப் போதுமான சாட்சியங்களும்!**

20-க்கும் மேற்பட்டவர்கள் மாருதி வேனை கொண்டு வந்து ஏராளமான சிலிண்டர்களை கொள்ளையடித்துச் சென்றது பற்றி புகார் அளித்துள்ளார். சம்பவம் நிகழ்ந்த இடத்தில் காவலாளி இருந்தார். ஆனால் இதுவரை அந்த காவலாளியின் வாக்குமூலத்தைப் பதிவு செய்யவோ, கொள்ளையர்களை அடையாளம் காணவோ முயலவில்லை. அந்த குற்றத்தில் பயன்படுத்தப்பட்ட வாகனத்தைக்கூட கண்டறிய முயலவில்லை.

**ஒரு குற்றவாளிகூட அறிவியல் பூர்வமான ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை**

குற்றம் சாட்டப்பட்ட எவரிடமிருந்தும் பிரிவு 164இன்படி வழக்கு பதிவு செய்யப்படாததால், காவல் துறை வழக்கு தொடர்புடைய உடைமைகளை இயல்பான முறையில் பெறத் தவறிவிட்டது. அப்படியென்றால் அடுத்த கட்டம் குற்றம் சாட்டப்பட்டவரை அறிவியல்பூர்வமான வேறு வழிமுறைகளுக்கு உட்படுத்த வேண்டும் – பாலிகிராப் ஆய்வு (அ) உண்மை அறியும் சோதனை – Brain Mapping. அப்படி எவ்வித முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

பாலியல் வன்முறைகள் குறித்து சுட்டிக்காட்டப்படக்கூட இல்லை. நரோடா பாட்டியா, நரோடா கிராமம் படுகொலைகள் தொடர்பாக மூன்று குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. தப்பிப் பிழைத்தவர்கள் தொடர்ந்து ஏராளமான பாலியல் வன்முறைகள் நிகழ்ந்துள்ளதைப் பற்றி சாட்சியம் அளித்துள்ளனர். ஆனால் ஒரு சம்பவத்தையும் காவல் துறை பதிவு செய்யவில்லை. ஒரு பிரேதப் பரிசோதனை வன்புணர்வுக்கான சாத்தியங்கள், வன்கொடுமை குறித்துப் பேசியபோதும் அந்த திசையில் எந்த விசாரணையும் நடைபெறவில்லை (41 சடலங்களின் மீது பிரேதப் பரிசோதனை நிகழ்த்தப்படவில்லை என்பது உறுதியாகத் தெரிகிறது. அதில் எத்தனை பேர் பெண்கள், அவர்களின் உடலில் பாலியல் துன்புறுத்தலின், வன்புணர் வின் தடயங்கள் இருந்திருக்கலாம்).

**சம்பவ இடத்தில் இருந்த மொபைல் போன் பறிமுதல் – ஆனால் ஆய்வுகள் எதுவும் இல்லை**

படுகொலை நிகழ்ந்த அன்று உயிர் பிழைத்த மிர்ஜா உசைன் பீவி, மோஹேர் பல் மொபைல் போன் ஒன்றை அவரது நரோடா பாட்டியா இல்லத்து அருகில் கண்டெடுத்தார். ஒரு குற்றவாளியால் கவனக் குறைவால் தவறவிடப்பட்டு, காவல் துறையிடம் அது ஒப்படைக்கப்பட்டது. காவல் துறையின் குற்றவியல் பிரிவு கூடுதல் கண்காணிப்பாளர் ஏ.கே. சரோலியா விசாரித்ததில், அது அசோக் சிந்திவியுடையது எனத் தெரிய வந்தது. படுகொலையில் பங்கெடுத்த குற்றவாளி சுரோலியா, மிகத் தீவிரமான விசாரணையில் இறங்கி பாபு பஜ்ரங்கி, சிந்திவி ஆகியோரின் தொலைபேசியின் அழைப்பு பதிவுகளைப் பெற்றார். (மொபைல் போன் நிறுவனங்களுக்கு சுரோலியா இந்த அழைப்பு பதிவுகள் கேட்டு எழுதிய கடிதங்கள் 'தெகல்கா'விடம் உள்ளது. அவர் கைப்பட எழுதிய குறிப்புகள், அதில் 'பாபு பஜ்ரங்கி தான் மொத்த சம்பவத்தின் பின்னணியில் உள்ளார்' என்பது போன்று எழுதப்பட்டுள்ளது) ஆனால் இந்த புலனாய்வுகள் அடுத்த கட்டடத்திற்கு நகர்வு பெறுவதற்கு முன்னால் சுரோலியா பணியிட மாற்றம் செய்யப்பட்டார்.

அவர் மாற்றப்பட்டதும் சிந்திவியின் அழைப்பு பதிவு விவகாரம் கிடப்பில் போடப்பட்டது. நரோடியா பாட்டியா


ஆர்.எஸ்.எஸ்.இன் வன்மம் நிறைந்த செயல் திட்டங்கள் நாட்டிற்கு வழங்கப் போவது இதுதானா?

படுகொலை தொடர்பான மூன்று குற்றப்பத்திரிகைகளிலும் இப்படி குற்ற சம்பவ இடத்திலிருந்து ஒரு குற்றவாளியின் மொபைல் கண்டெடுக்கப்பட்டது குறித்த எந்தத் தகவலும் இல்லை.

**குற்றவாளியின் மொபைல் போன் அழைப்புப் பதிவுகள் குற்றப்பத்திரிகையில் இணைக்கப்படவில்லை**

அந்த வழக்கு அகமதாபாத் காவல் துறை குற்றப் பிரிவுக்கு மாற்றப்பட்ட பிறகு, டி.சி.பி. ராகுல் ஷர்மா மீண்டும் மொபைல் அழைப்பு பதிவுகளைப் பெறுவதில் ஈடுபட்டார். ஆனால் சில வாரங்களில் அவர் வழக்கத்திற்கு மாறாக வெளியேற்றப்பட்டு, அந்த வழக்கு துணை கண்காணிப்பாளர் டி.ஜி. வன்சாராவிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் அதற்குள் ராகுல் ஷர்மா அந்த அழைப்புப் பதிவுகளின் பதிவை நானாவதி – ஷா கமிஷன் முன் சமர்ப்பிப்பதில் வெற்றி கண்டார். இந்த அழைப்புப் பதிவுகள் மிக முக்கிய சான்றுகளாக விளங்குகின்றன. படுகொலை நிகழ்ந்த போது இவர்கள் ஒருவருக்கு ஒருவர் வெறிகொண்ட அழைப்புகளை பேசிக் கொண்டார்கள் என்பது மட்டுமின்றி, அவர்கள் சம்பவ இடத்தில்தான் இருந்தார்கள் என்பதை யும் உறுதிப்படுத்துகிறது. அழைப்புப் பதிவுகள் குற்றப்பத்திரிகையின் ஒரு பகுதியாக இணைக்கப்படவில்லை.

**துப்பாக்கியை பயன்படுத்துவது குறித்த குறிப்பேதுமில்லை**

மொத்த குற்றப்பத்திரிகைகளிலும் ஒரே ஒரு இடத்தில் மட்டுமே கூர்மையான முனை கொண்ட ஆயுதம் என்கிற குறிப்பை காவல் துறை தெரிவிக்கிறது (அதில் மொத்தத்தில் ஓர் ஆயுதம் மட்டுமே பறிமுதல் செய்யப்பட்டுள்ளது). கலவரக் கும்பல் எந்தவித துப்பாக்கிகளையும் பயன்படுத்தியதற்கான வாய்ப்பு எதுவும் இல்லை என்கிறது காவல் துறை. உயிர் பிழைத்தவர்களின் உடலில் ஏராளமான காயங்கள் துப்பாக்கியால் சுட்டதால் நிகழ்ந்தவை என மருத்துவமனையின் காயச்சான்றிதழ்கள் தெரிவிக்கின்றன. அந்த சான்றிதழ்கள் எதுவும் குற்றப்பத்திரிகையில் பதியப்படவில்லை. ஒரு பிரேத பரிசோதனை அறிக்கை, துப்பாக்கியால் சுட்டதால் நிகழ்ந்த சாவை உறுதிப்படுத்துகிறது. அய்ந்து



**இனப்படுகொலையின் கோரம் கோத்ராவின் வெளியெங்கும் நிறைந்து காணப்பட்டது. எத்திசையிலும் சடலங்கள் சிதறிக் கிடந்தன. நகரெங்கும் பீதி உறைந்து அதிர்வுற்ற அதே நேரத்தில் காவல் துறைக்கு ஆயுதங்கள் ஏதும் கிடைக்கவில்லையாம் – ஒரு வாளைத் தவிர.**

பேருக்கு ரவைகள் உடலுக்குள் நுழைந்து வெளியேறிய காயத்துவாரங்கள்–அவை சிறிய ரக கைதுப்பாக்கியின் பயன்பாட்டை உறுதி செய்கிறது. அது காவல் துறையின் பெரிய துப்பாக்கிகள் ஏற்படுத்தும் காயங்கள் அல்ல. எதுவாக இருப்பினும், காவல் துறை கூறுவது போல் அவர்கள் கலவரக் கும்பலை கலைக்க 91 சுற்றுகள் சுட்டதாகத் தெரிகிறது. ஆனால் அதில் ஒருவர்கூட காயமடையவில்லையாம். அது சரி, அப்ப எப்படிதான் அந்த அய்வருக்கு துப்பாக்கியால் சுட்ட காயங்கள் ஏற்பட்டன. மொத்த புலன் விசாரணையும் அமைதி காக்கிறது.

**அடையாள அணிவகுப்புகள் ஏதும் நடத்தப்படவில்லை**

நரோடா படுகொலையின் இரு வழக்குகளிலும் ஏராளமான சாட்சிகள். அவர்களிடம் குற்றம் சுமத்தப்பட்டவர்களை காட்டினால், அடையாளம் காணத் தயாராக உள்ளதாகத் தெரிவித்தனர். ஆனால் அசோக் சிந்தியை தவிர்த்து எந்த ஒரு அடையாள அணிவகுப்பும் நடத்தப்படவில்லை. பெரும் கும்பல்கள் தொடர்புடைய கலவரங்களில் அடையாள அணிவகுப்பு நடத்த வேண்டியது மிகவும் முதன்மையானது.

**காணவியலாத கரம்**

குற்றவாளிகளுடன் 'தெகல்கா' நடத்திய எண்ணற்ற உரையாடல்களில் அவர்கள் காவல் துறையினரின் பங்கு குறித்து பாராட்டுகளைப் பொழிந்தனர். அப்புறம் படுகொலையில் முக்கிய பங்காற்றிய சங் பரிவார் பொறுப்பாளர்களின் பெயர்களையும் தெரிவித்தனர். அதில் உள்துறை அமைச்சர் கோர்தன் சுபாடியாவும் அடக்கம். அவர்தான் படுகொலை நிகழ்ந்ததும் பஜ்ரங்கியுடன் உரையாடியவர். அரசாங்கத்தின் பல்வேறு கரங்கள் விதவிதமாய் வந்து ஏராளமான தளங்களில் உதவியுள்ளது. அந்த அரசை தலைமை தாங்கியவரும் தொடர்பு கொண்டிருந்தாரா?

'தெகல்கா' இந்த கேள்வியை பஜ்ரங்கியிடம் கேட்டது. அதற்கு பதிலளித்த நரோடா பாட்டியாவின் முதன்மைக் குற்றவாளி, சம்பவம் நடந்த இடத்திற்கு முதல்வர் இரண்டு முறை வருகை புரிந்ததை குறிப்பிடுகிறார். முதலில் படுகொலை நிகழ்ந்த அன்று மாலை. அவர் வந்தபோது அந்தப் பகுதிக்குள் நுழையவே இயலவில்லை, இரண்டாம் முறை – அடுத்த நாள் அவர் நரோடா பாட்டியாவுக்குள்ளேயே சென்றார். இருமுறையும் மோடி கொலைகாரர்களை ஊக்கப்படுத்தினார் – நீங்கள் செய்துள்ளது மிக நல்ல காரியம். இன்று உங்களால் இயன்ற வரை நிறைய செய்யுங்கள் என்றார். மோடி சாரா நகருக்கு படுகொலை நடந்த அன்று வந்ததை சுரேஷ் ரிச்சர்ட் உறுதிப்படுத்தினார். அவர் கொலைகாரர்களுக்கு மாலைகள் அணிவித்தார். மோடி காவல் துறைக்கு கட்டளைகள் பிறப்பித்து பின் வாங்க கூறவில்லையென்றால், இத்தனை படுகொலைகள் சாத்தியமில்லை என்கிறார் பஜ்ரங்கி. ஆனால் படுகொலைகள் புரிந்ததற்கு உதவியதுடன் நிறைவுறவில்லை மோடியின் உதவிகள். நரோடா பாட்டியா படுகொலைகளுக்குப் பிறகு பஜ்ரங்கியை நான்கரை மாதங்களாக தலைமறைவாக வைத்திருந்து, பின்பு பெரும் நாடகமான அரசின் கைது வரை எல்லாம் மோடியின் கைங்கரியம்தான். அது போதவில்லை என ஆதரவான நீதிபதிகளை கொணர்ந்து பஜ்ரங்கியை பிணையில் எடுக்கும் வரை...

# பேரச்சத்தின் உறைவிடம்



குடும்பத்தில் 19 பேரை பறிகொடுத்த காசிம் பாய், தனது இல்லத்தில்

**அச்சத்தில் உறைந்த முஸ்லிம்கள் திரளாக குல்பர்க்குக்கு விரைந்தார்கள். காங்கிரஸ் எம்.பி. இஷான் ஜாப்ரியின் வீடு தங்களுக்கு நிச்சயம் அடைக்கலம் அளித்திடும் என்ற அச்சத்தின் கோரமான வடிவங்கள் அங்கே வருகை புரிந்தன**

தெகல்காவின் கடந்த அய்ந்து மாத புலன்விசாரணையில் கலவரக்காரர்கள், சதிகாரர்கள் மிக நீண்ட உரையாடல்களில் ஈடுபட்டார்கள். ஆனால், அதில் இடம் பெறாதது ஒரு விஷயம் மட்டுமே. அது, அகமாதாபாத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்திருக்கும் குடியிருப்பு சொசைட்டிதான். இது ஒரு காலத்தில் காங்கிரஸ் எம்.பி. இஷான் ஜாப்ரியின் உறைவிடமாகத் திகழ்ந்தது. அங்கு கணிசமான காவல் துறையினர் தொடர்ந்து முகாமிட்டிருந்தபோதும் இந்து மதவெறி கும்பல் அந்த குடியிருப்பை பிப்ரவரி 28 அன்று காலை முற்றுகையிட்டது. தொடர்ந்து அய்ந்து மணி நேரம் ஜாப்ரி தொலைபேசியும் கையுமாக இருந்தார். காவல் துறை ஆணையர், முதல்வர் மோடியின் அலுவலகம், தில்லியில் உள்ள காங்கிரஸ் தலைவர்கள், அவரது நண்பர்கள் என பல திசைகளிலும் மன்றாடினார். 30 முஸ்லிம்கள் அய்ந்து மணி நேரம் எப்படியாவது பாதுகாக்கப்படவேண்டும் என தொடர்ந்து தொழுகையில் ஈடுபட்டனர். அந்த முஸ்லிம்களுடன் அக்கம் பக்கத்து சேரிவாழ் மக்களும் – இந்த காங்கிரஸ் தலைவரின் வீடு தங்களை எல்லா தாக்குதல்களிலிருந்தும் தற்காப்பு தரும் இடமாகக் கருதி தஞ்சம் புகுந்தனர். இறுதியாக மதியம் 2.30 மணி அளவில் இந்து மதவெறி கும்பல் உள்ளே நுழைந்து கையில் அகப்பட்ட அனைவரையும் கொன்று தீர்த்தது. அதிகாரப் பூர்வ அரசாங்கத்தின் எண்ணிக்கை 39. ஆனால் இன்னும் ஏராளமானவர்கள் கொல்லப்பட்டார்கள் என சாட்சிகள் தெரிவிக்கிறார்கள்.

இஷான் ஜாப்ரி உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டார். அவரது உடலின் எந்தப் பகுதியும் இதுவரை மீட்கப்படவில்லை. குல்பர்க் மற்றும் நரோடாவில் வேட்டையாடப்பட்டவர்களின் சடலங்களை அகமதாபாத்தில் உள்ள முஸ்லிம்கள் மயானக்கரையில் புதிய சவக்குழிகளைத் தோண்டி மார்ச் 6, 2002 அன்று பெரு அடக்கம் செய்தார்கள்.

‘தெகல்கா’ செப்டம்பர் 1, 2007 அன்று பாபு பஜ்ரங்கியுடன் உரையாடிய போது, அவர் தனக்கு குல்பர்க்கில் குற்றம் சாட்டப்பட்ட பல வி.எச்.பி. செயல்பாட்டாளர்களை தெரியும் என்றார். அவர்களை வி.எச்.பி.யினர் கண்டு கொள்ளவில்லை. நீங்கள் விரும்பினால்

**குல்பர்க் சொசைட்டியில் நிகழ்ந்த இனப்படுகொலையில் தீவிரமாகப் பங்காற்றிய மூவரை ‘தெகல்கா’ சந்தித்து உரையாடியது. அதில் ஒருவர் இஷான் ஜாப்ரியின் கொடூர கொலையை நேரில் கண்டவர். இப்பொழுது வி.எச்.பி.யினர் இம்மூவரையும் புறக்கணிப்பதாக அவர்கள் வருத்தம் தெரிவித்தனர்.**

**அங்கு நடந்த கலவரத்தை இரு வி.எச்.பி. தலைவர்களான அதுல் வாய்த், மற்றும் பாரத் தேலியை, அந்தப் பகுதி காங்கிரஸ் தலைவர் மேக் சிங்தான் வழி நடத்தினார் என்று இந்த வழக்கில் குற்றம் சாட்டப் பட்ட மூவர் தெளிவாக சம்பவக் கோர்வைகளுடன் விவரித்தனர்.**

*சந்திப்புக்கு ஏற்பாடு செய்கிறேன் என்றார். செப்டம்பர் 8ஆம் தேதி குல் பர்க் குற்றவாளிகளை சந்திக்க அகமதா பாத் பறந்தேன். பாபு பஜ்ரங்கியின் அலு வலகச் செயலர் என்னை மொகானி நகர் அழைத்துச் சென்றார். அங்கு தான் குர் பர்க் சொசைட்டி உள்ளது. குல்பர்க் சொசைட்டிக்கு எதிரே உள்ள சாலையில் சந்திப்பது என உறுதி செய்தோம். அந்த மக்கள் நடமாட்டம் இல்லாத பாழடைந்த குடியிருப்பு, மிகவும் வண்ணமயமான சுறுசுறுப்பான சுற்றுப் புறத்துக்கு மத்தி யில் இருந்தது. வியப்பளிப்பதாக எதிர் பாராததாக இருந்தது. அங்கிருந்த உயர மான முன்கதவு, சுவர்கள், ஜன்னல்கள், கதவுகள், கூரை என அனைத்தும் ஒரே நிறத்தில் இருந்தன.*

*கட்டை கரிகருப்பு, கடைக்காரர்கள், தெரு வணிகர், அண்டைவீட்டார், அந்த வழியாக செல்பவர்கள் என அனைவரும் இந்த துண்டு நிலத்தை ஏறெடுத்துப் பார்க்க மனமின்றி, தங்கள் வேலையில் குறியாய் சென்ற வண்ணம் இருந்தனர். அந்த இடத்திலேயே நாங்கள் இரு வி.எச்.பி. பகுதி தலைவர்கள் வரும் வரை காத்திருந்தோம். அதில் ஒருவரான மகேஷ் படேல் அருகில் உள்ள கடைக் காரர். இந்த இருவர் பெயர்களும் காவல் துறை குற்றப்பத்திரிகைகள் எதிலும் இடம் பெறவில்லை. அவர்கள் என்னை அந்த குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் அறிமுகம் செய்ய வந்தார்கள். மகேஷ் படேல் என்னை அவரது இல்லத்திற்கு அழைத்து, அங்கிருந்த ஒருவரிடம் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு தகவல் சொல்லி அனுப்பினார்.*

*வி.எச்.பி.யினர் இந்த குற்றச்சாட்டு சம்பவங்களுக்கு செய்த காரியங்கள் அனைத்தையும் மகேஷ் படேல்: பட்டி யலிட்டார் – சிறைச்சாலையில் உணவு, அவரது குடும்பத்தினருக்குப் பண உதவி – சட்ட உதவி (பட்டேலைப் பொறுத்தவரை. நான் ஒரு ஆர்.எஸ். எஸ். காரன், நான் தில்லியிலிருந்து வரு கிறேன். அந்த கலவரத்தில் ஈடுபட்ட இந்து போராளிகளின் நிலையை மதிப் பிட வந்துள்ளேன்) 40 நிமிடங்கள் கழித்து குற்றம் சாட்டப்பட்ட மூவர்–பிரஹலாத் ராஜூ, மங்கிலால் ஜெயின் மற்றும் மதன் சாவ்ல் வந்தார்கள் (மொத்தம் 39 பேர் குற்றம் சாட்டப்பட்டவர்கள். ஆனால் மூவர் மட்டும் தான் வந்தார் கள்). தொடக்கமே பட்டேலின் வாதங் களை தடம்புரளச் செய்தது. அவர்கள் வந்ததும் வி.எச்.பி. தங்களை கிஞ்சித் தும் கவனிக்கவில்லை எனப் போட்டு உடைத்தனர். அவர்களின் புகார்கள் நெடியவை, கசப்பானவை. வருங்கா லங்களில் வி.எச்.பி.மற்றும் ஆர்.எஸ். எஸ். இடமிருந்து முறையான உதவிகள் கிடைக்கும் என வாக்குறுதி அளித்துவிட்டு, அவர்களின் தொலைபேசி எண்களை குறித்துக்கொண்டு அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டேன். திரும் பும் வழியில் மங்கிலால் ஜெயினை தொலைபேசியில் அழைத்து உடனே என்னை வந்து விமான நிலையம் அரு கில் நான் தங்கியிருந்த விடுதியில் சந்திக் கும்படி கூறினேன். உடன் இருந்த இரு வரையும் அழைத்து வரச் சொன்னேன்.*

**குல்பர்க் முற்றுகை**

*வி.எச்.பி. பஜ்ரங் தள் தொண்டர்கள் ஏராளமான எண்ணிக்கையில் அன்று மே காணிநகர் வழியாக சென்றதாக பிரஹ லாத் ராஜூ தெரிவித்தார். அவர்கள் வி.எச்.பி.யினர் விடுத்திருந்த கடை யடைப்பை நடைமுறைப் படுத்தச் சென்றார்கள். அவன் அந்த கும்பலில் காலை 8.30 மணி அளவில் சங்கமித்த தாக கூறினான்.*

*ஏராளமான தொண்டர்கள் கைகளில் திரிசூலங்கள் வைத்திருந்ததாக அவன் கூறினான். அங்கிருந்த பலர் கைகளில் தடிகளையும் அவர்களது வாகனங்களில் ஏராளமான எரிபொருளையும் வைத்தி ருந்ததாக மங்கிலால் ஜெயின் கூறினார். மதன் அல்லின் கூற்றுப்படி பலரிடம் கைதுப்பாக்கிகள் இருந்தன. அப்போது ஒரு முஸ்லிமின் கடை தீயிடப்பட்டது. அந்த கணத்தில் பலசரக்கு கடைக்கார ரான மதன் சாவ்ல் கலவர கும்பலுடன் இணைகிறார்.*

***கும்பலை வழிநடத்தியவர் யார்?***

*அதுல் வாய்த், பாரத் தேலி ஆகிய இரு வி.எச்.பி. தலைவர்கள் மற்றும் காங்கிரஸ் தலைவர் மேஹ் சிங் தான் தங்கள் படைகளை தலைமை தாங்கி வழிநடத்தியதாக சாவீல், ஜெய்ன், ரா ஜூ ஆகிய மூவரும் தெரிவித்தார்கள்.*

**இஷான் ஜாப்ரி எவ்வாறு கொல்லப்பட்டார்**

*குல்பர்க் சொசைட்டியை கும்பல் சுற்றி வளைத்தது. அங்கு 30–35 முஸ்லிம் குடும்பங்கள் வசித்து வந்தனர், அவர் களுடன் அங்கு அக்கம் பக்கத்து சேரி வாழ் முஸ்லிம்கள் காம்பவுண்டுக்குள்*



இத்தகைய கொடூரங்களை எத்தனை காலத்திற்கு அனுமதிக்கப் போகிறோம்?

அடைக்கலம் புகுந்தனர். அந்த சொசைட்டியின் முகப்பு இரும்புக் கதவால் பூட்டப்பட்டிருந்தது. சுற்றுச்சுவர் மிக உயரமானது, என்பதால் கும்பலை சேர்ந்த சிலர் முன்னும்பின்னும் இரு இடங்களில் வெடிவைத்து தகர்த்து வாயிலை ஏற்படுத்தினர்.

''அக்கம் பக்கத்து வீடுகளிலிருந்த சிலிண்டர்களை கொணர்ந்து அவைகளைசுவர் ஓரம் அடுக்கி வைத்து வெடிக்கச் செய்தார்கள். அந்த வெடிப்பு இரண்டடி கனத்த சுவற்றை தகர்த்தது என்கிறார் சாவல். பெரிய கயிறுகளின் உதவியுடன் பலர் 20 அடி உயர சுவற்றை ஏறி கடந்தனர். அந்த வளாகத்தின் மீது பாய்ந்து வரும் கும்பலைப் பார்த்த இஷான் ஜாப்ரி, வெறிகொண்டு தனது தொலைபேசியை எடுத்து காவல் துறை அதிகாரிகள் மற்றும் அரசியல் தலைவர்களை தொடர்பு கொண்டு பேசினார். எதுவும் நிகழவில்லை என அறிந்ததும், ஜாப்ரி பெருந் தீயை ஏற்படுத்தி, கலவரக்காரர்களை காயப்படுத்தினார். சிலர் காயமடைந்தனர் என 'தெகல்கா'விடம் இவர்கள் தெரிவித்தார்கள். பிறகு அவரையும் அங்கு தஞ்சம் புகுந்துள்ள முஸ்லிம்களையும் விட்டுவிடும்படி அவர்களிடம் மன்றாடினார். பணம்கூட கொடுப்பதாகக் கூறினார். அப்போது கலவரக்காரர்கள், சரி பணத்துடன் இறங்கி வா என்றனர்.

ஜாப்ரி வெளியே வந்து பணத்தை கீழே போட்டதும் உடனே உள்ளே திரும்ப முயன்றார் என்கிறார் ஜெயின். ஆனால், கும்பலை சேர்ந்தவர்கள் அவர் மீது பாய்ந்தார்கள். அந்த கொலையை நம்மிடம் நினைவு கூர்ந்து விவரித்தார் சாவல் : ''அய்ந்து ஆறு பேர் அவரைப் பிடித்துக் கொண்டார்கள். யாரோ ஒருவன் பெரிய வாள் கொண்டு வெட்டினான். அவரது கை வெட்டப்பட்டன, பிறகு கால்கள் வெட்டப்பட்டன. பிறகு எல்லாவற்றையும் தான்... அவரை பல துண்டுகளாய் வெட்டிய பிறகு அடுக்கி வைக்கப்பட்ட விறகுகள் மீது அவரது உடலை வைத்து தீயிட்டோம். உயிருடன் எரித்து விட்டோம்''.

ஜாப்ரியை கொன்ற பிறகு வேறு முஸ்லிம்களையும் கொன்று தீயிட்டார்கள். மாலை 4.30 மணி அளவில் காவல் துறையினர் வந்து கலவரக்காரர்களை கலைத்து அங்கிருந்தவர்களை மீட்டனர்.



சூறையாடப்பட்ட
குல்பர்க் சொசைட்டி

**குற்றத்தில் பங்கு கொண்ட காவல் துறை**

அந்த மூவரின் கூற்றுப்படி, காவல் துறை அவர்களை சுதந்திரமாக செயல்பட அனுமதித்ததுடன், முஸ்லிம்களை மேலும் கொல்லும்படி ஆர்வப்படுத்தியது. மேஹானி நகர் காவல் நிலைய ஆய்வாளர் (பொறுப்பு) கே.ஜி. எஸ்பா கலவரக்காரர்களிடம் இன்னும் உங்களுக்கு 3–4 மணி நேரம் உள்ளது; அதற்குள் கொலைகளை செய்துவிடுங்கள் எனக் கூறினார் என மங்கிலா ஜெயின் தெரிராஜூவும் 'தெகால்கா'விடம் தெரிவிக்கையில், அந்தப் பகுதியில் அமர்த்தப்பட்டிருந்த காவல் துறையினர் கண்டு கொள்ளாததோடு, கொலை களைச் செய்யுங்கள் என சமிக்ஞையும் கொடுத்துள்ளார். ஏறக்குறைய படுகொலைகள் முடிந்த பின்னே மீட்பராக வந்தார் எர்டா. இந்த நேரத்தில் நிகழ்ந்ததை சாவல் தொடர்பு படுத்தினார். எர்டா அங்கு வந்து உயிர் பிழைத்தவர்களை மீட்பதைக் கண்ட கலவரக்காரர்கள் ஆத்

**அய்ந்து ஆறு பேர் அவரை பிடித்துக் கொண்டார்கள், யாரோ ஒருவன் பெரிய வாள் கொண்டு வெட்டினான் அவரது கை வெட்டப்பட்டன பிறகு கால்கள் வெட்டப்பட்டது. பிறகு எல்லாவற்றையும் கான்...அவரை பல துண்டுகளாய் வெட்டிய பிறகு அடுக்கி வைக்கப்பட்ட விறகுகள் மீது அவரது உடலை வைத்து தீயிட்டோம். உயிருடன் எதிர்த்து விட்டோம்.**

வித்தார். கூடுதல் படைகள் அன்று மாலை அகமதாபாத் வந்து சேர்ந்து விடும் என்பதால் தான் காவல்துறை ஆய்வாளர் அந்த கூடுதல் நேரத்தை வழங்கியுள்ளதை 'தெகல்கா' கண்டறிந்தது.

சில காவல் துறையினர் சம்பவ இடத்திலிருந்து தொலைவாக சென்று விட்டனர். அவர்கள் செல்கையில் அடுத்த சில மணி நேரங்களுக்குள் உங்கள் விருப்பம் போல் கொண்டாடுங்கள் என கூறியதை மங்கிலால் ஜெயின் தெரிவித்தார். இது, கலவரக்காரர்களின் வெறியை பைத்தியமான தீவிர நிலையில், மேலும் பல முஸ்லிம்களின் உயிர்கள் பறிக்கப்படும் வாய்ப்பை உருவாக்கியது.

திரத்துடன் அவரிடம் நீங்கள் செய்வது சரியில்லை; எஞ்சிப் பிழைத்தவர்கள் எங்களுக்கு எதிராக சாட்சியம் கூறுவார்கள் என்றனர். அதனால் எர்டா ஒரு கொடிய திட்டத்தை வகுத்தார்–குல்பர்க்கிலிருந்து பிழைத்த அவர்களை வேனில் ஏற்றிச் செல்வது, கலவரக்காரர்கள் அதன் மீது கற்களை வீசுவது, ஓட்டுநர் பயந்து வண்டியை விட்டு ஓடுவது, எர்டா அந்த இடத்திலிருந்து முற்றாகப் போய்விடுவது, கலவரக்காரர்கள் வாகனத்தை நெருப்பிடுவது. முஸ்லிம் காவல் துறை ஆய்வாளர் பதானின் குறித்த நேர தலையீட்டால் திட்டம் நிறைவேறாமல் போனதாக சாவல் தெரிவித்தார்.

**ஏராளமானவர்கள் அகமதாபாத் காவல் துறை ஆணையரிடம் அவர்கள் அளித்த வாக்குமூலங்கள் தவறான முறையில் பதியப்பட்டுள்ளதாக புகார் கூறினர். பிழைத்தவர்களில் ஒருவரான முகம்மத் ரபீக் பதான் காவல் துறை ஆணையரிடம் சான்றுகளுடனான கோரிக்கை மனுவை அளித்தார்.**

### மூடிமறைத்தல்

அரசாங்கம் தெரிவித்த சாவு எண்ணிக்கையை விட நிகழ்ந்த மரணங்கள் ஏராளம். அது காவல் துறை மரணங்களின் அடர்த்தியை குறைக்க, பல உடல்களை நகரின் பல பகுதிகளுக்கு எடுத்துச் சென்று வீசச் சொன்னது குறித்து அந்த மூவரும் 'தெகல்கா'விடம் தெரிவித்தனர். புலன் விசாரணை நடவடிக்கைகள் தொடங்கிய பின்னும் அரசாங்கம் மூடிமறைக்கும் செயலைத் தொடர்ந்தது. குற்றப்பிரிவு புலனாய்வு அதிகாரிகள் தங்களுக்கு அளித்த ராஜமரியாதைகள் குறித்தும் 'தெகல்கா'விடம் தெரிவித்தனர். காவல் துறை யின் கட்டுப்பாட்டில் இருந்தவர்கள் அனுபவித்த உபசரிப்புகள் குறித்தும், அவர்களிடம் எந்த விசாரணையும் நடத்தப்படாதது பற்றியும் அவர்கள் விளக்கினார்கள். காவல் துறை கட்டுப்பாட்டில் அவர்கள் மூன்று நாட்கள் இருந்ததே கேலிக்கூத்தானது. அது சட்ட நடைமுறை யைப் பின்பற்றியதற்கான நாடகமே. டி.ஜி.பி. (குற்றம்) ஆக நியமிக்கப்பட்ட டி.ஜி. வன்சராதான் குல்பர்க் படுகொலை வழக்கின் விசாரணை அதிகாரி. ஆனால் அவர் அந்தப் படுகொலை குறித்த எதையும் தன்னிடம் கேட்கவில்லை என சாவல் தெரிவித்தார். அவர்கள் கொடுத்த வாக்குமூலங்கள் முற்றிலும் பொய்யானவை என்றும், காவல் துறையினர் உண்மையை கூற அழுத்தம் எதுவும் தரவில்லை என மூவரும் வெளிப்படையாக சொன்னார்கள்.

ஏராளமானவர்கள் அகமதாபாத் காவல் துறை ஆணையரிடம் சென்று அவர்கள் அளித்த வாக்குமூலங்கள் எல்லாம் தவறான முறையில் பதியப்பட்டுள்ளதாக புகார் கூறினார்கள். பிழைத்தவர்களில் ஒருவரான முகம்மத் ரபீக் பதான், காவல் துறை ஆணையரிடம் சென்று சான்றுகளுடனான கோரிக்கை மனுவை அளித்தார். அதில் அவர் காவல் துறையினரிடம் தான் பெயர் கூறி அடையாளம் காட்டிய நான்கு எதிரிகளின் பெயர்கள், இறுதி வாக்குமூலத்தில் இடம் பெறவில்லை எனப் புகார் அளித்தார். மற்றொருவரான முகமத் சயீத் அடையாளம் காட்டிய 9 எதிரிகளின் பெயர்கள் விடுவிக்கப்பட்டு, மற்ற 4 பெயர்கள் மட்டுமே இடம் பெற்றிருந்தன. இது போல் ஏராளமானவர்கள் முறையிட்டும், காவல் துறை இந்த முனைப்பான முரண்பாடுகளைகளைய மறுத்தது.

பாதிக்கப்பட்ட பலரும் அவர்கள் சம்பவ இடத்தில் வி.எச்.பி. தலைவர்கள் பாரத் தேலீ, அதுல் வாய்த்தை கலவரக் கும்பல்களுடன் பார்த்ததாக காவல் துறையிடம் தெரிவித்தனர். அந்த இரண்டு தலைவர்களும் சம்பவ இடத்தில் இருந்ததை குல்பர்க் வழக்கின் குற்றம் சாட்டப்பட்ட மூவரும் 'தெகல்கா'வின் வேவுகருவியின் முன் உரையாடிய பதிவுகள் உள்ளது. ஆனால், இன்று வரை அவர்களின் பெயர்களை குற்றப்பத்திரிகையில் இணைக்க காவல் துறை மறுக்கிறது.





# இருமுறை எரிந்து இன்னும் தகித்துக் கொண்டு...

ஏற்றுக்கொள்ள முடியாத புனைவுகள். லஞ்சம் பெற்ற சாட்சியங்கள். மிரட்டிப் பெறப்பட்ட வாக்குமூலங்கள்... ஒரு மாபெரும் தள்ளாடும் புலன் விசாரணையைத் தோலுரிக்கிறார் **ஆஷிஸ் கேத்தன்**. கோத்ரா குறித்த உண்மைகள் தோல்வியைத் தழுவி நிற்பதை இங்கே விவரிக்கிறோம்.



*"பொய் எவ்வளவு பகட்டாக இருக்கிறதோ அந்தளவுக்கு அது மக்களால் நம்பப்படும்"*
– அடால்ப் இட்லர்

சபர்மதி எக்ஸ்பிரஸ் பிப்ரவரி 27, 2002 அன்று அதிகாலை 7.43 மணிக்கு கோத்ரா ரயில் நிலையத் திற்குள் 5 மணி நேரம் கால தாமதமாக நுழைந்த போது, அங்கே எந்தவிதமான கெடுகுறிகளும் இருந்திருக்க வில்லை. அங்கேயும், தேசம் முழுமையிலும் பனிக் காலம் இன்னும் முடிவுராது காற்றில் உலவிக் கொண்டிருந்தது. மக்கள் அன்றைய தினப்பொழுதுடன் தங்களை அய்க்கியப்படுத்திக்கொண்டு இருந்தனர். பலரும் பள்ளிக்கு, வேலைக்குச் செல்வது, மீண்டும் உறங்கச் செல்வது என அலைக்கழித்துக் கொண்டி ருந்த போது, இந்த பயங்கரச் செய்தி காற்றில் பரவத் தொடங்கியது. சபர்மதி எக்ஸ்பிரஸ் கோத்ரா ரயில் நிலையத்துக்கு சற்றே வெளியே நின்ற இடத்தில் அதன் நெரிசல் மிகுந்த 5 – 6 பெட்டியில் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. 59 பேர் எரிந்து இறந்தனர். இதில் அயோத்தியிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த கர சேவகர்கள், மற்றும் சுல்தான்புர், அலகாபாத், லக்னோ நகரங்களிலிருந்து குஜராத் திரும்பிக் கொண்டிருந்த பல சாதாரண பயணிகளும் அடக்கம்.

இந்த அருவருப்பான அவலத்தை கேள்விப்பட்டு தேசமே கலங்கிப்போனது. ஆனால் அந்த கணத்தில் யாருமே இந்த கோத்ரா நிகழ்வு, நம் தேசத்தின் வரலாற் றில் ஏற்பட இருக்கும் அரிக்கும் தன்மை வாய்ந்த உடைப்புகளாக இதைக் கருதவில்லை. 24 மணிநேர செய்தி ஊடகங்கள் நாடு முழுவதிலும் இந்த கோர நிகழ்வின் சாட்சியங்களை ஒளிப்பரப்பிக்கொண்டே இருந்தன. பதட்டம் கொஞ்சம் கொஞ்சமாய் மேலே

எழும்பியது. கோபமான, நியாயமான பல கேள்விகள் கேட்கப்பட்டன. இந்தத் தீ எப்படி பற்றத் தொடங்கியது? இந்த சம்பவத்தில் குற்றவாளிகள் யார்? இது ஒரு விபத்துதானா? அல்லது தீயில் அழிவை நிகழ்த்தும் திட்டமா? இது தற்செயலாய் நிகழ்ந்ததா அல்லது திட்டமிடப்பட்டதா?

இந்த கோர மரணங்கள் உண்மையை வேண்டி, நீதியை வேண்டி கோத்ராவில் ஓலமிட்டன. குஜராத் ஏற்கனவே துண்டாடப்பட்ட மதவாதத்தின் உட்செறிவுடன் தகித்துக்கொண்டிருந்தது. இப்போது அது கட்டுப்பாட்டை மீறுகிற ஆபத்தான கோபத்துடன் கரையைக் கடந்தது. இப்போது மக்கள் வேண்டியது எல்லாம் நீதி, சமரசமற்ற உண்மை மற்றும் அரசாங்கத்தின் குணமளிக்கும் தொடுதலை.

அதற்கு மாறாக கோத்ரா சம்பவம் நிகழ்ந்த சில மணி நேரங்களுள்–அது ஏற்கனவே கோராமாய் இருந்த பொழுதும் – அது கொல்லும் திட்டமுடைய மதவாத கொலைக்கருவியாக உருமாற்றப்பட்டுக்கொண்டிருந்தது. எரிந்து கருகிய உடல்களைச் சுமந்து கொண்டு மருத்துவமனைகளிலிருந்து உணர்வுக் கொந்தளிப்புடைய ஊர்வலங்கள் மாநிலம் முழுவதும் செல்லத் தொடங்கின. இறந்துபோன 59 பேருக்கு மேன்மையான சொந்த அடையாளங்கள் மறுக்கப்பட்டன. மாறாக இறந்துபோன அவர்கள் – வன்முறையின் குறியீடாக, வெறியைக் கிளப்பும் காட்சிப்பொருளாக, முஸ்லிம்கள் கொலை செய்த இந்து கரசேவகர்களாக உருவகப்படுத்தப்பட்டார்கள். சம்பவம் நிகழ்ந்து 12 மணி நேரத்திற்குள்ளாகவே – முதல் தற்காலிக தகவல்கள் உறுதிப்படுத்தும் முன்பே, இறந்தவர்களின் உடல்களை பிரேதப் பரிசோதனை செய்துகொண்டிருந்த போது, முதல்வர் நரேந்திர மோடி போரை அறிவிக்கிற பத்திரிகைச் செய்தி ஒன்றை வெளியிட்டார்: ''கோத்ராவில் நிகழ்ந்த இந்த வெறுக்கத்தக்க சம்பவத்தை, எந்த வித நாகரீக சமூகத்தாலும் ஏற்றுக்கொள்ள இயலாது'' அவர் மேலும் கூறினார்: ''இது ஒரு மதவாதச் சம்பவம் மட்டும் அல்ல, ஒரு ஒட்டுமொத்த சமூகத்தின் தீவிரவாதத் தாக்குதல்.''

தீக்கொழுந்துகள் அன்றிரவே எரியத் தொடங்கின. அடுத்த 3 நாட்களில் 2000-த்திற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். வெட்டப்பட்டு, சுடப்பட்டு, எரிக்கப்பட்டு, வன்புணர்வு செய்யப்பட்டு, ஆயிரக்கணக்கான முஸ்லிம்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. ஏராளமான மசூதிகள் தரைமட்டமாக்கப்பட்டன. வன்மத்தின் சொற்கள் மனக்கொந்தளிப்பின் உச்சங்களைத் தொட்டன. அவை தொடருமென மோடி உறுதியளித்தார்.

கோத்ராவுக்குப் பிறகு நிகழ்ந்த பெரு வெள்ளம் போலான பயங்கரங்களுக்கு அடியில் உண்மைகள் பதுங்கிப்போயின. கோத்ரா சம்பவ உண்மைகளுக்குள் உள்ளீடாய் இருப்பது, இந்திய தேசத்தின் மிகபயங்கரமான மற்றும் ஒருமுகப்படுத்தப்பட்ட குற்ற வரம்பாகத் திகழ்கிறது. நாம் நம் தேசத்தை எவ்வாறு காண்கிறோம் என்கிற பார்வையும் கோத்ரா சம்பவ உண்மைகளுக்குள் உள்ளீடாய் இருக்கிறது.



**கரசேவகர்கள் என்னை ரயில் பெட்டிக்குள் இழுத்துப் போட முயன்றார்கள் என விவரிக்கிறார், 18 வயதான சோபியா பானு. இந்தச் சம்பவம்தான் தொடர்ந்து நிகழ்ந்த பெரும் அட்டூழியங்களின் தொடக்கப் புள்ளியாய் அமைந்தது.**

திட்டமிட்டு நிகழ்த்தப்பட்ட சம்பவம்தான் கோத்ராவில் நிகழ்ந்தது. அதற்கு எதிர்வினையாக தற்செயலாய் நிகழ்ந்தவை இவை என்று உரிமை கொண்டாடிக் கொண்டு, அந்த போதனைக்குப் பின்னால் கடந்த 5 ஆண்டுகளாக, மோடியும் அவர் பிரதிநிதித்துவப்படுத்துகிற அரசியலும் தஞ்சம் புகுந்தது. தொடர்ந்து 5 ஆண்டுகளாக, அவரும் அவரது அரசும் கோத்ராவில் நிகழ்ந்தது ஏதோ கைமீறிப்போன சிறு கலவரம் அல்ல; அது மிகுந்த முன்திட்டமிடுதல்களுடன் முஸ்லிம் மதவாத அரசியல் தலைவர்களின் செயல்பாடுகள் என்று கூறுகிறார்கள். கடந்த 5 ஆண்டுகளாக மோடியின் நிர்வாகம், கோத்ரா சம்பவத்துக்கு காரணமானவர்கள் என 8 பேர்கள் மீது குறை கூறுகிறது: கோத்ரா பேரூராட்சியின் தலைவர் முகம்மது உசேன் ஹத்தீலா, ஹபீப் கரீம் ஷேக் மற்றும் அந்தப் பகுதியின் மதகுரு மொல் உம்ராஜி.

கடந்த 5 ஆண்டுகளாக மக்களிடத்தில், நீதிமன்றங்களில், ஊடகங்களில் இவர்கள்தான் கொலைகாரர்கள் என மீண்டும் மீண்டும் கூறப்படுகிறது. இதுதான் மோடியின் 'வினை – எதிர்வினை' தத்துவத்தின் அடிப்படை. சபர்மதி எக்ஸ்பிரஸ் சம்பவத்தில் குற்றம் சாட்டப்பட்ட 134 பெயர்கள் கொண்ட – பட்டியலிலிருந்து இந்த 8 மதவாத அரசி

யல் உருவங்களைக் கழித்துவிட்டால், அதில் மிஞ்சுபவர்கள் எல்லாம் சில்லரை தெருவோர வியாபாரிகள், தொழிலாளர் கள் மற்றும் லாரி ஓட்டுநர்கள் மட்டுமே. சபர்மதி எக்ஸ்பிரஸ் சம்பவத்தில் குற் றம் சாட்டப்பட்டவர்களின் பட்டியலிலி ருந்து இந்த அரசியல், மதப்பெயர்களை நீக்கிவிட்டால் மிஞ்சுவது எல்லாம் தன்னியல்பாக நிகழ்ந்த குற்றசம்பவம் அதிர்ச்சி தருவதாக இருந்ததால், எங்கள் விசாரணை திடுக்கிடச் செய்யவில்லை. மாறாக அது விரிவாகவும், வீழ்ச்சியுற்று மிருந்தது. எங்கும் குறை தீர்க்கக் கோரு கிற கண்ணீரின் அவலம். அந்தக் கண் ணீர்த் துளிகள் – மோடியும் அவரது அர சும் கோரி வந்த பொய்களை நிர்வாணப் படுத்தியது. அது ஒரு சாதாரணப் பொய் அல்ல. மாறாக, உள்நோக்கங்களுடன்

**கரசேவகர்களைத் தவிர்த்து எஸ்-6 பெட்டியில் பயணித்து உயிர் பிழைத்த அனைவரும் தங்கள் வாக்குமூலங்களில், கலவரக் கும்பலில் யார் கையிலும் தீப்பற்றக் கூடிய எரிபொருட்களோ, அதைப் போன்ற எதுவுமோ இருந்திருக்க வில்லை என்பதை தெளிவுபட கூறியுள்ளனர்.**

மட்டுமே. கோத்ரா அவலத்திலிருந்து நீங்கள் அரசியல் மதவாத கோணங் களைக் கழித்தால், மோடியின் கொடிய வினை – எதிர்வினைத் தத்துவம் மட்டுமே தகர்ந்து நிற்கும்.

**அப்படியென்றால் இந்த 8 பேர்கள் குறை கூறத்தக்கவர்கள் தானா?**

முதல்வர் மோடிதான் இந்த கோத்ரா எரிப்புக்குப்பின் இயங்கியவர் என பல அரசியல் குழுக்களும், குடிமைச்சமூகத் தின் பல பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் கருதுகிறார்கள். அவரேதான் 5 – 6 ரயில் பெட்டியை எரியச் செய்து அதன் பய னாக ஒரு மாபெரும் இனப்படுகொலை யைக் கட்டவிழ்த்துவிட்டு, அதிலிருந்து அரசியல் லாபங்கள் பெற முயன்றதாக அவர்கள் அழுத்தமாக நம்புகிறார்கள்.

**இதுதான் உண்மையா?**

கோத்ராவில் உள்ளபடியே நிகழ்ந்த சம்பவத்தின் உண்மைகளைக் கண்டறிய ‘தெகல்கா’ 6 மாத கால புலனாய்வை மேற்கொண்டது. வலையாய் பின்னப் பட்ட பெரும் பொய்களுக்குப் பின்னால் இருக்கும் உண்மைகள், புனைவுடன் கலந்து விநியோகிக்கப்பட்ட பல செய்தி கள் என ஏராளமான விஷயங்களை – வலி நிறைந்த புலனாய்வுகள் கண்ட டைந்தது. உண்மை கடினமாயிருந்ததால் எங்கள் விசாரணை திடுக்கிட வைக்க வில்லை. மாறாக, எங்கு காணினும் உண் மையடா என்பது தான் எங்களை அதிர்ச் சிக்குள்ளாக்கியது. உண்மை எங்கெங் கும் இருந்தது; வழக்குத் தாள்களில், பிழைத்தவர்களின் வாக்குமூலங்களில் வெளியே வீதிகளில் கண்ட உண்மைகள் தயாரிக்கப்பட்ட ஒன்று. கட்டாயமாக, கைக்கூலி கொடுக்கப்பட்டு நிறை வேற்றப்பட்டது.

இதுதான் நாங்கள் கண்டடைந்த கதை. உண்மைகள் இங்கே பட்டியலிடப் பட்டு விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

**வருகை :** *சபர்மதி எக்ஸ்பிரஸ் ரயில் கோத்ரா ரயில் நிலையத்திற்குள் நுழை கிறது.*

காலை 7.43 பிப்ரவரி 27, 2002 சபர்மதி எக்ஸ்பிரஸ் ரயில் எண்.9166 உ.பி. அயோத்தியாவிலிருந்து கரசேவகர் களை ஏற்றிக் கொண்டு திரும்பும் ரயில், கோத்ரா ரயில் நிலையத்தில் முதலாவது நடைமேடைக்கு வருகிறது. ரயில் ஏறக் குறைய 5 மணி நேர கால தாமதத்துடன் வந்துள்ளது.

**முதல் சினமூட்டுஞ் செயல் :** *நடை மேடையில் கரசேவகர்களுக்கும் முஸ் லிம் தேநீர் விற்பனையாளர்களுக்கும் மோதல் ஏற்படுகிறது.*

இந்த மோதலுக்கான தூண்டுதல் எது என்பதுதான் மொத்த கோத்ரா நிகழ் வின் மிக முக்கிய கேள்வி. மோடி அர சாங்கம் இதனை தற்செயல் நிகழ்வல்ல என தொடர்ந்து கூறுகிறது. மாறாக, இது மிகுந்த திட்டமிடுதலுடன் நடந்த செயல் எனக் கருதுகிறது. 5 – 6 பெட்டியில் பய ணித்து அந்த நேரத்திலிருந்து தப்பித்து உயிர் பிழைத்த இரு பயணிகளின் வாக்குமூலங்கள், மோடி அரசின் கருது கோள்களைப் பொய்யாக்குகின்றன. அந்த இரு பயணிகளும் கரசேவகர்களோ, வி.எச்.பி., பஜ்ரங்தள் ஆகிய அமைப்பு களின் உறுப்பினர்களோ அல்ல. மாறாக, தங்கள் சொந்த ஊர்களிலிருந்து அவர்கள் பணியாற்றும் இடமான அகமதாபாத் திற்கு திரும்பிக்கொண்டிருந்தார்கள். அந்த இருவரும் காவல் துறையினரிடம் நடைமேடையில் கரசேவகர்களுக்கும் தேநீர் விற்பவர்களுக்கும் இடையே நடந்த மோதல் குறித்து தெரிவித்தார்கள். இது அவர்களின் வாக்குமூலம்.

லல்தாகுமார் பால்கிரிஷன் ஜாதவ், 32 துணை மேலாளர் (குடிமை) காந்தி கிராமிலுள்ள இந்திய எரிவாயுக்கழகம். மத்தியப் பிரதேசத்திலிருக்கும் குணா விலிருந்து அவரது சொந்த ஊரான அக மதாபாத்திற்கு பயணித்துக் கொண்டிருந் தார். அவரது முன்பதிவு செய்யப்பட்ட இருக்கை எண்.எஸ்–7/32 கரசேவகர்கள் அந்தப் பெட்டிக்குள் அவரை நுழைய அனுமதிக்கவில்லை. ஜாதவ் கூறுகை யில், ‘‘அதன்பின் எஸ்–6 பெட்டியின் கதவருகே நின்று கொண்டிருந்த ராணுவ வீரர் ஒருவரிடம் கெஞ்சிக் கேட்டதின் பயனாய் அவர் சிறிது இடம் கொடுத்து சாமான்களை வைக்கச் சொல்லி, நின்று கொள்ளும்படி அனுமதித்தார். அப்படி யாக சபர்மதி எக்ஸ்பிரசில் எனது பயணம் பிப்ரவரி 26,2002 அன்று இரவு 20.15 மணிக்கு தொடங்கியது. பிப்ரவரி 27, 2002 அன்று சபர்மதி எக்ஸ்பிரஸ் ரயில் கோத்ரா ரயில் நிலையத்தின் நடை மேடையை வந்தடைந்தது. நான் ரயிலை விட்டு இறங்கியிருக்கவில்லை. அந்த நேரம் கரசேவகர்கள் – பஜ்ரங்தள் தொண்டர் களுக்கும் விற்பனையாளர்களுக்கும் இடையில் வாய்த் தகராறு ஏற்பட்டது.’’

**கோவிந்சிங் ரத்னாசிங் பாண்டே (46), ராணுவ வீரர். பணியிடம் அகமதாபாத், பயணம் – லக்னோவிலிருந்து அகமதா பாத் :**

‘‘என்னுடைய முன்பதிவு சபர்மதி எக்ஸ்பிரஸ் ரயில் பெட்டி எஸ்–6/9, அது லக்னோ ரயில் நிலையத்தை 26.2.2002 அன்று நள்ளிரவு 1.15க்கு வந்தடைந்தது. நான் எஸ்–6 பெட்டிக்குள் ஏறியதும் எனது இருக்கை எண் 9–ல் 5–6 பெண்கள் அமர்ந்திருப்பதைக் கண்டேன். அவர் களிடம் எனது பயணச் சீட்டைக் காண் பித்து இருக்கையை விட்டு எழும்படி கேட்டுக் கொண்டேன். அதன் பிறகு 50-52 வயது மதிக்கத்தக்க பஜ்ரங் தள்ளைச் சேர்ந்த ஒருவர் என்னிடத்தில் பெண்கள் உயரே உள்ள படுக்கைக்குச் செல்ல சிரமம் இருப்பதால், என்னை படுக்கை



எண் 3–அய் எடுத்துக் கொள்ளும்படி கூறினார். எனது உடைமைகளை படுக்கை எண் 9இல் வைத்து விட்டு நான் படுக்கை எண் 3–இல் அமர்ந்தேன். அந்தப் பெட்டியில்எந்த முன் பதிவும் செய்யாமல் 250 பேருக்கும் மேற்பட்ட பஜ்ரங்தள் தொண்டர்கள் நிறைந்து காணப்பட்டார்கள். ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் ரயில் நிற்கும்போது பஜ்ரங் தள் தொண்டர்கள் நடை மேடையில் இறங்கி ஜெய் சிறீராம் என்று முழங்கினார்கள். 27.2.2002 அன்று காலை 7.30 – 7.45 க்குள் ரயில் கோத்ரா ரயில் நிலையத்தின் முதல் நடை மேடையை வந்தடைந்தது. நான் உடனே எழுந்து கிளம்ப ஆயத்தமானேன். 10–12 பஜ்ரங் தள் தொண்டர்கள் எனது பெட்டியிலிருந்து இறங்கி ஜெய் சிறீராம் முழக்கம் எழுப்பத் தொடங்கினர். அந்த நேரம் தான் இவ்வாறு பல பெட்டிகளிலிருந்து இறங்கிய பஜ்ரங்தள் தொண்டர்கள்முழக்கமிட்டுக் கொண்டிருந்ததை உணர்ந்தேன். நடைமேடையில் பெரும் கூச்சலாக இருந்தது. 3–4 நிமிடங் களில் சில பஜ்ரங் தள் தொண்டர்கள் வேகமாக ஓடி ரயில் பெட்டிக்குள் வந்து கதவுகளை உடனே அடைக்கச் சொன்னார்கள். நடை மேடையில் தகராறு ஏற்பட்டிருந்ததால் கற்கள் வீசப்படுகிறது என்றனர். அவர்கள் அனைவரையும் கதவுகளை, ஜன்னல் களை அடைத்து விடும்படி கூறினார்கள்.

**மார்ச் 8, 2002 அன்று எஸ்-6 பெட்டிக்குள் தாங்கள் மயங்கிக் கிடந்ததாக வாக்குமூலம் அளித்திருந்த நான்கு கரசேவகர்கள், பின்பு காவல் துறை 'அப்ரூவர்'களாக மாறி எல்லாவற்றையும் விவரிக்கத் தொடங்கினர்.**

**இரண்டாவது சினமூட்டுஞ் செயல் :** *சில கரசேவகர்கள் நடைமேடையில் இருந்த ஒரு முஸ்லிம் பெண்ணை கடத்த முயன்றனர்.*

நடைமேடையில் வாய்த்தகராறு முற்றி அதற்கு அடுத்த கட்டத்தை அடைந்தது. சில கரசேவகர்கள் நடைமேடையில் இருந்த ஒரு முஸ்லிம் பெண்ணைக் கடத்த முயன்றனர். ஏறக்குறைய 18 வயதேயான சோபியா பானு ஷேக் தன் அம்மா மற்றும் தங்கையுடன் கோத்ரா ரயில் நிலையத்தின் நடைமேடையில் இருந்தார். அவர்கள் கோத்ராவில் இருக்கும் தங்கள் உறவினர்களைச் சந்தித்து விட்டு தங்கள் சொந்த ஊரான வடோத்ராவுக்கு செல்வதற்காக ரயில் ஏற அங்கு வந்திருந்தனர். அவர்களது வாக்குமூலங்கள் கோத்ரா சம்பவம் நிகழ்ந்து ஒரு மாதத்துக்குப் பிறகு மார்ச் 28,2002 அன்று காவல்துறையால் பெறப்பட்டது. காவல் துறை மே 22, 2002 அன்று தாக்கல் செய்திருந்த குற்றப்பத்திரிகையில் இந்த சம்பவம் தொடர்பான குறிப்போ, இவர்களின் வாக்குமூலமோ இடம் பெறவில்லை. மாறாக, நான்கு மாதங்கள் கழித்து செப்டம்பர் 20, 2002இல் தாக்கல் செய்யப்பட்ட முதல் கூடுதல் குற்றப் பத்திரிகையில் ரயில் எரிப்புக்கு இட்டுச் சென்ற பல சம்பவங்கள் என்னும் கோர்வைக்குள் இச்சம்பவம் இருந்தது.

காவல் துறைக்கு அளித்த வாக்குமூலத்தில் சோபியா இவ்வாறு கூறுகிறார் : ''நான் எனது தங்கை மற்றும் தாய் ஆகிய மூவரும் எங்கள் மாமாவின் வீட்டிலிருந்து 7.30 மணிக்குப் புறப்பட்டு கோத்ரா ரயில் நிலையத்திற்கு வந்தோம். இ.எம்.யு. ரயில் முதல் நடை மேடையிலிருந்து புறப்படுவதால், நாங்கள் அந்த நடைமேடையில் இருக்கும் குடிதண்ணீர் தொட்டியருகே காத்

திருந்தோம். அந்த நேரம் தாஹோத் பக்கம் இருந்து வந்த சபர்மதி எக்ஸ் பிரஸ் நடைமேடையை வந்தடைந்தது.

''ரயிலிலிருந்து பலர் நடைமேடை யில் இறங்கினர்.அவர்கள் அணிந்திருந்த நெற்றிப்பட்டையில் ஏதோ 'ஜெய் பஜ்ரங்' போல எழுதப்பட்டிருந்தது. அவர்கள் 'ஜெய் சிறீராம்' என முழக்கமிட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் ரயிலி லிருந்து இறங்கியது, தேநீர் அருந்து வதற்கும் திண்பண்டங்கள் தின்பதற்கும் போல் தெரிந்தது. அதே நேரம் காவிப்பட்டை அணிந்திருந்த சிலர் நாங்கள் நின்று கொண்டிருந்த இடத்திற்கு வந்தார்கள். அவர்கள் ஒரு பிரம்பால் தாடி வைத் திருந்த ஒருவரை முகத்தில் அடித்துக் கொண்டிருந்தார்கள். அவர் ஒரு முஸ்லிம். மேலும் அவர்கள் கத்தினார்கள். ''அடி... கொல்... துலுக்கனை'' இதனால் நாங்கள் பயந்து போனோம். இதன் பிறகு என் அம்மா, தங்கை மற்றும் நான் முசாபிர்கானை நோக்கி விரைந்தோம். அந்தக் குழுவிலி ருந்து ஒருவர் பின்னாலிருந்து வந்து என் வாயை அவரது கைகளால் மூடி, என்னை ரயில் பெட்டிக்குள் இழுத்துச் செல்ல முயன்றார். இதைப் பார்த்த என் அம்மா ''காப்பாத்துங்க.. காப்பாத் துங்க... அவளை'' என கூச்சலிட்டார். அத்துடன் என்னைப் பிடித்திருந்தவன் விட்டுவிட்டான்.

''நாங்கள் பயந்து போய் பயணச் சீட்டு அலுவலகத்துக்குள் சென்று நின் றோம். சிறிது நேரத்துக்குப் பின் வடோ தாராவுக்குச் செல்லும் பயணத்தையே கைவிட்டு, ரிக்ஷா பிடித்து சிக்னல் பா லியாவில் (அது கோத்ரா ரயில் நிலையம் அருகில் இருக்கும் முஸ்லிம் வசிப்பி டம்) இருக்கும் எங்கள் அத்தை வீட் டுக்கு செல்லும் நோக்கத்துடன் பயணச் சீட்டு அலுவலகத்தைவிட்டு வெளியே றினோம்.'' சோபியாவின் கூற்றுப்படி, அங்கே பர்தா அணிந்திருந்த மற்றொரு முஸ்லிம் பெண்ணையும் கரசேவகர்கள் கடத்த முயன்றனர். அந்தப் பெண்ம ணியை அடையாளம் காணவோ, அவரது வாக்கு மூலத்தைப் பெறவோ இன்றுவரை காவல்துறை எந்த நடவடிக் கையும் மேற்கொள்ளவில்லை.

கரசேவகர்களுடனான கைகலப்புக் குப் பிறகு நடைமேடையிலிருந்த முஸ் லிம்கள் ரயிலின் மீது கற்களை வீசத் தொடங்கினர். 5–6 பெட்டியிலிருந்த ராணுவ வீரர் மற்றும் ஏராளமான வேறு பயணிகளும் இந்த சம்பவத்தை வலி யுறுத்தி உள்ளனர்.

**முதல் நிறுத்தம் :** *சங்கிலி இழுக்கப் படுகிறது. ரயில் நிலையத்தை விட்டு வெளியே சென்று சபர்மதியில் நிற்கிறது.*

சில நிமிடங்களில் ரயில் நடை மேடையை விட்டுக் கிளம்பியது. ரயில் ஓட்டுநர் ராஜேந்திர ராவ், ரகுநாத் ராவ்– இன் கூற்றுப்படி, அவர்களுக்கு பச்சை விளக்கு சமிக்ஞை 7.45க்கு கிடைக்கிறது. ''ரயில் வடோதராவை நோக்கி நகரத் தொடங்கியது. சங்கிலி இழுக்கப்பட்ட பொழுது மணி 7.17. ரயில் நின்றது. எனது உதவி ஓட்டுநர் மற்றும் காப்பாளர் (கார்டு) 83101, 5343, 51263 மற்றும் 88238 ஆகிய பெட்டிகளில் சங்கிலி இழுபட்ட களின் வழியே பெட்டிக்குள்ளே நுழைந்தது.''

இந்த களேபரங்களின் மத்தியில் ரயில்வே ஊழியர்கள் முன் குறிப்பிடப் பட்டுள்ள நான்கு பெட்டிகளில்தான் சங்கிலி இழுக்கப்பட்டது என்பதை உறுதி செய்துவிட்ட பிறகு ரயில் மீண்டும் நகரத் தொடங்கியது.

**கேடான நிறுத்தம் :** *சங்கிலி மீண்டும் இழுக்கப்படுகிறது சபர்மதி எக்ஸ்பிரஸ் 'ஏ' கேபின் அருகில் நிற்கிறது.*

காலை 8.00 மணி. சிறிது தூரம் நகர்ந்த பிறகு மீண்டும் சங்கிலி இழுக் கப்படுகிறது. சபர்மதி ஏ–கேபின் அரு கில் நிற்கிறது. அந்த கேபினை நிர்வகித்த நிலையத் துணை மேலாளர் (ஏ.எஸ். எம்.) ஹரிமோகா மீனா தான் அந்த நேரத்தைப் பதிவு செய்துள்ளார். 900–1000 பேர்கள் கொண்ட பெரும் கும்பல் தைக் கண்டுபிடித்தனர். இதனை உடனே நிலைய மேலாளருக்கு வாக்கி–டாக்கி மூலம் தெரிவித்தனர்.

**'ஏ' கேபினை நிர்வகித்து வந்த மீனா, ரயிலைத் துரத்திக் கொண்டு ஓடிய கும்பலை சேர்ந்தவர்களிடம் ஏன் இப்படி ஓடுகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள் யாரோ ரயிலில் கடத்தப்பட்டதால் அவரை மீட்க செல்கிறோம் என்று தெரிவித்தனர்.**

நடைமேடை திசையிலிருந்து தொடர்ந்து ரயிலின் மீது கற்கள் வீசப்பட் டன. இதனை பாண்டே, ராணுவ வீரர் மற்றும் பல பயணிகள் வலியுறுத்தி யுள்ளனர். உத்திரப்பிரதேசத்திலிருந்து தனது சொந்த ஊரான அகமதாபாத்திற் குத் தனது அப்பா, அம்மா, அண்ணி, மைத்துனருடன் பயணித்த அமர்குமார், ஜம்னா பிரசாத் திவாரியும் இந்தக் கூற்றை வலியுறுத்தினர்.

பாண்டே கூறுகையில், ''முப்பது, நாற்பது மீட்டர் தூரம் ஓடிய ரயில் நின்றது. சங்கிலி இழுக்கப்பட்டதால் அது நின்றது. அப்பொழுது பஜ்ரங்தள் உறுப்பினர்கள் பலர் ஓடிவந்து எங்கள் பெட்டியில் (3 –6) ஏறினார்கள். அந்த சமயம் மிதமான கல் எறிதல் நடைமேடை பக்கமிருந்து தொடர்ந்தது.''

திவாரியும் ரயில் கிளம்பிய சில கணங்களில் நின்றது என்றார். ''எனக்கு கற்கள் வந்து பெட்டியில் மோதும் ஓசை கேட்டது. பிறகு சில கற்கள் ஜன்னல் ஒன்று கேபின் ஏ–அருகில் ரயிலின் மீது கற்கள் வீசியதைப் பார்த்ததாகக் கூறு கிறார் ரயில் ஓட்டுநர் ராவ். கல் எறிதலின் தீவிரம் அதிகரித்து அது ரயில் பெட்டி யின் ஜன்னல்கள் உடைந்து விழுவது வரை சென்றது. ஏ.எஸ்.எம். மீனா மற் றும் பிழைத்த சாட்சிகள் பலர் இதனை உறுதிப்படுத்தியுள்ளனர்.

ரயில் கிளம்புவதும் நிற்பதுமாக இரண்டு முறை நிகழ்ந்த போதும் இடது பக்கத்திலிருந்து தொடர்ந்து கல் வீச்சு நடந்ததாக அமாக்குமார் திவாரி கூறு கிறார்.'' இதனால் ஜன்னல் அடைப்புக் கண்ணாடிகள் சிதறியதில் என் தம்பியின் மனைவி, அம்மாவுக்கு பலத்த காயங் கள் ஏற்பட்டன.''

ராணுவ வீரர் பாண்டே ஏறக்குறைய இதைத்தான் கூறுகிறார். ''இரண்டாவது முறையாக ரயில் நின்றபோது அது ரயில் நிலையத்திலிருந்து ஏறக்குறைய ஒரு கி.மீ. தூரத்தில் இருந்தது. இடது புறத் திலிருந்து மிகத் தீவிரமான கல் எறிதல் தொடர்ந்தது. ரயில் பெட்டியின் ஜன்னல் களும், கதவுகளும் மூடியிருந்தன. சில ஜன்னல் அடைப்புக்கண்ணாடிகள் உடைந்தன. சில பயணிகளுக்கு கற்



**எரியும் பொருள் பெட்டிக்குள் வந்து விழுந்ததும் அந்த இடமே புகை மண்டலமாக மாறிப்போனது என விவரிக்கிறார் எஸ்–6 பெட்டியில் பயணித்த 13 வயது ஞானபிரகாஷ்.**

*களால் காயங்கள் ஏற்பட்டு ரத்தம் கசியத் தொடங்கியது.''*

**சம்பவத்தின் மய்யம் :** *கும்பலின் சீற்றம் தீவிரமடைகிறது.*

*முஸ்லிம் கும்பல் ரயிலை கேபின்–'ஏ' வரை துரத்திக் கொண்டு வந்தது. ஓட்டுநர் ராவ் கும்பலைப் பார்த்த பொழுதும் அவர் அதிலிருந்து 8–10 பெட்டிகள் தொலைவில் இருந்தார். காவல் துறையினர் இதுவரை சம்பவ இடத்திற்கு வந்திருக்கவில்லை. அதனால் சம்பவத்தின் மய்ய இடத்தருகில் இருந்தவர்கள் இரு அலுவலர்கள் மட்டுமே – ஏ.எஸ்.எம். மீனா மற்றும் அவருடன் கேபின்–ஏ வை நிர்வகித்த ஏ.கே. சர்மா.*

*மார்ச் 1,2002 அன்று காவல் துறையிடம் மீனா அளித்த வாக்குமூலம். இது கோத்ரா நிகழ்வுக்கு அடுத்த நாள் – காலை 7.55 இருக்கும். ரயில் மீண்டும் கிளம்பியிருந்தது. 5 நிமிடங்களுள் அது கேபின்–ஏ அருகே வந்தது. அந்த கணத்தில் சபர்மதி எக்ஸ்பிரசின் ஓட்டுநர் சங்கிலி இழுவை ஒலிப்பானை ஊதி ரயிலை நிறுத்தினார். அதற்குள் கேபின்–ஏ அய் 8–10 பெட்டிகள் கடந்திருந்தன. நான் கேபினை விட்டிறங்கி சங்கிலி இழுக்கப்பட்டதை சரிசெய்து அதற்கான காரணத்தைக் கேட்டறிய வந்தேன். ரயிலருகே சென்றபோது 200–500 பேர் கொண்ட கும்பல் ரயிலை நோக்கிப் பின்னாலிருந்தும் அக்கம் பக்க பகுதிகளிலிருந்தும் வருவதைக் கண்டேன். அவர்கள் கற்களை வீசிக்கொண்டிருந்தார்கள். நான் வேகமாக வந்து என் கேபினில் ஏறினேன். அங்கிருந்தபடியே பயணிகளை எல்லாம் கதவுகள், ஜன்னல்களை மூடும்படிக் கூறினேன். ரயிலை விட்டு இறங்கியிருந்த சில பயணிகளை அந்தக் கும்பல் அடித்துத் தாக்கியது.*

***ஏ.எஸ்.எம். மீனாவுக்கும் அந்த கும்பலுக்கும் துல்லியமாக எது அம்பலப் பட்டது? (தெரியவந்தது)***

இந்த விஷயத்தைப் பொறுத்த வரை, காவல் துறைக்கு அளித்த வாக்குமூலத்திலும் அவர் அமைதி காக்கிறார். தன்னை ஒரு ஆய்வு மாணவராகக் கூறிக் கொண்டு 'தெகல்கா'வின் மறைமுகப் பத்திரிகை யாளர் சந்திக்கத் தீர்மானித்தார். மீனாவுக்கு தான் ஒரு பத்திரிகையாளரிடம் பேசிக்கொண்டிருக்கிறோம், அது பதிவு பெற்றுக்கொண்டு இருக்கிறது என்பது புலப்படவே இல்லை. அவர் கூறுகையில் அவர் கீழே வந்து கும்பலைச் சேர்ந்தவர்களை ஏன் ரயிலைத் துரத்துகிறீர்கள் என்று கேட்டாராம். அந்தக் கும்பலைச் சேர்ந்த சிலர் அவர்களுள் ஒருவர் கரசேவகர்களால் ரயிலில் கடத்திச் செல்லப் பட்டிருப்பதால் ரயிலைத் துரத்துவதாகக் கூறினாராம். மீனாவின் காதுபட சிலர் ரயிலைத் தீயிட்டால் கூட்டம் கலைந்து வெளியேறும். உடனே நம்மவரை மீட்டிடலாம் என்றார். ஆனால் மீனா எந்தவித வாள்கள், கூர்மையான ஆயுதங்கள் அல்

லது எரியும்பொருட்களை அந்த கும்பல் வைத்திருக்கவில்லை என்கிறார். ஆனால் எதிர்நிலையில், அந்தக் கும்பல் பெண் கள் மற்றும் குச்சிகளைச் சுமந்த சிறுவர் கள் ஆனது என்கிறார் மீனா.

**தீப்பெட்டி :** *நெரிசல் மிகுந்த 5–6 பெட்டி மரண வலையில் சிக்க காத்திருக்கிறது.*

எல்லாத் தரப்புகளிலிருந்தும், எஸ்-6 மிகுந்த நெரிசலுடன் விழி பிதுங்கியது, அந்தப் பெட்டியின் கொள்ளளவைப் போல மூன்று மடங்குக்கு மேல் பயணி களை அது சுமந்து கொண்டிருந்தது. என்று கூறப்பட்டுள்ளது சாட்சிகளின் கூற்றுப்படி. ஏறக்குறைய 250 ஜன்னல் களும் கதவுகளும் முற்றிலும் அடைக் கப்பட்டிருந்தன. மேலும் தங்களைத் தாக்க வரும் கூட்டம் உள்ளே நுழையா மல் தடுக்க வாசல்களை எல்லாம் தங் கள் உடைமைகளைக் கொண்டு அடைத்திருந்தார்கள். எஸ்–6 இல் பய ணித்த ராணுவ வீரர் கோவிந்த் சிங் ராஜ்புத் பிழைத்தவர்களில் ஒருவர். அவர் கூறுகையில், ''நானும் 3–4 பேர்களும் இணைந்து வலது பக்கம் உள்ள கத வினை மிகுந்த சிரமத்துடன் திறந்தோம். வெளியே இருந்தவர்கள் கதவுகளைத் திறந்து விடக் கூடாது என்பதற்காக பெட் டியின் இருபக்க வாயில்களிலும் பயணி கள் தங்கள் உடைமைகளை அம்பார மாய் குவித்து உள்ளே நுழைய விடாமல் பார்த்துக் கொண்டனர்.''

ரயிலைத் தாக்கி வந்த கலவரக்காரர் களை எவ்வளவோ மன்றாடியும் பய னில்லை. பயந்து போன மீனா மீண்டும் ஏ–கேபினுக்கு ஓடுகிறார். அவருடன் பணியாற்றும் ஊழியரான சர்மா, இத்தனை நிகழ்ந்தும் கேபினை விட்டு வெளியே வரவேயில்லை. காவல் துறைக்கு அளித்த அறிக்கையில் மீனா இவ்வாறு கூறுகிறார்: ''நான் பயந்து போய் ஏ–கேபினுக்கு ஓடிவந்தேன். அகில்குமார் சர்மாவிடம் உடனே கேபி னின் ஜன்னல் மற்றும் கதவுகளை மூடி விடும்படி கூறினேன். சர்மா ஏற்கனவே கோத்ரா நிலைய துணை கண்காணிப் பாளர் மற்றும் வடோத்ரா கட்டுப்பாட்டு அறைக்கு ரயில்வே தொலைபேசி மூலம் சபர்மதி ரயில் மீது நடந்து வரும் கல் எறி தலைப் பற்றி தகவல் கூறினார். ரயில்வே காவல் படைக்கு தகவல் கொடுத்ததும் தொலைபேசி அலறத் தொடங்கியது. நானும் சர்மாவும் தொடர்ந்து இதையே பதிலாய் கூறிக் கொண்டிருந்தோம்.'

ரயிலுக்குள் இருந்தவர்களாலும் வெளியே என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள இயலவில்லை. ராணுவ வீரர் பாண்டே மற்றும் சகபயணியான ராஜேந்திர சிங்க ராஜ்புத் ஆகிய இரு வரின் வாக்குமூலங்களின் படி, கரசேவ கர்கள் மற்றும் பஜ்ரங்தள் தொண்டர்கள் எஸ்–6 பெட்டியிலிருந்த அனைவரையும் கதவுகளையும், ஜன்னல்களையும் மூடி விடும்படி கூறினார்கள். அதனால் பாண்டே மற்றும் ராஜ்புத்தால் வெளியே என்ன நிகழ்கிறது என்பதை தெரிந்து கொள்ள இயலவில்லை.

ரயிலின் பல பெட்டிகளில் இதுவே கதி. பொதுப் பெட்டியில் பயணித்த கர சேவகர்கள் சபுர்பாய் பர்மர் காவல் துறைக்கு அளித்த வாக்குமூலத்தில் – ''கல் எறிதல் தொடங்கியதும் ஜன்னல் மற்றும் கதவுகளை மூடிவிட்டு பெட்டி யின் உள்ளேயே அமர்ந்திருந்தோம். நான் அதிர்ச்சியில் உறைந்துபோய் எவரையும் பார்க்கவில்லை.'' மற்றொரு பொதுப் பெட்டி பயணியான கரசேவகர் சஞ்சய் சுகாதியாவும் இதையே கூறுகிறார். ''1000–1500 பேர்கள் கொண்ட கும்பல் ரயிலின் மீது கல்லெறிந்து கொண்டே கொஞ்சம் கொஞ்சமாய் நெருங்கி வந் தது. கரசேவகர்களான நாங்கள் பயந்து போய் ஜன்னல்களையும் கதவுகளையும் பூட்டினோம்.''

**மொத்தக் கலவரத்தின் தொடக்கப் புள்ளியாய் அமைந்த நடைமேடை கடத்தல் சம்பவத்தைப் பற்றி, எந்த கரசேவகரும் தங்கள் முதல் வாக்குமூலத்தில் தெரிவித் திருக்கவில்லை. அவை எல்லாம் பின்னர் திரைக்கதையாக உருவாக்கப்பட்டன.**

**புகையும் நெருப்பும் :** *எஸ்–6 பயணிகள் நேரடி சாட்சியங்கள்*

காலை 8.30 மணி. மீனாதான் முத லில் எஸ்–6 பெட்டியிலிருந்து மேலே எழும்பும் புகையை கவனித்தார். எஸ்–6 பயணிகளும் முதலில் புகையைக் கண்டார்கள். அதன்பிறகு நெருப்பை ராணுவ வீரர் பாண்டே ஏப்ரல் 1, 2002 அன்று அளித்த சாட்சியம் : ''பஜ்ரங்தள் உறுப்பினர்களும் பிற பயணிகளும் உரக்க கத்திக்கொண்டே பெண்களை யும் குழந்தைகளையும் கடைசி இருக் கையின் கீழ் மறைத்தார்கள். 10 –15 நிமிடங்களில் பெரும்புகை இருக்கை எண் 72 லிருந்து கிளம்பியது. சில கணங் களில் அது பெரு நெருப்பாய் உருவெடுத் தது. நானும் மேல் இருக்கையில் அமர்ந் திருந்த 3–4 பேர்களும் உடனே இறங்கி பெட்டியின் இடது பக்க கதவை பலம் கொண்டு திறக்க முயன்றோம். ஆனால் பயணிகள் வெளியே இருப்பவர்கள் உள்ளே நுழைந்துவிடக்கூடாதென தங் கள் உடைமைகளை பெட்டியின் இரு பக்க கதவுகளின் மீதும் குவித்து வைத்தி ருந்தனர். கரசேவகர்களும் வேறு சிலரும் பெட்டியிலிருந்து இறங்கினர்.

எஸ்–6 பெட்டியில் தனது தந்தை யுடன் பயணித்துக்கொண்டிருந்த ராஜேந் திர சிங் ராஜ்புத் கூறுகையில் : ''வட திசையிலிருந்து 100–150 பேர்கள் ரயிலின் மீது கல்லெறிந்து கொண்டிருந்தனர். அந்தக் கூட்டத்தில் இருந்தவர்களின் கைகளில் குழாய்கள் – வாள்கள் வைத் திருந்தார்கள். நான் ஜன்னல் வழியே வெளியே வந்ததும் என் கை, கால் தோள் பட்டை என தொடர்ந்து குழாய் மற்றும் கற்களால் தாக்கினார்கள். பெட்டியில் கிளம்பிய புகையால் என் தந்தைக்கு மூச்சுத் திணறியது. எனக்கும் கை, காது களில் தீக்காயங்கள் ஏற்பட்டன. அதன் பின் என்னையும் என் தந்தையையும் கோத்ரா அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள்''.

பாண்டே கூறுகையில், ''நான் ரயிலை விட்டு இறங்கியதும் அங்கு 15, 16 வயது டைய இளைஞர்கள் ரயிலைச் சுற்றி வரு வதைப் பார்த்தேன். அவர்கள் கைகளில் இரும்புத்தடிகள் மற்றும் கத்திகள் ஆகிய ஆயுதங்கள் வைத்திருந்தார்கள். அவர் களைப் பார்த்ததும் நான் 70–80 அடி தூரம் ஓடினேன். அவர்களில் சிலர் என்னைச் சுற்றி வளைத்தனர். அந்த நேரம் ஏற் கனவே கல் எறிதலால் என் இடது கையில் பலத்த காயங்கள் ஏற்பட்டிருந்தது. அந்தப் பையன்கள் கத்திக்கொண்டிருந் தார்கள். ''அடிங்கடா… அடிங்கடா…'' அந்தப் பையன்களிடத்தில் நான் ஒரு ராணுவ வீரர் என்று கூறினேன். அவர்கள் என்னிடம் சான்று கேட்டார்கள். எனது

# கோத்ரா 'வில்லன்கள்'



''அன்று நான் ரயில் நிலையத்தில் இல்லை. வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தேன். ஆனால் காவல் துறை என்னை சாட்சிய மாக இணைத்து விட்டது.''

**முரளி முல்சந்தானி**



''காவல் துறைதான் எல்லா பெயர் களையும் கொடுத்தது. எந்த சாட்சியும் தன் வாக்குமூலத்தை எழுதவில்லை. காவல் துறைதான் அனைத்தையும் செய்தது.''

**ககுல் பாதக்**



''நோயேல் சாகேப்தான் என்னிடம் 50,000 ரூபாய் கொடுத்து ஒரு புகைப்படத்தைக் காட்டி அவரை அடையாளம் காட்டும்படி கூறினார்.''

**ரஞ்சித் சிங் பட்டேல்**

பையிலிருந்து வாரண்டை வெளியே உருவி எடுத்தேன். அதில் ஒருவன் என் வாரண்டை பார்த்து விட்டு மற்றவர் களிடம் நான் ஒரு ராணுவ வீரன் தான் என்று கூறினான். மேலும் யாரும் அவரை அடித்துவிட வேண்டாம் என்றான். மற்ற பையன்கள் எனது பெயரைக் கேட்டார் கள். அந்த பையனோ என் பெயரை வாசித்தான். அதைக் கேட்டதும் மற்ற பையன்கள் நான் ஒரு இந்து என்று கூறி னார்கள். உடனே ஒருவன் இரும்புத்தடி யால் எனது தலையில் தாக்கினான். என் தலையிலிருந்து ரத்தம் வடியத் தொடங் கியது. நான் மயக்கமுற்றேன். மற்ற பையன்களை விரட்டிவிட்டு என்னை பிரதான சாலையில் போட்டுவிட்டுப் போய்விட்டான் அவன்''.

**மேலெழும்பும் முரண்பாடுகள் :** *அந்தக் கும்பல் பெட்ரோல் – மண் ணெண்ணையை வைத்திருந்ததா? எஸ்–6 பெட்டியில் பிழைத்தவர்களில் கரசேவகர்கள் மட்டுமே அவ்வாறு கூறு கிறார்கள்.*

கும்பலை அருகிலிருந்து பார்த்த ஒரே அலுவலரான மீனாவும் சரி, எஸ்–6 இல் பிழைத்தவர்களில் கரசேவகர்களாக அல்லாத ராணுவ வீரர் பாண்டே, ராஜேந்திர சிங் ராஜ்புத்தும் சரி, கலவரக் கும்பல் கையில் எரிபொருட்களான மண்ணெண்ணெய், பெட்ரோல், டீசல் சுமந்திருந்ததை காணவில்லை.

வடோத்ராவைச் சேர்ந்த வியாபாரி யான சதீஷ் மிஸ்ரா, தனது குடும்பத்தா ருடன் உத்தரப்பிரதேசத்தில் இருக்கும் சுல்தான்பூரிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தார். அவர் தன் மனை வியை இந்தக் கலவரத்தில் இழந்தார். அவர் கூறுகையில், '' பெட்டியின் மீது கற்கள் எறியப்படுவதைக் கேட்டோம். ஜன்னல்களையும், கதவுகளையும் மூடி விட்டோம். புகை மண்டலமும் தீயும் எரியத் தொடங்கியவுடன் என்னால் கல்லெறிபவர்களையோ தீ வைத்தவர் களையோ காண இயலவில்லை''.

எஸ்–6 பெட்டியிலிருந்து உயிர் பிழைத்த 4 கரசேவகர்களான – அம்ருத பாய் படேல், தினேஷ் பாய் படேல், நிதின் பாய் படேல், ராம் பாய் படேல் இவர்கள் அனைவரும் மெஹசானா வைச் சேர்ந்தவர்கள். அயோத்தியிலுள்ள ராம் ஜெய் யக்னாவில் அகூத்தி பூசை கொடுக்கச் சென்றவர்கள். மார்ச் 8,2002 அன்று அளித்த முதல் வாக்குமூலங் களில் இவர்கள் தீப்பற்றக்கூடிய பொருட் களை வைத்திருந்த யாரையும், பெட்டி யைத் தீயிட்ட யாரையும் பார்த்ததாக கூற வில்லை. பெட்டிக்குள் புகை மண்டலம் பரவியதும் இவர்கள் மயங்கி விட்ட தாகத் தெரிவித்தார்கள்.

எஸ்–6 பெட்டியில் உயிர் பிழைத்த சில கரசேவகர்களும் மற்ற பெட்டிகளில் பயணித்த கரசேவகர்களும் மட்டுமே தீப்பற்றக்கூடிய பொருட்களை கும் பலைச் சேர்ந்தவர்கள் வைத்திருந்ததைப் பார்த்ததாக கூறுகிறார்கள். வேடிக்கை என்னவென்றால், இந்த எல்லா கரசேவ கர்களும் கல்லெறிதலால் கதவுகள், ஜன் னல்களை பூட்டிவிட்டதாகவும் தெரிவித் தார்கள். அதே மூச்சில் இப்பொழுது அந்தக் கும்பல் ஆயுதங்களை, தீப்பற்றக் கூடிய பொருட்களை வைத்திருந்ததாக வும் கூறுகிறார்கள்.

**திகிலும் எதிர்ச்சார்புகளும் :** *கரசேவகர்களின் வாக்குமூலங்கள் அவை நம்பகத்தன்மை உடையவை தானா?*

அவர்கள் கூறும் தகவல்கள் அனைத் தும் நம்பத்தக்கவைதானா என்கிற கேள் வியைத் தானே எழுப்புகிறது. எஸ்–6 பெட்டியிலிருந்து பிழைத்த பல கரசேவ கர்கள் கும்பலைச் சேர்ந்தவர்கள் தீப் பற்றக்கூடிய பொருட்களை வைத்திருந் ததாக ஒன்றுபோல் வாக்குமூலங்கள் கொடுத்துள்ளார்கள் வார்த்தைக்கு வார்த்தை. உதாரணத்திற்கு, நான்கு கர சேவகர்கள் (இவர்களும் மெஹீசானா வைச் சேர்ந்தவர்கள்) ஜெயந்தி பாய் படேல், பாபுபாய் படேல், துவார்கா பாய் படேல் மற்றும் ஹீராபாய் படேல்– இவர்கள் அனைவரும் ஒரே குழுவில் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். இவர்கள் அனைவரும் வி.எச்.பி.யின் மெஹீசானா மாவட்டத் தலைவருடன் பயணம் செய்தவர்கள். இவர்களின் வாக்குமூலப் பிரதிகள் கண்ணாடிப் பிம் பங்களைப் போல் ஒன்றாய் உள்ளது. கமா – புள்ளி என எல்லாம் அப்படியே நகலாய். இவர்கள் நால்வரும் கும்பல் ரயிலுக்கு தீயிட்டதைப் பார்த்ததாக கோரவில்லை. கும்பல் எரிபொருட்கள் வைத்திருந்ததைப் பார்த்ததாக மட்டுமே கூறினார்கள்.

கரசேவகர்கள் பார்த்ததாக கூறும் அந்த தீப்பற்றக்கூடிய பொருள்கள் என்ன? அந்தப் பதிலின் வரையறைகள் நம்மைத் தடுமாறச் செய்கிறது: (அ) அமில பல்புகள் (ஆ) பெட்ரோல் பல்புகள் (இ) பெட்ரோல், மண்ணெண்ணெய் நிரப்பப்பட்ட பிளாஸ்டிக் கலன்கள் (ஈ) தீப்பந்தங்கள்.

கரசேவகர்கள் தங்கள் வாக்குமூலங்களில் எஸ்–6 பெட்டி எவ்வாறு தீப்பற்றியிருக்கும் என்பதற்கு மனதால் பாவிக்க வல்ல எல்லா காரணங்களையும் கூறியுள்ளனர். அவர்களைப் பொறுத்த வரை, அந்தக் கும்பல் (அ) அமில பல்புகள் மற்றும் பெட்ரோல் பல்புகளை பெட்டியின் மீது எறிந்துகொண்டிருந்தார்கள் (ஆ) பெட்டியின் மீது வெளியிலிருந்து மண்ணெண்ணை, பெட்ரோலைத் தெளித்து கொண்டிருந்தார்கள் (இ) உடைந்த ஜன்னல்களின் வழியே ரயில் பெட்டிக்குள் மண்ணெண்ணை, பெட்ரோலை ஊற்றிக்கொண்டிருந்தார்கள் (ஈ) உடைந்த ஜன்னல்களின் வழியே தீப்பந்தங்களை எறிந்தார்கள்.

எஸ்–6, எஸ்–2, எஸ்–4, பொதுப் பெட்டிகள் என அனைத்திலும் பயணித்த கரசேவகர்கள் மேற்சொன்னவற்றையெல்லாம் ஒன்றுசேர கூறுகிறார்கள். வெவ்வேறு பெட்டிகளில், பயணித்த இவர்களுக்கு எப்படி எறியப்படும் பொருளின் தன்மை தெரிந்தது? இதனை அவர்களால் விளக்க முடியவே இல்லை.

'கரசேவகர்களின் இந்த வாக்குமூலங்களை முகப்பு மதிப்பு (முக தாட்சண்யம்) கருதி ஏற்றுக்கொள்ளலாமா? அதன் பதில் இல்லை. எஸ்–6 பெட்டியிலிருந்து தப்பித்த கரசேவகர்களின் வாக்குமூலங்கள் ஒரு சார்பானதாகவும், உள்ளபடியே தவறாகவும் உள்ளது.

**அதற்கான காரணங்கள் இவை :**

முதலில், நடைமேடையில் ஏற்பட்ட தகராறில் எஸ்–6 பெட்டியில் வந்த கரசேவகர்களும் மற்ற பெட்டிகளில் பயணித்த கரசேவகர்களும் ஈடுபட்டார்கள். இந்தச் சம்பவத்தை ராணுவ வீரர் பாண்டே வலியுறுத்தினார். அதை காவல்துறையும் பின்பு வழிமொழிந்துள்ளது. ஆனால் எந்த கரசேவகரும் தன் வாக்குமூலத்தில் நடைமேடைத் தகராறையோ, கடத்தல் முயற்சியையோ குறிப்பிடவே இல்லை. அவர்கள் நேரடியாக முஸ்லிம் கும்பலின் கல்லெறிதல் மற்றும் அதற்கான தூண்டுதலை ஆராய முற்படுகிறார்கள்.



அதைவிட படுமோசம் என்னவென்றால், காலத்தின் போக்கில் கரசேவகர்கள் தோதான வாக்குமூலங்களை நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு ஏற்ப தேவைப்படும் பொழுதெல்லாம் தயாரித்தார்கள். எப்பொழுதெல்லாம் காவல் துறை தீப்பிடித்ததற்கான புதிய புனைவுகளை கண்டுபிடித்துக் கொண்டு வருகிறதோ உடனே அது கரசேவகர்களை சந்திக்கும். உடனே புதிய புனைவிற்கு ஏற்ப புதிய வாக்குமூலங்கள் தயாரிக்கப்படும் – இதில் பல தங்கள் பழைய வடிவுகளின் நேரெதிர் பதிப்புகள்.

**நடுநிலை தவறாத கண் :** *எஸ்–6 பெட்டியில் நெருப்பின் தோற்றுவாய் எதனையும் கண்ட நடுநிலையான நபர்கள் யாரும் இருக்கிறார்களா? அவர்கள் கரசேவகர்களாக அல்லாது சாதாரண பயணியாக இருத்தல் வேண்டும்?*

அதற்கு பதில் ஆமாம் எஸ்–6 இல் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் இருந்தனர் – லல்லன் பிரசாத் சவுரஸ்சியா, அவரது மனைவி ஜான்கிபேன், அவர்களது 13 வயது மகன் கியான் பிரகாஷ் மற்றும் தித்திரியும் குஷாப். தங்

களது சொந்த ஊரானா அலகாபாத்துக்கு சென்றுவிட்டு சவுரஸ்சியா குடும்பத்தினர் திரும்பிக்கொண்டிருந்தனர்.

அவர்களுக்கு இரு இருக்கைகள் முன்பதிவு செய்யப்பட்டிருந்தன. எண்.8 மற்றும் 72, 72 ஆம் எண் இருக்கையை கரசேவகர்கள் ஆக்கிரமித்ததால், மொத்த குடும்பமும் 8 ஆம் எண் இருக்கையில் அமர்ந்து பயணித்தனர். பின்னர் அவர்கள் இருக்கை எண் 6க்கு மாறினார்கள். மார்ச் 4, 2002 அன்று அவர்களது 13 வயது மகன் கியான் பிரகாஷ் அளித்த வாக்குமூலத்தில், '' கல் எறிதலால் ஜன்னல் மற்றும் கதவுகளை பெட்டியிலிருந்தவர்கள் மூடியிருந்தார்கள். தொடர்ந்து கல் எறிதலின் விளைவாக ஜன்னல் அடைப்பு கண்ணாடிகள் உடைந்தன. இரும்பு ஜன்னலை மூடுவதற்கு முன் வெளியிலிருந்து எரியும் பொருள் உடனே உள்ளே வந்தது. பெட்டி யெல்லாம் கரும் புகை மண்டலமாக மாறியது. என் தங்கையின் மகன் ருஷாவை தூக்கிக்கொண்டு உடனடியாக பெட்டியை விட்டு வெளியேறும்படி அம்மாவிடம் கூறினேன். அந்த நேரம் நாங்கள் மேல்படுக்கையில் இருந்ததால் புகையால் எதையும் காண இயலவில்லை. எங்கள் பொருட்களை எல்லாம் விட்டு விட்டு ரயில்பெட்டியின் கதவை திறந்து நாங்கள் வெளியேறினோம். நான் என் அப்பாவை நெருங்கியதும், அவர் ருபாஷுடன் இறங்கிய போது யாரோ ருபாஷை பிடித்து பறித்ததாக கூறினார். நானும் என் அம்மாவும் எவ்வளவோ தேடியும் ருபாஷை காணவில்லை.'' கியான் பிரகாஷின் பெற்றோர் இருவரும் வெளியே இருந்து எறியும் பொருள் உள்ளே வந்ததும், அதன் பின் புகை மண்டலம் உருவானதையும் வலியுறுத்தினார்கள். சவுரசியா குடும்பத்தினர் எவரும் வெளியே இருந்த கும்பல் தீப் பற்றக்கூடிய எரிபொருட்களை அவர்கள் வைத்திருந்ததாகவோ, பார்த்ததாகவோ கூறவில்லை.

எரியத் தொடங்கிய ரயில் பெட்டியிலிருந்து தப்பித்து விட்ட லல்தா குமார் ஜாதவ், அந்த கும்பலை சேர்ந்தவர்கள் பெட்டியை எரித்ததை தான் பார்க்கவில்லை. ஆனால் அந்த கும்பலை சேர்ந்தவர்கள் எரியும் எஸ்–6 பெட்டியின் கீழ் புல் மற்றும் பஞ்சு போன்ற பொருட்களை வைத்து தீயிட்டதாக கூறுகிறார்கள். ஆனால் ஜாதவ், அவர்கள் கையில் எரிபொருட்கள், பிளாஸ்டிக் கலன்கள் என எதையும் பார்க்கவில்லை என்றார்.



**ஒன்பது பா.ஜ.க.வினர் பின்னர் காவல் துறை சாட்சியங்களாக மாறி, 41 முஸ்லிம்களை அடையாளம் காட்டினார்கள். அவர்களில் இருவர் சம்பவம் நடந்த அன்று ரயில் நிலையத்தில் இருந்திருக்கவில்லை என 'தெகல்கா'விடம் தெரிவித்தனர்.**

**விவாதத்திற்கான கேள்வி**

*இது தன்னியல்பாய் நடந்த கலவரமா அல்லது முன்திட்டமிடப்பட்ட கூட்டுச் சதியா?*

கரசேவகர்கள் முஸ்லிம் பெண்ணை கடத்த முயன்றது, முஸ்லிம் விற்பனையாளருடன் நிகழ்ந்த தகராறு, கைகலப்பு, விற்பனையாளர்கள் ரயில் மீது கல் எரிவது, பின்பு கும்பலின் பலம் பெருகியது மற்றும் ''யாரோ ரயில் பெட்டியுள் எரியும் கந்தல்களைப் போட, ரயில் நெருப்பிடப்பட்டது என இந்த சம்ப வங்களின் வாக்குமூலங்கள், நேரடி சாட்சியங்கள் ஆகியவற்றை தீர ஆராய் கிறபோது எஸ்–6 ரயில் பெட்டி எரிப்பு, கட்டுப்பாட்டை மீறச் சென்ற தன்னியல் பான மூர்க்கச் செயல் என தெளிவாகத் தெரிகிறது.

ஆனால் இந்த சம்பவங்கள் எது பற்றியும் விசாரிக்காமல் முதல்வர் நரேந்திர மோடி அன்று கோத்ராவை பார்வையிட்டு, இது ஒரு சமூகம் மற்றொரு சமூகத்தின் மீது நிகழ்த்திய முன் திட்டமிடப்பட்ட தீவிரவாத தாக்குதல் என்றார். சிலரின் குற்றச்செயல் ஒட்டுமொத்த சமூகத்தின் 'பாவ'மாக உருமாற்றப்பட்டது. ஆனால் அதற்கு எந்த விதமான சான்றோ, ஆதாரமோ இல்லை. ஆனால் குஜராத் மாநிலத்தை தலைமை தாங்குபவரே அப்படி கூறியதால், காவல் துறை ஆதாரங்களை தயாரிக்கும் மாபெரும் அணிவகுப்புப் பயிற்சியில் ஈடுபட்டது.

ரயில் எரிப்பு சம்பவம் கோத்ராவில் உள்ள முஸ்லிம் மதவாத அரசியல் தலைமையின் சதிச்செயல் என்பதை நிரூபிக்க, மூன்று ஆண்டுகள் பா.ஜ.க. அரசாங்கம் மற்றும் காவல்துறையினர் இணைந்த எல்லா வழிகளையும் தீர்த்துவிட்டது. அதிகாரம், பணம், அதனை நிரூபிக்க ஆட்கள் என இதனை நிரூபித்தால் தான் மோடியும் அவரது ஆட்களும் அதைத் தொடர்ந்து நடத்திய இனப்படுகொலைகளுக்கு நியாயம் கற்பிக்க முடியும்.

**உண்மையை தயாரித்தல் :** *கோத்ராவை சேர்ந்த முஸ்லிம் அரசியல்வாதிகள் அன்று கும்பலின் ஒரு பகுதியாக இருந்ததை நிரூபிக்க, கோத்ரா பா.ஜ.க. கட்சியின் கிளை உறுப்பினர்கள் 9 பேர் சாட்சியங்களாக உருமாறுகிறார்கள்.*

காவல் துறை, தீயணைப்புத் துறையினரை தவிர்த்து கலவரக் கும்பலை அடையாளம் காட்ட முன்வந்த முதல்

தன்னுரிமை சாட்சிகள் பா.ஜ.க.வை சேர்ந்த 9 பேர். இவர்களில் சிலர் கோத்ரா பா.ஜ.க.வின் முக்கிய தலைவர்கள். அங்கிருந்தவர்களில், இந்த 9 பேர் கோத்ராவை சேர்ந்த 41 முஸ்லிம்களை கும்பலில் இருந்தவர்களாக அடையாளம் கண்டனர். அவர்கள் அடையாளம் கண்ட 41 பேரில் – கோத்ரா பேரூராட்சியின் தலைவர் முகம்மது உசைன், கலோத்தா ஷேக், நான்கு முஸ்லிம் கவுன்சிலர்கள்– பிலால் ஹஜி, பரூக் முகம்மது பானா, சலீம் ஷேக் மற்றும் அப்துல் ரகுமான் – தான்டியா மற்றும் இரு முஸ்லிம் வழக் கறிஞர்கள் ரோல் அமின் உசைன், ஹபீப் கரீம் ஷேக்.

நமக்கு சட்டென எழும்பும் முதல் கேள்வி, இந்த 9 பா.ஜ.க.வினர் அங்கு ரயில் நிலையத்தில் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? அவர்கள் யாரும் சபர்மதி ரயிலில் பயணம் செய்திருக்க வும் இல்லை. கோத்ராவிலிருந்து வேறு ஊருக்குச் செல்ல ரயில் ஏறும் திட்டம் எதுவும் அவர்களிடம் இல்லை. அப்படி யென்றால் விடியற்காலையில் இவர் களுக்கு ரயில் நிலையத்தில் என்ன வேலை? அவர்களிடம் அதற்கு ஒரு விளக்கம் உள்ளது – அது அந்த 9 பேருக் கும் பொதுவானது. ''அயோத்திக்கு சென்ற கரசேவகர்கள் சபர்மதி ரயிலில் 27.2.2002 அன்று திரும்பி வந்து கொண் டிருந்ததால் அன்று காலை 6.30 முதலே அவர்களுக்கு வரவேற்பளித்து அத்து டன் தேநீர், திண்பண்டங்கள் அளிக்கக் காத்திருந்தோம்.'' இந்த 9 பேருமே அவர் களை வாழ்த்தி உபசரிக்க இருந்த சபர் மதி ரயிலில் வந்து கொண்டிருந்த 8 வி.எச்.பி. தலைவர்களின் பெயர்களை பட்டியலிடுகிறார்கள். சம்பவம் நடந்த 27.2.2002 அன்றே இவர்கள் 9 பேரின் வாக்குமூலங்களும் பெறப்பட்டன.

இந்த 9 பா.ஜ.க.வினர் துல்லியமாக எதைத்தான் கண்டார்கள்? அவர்கள் யாவற்றையும் பார்த்ததாக கூறுகிறார் கள். கும்பல் ஒன்று கூடியதை, கூர்மை யான முனைகொண்ட ஆயுதங்கள், எரி பொருட்களை எடுத்துச் செல்லுதல் மற்றும் ரயில் பெட்டியை மிகச்சரியாக தீயிடுதல். அந்த ஒன்பது பேரின் அல்லது வாக்குமூலங்கள் கூறுவது : ''காலை 7.45 மணிக்கு சபர்மதி ரயில் முதல் நடை மேடையை வந்தடைந்தது. எங்கள் போராளிகளை, நண்பர்களை மற்ற கர சேவகர்களை வரவேற்று விட்டு அவர் களுக்கு தேநீர், தின்பண்டங்கள் கொடுத் தோம். ரயில் கிளம்பியதும், ஜெய் சிறீ ராம் என முழக்கமிட்டு வழியனுப்பி வோம். அதன் பின் நாங்கள் எங்கள் பகு தியை சேர்ந்த நண்பர்களுடன் நடை மேடையில் உரையாடிக்கொண்டிருந் தோம். அந்த சமயம் சங்கிலி இழுக்கப் பட்டதால் ரயில் நின்றது. சிறிது நேரத் தில் ரயில் மீண்டும் புறப்பட்டது.

ரயில் 'ஏ' கேபினை வந்தடைந்த போது மீண்டும் சங்கிலி இழுக்கும் சத் தம் கேட்டது. அந்த திசையை நோக்கிப் பார்த்த போது, சிக்னல் பாலியாவி லிருந்து பெரும் ஓலத்துடன், 900–1000 பேர் கொண்ட பெருந்திரளான பெண் கள், ஆண்கள், குழந்தைகள் ரயிலை நோக்கி சென்றனர். நாங்கள் அனைவரும் ஏ– கேபின் அருகில் விரைந்தோம். சிக் னல் பாலியாவிலிருந்து வந்தவர்கள் வாள்கள், பிரம்புகள், இரும்புத்தடிகளு டன் வந்தனர். அவர்கள் ரயிலின் மீது தீவிரமாக கல் எறிந்தனர். ''கொல்லுங் கடாதாயிலி.. அந்த இந்துக்கள... கோயில் கட்டவா போரானுங்க... வெட்டுங் கடா அவனுங்கள...'' என அவர்கள் ஆத்திரத் துடன் கத்தினார்கள். அதிலிருந்து 5–6 பேர் பிளாஸ்டிக் கலன்களில் வைத்திருந்த திர வப் பொருளை ரயிலின் மீது தெளித்து, அந்த ஒரு பெட்டியை மட்டும் தீயிட்டார் கள். நாங்கள் அனைவரும் கேபினின் தாழ்வாரத்தில் நின்று விட்டோம்.

பா.ஜ.க.வினரின் 9 வாக்குமூலங் களில் உள்ள ஒரே வித்தியாசம், அவர்கள் வெவ்வேறு பட்டியல் குற்றவாளிகளை அடையாளம் கண்டிருப்பது மட்டுமே.

**''ஒவ்வொரு நாள் இரவும் காவல் துறையினர் என் காலின் மீது மர தடியை கிடத்தி அதன் மீது நடப்பார்கள்'' – *இலியாஸ்***
**''என் மீது பல முறை மின்சாரம் பாய்ச்சினார்கள்'' – *கலந்தர்***

### இந்த ஒன்பது பா.ஜ.க. உறுப்பினர்களும் யார்?

***ககுல் குமார் பதாக் :*** நித்தின் குமார், ஹரி பிரசாத் பாதக்கின் மகனான ககுல். கோத்ராவின் பாம்ரோலி சாலையில் உள்ள துவாரகா நகரில் வசிக்கிறார். அவர் 1988 இல் பா.ஜ.க.வில் இணைந் தார். கட்டடத் தொழிலில் இருந்து கொண்டே அவர் எப்போதும் பா.ஜ.க. கோத்ரா கிளையின் முக்கிய உறுப்பின ராகத் திகழ்ந்தவர். அவர் இருமுறை பா.ஜ.க.வின் அமைப்பான யுவ மோர்ச்சா (இளைஞர் அணி) வின் கோத்ரா கிளைச் செயலாளராக நியமிக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து அவர் கோத்ரா நகர பா.ஜ.க.வின் துணை செயலாளர் ஆனார். தற்சமயம் அவர் வட்டப் பஞ்சாயத்து உறுப்பினர் மற்றும் கோத்ரா பா.ஜ.க.வின் ஊடகப் பிரிவு ஒருங் கிணைப்பாளர்.

***முரளிதர் ரோசிராம் மூல்சந்தானி :*** 37 வயதுடைய மூல்சந்தானி ஜிலிலல் பாலியாவில் வசிப்பவர். கோத்ராவின் குறிப்பிடத் தகுந்த வியாபாரப் பிரமுகர். அவர் மூத்த பா.ஜ.க. செயல்பாட்டாளர். கோத்ரா சம்பவத்துக்கு இரண்டு ஆண்டு களுக்கு முன்பு கவுன்சிலர் தேர்தலில் அவர் தோல்வியுற்றார். தற்போது அவர் கோத்ரா பேரூராட்சியின் துணைத் தலைவர்.

***ஜானக்பாய் காண்தீலால் தவே :*** 35 வயதுடைய தவே, கோத்ரா அருகில் உள்ள சம்லி கிராமத்தில் வசிப்பவர். அவர் ஒரு கட்டட ஒப்பந்தக்காரர். பா.ஜ.க. கோத்ரா கிளை உறுப்பினர்.

***ராஜேஷ்பாய் விட்டல்பாய் தர்ஜி :*** 43 வயதுடைய தர்ஜி, கோத்ராவில் உள்ள ஜிஹாபுரா காய்கறி சந்தை அருகில் உள்ள சரிமாலி சேரியில் வசிப்பவர். அவர் பா.ஜ.க.வின் இணக்கமான வியாபாரி. கோத்ரா சம்பவத்துக்கு ஓராண்டுக்கு முன்பாக கோத்ரா பேரூராட்சித் தலை வர் பதவியிலிருந்து விலக நேர்ந்தது. புதிய தலைவர் கலோதா மற்றும் முஸ் லிம் கவுன்சிலர்கள் அவரை தோற்கடித் தார்கள். இப்போது பஞ்ச்மகால் மாவட்ட பா.ஜ.க. தலைவராக உள்ளார்.

***திலிப்பாய் உஜம்சிபாய் தசதீயா :*** 9 வயதுடைய தசதீயா வியாபாரி, கோத்ராவின் பிரபா சாலையில் வசிக் கிறார். இப்போது அவர் பா.ஜ.க.வின் கோத்ரா நகர தலைவர்.

***தீலிப்பாய் நாகின்தாஸ் சோனி:*** நகைக்கடை வைத்திருக்கும் 49 வயது

டைய சோனி, கோத்ராவின் சோனிவாடியில் வசிப்பவர். கோத்ரா சம்பவம் நிகழ்ந்தபோது அவர் பா.ஜ.க.வின் கவுன்சிலர்.

**ஹஸ்முக்பாய் தெஜர்தாஸ் அத்வானி:** 49 வயதுடைய அத்வானி, விவசாயம் சார்ந்த வியாபாரம், பரமஹம்சர் சொசைட்டியில் வசிக்கும் இவர் பா.ஜ.க. உறுப்பினர்.

**சந்திரசேகர் நச்சுராம் சோனையா :** 43 வயதுடைய சோனையா, விவசாயம் சார்ந்த வியாபாரம், பரமஹம்ச சொசைட்டியில் வசிக்கும் இவர் பா.ஜ.க. உறுப்பினர்.

**மனோஜ் ஹிராலால் அத்வானி :** 29 வயதுடைய அத்வானி வசிப்பது கோத்ராவின் பிரபா ரோடு. அவரும் பா.ஜ.க.உறுப்பினர்.

**தகித்துக்கொண்டிருக்கும் போட்டிகள் கோத்ராவின் அரசியல் நிலவரம்**

கோத்ரா நகரம் 12 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வார்டும் 3 கவுன்சிலர் பதவிகளைக் கொண்டது. டிசம்பர் 1999இல் கோத்ரா பேரூராட்சித் தேர்தல் நடந்தது. பா.ஜ.க. 11 இடங்களில் வென்றது. சுயேட்சையான முஸ்லிம் வேட்பாளர்கள் 16 இடங்களில் வென்றனர். காங்கிரஸ் 5 இடங்கள் மற்றும் 4 சுயேட்சைகள். இவர்கள் நால்வரும் பா.ஜ.க. மீது அனுதாபம் கொண்டவர்கள்.

கோத்ரா பேரூராட்சியின் துணைத் தலைவர் முரளி மூல்சந்தானி தேர்தலில் தோல்வியடைந்தார். பேரூராட்சியை கைப்பற்ற உங்களுக்கு தேவை 19 இடங்கள். பா.ஜ.க. பேரூராட்சியை கைப்பற்றியது. அய்ந்து காங்கிரஸ் உறுப்பினர்கள் மற்றும் மூன்று சுயேட்சை முஸ்லிம்களின் துணையுடன் பா.ஜ.க. அதை செய்தது. பா.ஜ.க. கவுன்சிலர் ராஜீ தர்ஜி (இவர் ரயில் எரிப்பில் சாட்சி) தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பா.ஜ.க. கவுன்சிலர் தீபக் சோனி (இருவரும் 2இல் ஒருவர்) அந்தப் பேரூராட்சியின் கல்விக்குழு தலைவராக நியமிக்கப்பட்டார்.

ஓராண்டு கழித்து, 24 கவுன்சிலர்கள் –16 முஸ்லிம்கள், 5 காங்கிரஸ், 3 சுயேட்சை இந்து உறுப்பினர்கள் என இவர்களுக்கு பா.ஜ.க.வுடன் ஏற்பட்ட முரண்பாட்டால் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்தனர். பா.ஜ.க. தோல்வியை தழுவியது. இந்த 24 பேரும் கலோதாவை பேரூராட்சித் தலைவராக தேர்வு செய்தனர். நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்பட்ட அன்று நடந்த விவாதத்தின் போது முஸ்லிம் கவுன்சிலர் பிலால் ஹாஜி, பா.ஜ.க. கவுன்சிலர் ராஜீ தர்ஜியை அடித்துவிட்டார். அவர் மீது குற்றவியல் புகார் அளிக்கப்பட்டது. 2002இல் சபர்மதி ரயில் எரிப்பில் 59 இந்துக்கள் கொல்லப்பட்டதும், ராஜீ தர்ஜி, தீபக் சோனி மற்றும் முரளி மூல்சந்தானி ஆகியவர்கள் வேறு 6 பா.ஜ.க. வினருடன் இணைந்து தாங்கள் கரோடா, பிலால் ஹாஜி மற்றும் வேறு மூன்று கவுன்சிலர்களும் ''ரயிலை தாக்கிக்கொண்டிருந்ததை'' பார்த்ததாக சாட்சியம் அளித்தனர்.

> **ஒன்பது பா.ஜ.க.வினர் மற்றும் பல கரசேவகர்கள் அளித்த – வாக்குமூலங்கள் அனைத்தும் சுத்தப் பொய் என குஜராத் மாநில அரசின் தடயவியல் துறையின் அறிக்கை அம்பலப்படுத்தியது.**

**ஏமாற்றப்பட்டவர்களும் மீளாத தண்டனைக்குரியவர்களும், ஒன்பது பா.ஜ.க.வினரால் குற்றம் சாட்டப்பட்ட 41 நபர்கள் மற்றும் குகல்குமார், பாதக் அடையாளம் கண்ட குற்றம் சாட்டப்பட்டவர்களின் நிலை :**

பாதக், கூட்டத்தைச் சேர்ந்த 6 பேரை அடையாளம் கண்டார். எல்லோருமே கொடிய ஆயுதங்கள் வைத்திருந்ததாகவும் ''அவர்கள் ரயில் பெட்டியை அல்லா ஹூ அக்பர் என முழங்கிக் கொண்டே தாக்கினார்கள்'' இப்படியாக அவர்கள் பெரும் அச்சத்தை ஏற்படுத்தினார்கள் என்றும் கூறினார்கள் (இந்த ஒரே சொல்லைத்தான் பா.ஜ.க.வினரும் மாற்றமின்றி பயன்படுத்தியுள்ளனர்). அந்த ஆறு குற்றம் சாட்டப்பட்டவர்களும் இங்கே.

**ரோல் அமின் உசைன் ஹதில்லா :** வழக்கறிஞரான இவர் கடந்த அய்ந்து ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்.

**சித்திக் இப்ராஹிம் ஹதில்லா :** ரோல் அமனின் சகலையான இவர் வியாபாரம் செய்பவர். கோத்ரா சம்பவத்திலிருந்து இன்று வரை தலைமறைவு.

**முகம்மது காலு :** வயது 65. வியாபாரம். சூலை 2002 முதல் பிணையில் வெளியே உள்ளார்.

**இஸ்மாயில் யுசூப் சுங்கா :** வியாபாரம். பாதக் பின்னர் பெயரை இஸ்மாயில் யுசூப் சங்கா என மாற்றினார். இந்த பெயருடைய யாரையும் போலிசாரால் கண்டுபிடிக்க இயலவில்லை. சுங்கா சம்பவம் நடந்ததில் இருந்து தலைமறைவாக உள்ளார்.

**இப்ராகிம் ஆதம் தாண்டியா :** வியாபாரம், தலைமறைவு.

**உஸ்மான் அப்துல்கனி காபிவாலா :** லாரி ஓட்டுநர். கடந்த அய்ந்து ஆண்டுகளாக கம்பிகளுக்குப் பின்னால்.

**மூல சந்தானி அடையாளம் கண்ட குற்றம் சாட்டப்பட்டவர்கள் மற்றும் அவர்களது இன்றைய நிலை :**

**முகம்மத் உசைன் அப்துல் ரகீம் கலோதா ஷேக் :** அந்த சமயத்தில் கோத்ரா பேரூராட்சித் தலைவர். மாவட்ட காங்கிரஸ் தலைவர் மார்ச் 4, 2002 முதல் சிறைவாசம்.

**பிலால் ஹாஜி :** போக்குவரத்து நிறுவனம் வைத்திருப்பதைவிட கவுன்சிலர் என்கிற அடையாளத்தை விரும்பும் இவர், பேரூராட்சியில் பா.ஜ.க.வின் கடும் எதிரி. கடந்த 5 ஆண்டுகள் சிறையில்.

**பரூக் முகம்மது பானா :** அரசாங்க ஒப்பந்தக்காரர், கவுன்சிலர், தலைமறைவு.

**கரீம் உசைன் பாதாம் :** போக்குவரத்து நிறுவனம், பாதம் மற்றும் மூல சந்தானிக்கு இடையில் கடும் தொழில் போட்டி நிலவியது. இருவரும் பல வழக்குகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறார்கள். 2004இல் கைது செய்யப்பட்டது முதல் சிறை.

**ரவுப் அப்துல் மஜீத் கம்லி :** தேநீர் விற்பனையாளர், 5 ஆண்டுகளாக சிறையில்.



**புதிய விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்ட நியால் பர்மர், அவரது முஸ்லிம் எதிர்ப்பு மனோபாவத்தையும் அவர் நடுநிலையான அதிகாரி இல்லை என்பதையும் – 'தெகல்கா'வுடனான தனது உரையாடலில் வெளிப்படுத்தினார்.**

***ஹபீப் படேல் (எ) ரபீக் :*** லாரி கிளீனர், பிணையில் வெளியே உள்ளார்.

***சலீம் ஷேக் :*** கவுன்சிலர், முன்னாள் துணைத் தலைவர் கோத்ரா பேரூராட்சி, வெளியே பிணையில்.

***தவே அடையாளம் கண்ட குற்றம் சாட்டப்பட்டவர்கள் மற்றும் அவர்களது இன்றைய நிலை :***

***இத்ரிஸ் யுசூப் ஹசன் (எ) ரவன் :*** லாரி ஓட்டுநர். கைது முதல் சிறையில்

***அயுப் அப்துல் கனி படாலியா :*** தேநீர் விற்பனையாளர், தலைமறைவாக அறிவிக்கப்பட்டவர்.

***யாகுப் சத்தார் சக்லா :*** போக்குவரத்து நிறுவனம். பிணையில் சூலை 2002 முதல்.

***ஹனிப் பாதுக்(எ) சம்ரா :*** பிக்பாக்கெட் (வழிப்பறி) தலைமறைவாக அறிவிக்கப்பட்டவர்.

***ரஹீஸ் உசைன் மித்தா :*** ரயில் நிலையத்தில் தேநீர் விற்பனையாளர். தலைமறைவாக அறிவிக்கப்பட்டவர்.

***தர்ஜி அடையாளம் கண்ட குற்றம் சாட்டப்பட்டவர்கள் மற்றும் அவர்களது இன்றைய நிலை :***

***ஹபிப் பாதுஷா பின்யாமின் பெஹ்ரா :*** பிக்பாக்கெட், சிறையில்.

***ஹரூன் அப்துல் ஹமீத் தாவோ :*** சூதாட்ட விடுதியை நடத்துபவர். அவர் காவல் துறை சாட்சியாகவும் பணிபுரிகிறார். தர்ஜி தனது வாக்குமூலத்தை மாற்றி பின்னர் அது ஹரூன் அப்துல் மஜித்தாவோ, அமித்தாவோ அல்ல என்றார். பின்னர் காவல் துறை மஜீத் தாவோவை கைது செய்தது. ஆனால் தர்ஜியால் அடையாள அணிவகுப்பில் அடையாளம் காண இயலவில்லை. பின்னர் அது வேறு ஒரு மஜித் தாவோ என்றார்.

***ரபீக் முகமத் கலந்தர்போபா :*** லாரி ஓட்டுநர், சிறையில்.

***அகமத் யுசுப் ஹசன் (எ) லத்திகோ :*** ரயில் நிலையத்தில் வாழைப்பழ விற்பனையாளர். அவர் இறந்துவிட்டார்.

***சிராஜ் அப்துல்லா ஜம்சாய் :*** போக்குவரத்து, மருத்துவக் காரணங்களால் பிணை வழங்கப்பட்டது. அவர் இறந்துவிட்டார்.

***சவுகத் ஷேக் :*** லாரி ஓட்டுநர் பிணையில் வெளியே.

***தசதியாவின் வாக்குமூலத்தில் உள்ளவர்கள் மற்றும் அவர்களது இன்றைய நிலை :***

***ரஜக் துங்கரியா :*** கோத்ராவில் சிமெண்ட் ஆலை வைத்திருந்தவர். பிப்ரவரி 14, 2003 முதல் பிணையில்.

***சயித் பாதாம் :*** கொலைக் குற்றத்தில் கீழ் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட

இவர் பரோலில் வெளியே இருந்தார். (பின்னர் அவரை உச்ச நீதிமன்றம் வழக்கிலிருந்து விடுவித்தது) கைது முதல் சிறையில்.

***பூபத் சபீர் அப்துல் ரகீம் பாதாம் (எ) புபந்தோ புரியோ :*** சயித் பாதாமின் சகலை, அவரும் கொலைக் குற்றத்தில் தண்டிக்கப்பட்டு உச்சநீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டவர். கைது முதல் சிறையில்.

***முசாபர் உஸ்மான் அயாத் :*** விவசாயி, கடந்த அய்ந்து ஆண்டுகள் சிறையில்.

***இலியாஸ் சிக்கந்தர் கோதேலீ (எ) மோடோ சிகல் :*** பிக்பாக்கெட், கடந்த அய்ந்து ஆண்டுகள் சிறையில்.

***முல்சந்தானியால் அடையாளம் காணப்பட்ட குற்றம் சாட்டப்பட்டவர்கள் மற்றும் அவர்களது இன்றைய நிலை :***

***முகம்மத் முசாரப் :*** ராஜஸ்தான் மாநில நகாதா மாவட்டத்தைச் சேர்ந்தவர். சம்பவம் நிகழ்ந்த போது நடைமேடை எண் 2 இல் இருந்த ரயிலில் இருந்தவர். இந்த கொந்தளிப்பான நிலையை காண ரயிலை விட்டு இறங்கியதில் ரயிலை தவறவிட்டார். கைது முதல் சிறையில்.

***அபீப் கரீம் :*** வழக்கறிஞர். பிப்ரவரி 14, 2003 முதல் பிணையில்.

***முகம்மத் இப்ராகிம் :*** லாரி ஓட்டுநர், பிணையில் வெளியே.

***உசைன் அப்துல் சத்தார் :*** சாக்பீஸ் குச்சி தயாரிப்பவர் பிணையில் வெளியே.

***ஹஸ்முக்லால் தெஜர்தாஸ் அத்வானியால் அடையாளம் கண்ட குற்றம் சாட்டப்பட்டவர்கள் மற்றும் அவர்களது இன்றைய நிலை :***

***அப்துல் கனி அகமத் :*** லாரி ஓட்டுநர், பிணையில் வெளியே.

***ஜபீர் அப்துல்லா :*** லாரி உரிமையாளர், பிணையில் வெளியே.

***அப்துல் ரவுப் அகமத் யயாமன் :*** லாரி உரிமையாளர் கைது முதல் சிறையில்.

***சோனையாவால் அடையாளம் கண்ட குற்றம் சாட்டப்பட்டவர்கள் மற்றும் அவர்களது இன்றைய நிலை :***

***அகமத் அப்துல் ரகீம் :*** சிறிய மாவு மில்லை வைத்திருப்பவர். அக்டோபர் 13, 2004 முதல் பிணையில் வெளியே.

***ஹரூன் கோதா (எ) தயப் :*** லாரி கிளீனர், கைது முதல் சிறையில்.

***அசிப் காதல் (எ) பாபு :*** மாணவர், கைது முதல் சிறையில்.

***மனோஜ் அத்வானியின் வாக்கு மூலத்தில் உள்ளவர்கள் மற்றும் அவர்களது இன்றைய நிலை :***

***அன்வர் உசைன் :*** இரும்பு வெல்டர், கைது முதல் சிறையில்.

***முகம்மத் அப்துல் சலாம் :*** கோத்ரா போக்குவரத்து நாணய சங்கத்தில் எழுத்தர் வேலை. அந்த நாட்டுறவின் தலைவர் கலோதா சிறையில்.

பிக்பாக்கெட், லாரி ஓட்டுநர்கள் உள்பட இந்த 41 பேரையும் அடையாளம் காண இயலும் என பா.ஜ.க.வைச் சேர்ந்த இந்த 9 பேரும் கருதினார்கள். ஏனென்றால், இவர்கள் அனைவரும் கோத்ராவை சேர்ந்தவர்கள். அதில் திலீப் தசதீயா மட்டும் பின்னர் தனது வாக்குமூலத்திலிருந்து பின் வாங்கி, தான் கோத்ரா சம்பவத்தன்று ஊரிலே இல்லை என்றார். மற்ற 8 பேரும் அவர்களது கதையில் கச்சிதமாக நின்றனர். இருப்பினும் சாகுல்காதக் மற்றும் ராஜீ தர்ஜி மட்டும் தாங்கள் தெரிவித்த பெயர்களில் சிறு சிறு மாற்றங்களை செய்தனர். இஸ்மாயில் சுங்கா வை சுங்கியா என்று மாற்றினர். பாதக், ஹரூன் மஜித் தாவுவை ஹரூன் தாவு என்றார் தர்ஜி.

ஒன்பது பா.ஜ.க.வினரை தவிர்த்து போலிசார் வேறு, இந்து விற்பனையாளர்களின் வாக்குமூலங்களைப் பெற்றனர் வினோத் சவுகான், அரவிந்த் சோலங்கி மற்றும் ரமேஷ் கோலங்கி. இவர்கள் ரயில் நிலையத்தில் பஜ்ஜி விற்பவர்கள். கல் எறிதல் தொடங்கிய போது பால் வாங்க ராஜக் கர்குரின் கடைக்குச் சென்றிருந்ததாக கோருகிறார் விநோத் சவுகான். ''அப்போது ஆண்கள், பெண்கள் குழந்தைகள் அடியுங்கள்...அடியுங்கள் என கத்திக்கொண்டே ஏ–கேபின் திசையில் சபர்மதி ரயிலை நோக்கி ஓடினார்கள். பாலை கொடுத்து விட்டு கடையை அடைத்து ராஜாக் குர்குர் ஏ–கேபின் அருகே ஓடினார். சுற்று சுவற்றில் இருந்த துவாரத்தின் வழியே நான் ரயில்வே தண்டவாளத்தை வந்தடைந்தேன்.'' ஆறு முஸ்லிம் விற்பனையாளர்கள் ரயில் நிலையத்திலிருந்து ரயில் நின்றிருந்த ஏ–கேபின் திசையில் ஓடியதாகவும் தெரிவிக்கிறார். கவுஹான் மற்றும் இரண்டு பஜ்ஜி விற்பனையாளர்களும் இந்த கூற்றை ஆமோதித்திருக்கிறார்கள்.

புலனாய்வின் போக்கில் ரஜாக் குர்குர் முக்கியமானவராக மாறினார். அவர் நடத்திய கடையில் பல பொருட்கள் கிடைக்கும். பால், சிகரெட், வெற்றிலை, துணிகள், பாத்திரங்கள். இவரது கடையின் முக்கிய வாடிக்கையாளர்களே ரயில் நிலையத்தின் முஸ்லிம் விற்பனையாளர்கள். குர்குரின் கடையின் மேல் தளத்தில் அவர் தங்கும் விடுதி கட்டி யிருந்தார். அது, அமன் விருந்தினர் இல்லம். அங்குதான் லாரி ஓட்டுநர்கள் தங்குவார்கள்.

**குஜராத்தின் மொத்த குடிமைச் சமூகத்தையும் இந்த சபர்மதி ரயில் எரிப்புச் சம்பவத்தால் – இந்து சமூகம் ஆபத்துக்குள்ளானதை உணர வைக்க, நரேந்திர மோடி சகல ஊடகங்களையும் தந்திரமாகப் பயன்படுத்தினார். முஸ்லிம்கள் மீதான வன்மத்தை குஜராத் வெளியெங்கும் பரப்பினார்.**

### முதல் பறிமுதல்

சம்பவ இடத்தில் சேகரிக்கப்பட்ட மாதிரிகள் பரிசோதனைக்காக ஆய்வுக்கு (சட்டம் சார்ந்த) அனுப்பப்படுகிறது.

எஸ்–6 ரயில் பெட்டிக்கு வெளியே கிடக்கும் பொருட்களின் பட்டியல் 27.2.2002 அன்று மதியம் 1–3 மணிக்குள் செய்து முடிக்கப்பட்டது. அதில் மின்சார கம்பம் எண்.468/36க்கு கிழக்காக, கம்பம் எண்.468/35க்கு வடக்காக மூன்று சிமெண்ட் செருப்புகள் கிடந்தன. பின்பு காவல் துறையினர் மூன்று பிளாஸ்டிக் கேன்களை கைப்பற்றினர்– பத்துலிட்டர் கொள்ளளவு கொண்ட வெள்ளை கேன்–1, கருப்பு – 2 இவை மல்லா கேரேஜ் என்கிற வாகன பழுது பார்க்கும் கடை அருகில் பிப்ரவரி 27 அன்றே பறிமுதல்

செய்யப்பட்டது. அவை காந்திநகரில் உள்ள தடயவியல் ஆய்வுக் கூடத்திற்கு அனுப்பப்பட்டன.

சபர்மதி ரயில் எரிந்த சில மணி நேரத்துக்குள் மல்லா கேரேஜ் அருகே நின்ற சில லாரிகளை கரசேவகர்கள் தீயிட்டு கொளுத்தியதை இங்கே நாம் முக்கிய கவனத்தில் கொள்ளவேண்டும். ரயிலில் பயணித்த கரசேவகர்களின் பொறுப்பாளரான வி.எச்.பி. அகமதாபாத் நகர தலைவர் ராஜேந்திர வியாஸ் மேற்கூறிய கூற்றை ஒப்புக் கொள்கிறார். பிப்ரவரி 27 அன்று கரசேவகர்களுடன் இணைந்து அந்த கேரேஜை கொளுத்தியதாக 'தெகல்கா' செய்தியாளரின் பதிவில் வியாஸ் கூறியுள்ளார். இவற்றைப் பார்க்கும் போது, அந்த கேரேஜ் அருகில் கைப்பற்றப்பட்ட பிளாஸ்டிக் கேன்கள் எதற்கு பயன்பட்டவை என்கிற கேள்வி எழுகிறது – லாரியை எரிக்கவா, ரயிலை எரிக்கவா? எப்படியோ எரிக்கவே அது பயன்பட்டுள்ளது.

வந்ததால், உள்ளே இருந்து பெறப்பட்ட மாதிரிகளின் மீதான அறிக்கை நம்பத்தகுந்ததாக இல்லை. அதனால் பிப்ரவரி 28 ஆம் தேதி பெட்டிக்கு உள்ளே இருந்து சேகரிக் கப்பட்ட மாதிரிகள் மாற்றப் பட்டவையாகவோ, பின்பு வைக்கப் பட்டவையாகவோ இருக்கலாம். ஏற்கனவே வி.எச்.பி. தலைவர் ராஜேந்திர வியாஸ் கரசேவகர்களுடன் சேர்ந்து லாரிகள், மல்லா கேரேஜை ரயில் எரிந்து சில மணி நேரங்களில் எரித்ததாக ஒப்புக் கொண்ட பிறகு, ரயில் தண்டவாளம் அருகே சேகரிக்கப்பட்ட அந்த பிளாஸ்டிக் கேன்களின் நம்பகத்தன்மை சிதைந்து விட்டது.

தீர்வுக்குரியதாக, ஏப்ரல் 26, 2002 நாளிட்ட டி.பி. தலாதியின் அறிக்கையில் அவரால் எஸ்–6 பெட்டிக்கு உள்ளும் வெளியிலும் இருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளில் இருந்த பெட்ரோலும் (மார்ச் 20, 2002 நாளிட்ட தடய அறிவியல் சோதனை அறிக்கை) காலா பாயின் பெட்ரோல் பம்பிலிருந்து பெறப்பட்டதும் ஒன்றுதானா என அறுதியிட்டுக் கூற இயலவில்லை. இரண்டாவதாக மே 1, 2002 அன்று மீண்டும் எஸ்–6 பெட்டிக்குள் இருந்து ஏராளமான மாதிரிகள் (370 கிலோ) சேகரிக்கப்பட்டு, மீண்டும் தடவியல் சோதனைக்கு அனுப்பப் பட்டது. ஆனால் மே 17, 2002 நாளிட்ட தடவியல் அறிவியல் சோதனை அறிக்கை, உள்ளே இருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளில் பெட்ரோலின் தடயமே இல்லை என்றது. (இந்த தடவியல் அறிவியல் சோதனை அறிக்கையை 'தெகல்கா' வுக்கு அகமதாபாத்திலிருந்து இயங்கும் 'ஜன் சங்கர்ஸ் மஞ்ச்', தொண்டு நிறுவனம் அளித்தது)

**காவல் துறையின் அதிசய வெளியீடாய் திடீரென மேடையேற்றப்பட்டார் இந்து தேநீர் விற்பனையாளரான அஜய் பாரியா, தன்னை ஒன்பது. அவர், முஸ்லிம் விற்பனையாளர்களும் வற்புறுத்தி, பெட்ரோல் கேன்களை வாகனத்தில் ஏற்றச் சொன்னதாக வாக்குமூலம் அளித்தார்.**

எஸ்–6 ரயில் பெட்டிக்குள் கிடந்த பொருட்களின் பட்டியல் அடுத்த நாள் (பிப்ரவரி 28) மாலை 5.45 – 7.35 க்குள் எடுத்து முடிக்கப்பட்டது. ஒன்பது படுக்கை தடுப்புகள், கழிவறை என எரிந்து எஞ்சிய மாதிரிகளை சீல் வைத்து தடவியல் சோதனைக்கு அனுப்பினார்கள். உள்ளே வெளியே என இந்த இரு தடவியல் சோதனை அறிக்கைகள் மார்ச் 20, 2002 (Report No. FSL/EE/2002/C/287) அன்று வந்தது. இந்த அறிக்கையை தயாரித்தவர் டி.பி. திலாதி, அகமதாபாத்தில் உள்ள தடவியல் அறிவியல் சோதனைச்சாலையின் துணை இயக்குநர். 25 மாதிரிகளில் பெட்ரோலின் தடயங்கள் உள்ளதாக (9 வெளியே, 16 உள்ளே) தெரிவித்தார். மற்ற 20 மாதிரிகளும் எந்தவித கரிபடிந்த தன்மைகளை வெளிப்படுத்தவில்லை.

நூற்றுக்கணக்கான பார்வையாளர்கள், அமைச்சர் மற்றும் முதல்வர் நரேந்திர மோடி உள்பட தொடர்ந்து அந்த சம்பவ இடத்தைப் பார்வையிட்டது மட்டுமின்றி எஸ்–6 பெட்டிக்குள் சென்று

**அறிவியலும் புனைவும் :** *தடவியல் அறிக்கை வருகிறது. அது பல சதி கோட்பாடுகளைத் தகர்க்கிறது. ஆனால் புதிய ஒன்றை நிறுவுகிறது.*

குஜராத் மாநில அரசின் தடய அறிவியல் ஆய்வுக் கூடம், தனது முதல் அறிக்கையை மே 17, 2002 அன்று வெளியிட்டது. அது கூறும் சில தீர்மானங்கள் இங்கே :

❖ எரிந்து கருகிய எஸ்–6 பெட்டியில் தெற்கு வெளிப்புற பகுதியில் ஏராளமான தடயங்கள் கல் வீச்சினால் ஏற்பட்டுள்ளது. பெட்டிக்குள் கண்ணாடி சில்லுகள் மற்றும் கற்கள் ஏராளமாக சிதறிக்கிடக்கின்றன. பெட்டியின் தெற்குப் பகுதியில் உள்ள ஜன்னல்கள் கல் எறிதலால் உடைந்திருக்கலாம். ஆனால், வடபகுதி ஜன்னல்கள் கடும் நெருப்பினால் உடைந்து போனதாக ஊகிப்பது பாதுகாப்பானது.

❖ பெட்டியின் கிழக்கு பக்கம் பற்றிய நெருப்பு, அதன் பிறகு மேற்குப் பக்கம் சென்றுள்ளதாகத் தெரிகிறது.

❖ பெட்டிக்குள் நெருப்பு கீழ்–மேல் திசையில் மிக அடர்ந்து 80 சதவிகிதம் வரை காணப்படுகிறது. மற்ற பகுதியில் அது 20 சதவிகிதம் அடர்ந்தும் காணப் பட்டது.

❖ நெருப்பில் எந்த வித அரிக்கும் தன்மையுடைய அமிலங்களும் பயன் பட்டதற்கான தடயமேயில்லை.

❖ தீப்பற்றி எரியும் சமயத்தில் பெட்டியின் ஜன்னல்கள் மூடப்பட்டிருந்ததாகத் தெரிகிறது.

❖ ரயில் நின்றிருந்த இடத்தில் அதன் ஜன்னல்கள் தரையிலிருந்து 7 அடி உயரத்தில் இருந்தது. இந்த சூழ்நிலைமைகளை வைத்துப் பார்த்தால், அந்த இடத்தில் தரையில் நின்று வாளியால் அல்லது கேன் இலிருந்து எரிபொருளை ரயிலின் மீது வீசுவது சாத்தியமற்றது. அப்படி செய்தால் அதன் பெரும் பகுதி வெளியே தான் வந்து விழும். அப்படியே நடந்திருந்தாலும் அந்த திரவத்தின் பெரும் பகுதி, அந்த இடத்தைச்சுற்றிலும் தண்டவாளங்களில் விழுந்திருக்க வேண்டும். அங்கும் தீப்பற்றி பெட்டியின் வெளிப்புறங்களும், அடிப்பகுதியும் தீப் பற்றியிருக்க வேண்டும். தண்டவாளங்களையும், பெட்டியையும் சோதித்த போது, அப்படியான எந்த விளைவும் பெட்டியின் மீது இருந்திருக்கவில்லை. பெட்டி எரிந்த பாங்கு மற்றும் மேற் சொன்ன தரவுகளின் அடிப்படையில் பார்த்தால், நாம் ரயிலுக்கு வெளியே



இருந்து எந்த எரிபொருட்களும் திரவங்களும் ரயிலுக்குள் எறியப்படவில்லை என்ற முடிவுக்கு வரமுடியும்.

❖ பெட்டிகளை இணைக்கும் வாயில்களின் வழியாகக்கூட எந்தவித திரவ எரிபொருளையும் பெட்டிக்குள் எறிந்திருக்க வாய்ப்பில்லை.

9 பா.ஜ.க.வினரும் பல கரசேவகர்களும் தங்கள் வாக்குமூலங்களில் கோரிய அனைத்தையும் அந்த மாநிலத்தின் தடயவியல் அறிக்கை பொருத்தமற்றதாகி விட்டது. அங்கே அமில பல்புகள், திரவ எரிபொருள் என எதுவும் வெளியே இருந்து வந்ததற்கான தடயங்கள் எதுவும் இல்லை.

இங்கே ஆர்வமான திருப்பம் எதுவென்றால், அந்தக் குழு ஒரு சோதனையை செய்வது என முடிவெடுத்தது. ''பெட்டியின் கிழக்குப் பகுதியில் உள்ள வட கதவுக்கும் பெட்டியை இணைக்கும் பகுதிக்கும் நடுவே நின்று கொண்டு, வாளியைப் போன்ற பெரிய வாய் உடைய ஒரு கலனிலிருந்து தண்ணீர் மேற்கு திசையில் ஊற்றப்பட்டது. இதில் பெட்டியின் பெரும் பகுதி இந்த 60 லிட்டர் தண்ணீரில் சூழ்ந்தது. ஆனால் இவ்வகையில் தண்ணீர் ஊற்றப்பட்டதில் தண்ணீர் மேற்கு திசையில் தான் சென்றது. அது கதவு பக்கமோ, கழிவறை பக்கமோ செல்லவேயில்லை'' – அறிக்கை இவ்வாறு கூறுகிறது.

### இந்த சோதனையிலிருந்து அவர்கள் எந்த முடிவை அடைந்தார்கள்?

''நாங்கள் நடத்திய மேற்கூறிய சோதனையில் 60 லிட்டர் திரவ எரிபொருள் பெட்டியின் மேற்கிலிருந்து பெரிய வாய் கொண்ட வாளியால் ஊற்றப்பட்டது. அது எஸ்–6 பெட்டியின் கிழக்குப் பக்கம் உள்ள வடகதவு அருகில் இருக்கும் இணைப்பு வழியில் நின்று ஊற்றப்பட்டது. உடனே பெட்டி தீயிடப்பட்டது. கோத்ரா ரயில் நிலையத்திலிருந்து ரயில் புறப்பட்ட பிறகு நடந்த சம்பவங்கள் தீயின் தீவிரம், பெட்டிக்குள் எரிந்த நிலையில் இருந்த பொருட்களின் தன்மை, ஆகிய அனைத்தும் கணக்கில் கொள்ளப்பட்டது. சுமார் 60 லிட்டர் திரவ எரிபொருள் இந்த தீ விபத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதனால் தான் தீ இத்தனை வேகமாகப் பரவியது என்கிற முடிவுக்கு வரலாம்''.

### ஆதாரங்கள் வடிவமைப்பு

நேர் எதிர் திருப்பமாக மூன்று கரசேவகர்கள், தாங்கள் எஸ்–6 பெட்டியின் தரைத் தளத்தில் முஸ்லிம்கள் திரவத்தை ஊற்றியதைப் பார்த்ததாக கூறுகின்றனர். தடயவியல் குழு அந்த ஆய்வை எப்போது நிகழ்த்தியது என்று தெரியவில்லை. ஆனால் அவர்களது இறுதி அறிக்கை மே 17, 2002 அன்று வெளிவந்தது. அப்படியென்றால் அதற்கு இரு வாரங்கள் முன்பாக அது நிகழ்ந்திருக்க வேண்டும்.

இந்த நேரத்தில் தான் மூன்று கரசேவகர்கள், தாங்கள் திரவத்தை ஊற்றுவதைப் பார்த்ததாக முதல் முறையாக கூறினார்கள். அது ரயிலின் கோத்ரா பக்கத்திலிருந்து ஊற்றப்பட்டதாகவும் மே 7, 2002 வரை காவல் துறையிடம் இருந்த போது சாட்சிகள், உயிர்பிழைத்த கரசேவகர்கள், 9 பா.ஜ.க.வினர்மட்டும் தான். அவர்களின் வாக்குமூலங்களின்

படி காவல் துறையிடம் தீ பற்றிய நான்கு கோரிக்கைகள் இருந்தன 1) வெளியிலிருந்து உள்ளே திரவ எரிபொருள் வீசப்பட்டது 2) பெட்டியின் வெளிப்புறம் திரவ எரிபொருள் தெளிக்கப்பட்டது 3) பெட்டிக்குள் அமில பல்புகள் வீசப்பட்டன 4) எரியும் கலவை ரயிலுக்குள் வீசப்பட்டது.

இன்னும் பத்து நாட்களில் வரப் போகும் அறிக்கை முதல் மூன்று கோட்பாடுகளை தகர்க்கப் போகிறது. அப்போது, காவல் துறை என்ன தான் செய்தது? மே 2, 2002 அன்று முதல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட இரண்டு வாரங்களுக்கு முன்பாக, தடவியல் ஆய்வறிக்கை இறுதி பெற்ற 9 நாட்களுக்கு முன்பாக, நிச்சயமாக தடவியல் குழுவினர் சோதனை நடத்தப்பட்ட பிறகு – காவல் துறை மூன்று பேரை அணுகியது. ஏற்கனவே புகை மண்டலத்தில் நாங்கள் மயங்கிக் கிடந்தோம் என்று வாக்குமூலம் கொடுத்த தினேஷ் பாய், ராம்பாய் மற்றும் நித்தின் பாய் பட்டேல் தான் அவர்கள். நேரெதிர் திருப்பமாக இந்த மூவரும் திரவப் பொருள் கோத்ரா திசையிலிருந்து பெட்டிக்குள் ஊற்றப்பட்டதைப் பார்த்ததாக கூறினார்கள். எரியும் கலவை வெளியே இருந்து பெட்டிக்குள் வந்ததைப் பார்த்ததாகவும் அவர்கள் மேலும் கூறினார்கள். இப்போது தான் முதன் முறையாக அந்த மூன்று கரசேவகர்களும் நடைமேடையில் தேநீர் விற்பனையாளர்களுக்கும் கரசேவகர்களுக்கும் நடந்த சண்டை தகராறு குறித்துப் பேசினார்கள். இந்த தகராறு நடந்ததால் அவர்களுடன் வந்த கரசேவகர்கள் நடைமேடையில் பின்தங்கிவிட்டனர். அவர்களை ரயிலுக்குள் ஏற்றவே முதல் சங்கிலி இழுக்கப்பட்டதாகத் தெரிவித்தனர். இவற்றை எல்லாம் அவர்களது வாக்குமூலத்தில் வசதி படி தவிர்த்தார்கள். இந்த மூவரும் கொடுத்த கூடுதல் வாக்குமூலங்கள் முற்றிலும் ஒப்பான தாக இருந்தது – வார்த்தைக்கு வார்த்தை.

அதனால் இப்போது காவல்துறைக்கு தீ பற்றிய அய்ந்தாவது கோரிக்கை கிடைத்தது. அது கோத்ரா பக்கமிருந்து ரயில் பெட்டியின் தரையில் ஊற்றப்பட்ட திரவ எரிபொருள். இரண்டு வாரங்கள் கழித்து மே 17, 2002 அன்று தடவியல் அறிக்கை வெளியிடப்பட்டது. முதல் மூன்று கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. நான்காவது மீது கருத்து கூறப்படவில்லை. அய்ந்தாவது கோரிக்கை தீ பிடித்ததற்கான உண்மை காரணம் என்றது.

**முதல் குற்றப்பத்திரிகை**

மத வாத சதி என்கிற புதிய கருத்து அடைகாக்கப்படுகிறது.

மே 22, 2002 அன்று காவல் துறை தாக்கல் செய்த முதல் குற்றப்பத்திரிகையில், நடைமேடையில் தேநீர் விற்பவர்களுக்கும் கரசேவகர்களுக்கும் நடந்த தவறான மிகச்சிறிய குறிப்பாக மட்டுமே இது இடம் பெற்றது. இருந்தபோதும் சோபியா பானு கடத்தல் முயற்சி இப்போது இடம் பெறவில்லை. காவல் துறை இருமுறை ரயிலின் சங்கிலி இழுக்கப்பட்டு ரயில் நின்றதை குறிப்பிட்டிருந்தது. முதல் சங்கிலி இழுப்பு ''ரயிலில் இருந்த யாரோ ஒருவருக்காக'' என்று கூறப்பட்டது. ஆனால் இரண்டாவது முறை சங்கிலி இழுக்கப்பட்டு ரயில் ஏ–கேபின் அருகில் வந்து நின்றதற்கு குற்றம் சாட்டப்பட்டவர்களில் யாரோதான் காரணம் எனக் குறிப்பிட்டிருந்தது. அவர்களின் வாக்குமூலத்தில், ''கோத்ரா ரயில் நிலையத்தின் ஏ–கேபினை ரயில் காலை 8.05க்கு வந்தடைந்தது. அந்த நேரம் தங்களின் முறைகேடான சதித்திட்டத்தை நடைமுறைப்படுத்த குற்றம் சாட்டப்பட்ட நாங்கள் தான் சபர்மதி ரயிலின் எஸ்–6 பெட்டி சங்கிலியை இழுத்து நிறுத்தினோம், ரயிலின் வட்டத்தகட்டை மாற்றி ரயிலை நிறுத்தினார்கள்.'' அதன் பின் குற்றம் சாட்டப்பட்டவர்கள், 900–1000 பேர் கொண்ட கும்பல் பல்வேறு ஆயுதங்கள், கொலைக்கருவிகள் திரவ எரிபொருள் நிரப்பப்பட்ட கலன்களுடன் வந்து முதலில் கல்வீச்சில் ஈடுபட்டார்கள். அதனைத் தொடர்ந்து எஸ்–6 பெட்டியை பெட்ரோல் போன்ற எரிபொருள் கொண்டு தீயிட்டார்கள்.

கோத்ரா எரிப்பு ஒரு சதி என்கிற காவல்துறையின் கூற்று, பல விடையற்ற அடிப்படையான கேள்விகளை எழுப்புகிறது. இந்த சதித் திட்டம் எப்போது உருவானது? ரயிலின் சரியான வருகை நேரம் நள்ளிரவு 2.55 மணி. சதிகாரர்கள் பல நாட்களுக்கு முன்பே திட்டத்தை உருவாக்கினார்களா? அல்லது ரயில் காலதாமதமாக வருவதை தெரிந்த பிறகா? கூடுதலாக, காவல் துறையிடம் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தான் சங்கிலியை இழுத்தார்கள் என்பதற்கான சாட்சியங்கள் இல்லை. அதைவிட அவர்களால் ''பெட்ரோல் போன்ற எரிபொருள்'' எங்கிருந்து வரவழைக்கப்பட்டது என கூற இயலவில்லை. சதிகாரர்கள் என காவல் துறை அந்த கும்பலை கூறியது; அதன் பிறகு 54 முஸ்லிம்களை கைது செய்தது.

சாட்சியங்கள், சான்றுகள் என்கிற பெயரில் காவல் துறையிடம் இருந்ததெல்லாம் – காவல் துறை, தீயணைப்புத் துறையினரின் வாக்குமூலங்கள். பா.ஜ.க. உறுப்பினர்களின் வாக்குமூலங்கள் கரசேவகர்களின் 9 வாக்குமூலங்கள் மற்றும் தடவியல் அறிக்கை. பிரச்சனையே இந்த சான்றுகளும் சாட்சியங்களும் ஒன்றுக்கு ஒன்று முரண்பாடுகள் நிறைந்தவை என்பதே. அதைவிட சம்பவ இடத்துக்கு உடனே ரயில்வே போலிசார் சென்றதாகவும், அவர்களில் பலர் குற்றம் சாட்டப்பட்டவர்களை அடையாளம் கண்டதாகவும் இப்போது காவல் துறை கோரியது. இதுவரையிலும் உயிர் பிழைத்த எவரும் சம்பவம் நிகழ்ந்ததும் அங்கு காவல்துறையை சேர்ந்தவர்களைப் பார்த்ததாக கூறாத பட்சத்தில், இந்தக் கூற்று முற்றிலும் சந்தேகத்திற்குரியது.

**இன்னும் பத்து நாட்களில் வரப்போகும் அறிக்கை முதல் மூன்று கோட்பாடுகளை தகர்க்கப் போகிறது. அப்போது, காவல் துறை என்ன தான் செய்தது? இவையெல்லாம் இந்த மொத்த விசாரணையின் குளறுபடிகளை வெளிச்சமிட்டுக் காட்டியது.**

**வடிவமைப்புச் சிகரம் நியோல் பர்மர், புதிய புலனாய்வு அதிகாரியாகப் பதவியேற்கிறார்**

முதல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட அய்ந்து நாட்களுக்குப் பிறகு புதிய புலனாய்வு அதிகாரியாக நியோல் பர்மர் நியமிக்கப்படுகிறார். அதுவரை அந்த வழக்கை கே.சி. பாவா, துணைக் கண்காணிப்பாளர், மேற்கு ரயில்வேயிடமிருந்து நியோல் பர்மர், ஏ.சி.பி. வடகோத்ரா காவல் துறை கட்டுப்பாட்டு அறை, வடகோத்ரா அந்த பொறுப்பை ஏற்றார். நம் மறைமுக

செய்தியாளருடன் உரையாடினார் பர்மர். அதிலிருந்து அவர் பொதுவாக புலனாய்வை மேற்கொள்ளாததை உணர முடிந்தது. உரையாடலின் சில வரிகளிலேயே அவரது மனதில் உள்ள முஸ்லிம் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

அவருடைய சொந்த வரிகளில் சில : ‘‘தேசப்பிரிவினையின் போது கோத்ராவை சேர்ந்த பல முஸ்லிம்கள் பாகிஸ்தானுக்கு இடம் பெயர்ந்தனர். கராச்சி நகரத்தில் கோத்ரா காலனி என்கிற ஒரு பகுதியே உள்ளது. கோத்ராவில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் கராச்சியில் உறவினர்கள் இருக்கிறார்கள். சிக்னல் பாலியா என்கிற இந்தப் பகுதியே முற்றிலும் இந்துக்களுடையது. ஆனால் சிறிது சிறிதாக அதை முஸ்லிம்கள் கையகப்படுத்திவிட்டார்கள். 1989இல் இங்கு கலவரங்கள் நடந்தன. எட்டு இந்துக்கள் உயிருடன் கொளுத்தப்பட்டார்கள். இவர்கள் மாட்டிறைச்சியை உண்பவர்கள். அது மலிவான விலையில் கிடைப்பதால்... எந்த குடும்பத்திற்கும் 10 குழந்தைகளுக்கு குறைவாக இல்லை. இவர்கள் அனைவரும் தப்லிகி ஜமாத்துடன் தொடர்புடைய அடிப்படை மதவாதிகள்.

**இந்து கரம் : ‘எல்லாம் தெரிந்த’ சாட்சி அஜய் பாரியா வருகை தருகிறார்**

முதலில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகை – முரண்பாடுகள், குளறுபடிகள் நிறைந்ததாக இருந்தது. இந்த கிறுக்குத்தனங்களை ஒருவித முறைமைக்குள் பொருத்த காவல்துறை புதிய சாட்சியை களத்தில் இறக்கியது. இவர் தேநீர் விற்பனையாளர், முஸ்லிம் அல்ல. இந்த முதல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு ஒன்றரை மாதங்களுக்குப் பிறகு சம்பவம் நிகழ்ந்த அய்ந்து மாதங்களுக்குப்பிறகு சூலை 9, 2002 அன்று தோன்றினார். அஜய் பாரியா – புதிய சாட்சி, கோத்ரா ரயில் நிலையத்தில் தேநீர் விற்பவர். அங்கு சமையல் வேலையில்லாது இருந்தார். பிப்ரவரி 27, 2002 அன்று சபர்மதி ரயில் கோத்ரா ரயில் நிலையம் வந்திருந்தது – அப்போது கோத்ரா நடைமேடையில் பொருட்களை விற்பனை செய்யும் 9 முஸ்லிம் விற்பனையாளர்கள் அவரை கட்டாயப்படுத்தி ரஜக் குர்கரின் வீட்டுக்கு அழைத்துச் சென்றார்களாம். அவர் வீட்டுக்குச் சென்றவுடன் இந்த 9 பேரும் வீட்டுக்குள் சென்று மண்ணெண்ணை நிரப்பப்பட்ட கலன்களை கடைக்கு வெளியே கொண்டு வந்தார்கள் (எத்தனை கடைகள் என அவர் கூறவில்லை. அவர் குறிப்பாக மண்ணெண்ணெய் என்கிற சொல்லை பயன்படுத்துகிறார்). இவரை ஒரு முஸ்லிம் விற்பனையாளர் அந்த கடையை ரிக்ஷாவில் ஏற்றும்படி கூறினார். மற்றவர்கள் அங்கு பிற கூடைகளை ஏற்றிக் கொண்டிருந்தார்கள் (அங்கே 9 முஸ்லிம் விற்பனையாளர்கள் கடைகளை ரிக்ஷாவில் ஏற்றுவதற்கு இருந்தபோது, ஒரு கூடையைத் தூக்கி வைக்க ஏன் அவர்கள் அஜய் பரியாவை அழைத்துச் செல்ல வேண்டும். அதுவும் மதவாத குற்றத்தைப் புரிய இந்து தேநீர் விற்பனையாளரை அழைத்துச் சென்றது தர்க்கமுடையதாக இல்லை. அந்த ரிக்ஷா கிளி நிறத்தில் இருந்ததாம். அதன் பதிவு எண்ணைக் காண இயலவில்லையாம். அந்த கூடைகளை ரிக்ஷாவில் ஏற்றியதும் அவனை அங்கிருந்து உடனே வரும்



படி கூறிவிட்டார்களாம். இவர்களும் பயந்து போய் அவர்களுடன் ரிக்‌ஷாவில் ஏறிவிட்டார்களாம். ரிக்‌ஷா ஏ–கேபின் வரை சென்றது. அவரின் கூற்றுப்படி சில விற்பனையாளர்கள் முதலில் எஸ்–2 பெட்டியை கொளுத்த முயன்று தோல் வியடைந்தார்களாம். அதில் தோல்விய டைந்ததும் எஸ்–6, எஸ்–7 பெட்டிகளை இணைக்கும் பகுதியை வெட்டினார் களாம். அதன் பிறகு எஸ்–6 பெட்டிக்குள் ஆறு விற்பனையாளர்கள் ஏறி மண் ணெண்ணையை பெட்டியின் தரையில் ஊற்றினார்களாம். மூவர் பெட்டியின் ஜன்னல் வழியே 'மண்ணெண்ணயை' தெளித்தார்களாம். பிறகு ஒரு விற்பனை யாளர் பற்றி எரியும் துணி பந்தத்தை எஸ்–6 பெட்டிக்குள் வீசினான். இவ் வாறு தான் ரயில் எரிக்கப்பட்டது.

**அவசர சங்கிலி இழுப்பவர்கள்**

வாக்குமூலம் ஒன்றைப் பெறுவ தற்கு இரு முஸ்லிம் தேநீர் விற்பனை யாளர்கள் தொடர்ந்த துன்புறுத்துதல்க ளுக்கு ஆளாகிறார்கள்.

அஜய் பாரியாவின் வாக்குமூலத் துடன், சிதறிக் கிடந்த பல துண்டுகள் காவல் துறைக்கு கச்சிதமாய் பொருந்தத் தொடங்கியது. 'மண்ணெண்ணெ' சம்பவ இடத்திற்கு கொண்டு வரப்பட் டதற்கும், அது எப்படி ரயிலின் தரையில் நெடுக ஊற்றப்பட்டது என்பதற்கும் பிரமாதமான சாட்சி அவர்களுக்கு கிடைத்துவிட்டது. இருப்பினும் ஒரு அதிர்ச்சி எஞ்சியிருந்தது. ஏ–கேபினிடம் ரயிலை நிறுத்த சதிகாரர்கள்தான் சங்கி லியை இழுத்தார்கள் என காவல் துறை நிரூபித்தாக வேண்டும். கோத்ரா முஸ் லிம்கள் ரயிலை எரிக்க திட்டமிட்ட இடத்தில் கச்சிதமாய் கரசேவகர்களால் ரயிலை நிறுத்தியிருக்க முடியாது.

இதனை நிரூபிக்க காவல் துறை புதி தாக இரண்டு சாட்சிகளை கொணர்ந்தது – இருவரும் முஸ்லிம்கள் – இவர்கள் தாங்கள் தான் சங்கிலியை இழுத்து ரயிலை ஏ–கேபினிடம் நிறுத்தியதாக ஒப் புக்கொண்டார்கள். இலியாஸ் முல்லா உசைன், பகுதி நேர விற்பனையாளர் – அன்வர் சத்தார் கலந்தா, பகுதிநேர லாரி ஓட்டுநர் ஆகிய இந்த இருவரது வாக்கு மூலங்கள் சூலை 9 மற்றும் 26, 2002 ஆகிய தேதிகளில் பதிவு பெற்றது. கர சேவகர்கள் ரயில் நிலையத்தில் தேநீர்



விற்பனையாளர்களை அடித்த போது இருவரும் அங்கிருந்ததாகத் தெரிவித் தார்கள். இந்த தகராறுக்குப்பிறகு சலீம் பான்வாலா (ரயில் நிலையத்தில் வெற் றிலை விற்கும் இவர், சம்பவம் நடந்த திலிருந்து தலைமறைவாக உள்ளார்) மற்றும் ரஜக் குர்குர் ஆகிய இருவரும் இவர்களிடத்தில், கரசேவகர்கள் முஸ்லிம் பெண்ணை கடத்திவிட்டதால் உடனே ரயிலை நிறுத்த வேண்டும் என கூறினார் களாம். உடனே இலியாஸ் உசைன், அன் வர் கலந்தர் மற்றொருவரான உசைன் சுலைமான் (காவல் துறை இவர் தலை மறைவாகிவிட்டதாகத் தெரிவிக்கிறது) என்கிற விற்பனையாளருடன் ரயிலில் வேறு வேறு பெட்டிகளில் ஏறி, வட்டத் தகட்டை திருப்பி ரயிலை நிறுத்தினார் கள். அஜய் பாரியா வாக்குமூலத்தில் குற்றம் சாட்டிய அனைவரையும் இந்த இருவரும் ஆமோதித்து வாக்குமூலம் அளித்தார்கள். அதாவது பிரம்புகள், குழாய்கள் இரும்புத் தடிகள் உள்பட இரு வரும் ரயில் பெட்டி அருகே நிறுத்தப் பட்ட கிளி நிற ரிக்‌ஷாவை பார்த்ததாகத் தெரிவித்தனர். ஆனால் இவர்கள் அஜய் பாரியாவை ஒரு படி முன்னேறி, அந்த வாகனத்தின் பதிவு எண்ணைத் தெரிவித் தனர். அஜய் பாரியா கூறியது போலவே இவர்களும் அந்த ஒன்பது விற்பனை யாளர்கள் கடைகளை சுமந்து வந்து ரயிலை எரிப்பது வரை பார்த்தாகவும், பின்பு அவர்கள் அனைவரும் சிக்னல்

பாலியாவுக்குள் ஓடிவிட்டதாகவும் தெரிவித்தார்கள்.அந்த கணத்தில் அந்த ஒன்பது பேரும். ''கச்சிதமாய் ரயில் உள்ளே தீப்பற்றி விட்டது'' என பேசிக்கொண்டதை கேட்டதாகவும் தெரிவித்தனர்.

**கதைச் சொல்லிகள்**

காவல்துறை தங்கள் கூடுதல் குற்றப் பத்திரிகையை தாக்கல் செய்கிறது. இதில் மாபெரும் சறுக்கல் உள்ளது.

அஜய் பாரியா, இலியாஸ் உசைன், அன்வர் கலந்தர் ஆகியோரின் வாக்குமூலங்களின் படைக்கலத்துடன் காவல்துறை தங்கள் கூடுதல் குற்றப்பத்திரிகையை செப்டம்பர் 20, 2002 அன்று தாக்கல் செய்தது. அதில் முதல் முறையாக அவர்கள் தோல்வியடைந்த கடத்தல் முயற்சியை குறிப்பிட்டார்கள். இப்போது சதிகாரர்களில் முக்கியமானவராக கருதப்படும் சலிம் பாண்டியாவாலா தான் அந்த கடத்தல் முயற்சியை தந்திரமாகக் கையாண்டு – இலியாஸ், கலந்தர் மற்றும் சுலைமானை கொண்டு ரயிலை நிறுத்தியதாக காவல்துறை கோருகிறது. காவல்துறை தங்கள் படை கலத்தை வசதியாக அஜய் பாரியாவின் வாக்குமூலத்தின் மீது நிறுத்திக்கொண்டது. ஒன்பது முஸ்லிம் விற்பனையாளர்களின் முன்னிலையில் தான் ரிக்ஷாவில் மண்ணெண்ணெய் ஏற்றியதாக அஜய்பாரியா தெரிவித்திருக்கிறார். விற்பனையாளர்களில் ஒருவர் தான் அஜய் பாரியாவை அந்த கூடையை சுமந்து ரிக்ஷாவில் வைக்கச் சொன்னதாகவும், அதை சுமந்து சென்ற போது தான் மண்ணெண்ணையை முகர்ந்து பார்த்ததாகவும் அவர் கோருகிறார். ஆனால் இதுவரை எத்தனை கூடைகளை ஏற்றினார்கள், ஒவ்வொரு கூடையிலும் எத்தனை கேன்கள் இருந்தது, அந்த கேன்களின் கொள்ளளவு என்ன என்பதுபோன்று எதையும் அஜய் பாரியா கூறவில்லை. ஆனால் கூடுதல் வாக்குமூலத்தில் காவல்துறையினர் எந்த ஆதாரங்களும் இல்லாமல் அந்த விற்பனையாளர்கள் எட்டு கேன்களை ஏற்றினார்கள். அது ஒவ்வொன்றிலும் 20 லிட்டர்பெட்ரோல் இருந்ததாக தெரிவித்தது (ஆனால் இதுவரை பாரியா 'மண்ணெண்ணெய்' என்று தான் குறிப்பிட்டார் 'பெட்ரோல்' அல்ல).

காவல்துறை குற்றம் சாட்டப்பட்டவர்கள் 160 லிட்டர் பெட்ரோலை ரயிலுக்குள் எடுத்துச் சென்றார்கள். பாரியா, கலந்தர், இலியாஸ் என எவரும் தங்கள் வாக்குமூலங்களில் எந்த அளவுகள் என்பது பற்றி ஒரு வார்த்தை கூட கூறாத போது, காவல்துறை எப்படி அந்தக் கலன்களின் கொள்ளளவை தீர்மானித்தது? அந்த நிரப்பப்பட்ட திரவம் எது என எப்படி முடிவு செய்தார்கள்? அவர்களின் கோட்பாட்டை நிரூபிக்க போலியான ஆதாரங்களை தயாரித்தார்களா? 160 லிட்டர் பெட்ரோல் எப்படியும் அது பெரிய அளவு – எங்கிருந்து வந்தது? அந்த சதி எங்கு திட்டமிடப்பட்டது? இந்த கேள்விகள் எதற்கும் முதல் கூடுதல் குற்றப்பத்திரிகையில் பதில்கள் இருக்கவில்லை.



**விடுபட்ட தொடர்பு :** *இரண்டாவது கூடுதல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படுகிறது.*

இரண்டாவது கூடுதல் குற்றப்பத்திரிகை டிசம்பர் 19, 2002இல் தாக்கல் பெற்றது. இரண்டு குற்றப்பத்திரிகைகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் நடந்தது ஒருவிஷயம் மட்டுமே. அது ரசாக் குர்குரின் கைது. முதல் பிரதியின் நகலாகவே இரண்டாவதும் திகழ்ந்தது. எந்த கேள்விகளுக்கும் பதில் அளிக்கப்

படவில்லை. யார் இந்த சதியை தீட்டியது, அது எங்கு திட்டமிடப்பட்டது, அந்த சதித் திட்டம் தான் என்ன என்கிற கேள்விகள் எதற்கும் காவல் துறையால் இதுவரை விடைகாண இயலவில்லை.

***துவாரமும் தக்கையும் : ஜபீர் யமீன் பஹேரா கைது செய்யப்படுகிறார். அவன் சதிகாரர்களின் தலைவர் மவுல்வி உமர்ஜீ என அடையாளப்படுத்துகிறான்.***

தக்கையை வைத்துக்கொண்டு அதற்கான சூழலை தயார் செய்தது காவல் துறை. அது வரையிலும் தலைமறைவாக இருந்த கோத்ரா ரயில் நிலையத்தில் விற்பனையாளராக உள்ள ஜபீர்யமீன் பஹேராவை சனவரி 22, 2003 அன்று கைது செய்கிறார்கள். கைது செய்யப்பட்ட 13 நாட்களுக்குப் பிறகு அவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, அவரது வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது. பஹேரா கூறியது இதுதான். பிப்ரவரி 26, 2002 அன்று தேநீர்க் கடையில் அமர்ந்திருந்த போது அங்கு சலீம் பான்வாலாவுடன் வேறு மூன்று விற்பனையாளர்கள் வந்து உடனே ரசாக் குர்குர் அவரை காண வேண்டும் என்று கூறி அழைத்துச் சென்றார்கள். குர்குர் வீட்டுக்குச் சென்றவுடன் குர்குர் இவரை பெட்ரோல் வாங்கி வரும்படி கூறினார். வேறு முஸ்லிம் விற்பனையாளர்களுடன் இணைந்து பஹேராவும் காலாபாயின் பெட்ரோல் பம்புக்கு சென்று ஏழு கேன்களில் 140 லிட்டர்கள் வாங்கினார்கள். இது சிக்னல் பாலியாவில் இருக்கும் குர்குர் உடைய கடை மற்றும் விருந்தினர் இல்லத்தில் வைக்கப்பட்டது. அதன் பிறகு காலை 11.30 மணியளவில் பஹேரோ குர்குரின் வீட்டு வாசலில் நின்றிருந்த போது அங்கே, கவுன்சிலர்கள் பிலால் ஹாஜி மற்றும் பாருக் பானா வந்தார்கள். அப்போது அந்த கவுன்சிலர்கள் மவுல்வி அய்யா தெரிவித்ததை கூறினார்கள். சபர்மதி ரயில் வருகிறது அதன் எஸ்–6 பெட்டியை எரிக்க வேண்டும். அதன் பின் சலீம் பான்வாலா ரயில் நிலையம் சென்று சபர்மதி ரயில் எவ்வளவு நேரம் தாமதமாக வருகிறது என்பதை விசாரிக்கச் சென்றார். அவர் திரும்பி வந்து ரயில் 4 மணி நேரம் காலதாமதமாக வருவதாகத் தெரிவித்தார். அனைவரும் வீட்டுக்குச் சென்று பின்பு 6 மணிக்கு 27.2.2002 அன்று அமன் விருந்தினர் இல்லத்தில் சந்தித்தார்கள் (குர்குரின் வீடு).

பஹேராவின் வாக்குமூலப்படி... சிறிது நேரம் தொலைக்காட்சியை பார்த்துவிட்டு அவர் காலை 7.15அய் போல குர்குரின் கடையை விட்டு வெளியே வந்தார். அப்போது மஹபுப் லத்திக்கா என்கிற விற்பனையாளர் ரயிலின் திசையிலிருந்து ஓடி வந்தார். அவர் ''அடிக்கிறாங்க... அடிக்கிறாங்க... என கத்திக்கொண்டே வந்தார். பஹேரா பார்சல் அலவலகம் அருகே சென்றார். அங்கு நின்று அய்ந்து விற்பனையாளர்கள் ரயிலின் மீது கல் எறிவதைப் பார்த்தனர். அதன் பிறகு அஜய் பாரியா மற்ற ஒன்பது முஸ்லிம் விற்பனையாளர்களுடன் இணைந்து குர்குரின் வீட்டுக்குச் சென்று டெம்போவில் பெட்ரோல் நிரப்பிய கேன்களை ஏற்றினார்கள் (அவர் எண்ணிக்கையை கூறவில்லை). குர்குர் பின்பு டெம்போவை ஏ–கேபினிடம் ஓட்டிச் செல்லும்படி கூறினார். குர்குரும், சலீல் பான்வாலாவும் அந்த டெம்போவை

அவரை இரும்புத் தடியால் அடித்தார்கள். பின்பு அவர்களில் ஒருவர் அந்த ராணுவ வீரரை சாலை வரை அழைத்துச் சென்றார். இவை எல்லாம் நிகழ்ந்த போது அந்த கும்பல் தொடர்ந்து ரயிலின் மீது கல் எறிந்து கொண்டிருந்தது. அந்த சமயம் ஒரு கல் தவறி வந்து பஹேராவின் நெற்றியில் விழுந்தது. அவரை உடனே கோத்ராவிலிருந்த மருத்துவமனைக்கு முதல் உதவிக்கு அழைத்துச் சென்றார்கள். அவர் அந்த இடத்தை விட்டு வந்த பிறகு அடுத்த நாள் தான் பஹேராவுக்கு, ஹசன் லாலு என்கிற விற்பனையாளர் (அவர் தேநீர் விற்பவர், சிறையில் இருக்கிறார்) தான் ரயிலுக்குள் எரியும் துணி பந்தத்தைப் போட்டது தெரிந்ததாக, அது தான் ரயில் தீப்பற்ற காரணம். அடுத்த சில நாட்கள் மவுல்வி உசைன் உமர்ஜியை பஹேரா சந்தித்தார். முதல் சந்திப்பில் உமர்ஜி கைது செய்யப்பட்ட அனைவருக்கும் தலா ரூபாய் 1500

**மவுல்வி உமர்ஜி, முஸ்லிம் விற்பனையாளர்கள் அனைவருக்கும் தலா 1,500 ரூபாய் வழங்கியதாக முதலில் கூறிய ஜபீர் பின் பகேரா, பின்னர் அனைத்தையும் இல்லை என தடம் புரண்டார்.**

'எம்–80'யில் பின் தொடர்ந்தனர். பான்வாலா வாகனத்தை ஓட்டினான். குர்குர் பின் இருக்கையில் உட்கார்ந்து கையில் கேனை வைத்திருந்தார். ஏ–கேபினுக்கு வந்ததும் அவர்கள் எஸ்–2 பெட்டிக்கு அருகே சென்றார்கள். விற்பனையாளர்கள் கையில் பிரம்புகள், குழாய்கள் எனப் பல ஆயுதங்களுடன் ரயிலின் ஜன்னல்கள் கதவுகளை உடைக்க முயன்றார்கள். எஸ்–2 விருந்து எஸ்–6க்கு சென்றார்கள். அங்கே எஸ்–6, எஸ்–7 அய் இணைக்கும் பாதையை வெட்டினார்கள். பின்பு எஸ்–6க்குள் நுழைந்து பெட்ரோலை கேனிலிருந்து தரை நெடுக கொட்டினார்கள். வேறு சில விற்பனையாளர்கள் ரயிலுக்கு வெளியே இருந்து உடைந்த ஜன்னல்கள் வழியே பெட்ரோலை ஊற்றினார்கள். அப்போது கலவரமடைந்த பயணிகள் இங்கும் – அங்கும் உயிரை வெறுத்து ஓடினார்கள்.

எரியும் ரயிலை விட்டு குதித்த பயணியிடமிருந்து பஹேராவும் அவரது நண்பரும் தங்க மோதிரத்தை கொள்ளையடித்தார்கள். பஹேராவும் வேறு சிலரும் ராணுவ வீரர் ஒருவர் மீது பாய்ந்து

வழங்குவதாக கூறினார். ஆனால் அவர் பஹேராவுக்கு என எதுவும் கொடுக்கவில்லை. இரண்டாவது சந்திப்பில் உமர்ஜி பஹேராவை தலைமறைவு ஆகி விடும்படி கூறினார். உடன் பஹேரா கொள்ளையடித்த மோதிரத்தை நகை கடையில் 2000 ரூபாய்க்கு விற்று விட்டு தலைமறைவானார்.

ஆனால் அதன்பிறகு ஜபீர் பின் யாமின் பஹேரா தன் வாக்குமூலத்திலிருந்து பின்வாங்கினார்.

***கச்சிதமாய் தைக்கப்பட்டது : சதியும் சதிகாரர்களும்***

ஜபீர் பஹேராவின் வாக்குமூலத்தில் பலம் பெற்ற காவல் துறை இப்போது சதிகாரர்களை தெரிந்து கொண்டதாக கூறியது (மவுல்வி உமர்ஜி, பிலால் ஹாஜி, பரூக்பானா, ரசாக் குர்குர் மற்றும் சலீம் பன்னாவாலா), சதிகாரர்கள் எங்கே கூடினார்கள் (ரசாக் குர்குரின் கடையில்) எப்போது கூடினார்கள் (ரயில் எரிப்புக்கு முதல் நாள் மாலை) பெட்ரோல் எங்கிருந்து வந்தது (காலாபாயின் பெட்ரோல் பம்பிலிருந்து) அந்த பெட்



ரஞ்சித்சிங் படேல் மற்றும் பிரபாத் சிங் படேல் பணியாற்றிய பெட்ரோல் பங்க்

ரோல் எங்கு வைக்கப்பட்டிருந்தது (ரஜாக் குர்குரின் கடைக்குப் பின்னால்) ஆனால் இவை எல்லாவற்றையும் விட முக்கியமானது, காவல்துறை இந்த சதியை கோத்ராவின் முக்கிய முஸ்லிம் பிரமுகரான மவுல்வி உமர்ஜியுடன் இணைத்ததுதான்.

கோத்ராவில் உள்ள மவுல்விகளில் மிகவும் மதிக்கப்படும் ஒருவர் தான் உமர்ஜி. 1965, 69, 80 மற்றும் 89 களில் நடந்த மதக் கலவரங்களின் போது மாவட்ட நிர்வாகம் அமைத்த அமைதி குழுக்களின் உறுப்பினர் உமர்ஜி. சபர்மதி சம்பவத்துக்குப் பிறகு பல மாதங்கள் கோத்ராவில் நிவாரண முகாம் நடத்தி வந்தார் உமர்ஜி. கோத்ராவுக்கு இந்தியாவின் முக்கியப் பிரமுகர்களான காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, முன்னாள் பிரதமர் தேவகவுடா, அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் ஜார்ஜ் பெர்ணான்டஸ் என பலர் வந்தாலும் மக்கள் குழுவை தலைமை தாங்கி அவர்களை சந்தித்திருக்கிறார் உமர்ஜி. ஏப்ரல் 4, 2002 அன்று பிரதமர் ஏ.பி. வாஜ்பாய், முதல்வர் நரேந்திர மோடியுடன் கோத்ரா வந்த போது உமர்ஜி அவரிடம் கோரிக்கை மனு ஒன்றை கொடுத்தார். நரேந்திர மோடி தனக்கு கோரிக்கை மனுவின் ஒரு படியை தரும் படி கேட்டபோது அவரை இழிவுபடுத்தி தர மறுத்தார்.

ஏற்கனவே பேரூராட்சித் தலைவர் கலோடா, துணைத் தலைவர், சில முஸ்லிம் கவுன்சிலர்கள், வழக்கறிஞர்கள் எனப் பலரும் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். கோத்ராவின் முஸ்லிம் அரசியல் தலைமை ஏற்கனவே தொழுவத்தில் அடைக்கப்பட்டிருந்தது. உமர்ஜியை தலைமை சதிகாரராக அறிவித்த பிறகு கோத்ராவின் மொத்த முஸ்லிம் சமூகமும் குற்றம் சாட்டப்பட்டது. சபர்மதி ரயில் எரிப்பு சம்பவம், ஏதோ தன்னியல்பாக நடந்த கோபத்தின் வெளிப்பாடு அல்ல. அது ஒரு முன் திட்டமிடப்பட்ட மதவாத வன்முறை. அந்த சதியை கோத்ராவின் மதிக்கப்படும் முஸ்லிம்கள் முன்னின்று நடத்தியிருக்கிறார்கள்.

**புதிய எரிபொருள்பெட்ரோல் : வந்த மூலத்தை நிரூபிக்க புதிய பொய் சாட்சிகள்**

கோத்ரா சம்பவம் நடந்த வேளையில் காலாபாயின் பெட்ரோல் பம்பில் பிரதாப் சிங் பட்டேல் மற்றும் ரஞ்சித் சிங் பட்டேல் விற்பனையாளர்களாகப் பணிபுரிந்தனர். சம்பவம் நடந்து ஏறக்குறைய ஒரு மாதத்திற்குப் பின்பு ஏப்ரல் 10, 2002 அன்று இந்த இருவரும் காவல் துறையிடத்தில் அவர்கள் 26.2.2002 மாலை 6 மணி முதல் 27.2.2002 காலை 9 மணி வரை பணியில் இருந்ததாகவும் – அப்போது அவர்கள் யாருக்கும் சில்லரையாக பெட்ரோல் விநியோகம் செய்யவில்லை என்றும் தெரிவித்தனர்.

பிப்ரவரி 23, 2003 அன்று இந்த இருவரையும் காவல் துறை அணுகியது. கவலையளிக்கும் வகையில், இந்த இருவரும் சில்லரையாக 140 லிட்டர் பெட்ரோலை ஆறு முஸ்லிம்களுக்கு விற்றதாகவும் அதில் ரசாக் குர்குர், சலீம் பான்வாலா; கிளி நிற டெம்போவில் சிராஜ் லாலா, சலீம் பான்வாலா, ஜபீர் பின்யாமின், பஹேரா, சலீம் கர்தா, கவுகத் பாபு வந்ததாகவும், ரசாக் குர்குர் எம்–80யில் முன்பாகவே பெட்ரோல் பம்புக்கு வந்ததாகவும் கூறினார்கள்.

**ஊசலாடும் வழக்கு : மிகுதியான வாக்கு மூலங்கள், மிகுதியான குற்றப்பத்திரிகை’கள் மிகுதியான பின்வாங்கல்கள்**

ஜபீர் பின்யாமின் பஹேராவின் ஒப்புதல். இப்பொழுது அந்த இரு பெட்

ரோல் பம்ப் விற்பனையாளர்களின் வாக்குமூலங்கள் இணைந்து கொண்டன. இந்த கூடுதல் படைக்கலத்துடன் மூன்றாவது கூடுதல் குற்றப்பத்திரிகையை காவல் துறை ஏப்ரல் 16, 2003 அன்று தாக்கல் செய்தது.

பின்னர் அவர்கள் அந்த ஆறு பேரிடமும் வாக்குமூலம் பெற்றனர். கவுகத் பானு, சலீம் ஜர்தா, இர்பான் பட்டியாலா, மேஹ்பூப் லத்திகா, ஷவுகத் பிபினா மற்றும் ஷகீர் பாபு (எல்லோரும் முஸ்லிம் தெருவோர விற்பனையாளர்கள்). இந்த வாக்குமூலங்கள் எல்லாம் 2003 முதல் 2006க்குள் பதிவு செய்யப்பட்டன. ஆனால் இவை எவையும் குற்றப் பத்திரிகைகளில் இணைக்கப்படவேயில்லை (காவல் துறை இதுவரை 17 குற்றப்பத்திரிகைகளை தாக்கல் செய்துள்ளது – 1 முதன்மையானது மற்றது 16 கூடுதல்) ஆறு தெருவோர வியாபாரிகளும் தங்கள் வாக்குமூலங்களிலிருந்து பின் வாங்கி விட்டனர்.

கோத்ரா சம்பவம் நடந்த சமயத்தில் அங்கு தண்டவாளங்கள் அருகில் தன் குடும்பத்துடன் வசித்த முகம்மத் சித்திக் என்கிற சிறுவனின் வாக்குமூலத்தையும் காவல் துறையினர் பெற்றனர். சித்திக் பின்னர் சூரத்திற்கு இடம் பெயர்ந்து சென்றுவிட்டார்.

ஜபீர் பின்யாமின் பஹேராவின் வாக்குமூலங்களில் உள்ள சம்பவங்கள், பெயர்கள் என அனைத்தும் அப்படியே சித்திக்கின் வாக்குமூலத்தில் பிரதிபலித்தது. அவர் மேலும் மவுல்வி உமர்ஜி ரயிலை எரித்த குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு மாதம் 1,500 ரூபாய் கொடுப்பதாக சித்திக்கிடம் கூறியதாகத் தெரிவித்தார். இதுவரை யாரோ கூறாத வேறு மதத் தலைவரின் பெயரை சித்திக் கூறினார். அவர் கூறியதன் படி மௌல்வி யாகுப் பஞ்சாபி ரயில் ஏ–கேபினிடம் நின்றதும் மசூதியின் மேற்கூரையில் ஏறி வன்மத்தைத் தூண்டும் முழக்கங்களை எழுப்பினார்கள். ஆனால் ஆச்சரியப்படும் படியாக பஞ்சாபியை யாரும் இன்னும் காவல்துறை குற்றப்பட்டியலில் இணைக்கவில்லை.

'தெகல்கா' விசாரித்ததில் கோத்ரா நிகழ்வு நடந்த சமயம் பஞ்சாபி இந்தியாவிலேயே இருந்திருக்கவில்லை. அவரது கடவுச்சீட்டு, விசா அதனை உறுதிப்படுத்துகிறது. ஆனால் சித்திக்கின் வாக்குமூலத்தை நம்பி காவல் துறை பஞ்சாபியை கைது செய்தது. ஆனால் உடனே அது பெருந்தவறு என உணர்ந்து விடுதலை செய்தது.

**மிக முக்கியமான கேள்விகள் : காவல் துறை வழக்கிலிருந்து தப்பிக் கொள்வதற் கான உடைப்புகள்**

கரசேவகர்களை ஏற்றிக்கொண்டு அயோத்தி செல்லும் சபர்மதி எக்ஸ்பிரஸ், பட்டியலிடப்பட்ட வருகை நேரம் நள்ளிரவு 12 மணி. அதே போல அயோத்தியிலிருந்து எதிர் திசையில் வரும் சபர்மதி எக்ஸ்பிரசின் பட்டியலிடப்பட்ட வருகை நேரம் நள்ளிரவு 2.55 இந்த சம்பவம் நடப்பதற்கு ஒரு நாள் முன்பாக, பிப்ரவரி 25 அன்று இரவு 12 மணிக்கு இதே போன்ற ரயில் கோத்ராவிலிருந்து கரசேவகர்களை ஏற்றிக் கொண்டு அயோத்தி சென்றது. சதிகாரர்கள் ஏன் இந்த ரயிலை தாக்கவில்லை? காலை 8 மணியை விட இரவு 12 மணி தானே தாக்குதல் தொடுப்பதற்கு இன்னும் பொருத்தமான நேரம்?

திரட்டியிருப்பார்கள்? சேவகர்கள் தூண்டும் படியாக நடந்து சதிகாரர்களின் திட்டத்தை செயல்படுத்த வழி வகுப்பது, ஏதோ மொத்த விஷயமே திருகி இயங்குவது போல் இல்லையா (திருக்க முரணாக)

காவல் துறையின் கூற்றுப்படி, ஜபீர் பின்யாமீன் பஹேராதான் முக்கிய பங்காற்றியவர்களில் ஒருவர். அவர்தான் பெட்ரோல் வாங்குகிறார். அதனை பதுக்கி வைக்கிறார். பிறகு ஏ–கேபினுக்கு எடுத்துச் செல்கிறார். எஸ்–6 பெட்டிக்குள் நுழைகிறார், அதனை தரையெங்கும் ஊற்றுகிறார். அப்படியென்றால், அந்த சதியை செயல்படுத்த இவர் ஏன் கடைசி நேரத்தில் சேர்த்துக் கொள்ளப் பட்டார்?

முஸ்லிம் விற்பனையாளர்கள் அஜய் பாரியாவை கட்டாயப்படுத்தி அழைத்துச் சென்றதாக காவல் துறை கோருகிறது. அவரை பெட்ரோல் வாங்க ரசாக் குர்குரின் வீட்டிற்கு அழைத்துச் செல்கிறார்கள். பின்பு ஏ–கேபினுக்கு, இறுதியாக ரயில் பெட்டியை தீயிடுகிறார்கள்.

**காலாபாயின் பெட்ரோல் பம்பில் விற்பனையாளராய் பணிபுரிந்த ரஞ்சித் சிங் படேல் 'தெகல்கா'விடம் – விசாரணை அதிகாரி நியோல் பர்மர் தன்னிடம் 50,000 ரூபாய் கொடுத்து, பல முஸ்லிம்களை அடையாளம் காட்டும்படி மிரட்டியதாகத் தெரிவித்தார்.**

அப்படி சதிகாரர்கள் மிக உறுதியாக பிப்ரவரி 27 அன்று தான் சபர்மதி ரயிலை தாக்க வேண்டும் என தீர்மானித்திருக்கும் பட்சத்தில், ஒரு வேளை ரயில் பட்டியலிடப்பட்ட குறித்த நேரமான நள்ளிரவு 2.55 வந்திருக்குமேயானால், அவர்களின் அசலான திட்டம் தான் என்ன?

பிப்ரவரி 26 மாலையே எஸ்–6 பெட்டியை எரிக்கும் திட்டம் உறுதியாக்கப்பட்டது. அதனை செய்யும் பொறுப்பும் சில விற்பனையாளர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டது என காவல் துறை அழுத்தமாக கருதும் பட்சத்தில், ஒரு வேளை கரசேவகர்கள் முஸ்லிம் விற்பனையாளர்களை அடித்து தாக்கியிருக்காத பட்சத்தில், முஸ்லிம் பெண்ணை கடத்த முற்படாத பட்சத்தில், சதிகாரர்களாக அழைக்கப்படும் இவர்கள் என்ன செய்திருப்பார்கள்? விற்பனையாளர்கள் எவ்வாறு இத்தனை பெரிய கூட்டத்தை

ஏராளமான முஸ்லிம் விற்பனையாளர்கள் அங்கே குழுமியிருந்த பட்சத்தில் – பாரியாவே ஒன்பது பெயர்களை பட்டியலிட்டுள்ளார். அவர்களுக்கு ஏன் பாரியா தேவைப் பட்டார்? ஒரு இந்து விற்பனையாளரை அவனது விருப்பத்திற்கு மாறாக ஏன் முஸ்லிம் சதிகாரர்கள் அவர்களின் திட்டத்தை செயல்படுத்த அழைத்துச் செல்ல வேண்டும்?

மொத்த ரயிலும் கரசேவகர்கள் இருந்த போது மவுல்வி உமர்ஜீ ஏன் எஸ்–6 பெட்டியை மட்டும் எரிக்க ஆர்வப்பட்டார்?

காவல் துறையின் கூற்றுப்படி, ஆறு விற்பனையாளர்கள் பெட்டிகளின் ஊடான இணைப்பை வெட்டி பெட்டியினுள் சென்றார்கள். அப்படியிருந்தால் எப்படி எஸ்–6இல் உயிர்பிழைத்தவர்கள் – கரசேவகர்கள், சாதாரண பயணிகள் என ஏன் எவரும் இவர்களைப் பார்க்கவில்லை?

பெட்டிகளை இணைக்கும் பகுதியில் உள்ள மறைப்பு ஆறு அங்குலம் தடிப்பானது. அதனை அத்தனை சுலபமாக சுத்தி அல்லது சாதாரண கத்திரியால் வெட்ட இயலும்.

சபர்மதி எக்ஸ்பிரஸ் கோத்ராவை வந்தடைய வேண்டிய சரியான நேரம் நள்ளிரவு 2.25 மணி. பாதக் மூல்சந்தானி மற்றும் பா.ஜ.க. உறுப்பினர்கள் வந்து கொண்டிருக்கும் வி.எச்.பி. தலைவர்களையும் கரசேவகர்களையும் தேநீர் மற்றும் பிஸ்கட்டுகளை அந்த நள்ளிரவு நேரத்தில் கொடுக்க திட்டமிட்டார்களா? அல்லது அந்த திட்டம் ரயில் கால தாமதமாக வருகிறது என தெரிந்த பிறகு போடப்பட்டதா? பாதக், மூல்சந்தானி மற்றும் பிறர் காலை 6.30 முதல் ரயில் தீப்பற்றி எரிந்தது வரை இருந்ததாகக் கூறுகிறார்கள். ஆனால் எவரும் அங்கு கரசேவகர்களுக்கும் முஸ்லிம் விற்பனையாளர்களுக்கும் இடையே நிகழ்ந்த வாய்ச் சண்டை கைகலப்பு பற்றியோ, முஸ்லிம் பெண் கடத்தல் முயற்சி பற்றியோ ஏன் ஒரு வார்த்தை கூட பேசவில்லை? எப்படி இத்தனை முக்கிய சம்பவங்கள் அவர்களது பார்வையிலிருந்து தப்பியது?

திகைப்பூட்டும் விதமாக பாதக் மற்றும் மூல்சந்தானி மற்றும் பிறர்தான் அந்த கும்பலை சேர்ந்தவர்களைஅருகில் இருந்து பார்த்தார்கள். அதனால் தான் அவர்களால் அடையாளம் காண முடிந்தது. அதையும் செய்துள்ளார்கள். அவர்கள் கோருகிறபடி அந்த கும்பல் ஆயுதங்கள் வைத்திருந்தது. எஸ்–6 பெட்டியை விட்டு தப்ப முயன்ற ராணுவ வீரர் மற்றும் பலரை அந்த கும்பல் தாக்கியிருக்கும் பட்சத்தில் அவர்கள் எப்படி பாதக்குக்கு விலக்களித்தார்கள்?

பாதக், மூல்சந்தானி மற்றும் ஏழு பிற பா.ஜ.க.வினர் தான் மொத்தம் 41 முஸ்லிம்களை அடையாளம் கண்டனர். ஆனால் இவர்களின் பட்டியல்களில் ஒரு பெயர்கூட பகுதியொத்திருக்கவில்லை. இந்த ஒன்பது சாட்சிகளும் ஒன்றாக ரயில் நிலையத்தில் நின்றிருந்தார்களாம். அவர்கள் அனைவரும் ஒரே இடத்தில் இருந்த படி தான் குற்றவாளிகளை அடையாளம் கண்டார்களாம். ஏ–கேபினுக்குப் பின்னிருந்து – இருப்பினும் அனைவரும் வெவ்வேறு ஆட்களை பார்த்தார்களாம். இதுதான் உன்னிப்பான வேலை பிரிவினையா அல்லது தெளிந்த தற்செயல் இசைவா?


முதல் கூடுதல் குற்றப்பத்திரிகையில் காவல் துறை, குற்றவாளிகள் எப்படி இணைப்பை வெட்டி உள்ளே நுழைந்தார்கள் என்கிறது. ஆனால் பாதக் மூல்சந்தானி மற்றும் பிறர் அப்படி எதுவும் கூறவில்லையே. அதற்கு மாறாக அவர்கள் குற்றவாளிகள் பெட்டிக்கு வெளியே இருந்து திரவ எரிபொருளை தீயிடுவதற்கு முன் தெளித்ததைப் பார்த்ததாகக் கூறுகிறார்கள். ஆனால் இது தடயவியல் ஆய்வுப் படி புறந்தள்ளப்படுகிறது. குஜராத் அரசின் சொந்த தடவியல் சோதனைக் கூடமே தீ பெட்டிக்கு உள்ளே தான் பற்றியது, வெளியே இருந்து திரவ எரி பொருள் தெளிக்கப்பட்டதற்கான தடயங்கள் இல்லை என்றது. அப்படியென்றால் பாதக், மூல்சந்தானி மற்றும் பிறர் வெறுமனே பொய் சொல்கிறார்களா? அப்படியென்றால் அவர்களது வாக்கு மூலங்கள் தனிப்பட்ட பகையை தீர்த்துக் கொள்ள, மேலும் அரசியல் லாபங்கள் பெற தயாரிக்கப்பட்டவையா?

பெட்ரோல் பம்பு விற்பனையாளர்கள் பிரபாத் சிங் படேல் மற்றும் ரஞ்சித் சிங் படேல் முதலில் அவர்கள் சம்பவம் நடந்த அன்றோ முதல் நாள் மாலையோ சில்லறையாக பெட்ரோல் விற்கவில்லை என்றார்கள். ஆனால், சம்பவம் நடந்த ஓராண்டு கழித்து குட்டிக்கரணம் அடித்து குற்றவாளிகளுக்கு 140 லிட்டர் பெட்ரோல் விற்றதாகக் கூறினார்கள். எது அவர்களை உருமாற்றியது?

இந்த எல்லா முரண்பாடுகளையும் விடுதல்களைத் தவிர்த்தும் காவல் துறையின் வழக்கு தீவிரமாக வலிமையற்றுப் போய் விட்டது. ஏழு குற்றம் சாட்டப்பட்டவர்கள் தங்கள் வாக்கு மூலங்களைப் பின் வாங்கி விட்டார்கள். ஜபீர் பின்யாமின் பஹேரா உள்பட ஏ–கேபின் அருகில் ரயிலை நிறுத்தியதாக ஒப்புக் கொண்ட இலியாஸ் உசைன் மற்றும் அன்வர் கலந்தர், இப்போது தங்கள் வாக்குமூலங்களை பின் வாங்கி விட்டார்கள். காவல் துறையினர் துன்புறுத்திச் செய்து வாக்கு மூலம் வாங்கியதாக அவர்கள் கூறுகிறார் கள். காவல் துறை திணறிக் கொண்டிருக்கிறது. அதற்கு தன் பாதங்கள் பாவ இடமில்லை. காவல் துறையிடம் மிஞ்சி யுள்ள சாட்சியங்கள் – அஜய் பாரியா, சிக்கந்தர் சித்திக். இவர் தவறாக யாகூப் பஞ்சாபியின் பெயரை கூறியவர். அந்த இரு பெட்ரோல் பம்பு விற்பனையாளர்கள் (இருவரும் தொடர்ந்து காவல் துறை பாதுகாப்புடன் வாழ்கிறார்கள்) மற்றும் எட்டு பா.ஜ.க. உறுப்பினர்கள் (இதில் தசதியாவின் வாங்கி விட்டார்)

**அம்பலமான உண்மைகள் : 'தெகல்கா' வின் ஆறு மாத கால வலி நிறைந்த புலனாய்வு காவல் துறையின் நான்கு முக்கிய சாட்சிகளை தகர்த்தது**

ஆறு மாத காலத்தில் 'தெகல்கா' வின் மறைமுக செய்தியாளர் குஜராத்தில் உள்ள வி.எச்.பி., பா.ஜ.க., ஆர்.எஸ். எஸ். வட்டாரங்களை ஊடுருவிச் சென் றார். பெரும்பகுதி நேரம் அவர் இந்துத்துவாவைப் பற்றி புத்தகம் எழுதுகிற ஆர். எஸ். எஸ். காரராக தன்னை கருதிக் கொண்டார். வேறு சமயங்களில் அவர்






தன்னை தில்லி பல்கலைக்கழக ஆய்வு மாணவராகவும், ஆர்.எஸ்.எஸ். அனுதாபியான அவர் குஜராத்தில் இந்து எழுச்சி குறித்து ஆய்வுரை எழுதி வருவதாகவும் வெளிப்படுத்தினார். அகமதாபாத்தில் உள்ள ஏராளமான சங்பரிவார், பா.ஜ.க. தலைவர்களை சந்தித்த பிறகு, பஞ்சமஹால் மாவட்ட பா.ஜ.க. பொறுப்பாளர் நம் செய்தியாளருக்கு குகுல் பாதக்கை அறிமுகப்படுத்தி வைத்தார். இவர் கோத்ரா சம்பவத்தின் ஒன்பது சாட்சிகளில் ஒருவர். பாதக்கை இருமுறை சந்தித்து கோத்ராவில் உள்ள பா.ஜ.க. வின் உட்கட்சி அரசியலைப் பற்றி தெரிந்து கொண்டார். அதனை அடுத்து முரளி மூல்சந்தானியை லாவகமாக சென்று சந்தித்தார் (இவரும் ஒன்பது சாட்சிகளில் ஒருவர். அவரிடம் தான் குஜராத்தின் தேர்தல் நிலவரம் குறித்து அறியவந்த ஆர்.எஸ்.எஸ்.காரர் என்றார்).

**குகுல் பாதக் பற்றிய உண்மை**

குகுல் பாதக்–அய் 'தெகல்கா' செய்தியாளர் இருமுறை சந்தித்தார். முதலில் மே 29, 2007 அன்றும், இரண்டாவது சூலை 17, 2007 அன்றும் கோத்ராவில் பா.ஜ.க.வின் நிலவரம் என்ன, அங்கு பாதக் செய்துள்ள பங்களிப்பு என்ன போன்று முதல் சந்திப்பு சென்றது. கோத்ராவுக்குப் பிந்தைய கலவரங்களில் இந்து கலவரக்காரர்களுக்கு உதவிய சில பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் மற்றும் அமைச்சர்களின் பெயர்களை அவர் கூறினார்.

இரண்டாவது சந்திப்பில், பாதக் மொத்த உண்மையை போட்டுடைத்தார். எப்படி அவரும் மற்ற 8 பா.ஜ.க. வினரும் காவல் துறையுடன் இணைந்து ஒன்றுமறியா முஸ்லிம்களின் மீது குற்றத்தைச் சுமத்தினார்கள் என விவரித்தார். மேலும் ரயில் எரிந்தபோது, அவரோ அந்த 8 பேரோ அங்கு இல்லை என்றார். உண்மை என்னவென்றால், பாதக் சம்பவ இடத்திற்கு வந்த போது கும்பல் கலைந்து சென்றுவிட்டது. உண்மை என்னவென்றால், பாதக்கின் பெயரில் காவல் துறை தயாரித்ததும், அவர் பெயர் சாட்சியமாக இணைக்கப்பட்டதுமே அவருக்கு தெரியாது. ஆனால், அவரது பெயரில் உள்ள வாக்குமூலத்தைப் பற்றி கேள்விப்பட்ட உடன் காவல் துறையுடன் இணைந்து சென்றார். காவல் துறையுடன் இணைந்து அடையாள அணிவகுப்பில் குற்றம் சாட்டப்பட்ட இருவரை அடையாளம் கண்டார். இவர்கள் இருவருக்கும் அந்த குற்றத்திற்கும் தொடர்பு இல்லை என்று தெரிந்த போதும், இதை இந்து சமூகத்திற்காகத் தான் செய்ய வேண்டிய கடமையாக நினைத்தார். ''இது இந்துத்துவாவின் வேலை... சாட்டி கூறுவதை நாம் செய்ய வேண்டும்'' என பாதக் 'தெகல்கா' விடம் கூறினார். ஒரு விஷயம் தவிர்த்து, பாதக் மிகவும் உறுதியாக நின்று கொண்டிருக்கிறார். அவருடைய வாக்குமூலத்தில் இஸ்மாயில் அங்கா என்கிற ஒருவரின் பெயரை குற்றவாளியாக காவல் துறை இணைத்துள்ளது. பின்பு பாதக், அது அங்கா இல்லை இஸ்மாயில் அங்கி என்றார். அங்காவை காப்பாற்றுவதற்குதான் அவர் இவ்வாறு செய்தார். அங்கா அவரது வியாபார கூட்டாளி. ''நான் எப்படி எனது சொந்த கூட்டாளியை இப்படி சிக்க வைக்க முடியும்'' என்றார் பாதக்.

மொத்தத்தில் பாதக்கின் வாக்குமூலத்தில் ஆறு பேர் குற்றவாளிகள். மூவர் இன்றும் தலைமறைவு. ஒருவர் சில மாதங்களிலேயே பிணையில் வந்துவிட்டார். இருவர் அந்த 3 ஆண்டுகளாக நீதிமன்றக் காவலில். சிறையில் அடை



பட்டுள்ளவர்கள் இருவர் வழக்கறிஞர் ரோல் அமின் உசைன் ஹத்தில்ல மற்றும் வழிப்பறியான உஸ்மான் அப்துல்கனி காபிவாலா.

**முரளி மூல்சந்தானி பற்றிய உண்மை**

மற்றுமொறு அதிர்ச்சியான வெளியீடு, தற்போது கோத்ரா பேரூராட்சியின் துணை தலைவரான முரளி மூலசந்தானி 'தெகல்கா' செய்தியாளரிடம் சம்பவம் நடந்த போது தான் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்ததாக தெரிவித்தார். ஆனால் பாதக்கை போலவே காவல் துறை தன்னை சாட்சியாக இணைத்துள்ளது என்பதை அறிந்தவுடன், உளப்பூர்வமாக ஒத்துழைத்தார்.

திலீப் தசாதியா தன் வாக்குமூலத்தை பின் வாங்கிய போது கடுஞ்சீற்றமடைந்தார் மூலசந்தானி. பாதக் மற்றும் ராஜூ தர்ஜி தங்கள் வாக்குமூலங்களில் செய்த சிறு திருத்தங்களுக்கு கூட அவர் மிகவும் வருத்தப்பட்டார். இவர்களின் இந்த முறை தவறிய நடவடிக்கைகளுக்குப் பின்பும் கட்சி தசதியாவுக்கும் தர்ஜிக்கும் பொறுப்புகள் வழங்கியதும் கோபமடைந்தார். இது போன்ற விஷயங்கள் பல சமயம் கட்சியின் மீது நம்பிக்கை இழக்கச் செய்து வருகிறது என்றார். ஆனால் தன் வார்த்தைகளின் பக்கம் தொடர்ந்து நிற்பேன்; ஏனென்றால் என்னால் இந்து மதத்திற்கு துரோகம் செய்ய இயலாது என்றார்.

**பெட்ரோல் பம்பு விற்பனையாளர்கள் ரஞ்ஜித்சிங் படேல் மற்றும் பிரபாத் சிங் படேல் பற்றிய உண்மைகள்**

> **பெட்ரோல் பம்பு விற்பனையாளர்கள் ரஞ்சித்சிங் படேல் மற்றும் பிரபாத் சிங் படேல் ஆகிய இருவரும் நேர் எதிர் திருப்பமாக குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு 140 லிட்டர் பெட்ரோல் விற்றதாகத் தெரிவித்தனர். அவர்கள் இருவரும் 24 மணி நேர காவல் துறை கண்காணிப்பில் வாழ்கிறார்கள்.**

பெட்ரோல் பம்பு விற்பனையாளர்கள் ரஞ்சித்சிங் படேல் மற்றும் பிரபாத் சிங் படேல் ஆகிய இருவரும் நேர் எதிர் திருப்பமாக குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு 140 லிட்டர் பெட்ரோல் விற்றதாகத் தெரிவித்தனர். அவர்கள் இருவரும் 24 மணி நேர காவல் துறை கண்காணிப்பில் வாழ்கிறார்கள். காவல்துறையிடம் வாக்குமூலங்கள் வழங்கிய பிறகு அவர்கள் தங்கள் வேலையை ராஜினாமா செய்து விட்டு தங்கள் கிராமத்தில் வாழ்கிறார்கள். சாபா சிக்வா என்கிற அந்த கிராமம் கோத்ராவிலிருந்து ஆறு மைல் தொலைவில் உள்ளது. பிரபாத் சிங் அய் சந்திக்க 'தெகல்கா' முயன்றது. ஆனால் அவரது குடும்பத்தினர் அனுமதி மறுத்து விட்டனர்.

இருப்பினும் 'தெகல்கா' நல்வாய்ப்பாக மற்ற சாட்சியான ரஞ்சித் சிங் படேலை கண்டடைந்தது. நம் செய்தியாளர் பஜ்ரங் தள் தொண்டராக தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, சூலை 16,2007 அன்று ரஞ்சித்சிங் படேலை அணுகியபோது அவர் வயலில் உழுது கொண்டிருந்தார். அவருடன் 24 மணி நேரமும் இருக்கும் இரு காவல் துறையினர் தேநீர் குடிக்கச் சென்றிருந்தனர்.

முதலில் கொஞ்சம் தயங்கிய ரஞ்சித் சிங் பின்பு நம் செய்தியாளரிடம் விசாரணை அதிகாரி நியோல் பர்மர் ரூபாய் 50,000 கொடுத்ததாகக் கூறினார். இதன் முக்கியத்துவத்தை அதிகமாக வலியுறுத்த இயலாது. முதன்மை சாட்சியே விசாரணை அதிகாரி தனக்கு லஞ்சம் கொடுத்ததாக ஒப்புக்கொண்டார். இதே தொகை அவனது சகாவான பிரபாத் சிங்க்குக்கும் வழங்கப்பட்டதாம். குற்றம் சாட்டப்பட்டவர்களை நீதிமன்றத்தில் அடையாளம் காணும் நேரம் வரும் போது, அவர்களை ரஞ்சித் சிங்குக்கு முன்பே காட்டிவிடுவதாகவும் கூறினார். அப்போது தானே அவர்கள் முகங்கள் நினைவில் இருக்கும். அப்படியே நீதிமன்றத்தில் வீரல் நீட்டி காட்டிக் கொடுத்திடலாம்.

**அஜய் பாரியா பற்றிய உண்மை**

காவல் துறை சாட்சியாக ஆக்கப்பட்ட இந்து தேநீர் விற்பனையாளரான அஜய் பரியாவை கண்டுபிடிக்க 'தெகல்கா' விடம் அஜய் பாரியா நியோல் பர்மரின் நெருங்கிய கண்காணிப்பில் வாழ்வதாகத் தெரிவித்தார். பர்மரின் அலுவலகம் அருகே அஜய் பாரியா தேநீர் விற்பதாக கேள்விப்பட்டதை பாதக் தெரிவித்தார். கோத்ராவில் வசிக்கும் பரியாவின் தாயை சந்திக்க 'தெகல்கா' தீர்மானித்தது. அவர் ஒரு தினக்கூலி. தன் மகன் பயத்தின் விளைவாக காவல் துறை சாட்சியாக மாறியதாகத் தெரிவித்தார்.

கோத்ரா ரயில் நிலையத்தில் சம்பவம் நடந்த போது தன் மகன் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்ததாக அவர் மேலும் தெரிவித்தார். தன்னை சந்திக்கவோ கோத்ராவுக்கு வரவோ கூட பாரியாவை அவர்கள் அனுமதிக்கவில்லை என்றார். அப்படி பாரியாவந்தபோதெல்லாம் இரு காவல் துறையினர் அவருடன் வந்ததாக அவரது தாயார் தெரிவித்தார்.



# இரு உலகங்கள் ஊடான மிதவைப் பயணம்

நல்லறிவுக்கும் கொலை வெறிக்கும் ஊடான நிழல் கோடுகளின் மறைவில் பயணித்த **ஆஷிஷ் கேத்தன்** வந்த வழியே திரும்பிச் சென்று உண்மையை தேடித்திரிகிறார்

அப்போது தான் சிற்றுண்டியை முடித்துவிட்டு அன்றைய நாளிதழ்களை எடுத்துக்கொண்டு இளைப்பாறலாம் என நினைத்த போது, பக்கத்து அறையில் என் செல்போன் ஒலித்தது. நான் அங்கு சென்று கையில் எடுப்பதற்குள் அழைப்பு துண்டிக்கப்பட்டு அதில் ஒரு குறுஞ்செய்தி காத்திருந்தது. 'என்னை அழைக்கவும்' என அது கூறியது. அனுப்பியவர் என் ஆசிரியர் தருண் தேஜ்பால்.

குஜராத்தில் நடந்த போலி என்கவுண்டர் சாவுகள் மற்றும் அதில் முதல் அமைச்சர் நரேந்திர மோடியின் தொடர்புகள் குறித்து மறைமுக ஆய்வை நடத்திவிட்டு, இரு நாட்களுக்கு முன்பு தான் திரும்பியிருந்தேன். குஜராத் காவல் துறை குறித்து பல மெய்யான முடிவுகளுக்கு அந்த நடை முறைகள் இட்டுச் சென்றது. அங்கு காவல் துறை அதன் இயல்பை தொலைத்து அடியாட்களாக உருமாற்றம் அடைந்து விட்டது – 'என்கவுண்ட'ரின் பெயரால் தொடர்ந்து முஸ்லிம்களை கொல்வது அங்கு வாடிக்கையாக இருந்தது. ஏன் இத்தனை விடியற்காலையில் தருண் என்னிடம் பேச விரும்பினார். கொஞ்சம் வியப்பாக இருந்தது (அப்போது ஏறக்குறைய 11 மணி இருக்கும். ஆனால் பல இதழியலாளர்களுக்கு அது விடியற்காலையே). அந்த அம்பலப்படுத்துதல்கள் பதிப்பு பெற்றிருந்தது. ஒரு வேளை அதைப் பற்றியதாக இருக்குமோ. ஒரு வேளை அம்பலமானவர்கள் சட்டப்பூர்வ அறிவிப்பு எதையும் அனுப்பி இருப்பார்களோ! என் தலைக்குள் கேள்விகளின் திரளுடன் தருணை அழைத்தேன். ''ஆஷிஷ், நீ பரோடாவில் உள்ள மூர்க்கத்தனங்கள் பற்றி கேள்விப்பட்டிருக்கியா?'' தருண் கேட்டார். நிச்சயமாக கேள்விப்பட்டிருக்கிறேன். மோசமான காரணங்களுக்காகவே தொடர்ந்து குஜராத் செய்திகளில் இடம் பெறுகிறது.

'இந்துத்துவா' என்னும் போதையில் பித்துப்பிடித்த சிலர் வன்முறையில் ஈடுபடும் மற்றொரு நிகழ்வு. இந்த முறை அவர்களது இலக்கு வடோத்ராவின் மகாராஜா சாயாஜிராவ் பல்கலைகழகத்தின் (எம்.எஸ்.யூ.) நுண்கலைத்துறை. ''கேட்கவே திகைப்பாய் உள்ளது'' என்றார் தருண். இந்த நேரத்தில் அவர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட தொலைக்காட்சிகளில் தோன்றி, தங்கள் திருகல் தத்துவத்தை தெளிவாக விளக்கி உலகுக்கே அறிவிக்கத் தொடங்கியிருந்தார்கள் – இந்து கடவுள்களை 'வெறுப்பூட்டுகிற' முறையில் சித்தரித்தது, மத உணர்வுகளை காயப்படுத்திவிட்டதாக தெரிவித்தார்கள். ஆனால் நுண்கலை மாணவர்களையும், பேராசிரியர்களையும் இவர்கள் இலக்காக்குவதைப் பார்த்தால், அதற்கு பின்னால் வேறு தீவிர செயல் நோக்கங்கள் இருப்பதாகத் தெரிகிறது என்றார் தருண். இவர்கள் யார் என்று அடையாளம் காண், அவர்கள் என்ன செய்கிறார்கள், அவர்கள் வெளியே காட்டிக்கொள்வதற்கும் அவர்களின் சொந்த பார்வைகளுக்கும் வேறுபாடுகள் என்ன?



**சாகிரா ஷேக் விஷயத்தை தொடங்கும் போது இருந்தது போலவே, இப்போது என் முன் இருந்த மிகப்பெரும் கேள்வி, எங்கிருந்து இதனை தொடங்குவது?**

தொலைபேசியை வைத்ததும் எனக்குள் இயல்பான மனச்சோர்வு கவிந்து வந்தது. மூன்று அடுத்தடுத்த புலனாய்வு அறிக்கைகள் என்னை சோர்வடைந்து தளர்த்துகிறது (1993 தொடர் குண்டு வெடிப்பில் சஞ்சய் தத்தின் தொடர்பு, மகாராஷ்டிரா டி.ஜி.பி. பிஎஸ். பஸ்ரிச்சாவின் சட்டப்பூர்வமற்ற சொத்துக் குவிப்பு என) என் மனைவி க்ரிஷ்சை விடுமுறைக்கு அழைத்துச் செல்லும் என வாக்குறுதியை தவறவிட்டுக் கொண்டேயிருந்தேன். என் 9 மாத பெண் குழந்தையுடன் சவகாசமாக இருக்க வாய்த்து நீண்ட நாட்கள் ஆகிவிட்டது. ஆனால் அந்த அழைப்பு வந்த சில மணி நேரங்களில், குஜராத் நோக்கிச் செல்ல என் பயணப் பைகளை நிரப்பத் தொடங்கினேன். அங்கு ஒவ்வொரு முறை செல்வதும் எனக்கு பெரும் வெறுப்பாகவே இருந்தது.

வடோத்ராவுக்கு என் முதல் பயணம் 2004இன் பனிக்காலத்தில் அமைந்தது –

பெஸ்ட் பேக்கரி படுகொலை வழக்கின் முதன்மை சாட்சியமான சாகிரா ஷேக், மீண்டும் ஒரு முறை தன் வாக்குமூலத்தைப் பின்வாங்கி தன்னை நிர்மூலமாக்கியவர்களின் கைப்பாவையாக மாறியிருந்தார். விமான நிலையத்திலிருந்து ஆட்டோ ரிக்ஷாகாரர் என்னை அலக்பூரிக்கு அழைத்துச் சென்றுகொண்டிருந்தார். அது அந்த நகரத்தின் அனைத்து சாலைகளும் சந்திக்கும் மய்யப்பகுதி. அங்கு தான் எல்லா விடுதிகளும் உள்ளன – ரயில் நிலையம். சுற்றுப்புறங்கள், உணவு விடுதிகள், அந்தப் பயணம் வியக்கத்தக்கது. என்னால் மறக்க இயலாது. அந்தப் பழக்கப்பட்ட இடம், நிழலால் இருண்டு, தெருவிளக்குகளால் கொஞ்சம் கொஞ்சம் ஒளிபெற்று, அது எல்லாம் எனக்குள் துயரத்தை நிரப்பியது. ஆனால் 2004 அய் போலவே இப்போதும் கதை தேடி வந்தேன். கொஞ்சம் துணிச்சலும், ஓர் உலவு புகைப்படக்கருவி தவிர்த்து என்னிடம் எதுவும் இல்லை. இப்போது என் முன் இருந்த மிகப்பெரும் கேள்வி, எங்கிருந்து இதனை தொடங்குவது? அப்போதைப் போலவே இப்பொழுதும் இந்த அன்னியமான நிலத்தில் எனக்கு தெரிந்தவர்கள் எவரும் இல்லை. 2004 முதலே சில புனித தலையீடுகள் இருக்கும் போலும். இப்போதும் மாயாஜாலம் நிகழ்ந்ததும், அங்கு சென்ற ஒரு வாரத்தில் நான் ஜாகிராவை நிர்மூலமாக்கிய பா.ஜ.க. எம்.எல்.ஏ. மது சிரிவத்சவ் முன் அமர்ந்திருந்தேன். அந்தப் பகுதியின் தாத்தா வீட்டு சொந்த தோட்டத்தில் அவர் ஊஞ்சலிலும், நான் அருவருப்பான பிளாஸ்டிக் இருக்கையிலும்... என் மடியில் உலவுப் புகைப்பட கருவி இருந்தது.

எப்பொழுதும் போல் என் உரை சிறுத்திருந்தது. ஜாகிரா விஷயத்தில் புதிதாய் தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை என தருண் கூறியிருந்தார். நான் சிதறி கிடந்த துண்டுகளை சேர்த்து முழு படத்தை உருவாக்க வேண்டும். அதை சேர்த்து முடித்த போது அது பெரும் தொகையானது : ஜாகிராவின் மவுனத்திற்கு சிரிவாத்ஸவ் கொடுத்த விலை 18 லட்சம் ரூபாய். அது அப்போது நடந்தது. ஆனால் அற்புதங்கள் தினமும் நிகழ்வதில்லை. நானே எனக்கு கூறிக்கொண்டேன். இருப்பினும் ஒரு போடு போட வேண்டியதிருந்தது.

மூர்க்கமான தேடுதலுக்குப் பின் தான் நியாயமான விலையில் ஓர் அறை



கிடைத்தது. ஓட்டல் ஆதித்தி இன்டர் நேஷனல் அறை எண் 506இல் நுழைந்தேன். அந்த விடுதியில் பெயரைத் தவிர எதுவும் சிறப்பாக இல்லை. வெத்தான அறை, இருளார்ந்த விளக்குகள், விரிந்திருந்த வண்ணப்பூச்சி என எதுவும் எனக்கு உற்சாகம் தரவில்லை. சில சிகரெட்டுகள் ஒரு வேளை தெளிவை தரலாம். நிரோடின்னும், சிறகு முளைத்த என் சுயசந்தேகங்களும் சேர்ந்து ஒரு புதிய யோசனையை தந்தது. எங்கு செல்வது என்று எதுவும் புரியாததால், ஏன் காலார இங்கிருந்து செல்லும் ஒவ்வொரு வீதியிலும் நடக்கக் கூடாது. நடந்த பிறகு பார்க்கலாம் எந்த வீதி என்னை இலக்கை நோக்கி அழைத்துச் செல்கிறது என. எம்.எஸ்.யூ.வில் நடக்கும் நிகழ்வுகளை எதிர்த்து போராட்டம் நடத்தி வரும் சில மனித உரிமை ஆர்வலர்களை தொலைபேசியில் அழைத்தேன். குஜராத்தில் நிறைய நண்பர்கள் உள்ளனர் ஒரு மும்பைக்காரரை உடனே தொடர்பு கொண்டேன். நான் ஒரு பத்திரிக்கையாளர் என்பதை கூறாமல், என்னை பா.ஜ.க.வின் வடோத்ரா தலைவர்கள் யாருடனாவது தொடர்புபடுத்துங்கள் என்றேன். ''அவர்களிடம் எனது பெயர் பியுஷ் அகர்வால் என கூறுங்கள். தில்லி பல்கலைக்கழகத்து ஆய்வு மாணவர், குஜராத்தில் இந்துத்துவா குறித்து ஆய்வு செய்பவன்''.

அடுத்த நாள் காலை சில தொடர்புகளை அளிப்பதாகக் கூறினார். அடுத்த நாள் காலை அவரை 10 மணிக்கு அழைத்தேன். அவர் அழைப்பை எடுக்கவில்லை. பலமுறை அழைத்தும் பயனில்லை. பிறகு சில செயல்பாட்டாளர்களை சந்திப்பது என முடிவு செய்தேன். அன்றைய நாளில் அதில் ஒருவர் என்னை பேராசிரியர் இப்ரூகாருடன் அறிமுகம் செய்தார். அவர் எம்.எஸ்.யூ.வில் நடந்த சம்பவங்களை தொடர்ந்து காவி வெறிகளை வெளிப்படையாக விமர்சித்தார். எம்.எஸ்.யூ. பல்கலைக்கழக ஆட்சிக் குழு எப்படி பா.ஜ.க.வினரால் நிரம்பி வழிகிறது என்றும் பல வி.எச்.பி., ஆர்.எஸ்.எஸ். அனுதாபிகள் அங்கு சூழ்ந்து உள்ளதையும் அவர் விளக்கினார். அந்த பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரை, உங்கள் தத்துவ சார்பை வைத்து தான் உங்களுக்குப் பணி நியமனம், இடமாற்றம். நீங்கள் வலது சாரியா, நடுநிலைவாதியா, இடது சாரியா என்பதைப் பொறுத்துதான் பல்கலையில் உங்கள் செல்வாக்கு தீர்மானிக்கப்படும்.



**தீமந்த் பட் கூறிய சில வரிகள் என் மொத்த கதையின் போக்கையே மாற்றியமைக்கவில்லை. மாறாக, இந்த மொத்த தேசமே எப்படி இந்த குஜராத் கலவரங்களை காண்கிறது என்பதையும் மாற்றியது**

மும்பை அழைப்புக்கு பதில் வந்து விட்டது. அதுவரை அழைப்பை எடுக் காததற்கு வருத்தம் தெரிவித்தார். ஆனால் அதைவிட பா.ஜ.க.வினரின் பெயர்கள், தொடர்பு எண்களைப் பெறு வதில் நான் ஆர்வமாக இருந்தேன். அதில் சிலரிடம் கொஞ்சம் பணிவாய் நடந்துகொள். ''நீங்கள் ஆய்வு மாணவர் என்பதால் தான் இதனையே செய்தேன்'' என வாக்குறுதியளித்தார். நான் ஒருவரை அழைத்தேன். அவர் துருவி துருவி கேள்விகள் கேட்டார். என்ன ஆய்வு அதன் தன்மை, பயன் என நான் அவரை சமாதானப்படுத்தி விடுவேனா என கொஞ்சம் தயக்கம் கண்டேன். ஆனால் அவர் என்னை மற்றொருவருடன் தொடர்புபடுத்தினார். அவர் என்னை தீமந்த் பட் இடம் அனுப்பி வைத்தார். அவர் தான் வடோத்ரா பா.ஜ.க., எம்.எல்.ஏ.வின் அந்தரங்க உதவியாளர் என எனக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. அவர் என்னை உரிய ஆட்களுடன் அறி முகம் செய்திடுவாராம். ஏற்கனவே உள்ள தகவல்களின் படி என்னிடம் பா.ஜ.க. பொறுப்பாளர் நீரஜ் ஜெய்னின் பெயர் இருந்தது. அவர்தான் எம்.எஸ்.யூ. வளாகத்தில் தகராறுகளை வழிநடத் தியவர். நான் பட் அய் அழைத்து நான் நீரஜ் பாய் அய் சந்திக்க விரும்புவதாகத் தெரிவித்தேன். (குஜராத்தில் எல்லா பெயர்களின் பின்னொட்டாக பாய் இடம் பெறும்) குறித்த நேரத்தில், உயர்ந்த மேல் தளமுடைய வடோத்ரா பா.ஜ.க. அலுவலகத்தின் வரவேற்பு அறைக்குள் நுழைந்தேன். அரை மணி நேரத்திற்குப் பின், 30 வயதுடைய குள்ளமான உருவத் துடன் தன் செல்ல தொப்பையுடன் நடந்து வந்தார் ஜெயின். முஸ்லிம்கள் தான் எல்லா தீமைகளின் ஆணிவேர் என்ற அறுதி நிலைப்பாடு உடையவர் அவர். ஆனால் அவரது முஸ்லிம் வெறுப்பு தான் அவர் சாதாரண பஜ்ரங் தள் தொண்டராக தொடங்கி வடோத்ரா பா.ஜ.க. செயலாளராக வளர்ந்து வருவ தற்கான கடவுச்சீட்டு என்பதை அவர் நன்கு உணர்ந்திருந்தார். இந்துத்துவத் தின் பெயரால் ஓவியங்களின் மீது காட்டு மிராண்டிதனமான தாக்குதலை தொடுத் தது அவருக்கு நற்பெயரை பெற்றுத் தந்தது.

ஆனால் ஜெயினின் முஸ்லிம் மீதான வெறுப்பு எனக்கு எந்த விதத் திலும் பயனளிக்கவில்லை. அடுத்த நாள் கழிந்தது. நான் பா.ஜ.க.காரரான தீமந்த் பட் அய் சந்திக்க முடிவு செய் தேன். அவர் எம்.எஸ்.யூ.வின் தலைமை கணக்காளரும் கூட. மே 19, காலை 11 மணிக்கு எம்.எஸ்.யூ.வின் நிர்வாக பிரிவு அலுவலகத்தின் இரண்டாவது மாடியில் உள்ள அவரது அலுவலகத் துக்கு சென்றேன். பல கோப்புகளை நுண்ணாய்வு செய்வது, தொடர்ந்து தொலைபேசி அழைப்புகள் பேசுவது என இதற்கு நடுவில் பெரும் உபசரிப் பாக தண்ணீர், தேநீர் வழங்குவது, எனக்கு கழிவறைக்கான வழியை காட்டுவது என அன்பாய் இருந்தார் (கழிவறைக்கு சென்று தான் நான் அணிந்திருக்கும் உலவு புகைப்படக்கருவியை இயக்கு விக்க வேண்டும்) 15 நிமிட உரையாட லில்தான் நான் அவரைப் போலவே ஒரு தீவிர இந்து என அவர் மனநிறைவு பெற் றார் (இருபுறங்களிலும் தொடர்ந்த முஸ்லிம் அவதூறுகளை மலையென பொழிந்து). அடுத்து அவர் கூறிய சில வரிகள், என் மொத்த கதையின் போக் கையே மாற்றியமைக்கவில்லை. மாறாக, இந்த மொத்த தேசமே எப்படி இந்த குஜ ராத் கலவரங்களை காண்கிறது என்பதை யும்தான். ''நான் பேராசிரியர் பன்துக் வாலா, அரசதிகாரி பீர்சாதா ஆகியோரின் வீடுகளை கொளுத்தியதில் பங்கு கொண்டேன்... அமைதி ஏற்படுத்தும் குழுவாக வேஷமிட்டு கலவரக்காரர் களுக்கு ஆயுதம் கொடுத்தேன். சங் பரிவார் தன்னிடம் உள்ள லத்திகளை வைத்துவிட்டு ஏ.கே. 56 அய் கைகளில் எடுக்க வேண்டும்.''

எனக்கு தலைசுற்றத் தொடங்கியது. பட் பகல் பொழுதில் ஒரு கணக்காளராக இருக்கலாம். ஆனால் அவரது உண்மை யான ஈடுபாடு, மத சிறுபான்மையினரை வதை செய்வதே. ஓவியங்களை சேதப் படுத்துவது ஒரு சிறிய கலகமே. உண்மை யான போர் அய்ந்து ஆண்டுகளுக்கு முன் 2002இல் வெற்றிவாகை சூடியாகி விட்டது. அய்ந்து ஆண்டுகளுக்கு முன் தான் நமக்கு வேண்டிய கதையும் இருக் கிறது, என எனக்கு அடுத்த மேலதிகாரி

யான ஷாமியிடம் கூறினேன். ஹரிந்தர் பவேஜா அவரை நாங்கள் அப்படியும் அழைப்போம். தருன், ஷாமி ஆகிய இருவரும் என்னைசதையை சென்று வேட்டையாடும் படி கூறினார். நேரமும், வாய்ப்புகளுக்கு எந்த கட்டுப்பாடுகளும் இல்லை என்றார் தருண். ‘‘உனது இந்த கதை குஜராத் கலவரங்களின் மீதான் இறுதி வார்த்தையாக இருக்கட்டும்’’ என்றார் ஷாமி. அப்படித்தான் ஆறு மாதப் பயணம் தொடங்கியது. இந்தப் பயணம் என்னை கடந்த காலத்துக்குள் சுழற்றிச் சென்றது, 2002ஆம் ஆண்டின் வரலாற்றை மீண்டும் எழுத. இந்தப் பயணத்தில் என் சக பயணிகள் பயமும், நம்பிக்கையும் மட்டுமே; உண்மையை கண்டுவிடும் நம்பிக்கை மற்றும் பயம் என்னை ஆட்கொண்டு விடுமோ என்பது. கொலையாளிகளை வேட்டையாடிவிடலாம் என்கிற நம்பிக்கை. பயம், அவர்கள் என்னையும் கொன்றுவிடுவார்களோ என்று. நம்பிக்கை – அது குஜராத்தில் உள்ள பெரும் பகுதியானவர்களுக்கு இல்லை. பயம் – அது நிரந்தர நிழலா, ஏறக்குறைய உங்கள் இருப்பின் நீட்சி, உங்கள் தோள்பட்டைக்குப் பின்பாக அது பதுங்கியிருக்கிறது.

எத்தனை பேரை சந்திக்க முடியுமோ அத்தனை வி.எச்.பி., பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். காரர்களை சந்திப்பது என தீர்மானித்தேன். பரிவாரை சேர்ந்த சிலரை அறிமுகப்படுத்தும்படி பட்டிடம் கேட்டுக் கொண்டேன் – மொத்த இந்து அமைப்புகளையும் ஒரு குடும்பமாக ‘பரிவார்’என்று அழைப்பார்கள். அவர் உடனே சம்மதித்தார். என் பயணம் தொடங்கியது. அகமதாபாத்தில் உள்ள ஒருவர் என்னை மற்றொருவருடன் தொடர்பு படுத்துவார். அவர் என்னை மூன்றாவது நபரிடம். சந்திப்புகள் தொடர்ந்தது, வளர்ந்தது. அடுத்த சில நாட்களில் ஒரு பா.ஜ.க.காரரிடம் என்னை கோத்ராவுக்கு அனுப்ப இயலுமா என்று கேட்டேன் . கோத்ரா ஒரு சிறிய நகரம், அது இருண்மையிலிருந்து பாய்ந்து இந்திய அரசியல் அகராதிகளின் முக்கிய சொல்லாக உருமாறியது. கட்ட விழ்க்க முடியாத அவல விடுகதை. அடுத்த நாள் நான் கோத்ராவில் சபர்மதி ரயில் எரிப்பின் முக்கிய சாட்சியான பா.ஜ.க.வை சேர்ந்த குகுல்காதக் முன்னால் நின்று கொண்டிருந்தேன். அவர் என்னை தற்போதைய கோத்ரா எம்.எல். ஏ.வும் பஜ்ரங் தலைவருமான ஹரேஜ் பட்டிடம் அனுப்பினார். பட் எந்த முன்னேற்பாடுகளும் இன்றி உறையாற்றக் கூடியவர். அவர் இப்படியான ஒரு கலந்துரையாடலுக்கு காத்திருப்பவர் போல தெரிந்தது. பத்திரிகையாளர்களுக்கு இப்படிப்பட்டவர், அதுவும் இவர்களிடம் சொல்வதற்கு விஷயங்கள் இருப்பின், வரப்பிரசாதம் தான். 45 நிமிடங்கள் அவர் தன் இந்துத்துவ பயணங்களை அலுப்புறும் அளவுக்கு கூறிய பிறகு, நான் ஒரு கேள்வியை முன்வைத்தேன். ‘‘நாம்’’ (நான் அவர்பின்பற்றும் மதத் தீவிரவாதத்தின் கடும் ஆதரவாளனே என்பதில் பட் ஆறுதலடைந்தார்) ‘‘எப்போதும் ஆயுதங்கள் வைத்திருப்பதில்லை. அப்புறம் எப்படி 2002இல் நம்மால் அத்தனை முஸ்லிம்களையும் கொலை செய்ய முடிந்தது. ‘‘நீ இதை உன் புத்தகத்தில் எழுதுவதில்லை என சத்தியம் செய்தால், நான் கூறுகிறேன்.’’ (நான் வி.எச்.பி.யின் இந்துத்வத்தை பிரச்சாரம் செய்யும் புத்தகம் எழுதுவதாக கூறியிருந்தேன்). ‘‘நான்ஆயுதங்கள், ராக்கெட் செலுத்தும் கருவிகள், வாள்கள் என அனைத்தையும் தயாரித்து ‘குஜராத் மாநிலம் முழுவதும் விநியோகம் செய்தேன். துப்பாக்கிகளும் வாள்களும் பிற மாநிலங்களிலிருந்து கடத்தி கொண்டு வரப்பட்டது. இதை நான் கட்சி வட்டத்துக்கு வெளியே உள்ள ஒருவருடன் முதல் முறையாக கூறுகிறேன்.’’ ஒரு கணம் பயத்தில் என காதடைத்து விட்டது.

அன்று சூன் 1, 2007 அடுத்த சில மாதங்கள் நான் கலவரக்காரர்கள், கொலைகாரர்கள், மறைவாய் உதவி புரிந்தவர்கள் எனப் பலரையும் சந்தித்தேன். வழி நெடுக நம்பிக்கை இழப்புகள், திசைதிருப்பங்கள், முட்டுச்சந்துகள் என என் பேரத்தை நிகழ்த்திக் கொண்டே இருந்தேன். அகமதாபாத்திலிருந்து கோத்ராவுக்கு நான் பட் உடன் காரில் பயணித்துக் கொண்டிருந்தேன். பாதி வழியில் அவருக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. அதைப் பேசி முடித்து விட்டு அவர் என்னைப் பார்த்து, எனக்கு தில்லியிலிருந்து அழைப்பு. அங்கிருந்து ஒரு பத்திரிகையாளர், இங்கு சபர்மதி ரயில் எரிப்பு தொடர்பான மறைவான ஆய்வை மேற்கொள்வதாக தகவல். அதனால் கவனமாக இருக்கும்படி எச்சரிக் கப்பட்டுள்ளேன். அவரை நேருக்கு நேர் பார்த்துக் கொண்டே அப்படியா என்றேன்.

சில நிமிடங்களுக்குப் பின்னர் பட்டின் வாகனம் பிரதான சாலையை விட்டு மண் சாலையில் எங்கோ சென்றது. ஆள்அரவமில்லாதசாலை. கார்பாழடைந்த கட்டடம் முன்பு நின்றது. அங்கு மற்றொரு கார் வந்தது. அதிலிருந்து இருவர் இறங்கினார்கள். என்னை காத்திருங்கள் என கூறிவிட்டு, பட் மற்றும் அந்த இருவர் அந்த வீட்டினுள் சென்றனர். என்னிடம் இரு உளவு புகைப்படக் கருவிகள் இருந்தன. என்னை சோதனையிட்டால் போதும். என் முகமூடி உரிந்து விழும். நான் எந்த இழப்புக்கும் தயாரானேன். இருபது நிமிடங்கள் கழித்து பட் திரும்பினார். நாங்கள் மீண்டும் கோத்ராவுக்கு பயணமானோம். அந்த இருவரும் எதிர் திசையில் சென்றனர். அவர்களுடன் வியாபாரம் செய்வதாக பட் கூறினார். பிறிதொரு சந்தர்ப்பத்தில், பரத்பட், அவர் என்னிடம் – எப்படி முஸ்லிம்களை மிரட்டினோம், முஸ்லிம் சாட்சிகளை விலைக்கு வாங்கினோம் என அனைத்தையும் கூறிவிட்டார். நான் அங்கிருந்து கிளம்ப இருந்த போது, பட் என்னை அழைத்து நான் ஆர்.எஸ்.எஸ். காரன் தானா என்பதில் அவருக்கு அய்யம் இருப்பதாகத் தெரிவித்தார். அது நடந்த சில நிமிடங்களில் மற்றொரு வி.எச்.பி. பிரமுகர் என்னை அழைத்து என் இருப்பிடம், ஊர் குறித்து விசாரித்தார். அவரது வாக்குமூலத்தை சில நாட்களுக்கு முன்பு நான் ரகசியமாய் பதிவு செய்திருந்தேன். எப்படியோ இந்த நெருங்கிய மழிப்புகளிலிருந்து உயிர் பிழைத்து என் பயணம் தொடர்ந்தது.

அப்படி அழுத்தம் கூடுகிற சமயங்களில்உடனே பம்பாய்க்கு என்துணைவி, என் குழந்தை, என் வீடு என காட்டுக்கு சென்றிடுவேன். கடந்த ஆறுமாதங்களாக நான் இரு உலகங்கள் ஊடான மிதவைப் பயணத்தில் இருந்தேன். என் உலகம் அங்கு நான் ஆஷிஷ் கேத்தன் – பத்திரிகையாளர். ஒரு கத்தோலிக்க மனைவி, பிரஞ்சு பெயருடனான மகள் எந்த நிலையான மதமும் சாராதவன், ஏராளமான கிறித்துவ, முஸ்லிம் நண்பர்கள். அதன் பின் வேறு ஒரு உலகமும் இருந்தது. அங்கே நான் பியுஷ் அகர்வால் – பரிவாரின் உறுப்பினர் – இந்து வெறியன், மத அடிப்படைவாதி, கொலைகாரர்கள் வன்புணர்வு புரிபவர்களை மட்டுமே நண்பர்களாகக் கொண்டு.



# அவமானங்கள் நிகழாதிருக்க...

**ஹரீந்தர் பவேஜா**
ஆசிரியர் – 'தெகல்கா'வின் புலனாய்வுப் பிரிவு

தெகல்கா' – குஜராத் 2002 நம் காலத்தில் நிகழ்த்தப்பட்ட மிக முக்கிய ஆய்வு. பலரும் இதற்கு எதிராக வாதாடக் கூடும். ஆனாலும் இது ஆயுத பேர ஊழல் தொடர்புடைய 'தெகல்கா'வின் ஆய்வைவிட முக்கியமானது. தேச நலனுக்காக அரசியல் தளைகளைக் கடந்து அடியாழம் வரை சென்று வந்தது அந்த பாதாளக் கயிறு.

பொறாமை, பேராசை ஆகியவற்றை கையாண்டது ஆயுத பேர ஆய்வு. ஆனால் இந்த குஜராத் புலனாய்வு உண்மைகள், நம் அடிப்படைகள் தொடர்புடையவை. இது முதன்மை யானது. ஏனெனில், தொடர்ந்து நம்பிக்கை இழந்த முஸ்லிம்கள் மீது தொடர் வன்முறை நிகழ்த்தப்படுகிறது. இது மிகப்பெரும் முறிவு. சிதைந்துப் போன முறிவு. ஒரு தேசத்தின் அவமானம்.

குஜராத் 2002 இல் நிகழ்ந்த இனப்படு கொலையில் அரசாங்கத்தின் பங்களிப்பு நாம் அறிந்ததே. அந்த கலவரக்காரர்கள்... இல்லை, கொலைகாரர்கள்தான் சரியான சொல். அவர்களுக்கு அரசே பாதுகாப் பளித்தது. ஆனால், அவர்களின் முகங்கள் நமக்கு தெரியாது. அவர்கள் எத்தகைய செயல்களில் ஈடுபட்டார்கள், எவ்வாறு இந்த இனப்படுகொலை நிகழ்த்தப்பட்டது; அந்த திட்டம் என்ன என்பதை எல்லாம் நாம் அறிந்திருக்கவில்லை.

இந்த ஆய்வு அவற்றை எல்லாம் துல் லியமாக வெளியிட்டுள்ளது. இந்த பூமியைப் பிளந்த ஆய்வு, ஒரு தனிநபரின் சாதனை. உண்மையை கண்டறியும் வெறி கொண்ட அவரிடம் எந்த ஆயுதங்களும் இல்லை. இரண்டு பட்டன் அளவு காமி ராக்கள் தவிர! உறையும் தகவல்களை கொலைகாரர்களே விவரிக்கிறார்கள். எப் படி சங்பரிவார் உறுப்பினர்களின் தொழிற் சாலைகளில் வெடிகுண்டுகள் தயாரிக் கப்பட்டன; எவ்வாறு காக்கி உடைய ணிந்தவர்கள் அதனைப் பாதுகாத்தனர்; எப்படி நரேந்திர மோடி வழிநடத்தினார்.

எந்தத் தூண்டுதலுமின்றி பெறப் பட்ட வாக்குமூலங்கள். அவர்களுக்கு கத்தை கத்தையாக பணம் வழங்கப்பட வில்லை. அசாத்தியமான கதைகளுக்கு, அசாத்தியமான வழிமுறைகள் தேவை. இந்து மதத்தை ஆய்வு செய்யும் மாணவரி டம் தன்னிச்சையாய் கொலைகாரர்கள் பெருமிதத்துடன் விவரிக்கிறார்கள். அவர் கள் கூறியவற்றை எல்லாம் தெளிவுபட குறுக்கு விசாரணை செய்து, களத்தில் சென்று சரிபார்த்து வெளியிடப்பட்டுள்ளது.



சிலர் எச்சரிக்கையாக இருந்தார்கள். சிலர் மனமுவந்தும் சிலர் எரிச்சலுடனும் ஒத்துழைத்தார்கள். அவர்கள் கண் இமைக் காமல் கொடூரங்களை வர்ணித்தார்கள். அவர்கள் வர்ணித்த விபரங்கள் எல்லா முதல் தகவல் அறிக்கைகளில், வாக்குமூலங் களில், காவல் துறை குற்றப்பத்திரிகை களில் இருந்திருக்க வேண்டியவை. பாபு பஜ்ரங்கி, கர்ப்பிணிப் பெண்ணின் வயிற் றைக் கிழித்ததை கூறுகிறார். சுரேஷ் ரிச் சர்ட், பாலியல் வன்புணர்வைப் பற்றி கூறு கிறார். அவன் தான் பொய் சொல்லவில்லை என்றும் கூறுகிறான்; ஏனெனில், அவன் இதை எல்லாம் தன் மனைவியின் முன்னி லையில் கூறுகிறான்.

தற்பொழுது சட்டமன்ற உறுப்பின ராக இருக்கும் ஹரேஷ் பட், விசாரிக்கப்பட வேண்டியவர். அவர் ராக்கெட் செலுத்தும் கருவியை வடிவமைத்ததை கூறுகிறார். 40 மணி நேரப் பதிவுகளில் இந்த முக்கிய நாயகர்களிடம் கழிவிரக்கத்தின் ரேகை களே இல்லை. மாறாக சந்தர்ப்பம் கிடைத் தால், மேலும் கொன்று குவிப்போம் என்றே தெரிவிக்கிறார்கள்.

இந்த ஆய்வு பல காரணங்களுக்காக முதன்மையானது – இந்த மக்கள் நம் பிக்கை கொண்டிருக்கும் நீதித்துறை, காவல் துறை ஆகிய இரு தூண்களும் நிர் வாணமாய் இங்கே நிற்கின்றன. இரு அரசு வழக்கறிஞர்கள் காமிரா முன்பு தங் களின் சுய விருப்பங்கள், சார்புகள் குறித்துப் பேசுகிறார்கள். அவர்கள் எப்படி கரசேவகர்களாக மாறி கண்டம் துண்டமாக வெட்டப்பட்டவரின் குடும்பத்திற்குப் பணம் கொடுத்து பைசல் செய்தோம் என்று தெரிவிக்கிறார்கள்.

அரசியல், நீதித்துறை என பல மட்டங் களில் தொடரும் வீழ்ச்சியின் கதை இது. குஜராத் அரசு வழக்கறிஞரோ, நானாவதி – ஷா கமிஷனின் இருவரை பற்றியும் வெளிப் படையாக கருத்து தெரிவித்துள்ளார். இக் கதையை வெளிக்கொணர எங்களுக்கு ஆறு மாதங்கள் ஆனது. அய்ந்து ஆண்டு களாக அரசு ஏன் பாதிக்கப்பட்ட தன் சொந்த மக்களுக்கு எந்த நியாயமும் வழங் கவில்லை என்பது தெளிவாகிறது.

இந்த ஆய்வு கவனத்தை கோருகிறது. காவல் துறையில் உடனடி மாற்றங்கள் தேவை. இனப்படுகொலையின் சாட்சி களில் பலர், குஜராத்துக்கு வெளியே நீதி மன்றத்தில்தான் நியாயம் கிடைக்கும் என ஏங்குகிறார்கள். அண்மையில் முன்னாள் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஒய்.கே. சபர் வாலை நோக்கி விரல் நீட்டப்பட்டதால், தில்லி நீதிமன்ற முதற் சாட்சியில் தோன்று கிற குற்றம் என வழக்குத் தொடுத்துள்ளது.

இந்த விசாரணையை நோக்கி மொத்த நீதிமன்றத்தின் கவனமும் விழ வேண்டும். இது இந்த நாட்டின் அவமானம், நம் கூட்டு அவமானம்.



# இங்கே எதுவும் பொருட்படுத்தப்படுகிறதா?


தருண் ஜே. தேஜ்பால்
ஆசிரியர் – 'தெகல்கா'

கடந்த முறை நாங்கள் எங்கள் புலனாய்வை வெளிக் கொணர்ந்தபோது, அது தில்லியின் அதிகாரத்தை ஊடுருவிச் சென்றது. நாங்கள் கண்டிக்கப்பட்டோம். மூன்று ஆண்டுகள் எரியும் தணலின் மீது நடந்தோம். ஆயுத பேர ஊழலை நாங்கள் மார்ச் 2001இல் வெளி யிட்ட போது, இரண்டு விஷயங்கள் நிகழ்ந்தது. மக்களிட மிருந்து மிகப்பெரும் ஆதரவு கிடைத்தது. ஆனால், அது தற்காலிக மானதாக இருந்தது. அதன் பிறகு எதிர்பார்த்தது போலவே எங்கள் வாழ்வு மற்றும் பணியின் மீது கடும் தாக்கு தல்கள் தொடங்கியது – சட்டப் பூர்வமற்ற – அரவமற்ற ஒரு தாக்கு தல். அரசு தன் ஆயுதங்கள் அனைத்தையும் தீர்க்கும் வரை தாக்கியது. எதுவும் இல்லாததால் நிறுத்தியது.

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் மீது பல வசைகள் பொழியப்பட்டன. காங்கிரசின் கையாள், தாவுத் இப்ரா கிமின் ஏஜெண்ட், 'இந்துஜா'வின் சம்பளப் பட்டியலில் இருப்பவர்கள், பாகிஸ்தானின் அய்.எஸ். அய்.யுடன் தொடர்புடையவர்கள், பங்கு சந்தை தகர்வுக்கு காரணமான வர்கள் என அது தொடர்ந்தது. அடுத்த ஒரு தொலைக்காட்சி நிகழ்வில் நானும், நரேந்திர மோடியும் பங்கேற்றபோது, அதில் அவர் உச்சநீதிமன்ற நீதிபதிக்கு இருக்கும் சிம்மக்குரலில் பொய்களை வாரி வீசிக் கொண்டிருந்தார். அடுத்த நாள் நரேந்திர மோடி என்னைப் பற்றிய பத்து விபரங்களுடனான துண்டறிக் கையை விநியோகித்தார். அதில் முக்கி யமானது என்னவென்றால், என் தந்தை ஒரு ஒப்பந்தக்காரர், மத்தியப் பிர தேசத்தைச் சேர்ந்த காங்கிரஸ் தலைவர் அர்ஜுன் சிங்கின் நெருங் கிய சகா.

உடனே முகலாய தர்பாரை ஒத்த தில்லியின் மேட்டுக்குடி வர்க்கம், இந்தப் பொய்களை மீண்டும் மீண்டும் ஒளிபரப்பியது. என் நெருங்கிய நண் பர்கள்கூட முணுமுணுத்தார்கள். இந்த நேரத்தில் அரசாங்கம் எங்களை வேட் டையாடிக் கொண் டிருந்தது. நான் இதுவரை 'இந்துஜா'க்கள் எவரையும் சந்தித்திருக்கவில்லை. நான் இதுவரை பங்குச் சந்தையில் ஒரு பங்கைக்கூட வாங்கியதோ, விற்றதோ இல்லை.

நான் காங்கிரசுடன் எந்த கொடுக்கல் வாங்கலும் இல்லாதவன். ஓர் அரசியல் செய்தி சேகரிப்பவனாகக் கூட நான் இருந்ததில்லை (பதிவிற்காக கூறுகிறேன். இந்தியா வில் உள்ள பத்திரிகைகளில் 'தெகல்கா'தான் மூன்று சி.பி.அய். வழக்குகளை சந்திக்கும் ஒரே இதழ் – எல்லாம் தேசிய ஜனநாயக கூட்டணி அரசால் (பா.ஜ.க.) போடப் பட்டவை. அய்க்கிய முற்போக்கு கூட்டணி அரசாங்கம் பதவிக்கு வந்து மூன்றாண்டுகள் ஆன பின்னும் நாங்கள் தொடர்ந்து நீதிமன்றத்திற்கு வழக்கம் போல் சென்று கொண்டுதான் இருக்கிறோம்).




❝ இவர்கள் சிறு குற்றங்கள் புரியும் 'ஜேப்படி' திருடர்கள் அல்ல; தத்துவங்களால் வழிநடத்தப்பட்டு, இந்த கண்டத்திற்கே கேடு விளை விக்கக்கூடியவர்கள். ❞

எந்நேரமும் எங்களை அரசு துரத் திக் கொண்டிருந்தது. நாங்கள் கோடிக் கணக்கான பணத்தை எங்கோ பூட்டி விட்டு, சாவியை விட்டெறிந்து விட்டது போல எங்களை தோண்டித் துருவியது. அந்நேரம் 120 ஆக இருந்த எங்கள் அலுவலகம் 4 பேரை கொண்டதாக சுருங்கியிருந்தது; தெற்கு விரிவாக்கப் பகுதியில் ஒரு இரவல் கட்டடத்தில் இயங்கியது. இந்தியாவின் சில புகழ் பெற்ற நிறுவனங்கள் உட்பட, பலரிட மிருந்தும் லட்சக்கணக்கில் கடன் பெற்று தான் வழக்குகளை நடத்தி வருகிறோம்.

கிரிக்கெட் ஆட்ட பேரங்கள், தாவுத் இப்ராகிம் என பல அம்பலப்படுத்து தல்களை நாங்கள் அந்த சூழலில் வெளி யிட்ட போதும், அதில் எவரையும் நாங்கள் சந்தித்திருக்கவில்லை.

என் தந்தையை விடுங்கள், நான் கூட அர்ஜுன்சிங் அய் சந்தித்ததில்லை. ஒப்பந்ததாரராக இருந்தபோதிலும்

என் தந்தை, அவரது வாழ்வின் பெரும் பகுதியை இந்திய ராணுவத்தில் கரும் பச்சையை உடுத்தி கழித்தவர். 1965 மற்றும் 1971இன் இரு போர்களில் பங்கு கொண்டவர். இருப்பினும் பச்சைப் பொய்யை பொது வெளியில் கூற நரேந்திர மோடி தயங்கவில்லை. இதனை எந்த வகையிலாவது சரிபார்க்க வேண்டும் என நினைப்பின்றி ஊடகங்கள் ஒளிபரப்பின; கொள்கையில்லாத பங்கு சந்தை போல. கொள்கையற்ற இந்த ஊடகங்கள் மிகப் பெரும் ஆபத்துகளை உருவாக்கும் சாத்தியம் கொண்டவை. பாசிசத்தின் மய்யம் வெற்றியானது வெளிப்படையான உண்மை. அவர்களின் பொய் பிரச்சாரங்கள், உண்மையை அப்புறப்படுத்திவிடும்.

1984இல் சீக்கியர்களின் மீது வாள்கள் பாய்ந்தது. அடுத்து 2002இல் அது முஸ்லிம்களின் மீது அவதூறான தகவல்களின் அடிப்படையில் இனப்படுகொலையை நிகழ்த்தியது. ஊடகங்கள் பொறுப்பின்றி பொய்யை ஒளிபரப்பின. அவர்கள் உண்மையை கண்டடைந்த போது, பொய் ஒரு கூற்றாக உறுப்பெற்றுவிட்டது. அம்பலப்பட்டவர்கள் எல்லாம் மூழ்கிப்போகும் வரை கூச்சல் எழுப்புகிறார்கள். நம்முடைய இந்த அம்பலப்படுத்துதல்களிலும் அது நிகழ்ந்தது: நீங்கள் கோத்ராவை விட்டுவிட்டீர்கள்? ஆனால் உண்மை என்னவென்றால், கோத்ரா புலனாய்வுக்கு மட்டும் எங்கள் சிறப்பிதழில் 30 பக்கங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. பெரும் அவதூறுகளில் சிக்கிக்கொண்டால் பெருங்கூச்சலை எழுப்புவது வருந்தத்தக்க அரசியல் தந்திரம்.

இது மேட்டுக்குடி இந்தியர்களால் தொடர்ந்து பரப்பப்படும் ஒரு புதிய வழிமுறை. அருந்ததிராய், மேதா பட்கர் போன்றவர்களின் பொருளாதார அடிப்படை குறித்த சந்தேகங்களை எழுப்புவது. அதைவிட பொதுப் பிரச்சனைகளை முன்னெடுத்துச் செயல்படுபவர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டை பொழிவது. இது, நம்மைப் போன்றவர்கள் சந்திக்கிற பிரச்சனை. இந்த கேடுகள் இங்கு காலனியத்தின் எச்சங்களாய் உள்ளன.

இந்த முறை குஜராத் 2002 புலனாய்வுகள் வெளியானது. சதியை கோருபவர்கள் புதிய உயரங்களை எட்டினார்கள். காங்கிரசுக்கு துணை போனதாக பா.ஜ.க. தாக்கியது. இது, பா.ஜ.க.வுக்கு ஆதரவானது என காங்கிரஸ் முணுமுணுத்தது. நிச்சயமாக நாம் சரியான பணியைத்தான் செய்கிறோம். இந்த களேபரங்களுக்கு நடுவில் இந்தியா குறித்த அக்கறை லாலு, மாயாவதி மற்றும் இடதுசாரிகளிடம் தான் இருந்தது. காங்கிரஸ் தனது முன்னோர்களின் தொடர்ச்சி





யின் அர்த்தத்தை இழந்து தவிக்கிறது.

குஜராத் இனப்படுகொலை நிகழ்ந்து ஒரு வாரத்திற்கும் மேலாக பிரதமரும், உள்துறை அமைச்சரும் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. இதழியல் வரலாற்றில் முதன் முறையாக கொலைகாரர்கள் காமிரா முன் தோன்றி – எப்படி கொன்றோம், யாருடைய உத்தரவின் பேரில் செய்தோம் என விவரித்தார்கள். இவர்கள் சிறு குற்றங்கள் புரியும் 'ஜேப்படி' திருடர்கள் அல்ல; தத்துவங்களால் வழி நடத்தப்பட்டு, இந்த கண்டத்திற்கே கேடு விளைவிக்கக்கூடியவர்கள். நாட்டையே துண்டாடக் கூடிய ஆற்றல் பெற்றவர்கள். ஆனால் ரேஸ் கோர்ஸ் சாலையில் வசிப்பவருக்கு இது போதவில்லை.

ஆனால், பிரதமரை குறைகூறுவது சரியானதல்ல. அதிகாரம் வழங் கப்பட்டாத மனிதர், அயோக்கியர்களின் குவியல் மீது அமர்ந்துள்ள யோக்கியர். மறுபுறம் தேர்தலை வென்றெடுக்க முடியாத காங்கிரசின் வழிகாட்டிகள். மோடியை போன்ற தலைமையின்

**“ காங்கிரசுக்கு துணை போனதாக பா.ஜ.க. தாக்கியது. இது, பா.ஜ.க.வுக்கு ஆதரவானது என காங்கிரஸ் முணுமுணுத்தது. நிச்சயமாக நாம் சரியான பணியைத்தான் செய்கிறோம். ”**

ஏக்கத்தில் தான் அவர்களும் குழம்பிப் போயிருக்கிறார்கள். இன்று காங்கிரசை வழிநடத்துபவர்களுக்கு சரியானது செய்யத் தெரியாது. அவர்களுக்கு கடந்த காலமும் புரியவில்லை, எதிர்காலம் குறித்த பார்வையுமில்லை. அன்று ஒரு மாமனிதர்–சாதி, மதம், இனம், மொழி, வர்க்கம் என அனைத்தையும் கடந்து ஓராயிரம் பதட்டங்களை சீர்படுத்தி அமைதியை நிலைநிறுத்தினார். ஆனால், இவர்கள் அதனை சீர்குலைக்க முனைகிறார்கள். அதன் விளைவை அறியாமல், அறத்தை அரசியல் கருவியாக மாற்ற இவர்களுக்கு தெரியவில்லை. தெருவில் களம் காணும் துணிவுமில்லை. பல்வேறு தேர்தல்களில் லாப–இழப்பு கணக்குகளைப் பார்க்கும் ஓட்டு கணக்கர்களாக காங்கிரஸ் கட்சி மாறிவிட்டது.

இவை எல்லாம் நம்மை சுற்றி நடக்கும் போது, இந்திய பணக்காரர்கள், 1920-களில் இருந்த அமெரிக்கர்களை போல நடந்து கொள்கிறார்கள். ஆட்டம், பாட்டம், சாம்பேன், பகட்டு – நம் பாதங்களின் கீழ் உள்ள நிலம் நழுவும் போதும் சமீபத்திய புள்ளிவிபரங்கள், அய்ந்து பெரிய மாநிலங்களில் வறுமை அதிகரித்து வருவதை சுட்டிக்காட்டுகிறது. இந்தியாவின் 30 சதவிகித மாவட்டங்களில் வறுமையிலிருந்து நக்சல் படை உருவாகி வருகிறது. ஆப்பிரிக்காவின் வறுமையும் நியுயார்க்கின் செழிப்பும் அருகருகே பிரச்சனையின்றி இசைந்து நீடிக்க இயலுமா? பொருளாதார செப்பனிடுதல்கள் அல்லது அரசியல் இங்கு தென்படவில்லை. உலகத்தின் மிகவும் சிக்கல் வாய்ந்த நாடு, மாபெரும் சவாலை சந்திக்கிறது என்பதனை குஜராத் தெரிவிக்கிறது.



ராக்கெட் செலுத்தும் கருவி ஒன்றை
நாங்கள் இங்கு தயாரித்தோம்.

— ஹரேஷ் பட், கோத்ரா சட்டமன்ற உறுப்பினர்

காவல் துறையினர் எங்களை வேடிக்கை
பார்த்தது தவிர வேறு எதனையும் செய்யவில்லை.

— பிரகலாத் ராஜு*, விஎச்பி உறுப்பினர்

மோடி முதல்வராக இருந்திருக்காவிட்டால் அவர்
வெடிகுண்டையும் வீசியிருப்பார்.

— அரவிந்த் பாண்டியா, குஜராத் மாநில அரசு வழக்கறிஞர்

என்னை வெளியே கொண்டுவர நரேந்திர மோடி
மூன்று முறை நீதிபதிகளை மாற்றினார்.

— பாபு பஜ்ரங்கி, பஜ்ரங்தள் தலைவர்